
கல்கி
KALKI
21-7-1957
30 நயா பைசா

ஸ்நானத்தின் புதுமை யின்பத்தை

நாள் முழுதும் அனுபவித்திட

ஹிமாலயா புக்கே

டால்கம் பவுடர்




லண்டனிலுள்ள இராஸ்மிக் கம்பெனி
லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரித்தது

HB. 16-50 TM

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


"டாக்டர், சீக்கிரம் வாருங்கள்..." அவருடைய ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள் டாக்டரை சில நிமிஷத்திலே அங்கு எடுத்துச் செல்லுகிறது. குறைந்த அளவு பெட்ரோலில் ஓடக்கூடிய ராயல் என்பீல்ட் பணத்தையும், நேரத்தையும் மிச்சப்படுத்துகிறது.



மலர் 16 } தமிழ்த்திரு நாடு தன்னைப் – பெற்ற { ஹேவிளம்பி
இதழ் 51 } தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார் { ஆடி 6

உலக சபையும் கொடிய ஜுரமும்

இரண்டு மாதங்களுக்கு முன்பு நமது சென்னை ராஜ்யத்துக்கு ஒரு 'பிரமுகர்' விஜயம் செய்தார். சிங்கப்பூரிலிருந்து கப்பலில் வந்த அந்தப் பிரமுகர், சென்னையில் பெரும்பான்மையோர் இல்லங்களுக்கெல்லாம் விஜயம் செய்தார். பிறகு தமிழ் நாடு பூராவும் ஒரு சுற்று சுற்றினார். பம்பாய் ராஜ்யத்துக்குப் போனார்; பாரத நாட்டுத் தலை நகரான புது தில்லிக்கும் விஜயம் செய்தார்.

இப்படி இரண்டு மாத காலம் பாரத நாட்டில் இந்தப் பிரமுகர் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டு இப்பொழுது இரான் தேசத்துக்குப் போயிருக்கிறார்.

இன்னும் எங்கெல்லாம் போகப் போகிறாரோ தெரியவில்லை !

இந்த அதிசயப் பிரமுகரின் விஜயத்தினால் நாட்டில் நேர்ந்த குளறுபடிகள்—அப்பப்பா ! சொல்லச் சாத்தியமா ?

காரியாலயங்களுக்கு உத்தியோகஸ்தர்கள் பெரும்பான்மையோர் வர இயலாமற் போய் விட்டார்கள். தபால்கள் வாரக்கணக்கில் தாமதித்து வந்தன. தந்திகள் ஊர்ந்து வந்தன ! பாங்கிகள் நாளைக்கு இரண்டு மணி நேரம்தான் வேலை செய்தன ! கோடை விடுமுறைக்காக மூடப்பட்ட பள்ளிக் கூடங்களும் காலேஜுகளும் மேலும் பதினைந்து நாட்கள் மூடிக்கிடந்தன! யாராவது ஒருவர் இருமினால் அவர்மீது அளவுகடந்த வெறுப்புப் பார்வை வீசிவிட்டு மக்கள் காததூரம் ஓடி மறைந்தனர் !

பத்திரிகைகள் இன்ன மாத்திரைகள் வாங்கிச் சாப்பிடலாம் என்று நேயர்களுக்கு யோசனை கூறின. டாக்டர்களுக்கு இன்ன மாத்திரைகளை எழுதிக் கொடுங்கள் என்று யோசனை கூறின. நாட்டு வைத்தியர்கள் லவங்கப் பட்டை கஷாயம் சாப்பிடுங்கள் என்று பத்திரிகைகளில் எழுதினார்கள். சித்த வைத்தியர்கள் இன்ன பஸ்பத்தைச் சாப்பிடுங்கள் என்று அறிக்கை விட்டார்கள்.

இப்படிப்பட்ட அதிசயக் கூத்துகள் எல்லாம் நிகழ்த்திய அந்த அதிசயப் பிரமுகர் யார் என்று இதற்குள் ஊகித்திருப்பீர்கள். அவர்தான் திருவாளர் ஃப்ளூ ஜுரம் அவர்கள்! இவர் நல்ல வேளையாக நமது நாட்டை விட்டுப் பிரயாணப் பட்டு விட்டார் ! இனி திரும்பி வரமாட்டார் என்று நம்புகிறோம்.

* * * *

இப்பொழுது ஃப்ளூ ஜுரம் எப்படி, எங்கிருந்து நமது நாட்டுக்கு வந்தது என்று சற்று நிதானமாகச் சிந்திக்க வாய்ப்பு நேர்ந்திருக்கிறது.

சில சமயம் பிரமுகர் ஒருவர் வந்து விட்டால், அவர் யார் இன்னார் என்று கேட்டுத் தெரிந்து கொள்ளாமலேயே உபசாரங்கள் செய்தனுப்பிவிட்டு, பிறகு 'இவர் யார்?' என்று அக்கம் பக்கத்திலுள்ளவர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்வோம். அதைப் போல் ஓரளவு இந்தப் ஃப்ளூ ஜுரம் அடங்கியிருக்கும் இந்தச் சமயத்தில் இந்தப் ஃப்ளூ எங்கிருந்து வந்தது என்று சிந்திக்கக் கூடிய சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது.

ஃப்ளூ ஜுரம் பாரத நாட்டில் பரவி மக்களை அவதிப்படுத்திக் கொண்டிருந்தபோதே உலக டாக்டர்களால் மதிக்கப்படும் 'லான்ஸெட்' என்னும் பிரிட்டிஷ் வைத்திய சஞ்சிகையில் ஒரு முக்கியமான விஷயம் வெளியாயிற்று. அதாவது ஆசிய நாடுகளில் பரவிவரும் ஃப்ளூ ஜுரத்துக்குக் காரணம் அணு குண்டு சோதனைகளின் விளைவுதான் என்று

கண்டிருந்தது அதாவது அணு சோதனைகளினால் வெளிப்படும் விஷம், ப்ளூ கிருமிகளை மாறுதல் அடையச் செய்திருக்க வேண்டும். இப்படி மாறிய புது ப்ளூ கிருமிகளைக் கட்டுப் படுத்தக் கூடிய மருந்துகள், உலகில் இல்லை. மேலும், இந்தப் ப்ளூ கிருமிகள் காற்றிலேயே பரவக்கூடியதாக இருப்பதால் வெகு விரைவில் உலகமெங்கும் சஞ்சரிக்கின்றன.

முதல் மகாயுத்தம் முடிந்தவுடன் 1918—1919-ம் ஆண்டுகளில் ப்ளூ ஜுரம் உலகெங்கிலும் மூண்டது. அப்பொழுது அந்த ஜுரம் உயிருக்கே ஆபத்து உண்டாக்கும் அளவுக்கு அபாயகரமாயிருந்தது. அந்த ப்ளூ ஜுரத்தினால் உலகில் சுமார் ஒன்றரை கோடிப் பேர் இறந்திருப்பார்கள் என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். இவ்வளவு பேர் உயிரிழந்த பிறகு உலகம் விழித்துக் கொண்டு அதற்குத் தக்க மருந்து கண்டு பிடித்தது. ஆனால் இப்பொழுது மூண்டுள்ள ப்ளூ ஜுரக் கிருமிகள் முந்தையக் கிருமிகளை விட முற்றும் மாறுபட்டவை. இந்தப் புது ப்ளூ கிருமிகளைத் தாக்கிக் கட்டுப்படுத்தக் கூடிய மருந்து' வாக்஀ின் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால் தான் இந்தப் ப்ளூ ஜுரம் இவ்வளவு வேகமாகப் பரவியது. பாரத நாட்டு மக்கள் பல இன்னல்களுக்கு உள்ளாயினர்.


இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்தவுடன், மீண்டும் 1918-19ம் ஆண்டுகளில் மூண்டது போன்ற ப்ளூ ஜுரம் உலகில் ஏற்பட்டு விடாமலிருக்க, தற்காப்பு முறையாக ஐ. நா. சபையைச் சேர்ந்த உலக சுகாதாரச் சங்கம் உலகில் பல பகுதிகளில் இன்ப்ளூயன்ஸா ஆராய்ச்சி சாலைகளை ஏற்படுத்தி அங்கெல்லாம் மருந்துகள் தயாராக வைத்திருந்தனர். இவ்வளவு ஜாக்கிரதையுடன் இருந்ததால் இரண்டாவது உலக யுத்தம் முடிந்த பிறகு ப்ளூ ஜுரம் மூளவில்லை.

இவ்வளவு சர்வ ஜாக்கிரதையாக இருக்கும் உலக சுகாதாரச் சங்கம் இந்தத் தடவை ஏன் இவ்வளவு வேகமாகப் பரவும் ப்ளூ ஜுரத்தைக் கட்டுப்படுத்தாமல் கோட்டைவிட்டது?

இந்த இடத்தில்தான் அரசியல் குறுக்கிடுகிறது. ஒரு சில வல்லரசுகளின் பிடிவாத குணத்தினால் உலகிலுள்ள பாமர மக்கள் சொல்லி முடியாத கஷ்டங்களுக்கு உள்ளாகும் பரிதாப நிலையைக் காண்கிறோம்!

இந்தத் தடவை மூண்ட ப்ளூ ஜுரம் முதல் முதல் ஜனவரிமாதம் வட சீனாவில் மூண்டது. அங்கிருந்து மெள்ள மெள்ளச் சீனாட்டின் தென் பகுதிக்குப் பரவியது. ஆக சீனாவிலேயே ஜனவரி, பிப்ரவரி, மார்ச்சு ஆகிய மூன்று மாதங்கள் ப்ளூஜுரம் கடுமையாக இருந்தது!

பலூன் உடைந்தது!



"மத்திய கேந்திரத்தில் கம்யூனிஸம் என்பது வெறும் பிரசாரம் தான். அதைப் பற்றிப் பயப்பட வேண்டியதில்லை" என்று பிரதமர் நேரு கூறியிருக்கிறார்.

புதிய தொத்து நோய்!



இன்ப்ளுயன்ஸா தொத்து நோய் தேசம் முழுதும் பரவி ஓய்ந்தது. ஆனால் இப்பொழுது இன்னொரு தொத்து நோய் பரவ ஆரம்பித்திருக்கிறது!

இந்தச் செய்தி உலகத்துக்கு எட்டாமலே இருந்திருக்கிறது. உலக சுகாதார சங்கத்தின் வைத்தியர்களுக்கு இப்படியொரு விஷஜுரம் சீனாவில் பரவியிருக்கிறது என்பதே தெரியாமல் இருந்திருக்கிறது.

சீனா ஐ. நா. சபையின் அங்கத்தினராக இல்லாததுதான் அதற்குக் காரணம்.

சீனாவை ஐ. நா.வில் சேர்க்க வேண்டும், என்று நமது பிரதமர் நேரு பன்முறை வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். நாற்பது கோடி மக்களின் பிரதிநிதியில்லாத ஐ. நா. சபையை உலக சபை என்று சொல்வது வெறும் பேதமை என்று சொல்லியிருக்கிறார். ஆனால் அமெரிக்கா, கம்யூனிஸ்ட் சீனாவை உள்ளே விடப் பிடிவாதமாக மறுத்து வருகிறது.

இதன் விளைவாக சீனாவில் மூண்ட புளு ஏப்ரல், மே மாதங்களில் அதைவிட்டு வெளிப்பட்டு மலேயா, சிங்கப்பூர், இந்தியா முதலிய நாடுகளுக்கு வந்த பிறகுதான் உலக சுகாதார சங்கத்துக்கு எட்டியிருக்கிறது! மொத்தத்தில் மேற்கத்திய வல்லரசுகளின் பிடிவாத குணத்தினால் இழக்குலக மக்கள் படும் தொல்லைகள் கொஞ்ச நஞ்சமல்ல.

1. அணுகுண்டு விஷயத்திலோ சொல்லத் தேவையில்லை!

2. சீனாவை ஐ. நா. சபையில் சேர்க்க வல்லரசுகள் மறுக்கின்றன.

இந்த இரண்டு பிடிவாதங்கள் காரணமாக ஆசியாவில் கொடிய புளு ஜுரம் மூண்டு பல ஆயிரக் கணக்கான மக்கள் மடிந்திருக்கின்றனர். பல லட்சக்கணக்கான மக்கள் சொல்லி முடியாத உடல் நோய்க்கும் இன்னல்களுக்கும் உள்ளாகி யிருக்கின்றனர்.

உலக ஜனத் தொகையில் பெரும் பகுதி மக்களைப் புறக்கணிக்கும் ஐ. நா. சபையிடம், ஆசிய மக்களுக்கு அதிலும் மிகக் கொடிய புளு ஜுரத்துக்கு உள்ளாகும்படிச் செய்த சபையிடம் எப்படி நம்பிக்கை ஏற்படும்?


வரியும் செலவும்

தமிழ் நாட்டில் சிலகாலமாக ஒரு கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. அதாவது "பலகட்ட விற்பனை வரி வேண்டாம்! ஒரு முனை விற்பனை வரி வேண்டும்!" என்று வியாபாரிகள் கிளர்ச்சி செய்து வருகிறார்கள்.

பொது மக்கள் செய்ய வேண்டிய கிளர்ச்சியை, இப்பொழுது வியாபாரிகள் செய்து வருவதைப் பார்க்கும் போதுதான் பொது மக்களுக்கு வியப்பு ஏற்படுகிறது. இவர்களுக்கு நம்மிடமிருந்து பணம் வசூலித்துக் கொடுப்பதில் என்ன கஷ்டம் இருக்கக் கூடும் என்று எண்ணுகிறார்கள்.

மக்களின் ஜீவனோபாயத்துக்கு நீண்ட நெடுங் காலம் மிக முக்கியமான தொழிலாக

"உனக்குத்தான் அம்புலி!"



அமெரிக்க ஜனாதிபதி பாகிஸ்தான் பிரதமர் சுரவர்த்திக்கு ஆதரவாகப் பேசி விருக்கிறார்.

இருந்து வருவது வியாபாரம். ஒரு சிறு கிராமத்திலும் சொற்ப முதலுடன், அதிகம் படிக்காதவர்கள்கூட ஒரு கடைவைத்து மானமாகக் காலங்கழித்து வருகிறார்கள். இவர்கள் எல்லாம், தாங்கள் அன்றாடம் செய்யும் வியாபாரத்துக்குக் கணக்கு எழுதி வைக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். கணக்கு தவறுதலாக எழுதி வைத்து விட்டால் பெரும் தண்டனைக்கு ஆளாகிறார்கள்! உத்தியோகஸ்தர்களின் மிரட்டலுக்கும் உருட்டலுக்கும் ஆளாகி யிருக்கின்றனர். சுமார் 15,000 பேர்கள் சிறைத் தண்டனையும் பெற்றிருக்கிறார்கள்!

ஆக, பலகட்ட விற்பனை\வரியின் மூலம் சிறு வியாபாரிகள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகிறார்கள் என்பதனால் முதலிலே, ஆரம்பத்திலேயே பெருந்தொகையாக விற்பனை வரிவிதித்து விடலாம் என்று வியாபாரிகள் புது யோசனை கூறுகிறார்கள்.

இதனால் வேறு சில கஷ்டங்கள் நேரும் என்று சர்க்கார் எண்ணுகிறார்கள்! முதலில் விற்பனை வரி மூலம் சர்க்காருக்குக் கிடைத்து வரும் வருமானம் பெரும் பங்கு குறைந்து விடுமோ என்று ஐயுறுகிறார்கள்.

ஆனால் பொதுமக்களோ, ஒரு கட்டத்தில் மட்டும் விற்பனை வரி விதித்து மற்ற இடங்களில் சர்க்காரின் கண்காணிப்பு இல்லை என்றால், கணக்கு எழுதி வைக்க வேண்டிய நிர்ப்பந்தமோ, பில் வழங்க வேண்டிய நிர்ப்பந்தமோ வியாபாரிகளுக்கு இல்லாமற் போனால் பொதுமக்கள் ஒவ்வொரு பொருளையும் அதிக விலைகொடுத்து வாங்க வேண்டியிருக்கும் என்று பயப்படுகிறார்கள்.

இப்படிப் பல விஷயங்களை ஆராய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பொறுப்பைப் பொருளாதார நிபுணர் திரு லோகநாதன் அவர்களுக்கு நமது சென்னை சர்க்கார் கொடுத்திருக்கிறார்கள்!

விற்பனை வரியைப் பற்றிச் சற்று யோசித்தால் ஒரு விஷயம் புலப்படும். அதாவது இந்த விற்பனை வரி விற்பனை செய்பவருக்குச் சம்பந்தமில்லை. ஆனால் வாங்குபவருக்கு, செலவு செய்பவருக்குத்தான் வரி. விற்பனை வரி என்பது உண்மையில் செலவு வரிதான்.

ஆனால் மத்திய சர்க்கார் பணக்காரர்களுக்குப் புதிதாக ஒரு செலவு வரி விதிக்க இருக்கிறார்கள். ராஜ்ய சர்க்கார் விற்பனை வரி மூலம் பணம் வரி வசூல் செய்து விடுகிறார்கள். இதற்குப் பிறகு மத்தியசர்க்கார் செலவு வரி என்றால், ஒரு செலவுக்கு இரண்டு முறை வரி வசூலிப்பதாகும். இப்படி ஒரு செலவுக்கே இரண்டு முறை வரி விதிப்பது நியாயமல்ல. ஆகவே மத்திய சர்க்கார் தாங்கள் புதிதாகப் போடவிருக்கும் செலவு வரியை வாபஸ் பெற்றுக் கொள்ளுவதே அறிவுடைமையாகும்.

நாட்டின் நலனைக் கெடுக்கும் காரியம்

புளு ஜுரத்துக்கு அடுத்த படியாகப் பாரத நாடெங்கும் வேலை நிறுத்த ஜுரம் பரவ ஆரம்பித்து விட்டதோ என்று எண்ண வேண்டியிருக்கிறது. புது டில்லியில் உள்ள அகில இந்திய சர்க்கார் கணக்கு பரிசோதனை சிப்பந்திகள் சங்கத்தினர் தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்தி வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். இந்திய சர்க்கார் உணவு, விவசாய மந்திரி சபையைச் சேர்ந்த ஒரு பகுதியில் உள்ள சிப்பந்திகள் வேலை நிறுத்தம் செய்யப் போகிறார்கள். பம்பாய் துறைமுகங்களில் உள்ள பதினையாயிரம் தொழிலாளர்கள் சென்ற வாரத்தில் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்ததன் விளைவாகத் துறைமுக அலுவல்கள் ஸ்தம்பித்து விட்டன.

துறைமுகத் தொழிலாளர் சங்கங்கள் வேலை நிறுத்த யோசனையைக் கைவிட்ட பிறகு, அவற்றின் முடிவு உற்ற சமயத்தில் தெரியாததால் அவர்கள் வேலை நிறுத்தம் செய்துவிட்டார்களாம்! பம்பாய் நகரசபையைச் சேர்ந்த இருபத்தையாயிரம் தொழிலாளர்கள் ஒரு வாரத்துக்கு முன் திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு அல்லோலகல்லோலப் படுத்தி விட்டார்கள். மதுரை மில்லில் தொழிலாளர்கள் புது வேலை முறைகளை ஏற்க மறுத்து விட்டதால், இருபது நாட்கள் வரையில் மில் கதவுகள் அடைக்கப்பட்டன. இது நிர்வாகிகளே ஈடுபட்ட வேலை நிறுத்தம் போலும்! பிறகு, தொழிலாளர் பிரதிநிதிகளுடன் உடன்பாடு ஏற்பட்டதன் பலனாக, மில்லைத் திறப்பதென்று நிர்வாகிகள் முடிவு செய்தனர். இது போல் இன்னும் பல இடங்களிலிருந்தும் 'வேலை நிறுத்தம், வேலை நிறுத்தம்' என்ற பயங்கர கோஷங்களே வந்து காதைத் துளைத்து வருகின்றன.

பாரத நாடு பெற்றுள்ள பெறுதற்கரிய சுதந்திரத்தைப் பரிமளிக்கச் செய்யும் பொறுப்பு சர்க்காருக்கு எவ்வளவு உண்டோ, அதுபோல் பொது மக்களுக்கும் உண்டு என்பதை எவரும் மறந்துவிடக் கூடாது. சர்க்காரைப் பணிய வைப்பதற்காக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோர், தங்களுடைய நடவடிக்கைகள் பொது மக்களுக்கும், நாட்டின் அமைதியான சூழ்நிலைக்கும் இடையூறாக இராமல் இருக்குமா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் தங்களுக்குப் பொதுமக்களின் ஆதரவும் அனுதாபமும் கிடைக்கும் வண்ணம் நடந்து கொள்ள வேண்டும். பொதுஜன ஆதரவில்லாததால், யாதொரு பலனுமின்றிக் கண்டனத்துக்கு உள்ளான வேலை நிறுத்தங்களுக்குப் பல உதாரணங்கள் கூற முடியும்.

அரசியல் சுதந்திரம் பெற்ற இந்தியா பொருளாதார சுபிட்சம் பெறுவதற்காகப் பாடுபட்டுவரும் இச்சமயத்தில் முக்கியமாகத் தொழில் துறைகளில் உள்ளவர்கள் தங்கள் பங்கைச் செய்ய முயற்சிக்க வேண்டுமேயன்றி, நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையான நடவடிக்கைகளில், வேலை நிறுத்தம் போன்ற நாட்டின் நல் வாழ்வைக் குலைக்கும் இயக்கங்களில் ஈடுபடலாகாது.

நாட்டின் நலனில் அக்கறை கொண்டவர்கள், தொழிலாளர்கள், நடுத்தர அந்தஸ்தில் உள்ள சிப்பந்திகள் இவர்களின் நிலை எவ்விதத்திலும் உயர வேண்டும் என்பதில் அக்கறை கொள்ளாமல் இருக்க முடியாது. எனினும், அதற்காக அவர்கள் எடுத்த எடுப்பில் வேலை நிறுத்தங்களில் ஈடுபடுவதை யாரும் ஆதரிக்க முடியாது. கூடுமான வரையில் இறுதி ஆயுதமான வேலை நிறுத்தங்களைத் தவிர்ப்பதே புத்திசாலித்தனமாகும்.

ஆட்டத்திற்கேற்ற தாளம்

மகாகவி காளிதாஸன் மேக தூதம் என்றோர் அற்புத காவியம் இயற்றியிருக்கிறான்.

வடமொழி அறிந்தவர்கள் எல்லாம் அதிலுள்ள கவிதைச் சுவையையும் கற்பனையழகையும் சொல்லிச் சொல்லி வியக்கிறார்கள்.

குபேரனுடைய சாபம் பெற்று ஒரு யட்சன் இமயமலைச் சாரலில் வாழ நேர்கிறது. அவன் தன்னுடைய ஊரிலே தன் அருமைக் காதலியை விட்டு விட்டு, இங்கே இந்த மலைச் சாரலில் தன்னந் தனியனாக இருக்கும் போது அவன் எண்ணங்கள் எல்லாம் அவளைச் சுற்றியே சுழல்கின்றன. இந்த நிலையில் வானவீதியில் நீருண்ட மேகங்கள் தவழ்ந்து வருகின்றன. அவை செல்லும் திசையைப் பார்த்தான். தன் காதலியிருக்கும் ஊரையே நோக்கிச் செல்கின்றன என்பதை உணர்ந்தான். அவற்றினிடமே தன் காதலிக்குச் செய்தி சொல்லியனுப்பினான். மேகத்துக்கு அவளை அடையாளம் தெரிய வேண்டுமல்லவா? அதன் பொருட்டு அவளுடைய செய்கைகளையும் தினப்படி அவள் புரியும் வேலைகளையும் மேகத்துக்கு அடையாளமாகக் கூறி அனுப்புகிறான்.

"மேகமே! என் ஊருக்குப் போனால் அங்கொரு மங்கை முற்றத்தில் உட்கார்ந்திருப்பாள். அவள் பக்கத்தில் அழகிய மயில் தன் அற்புதமான வண்ணத் தோகையை விரித்து நடனமாடும். அந்த நடனத்துக்கு ஏற்ப என் காதலி தனது அழகிய கரங்களை நீட்டி வளையல்களைக் குலுக்கித் தாளம் இசைப்பாள்!" என்று கூறுகிறான்.

மகாகவி காளிதாஸன் வர்ணிக்கும் இந்த இனிய காட்சிக்கு நமது ஓவியர் ரத்னம் இந்த வாரத்து அட்டையில் வண்ண ஓவியம் வழங்கியிருக்கிறார்.

இலங்கைத் தமிழர் வரலாறு

ரஜனி

இலங்கை தமிழ் பல்கலைக்கழக இயக்கத்தின் முக்கியஸ்தர்களில் ஒருவரான பேராசிரியர் மயில்வாகனம் என்பவர் தங்கள் உத்தேசத்திலுள்ள பல்கலைக் கழகம் தமிழ் பேசும் மக்களின் பிரத்தியேகமான பல்கலைக் கழகமாக இருக்க மாட்டாது என்று விளக்கிச் சொல்லியிருக்கிறார்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் என்றால் அதன் போதனமொழி தமிழில் மட்டுமே இருக்குமென்றும் ஆங்கிலத்துக்கு அதில் இடமிருக்க மாட்டாதென்றும் சிலர் தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞானம், பௌதிகம், ரசாயனம், வான சாஸ்திரம், உயர் கணிதம் முதலியவற்றையெல்லாம் மாணவர்களுக்குப் புரியும் வகையில் போதிக்கப் போதிய தமிழ்ப் புத்தகங்களும் ஆசிரியர்களும் கிடைக்கும் வரையில் இந்தப் பாடங்களை ஆங்கிலத்தில் போதிப்பது இன்றியமையாதது என்று பேராசிரியர் மயில்வாகனம் தெரிவித்திருக்கிறார். அதோடு தமிழ் மக்களின் சரித்திர, கலாசார, மதச் சூழ்நிலையில் அவர்களுக்குக் கல்வி போதிக்கப் பிரத்தியேகமான ஒரு பல்கலைக் கழகம் அவசியமென்றும் தற்சமயம் பேராதனையில் உள்ள இலங்கைப் பல்கலைக் கழகம் சிங்களமயமாயிருப்பதினால் அங்கு தமிழ் மாணவர்கள் தங்கள் கலாசார அடிப்படையில் கல்வி பயிலுவது அசாத்தியமென்றும் பேராசிரியர் மயில்வாகனம் சொல்லியிருக்கிறார்.



திரு கே. ரங்கசாமி

* * *

சில தினங்களுக்கு முன்னால் சென்னை 'ஹிந்து' பத்திரிகையில் ''இலங்கையில் இந்து சமயம்'' என்ற தலைப்புடன் ஒரு கிறிஸ்தவப் பாதிரியார் எழுதிய புத்தகத்துக்கு வெளியாகியிருந்த மதிப்புரை இலங்கைத் தமிழர் வரலாற்று நூலை அவசரமாகத் தயாரித்து வெளியிட வேண்டுமென்று ஆவலைக் கிளப்பி விட்டிருக்கிறது. பௌத்த மத வளர்ச்சியையும் சிங்களவர் சரித்திரத்தையும் பற்றி அடிக்கடி ஆராய்ச்சி நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கையில், தமிழர்வரலாற்றை இது வரையில் யாரும் தொகுத்து எழுத முன் வராதது மிகவும் விசனிக்கத் தக்கதென்று 'ஹிந்து' பத்திரிகையின் விமரிசனத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது.

கொழும்பில் இந்து சமய வளர்ச்சிக்குச் சிறப்பாகப் பணியாற்றி வரும் விவேகானந்த சபையின் செயற்குழுக் கூட்டத்தில் இவ்விஷயம் விரிவாக ஆலோசனை செய்யப்பட்டு இலங்கை இந்துக்களின் வரலாற்று நூல் எழுதுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க ஒரு முக்கிய விசேஷக் கமிட்டி நியமிக்கப்பட்டது. தமிழர்களின் சரியான, தொடர்பான வரலாற்று நூல் இல்லாதபடியினால் இலங்கையில் தமிழர்களின் பூர்வீக வரலாறு சிறுமைப் படுத்தப்படுகிறதென்றும் இலங்கை சரித்திரப் புத்தகங்களிலெல்லாம் சிங்கள ஆதிக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படுகிறதென்றும் இந்த நிலைமை மாற அவசர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தப் பட்டது.

இதற்கிடையில் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத்தின் இலட்சியங்களில் தமிழர் வரலாற்று நூல் ஒன்றை ஆதார பூர்வமாக ஆராய்ச்சி செய்து வெளியிடுவதும் ஒரு முக்கிய இலட்சியமாயிருக்குமென்று பேராசிரியர் மயில்வாகனம் அறிவித்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி யளிக்கிறது.

* * *

இலங்கை இந்திய ஹை கமிஷனில் வர்த்தகக் காரியதரிசியாகச் சென்ற இருபத்தொரு மாதங்களாகக் கடமையாற்றிய திரு கே. ரங்கசாமி சென்னைக்கு மாற்றலாகிப் போகிறார். சென்னை இறக்குமதி ஏற்றுமதி கண்ட்ரோலராயிருந்த அவர் சென்ற 1955ம் வருடம் அக்டோபர் மாதம் இலங்கைக்கு வந்தார். அவர் வந்தபின் இலங்கை இந்திய வர்த்தகம் பெருமளவு அபிவிருத்தியடைந்தது. இங்குள்ள இந்திய வர்த்தர்களுக்கு அவர் உற்ற துணைவராகவும் நண்பராகவும் ஆலோசகராகவும் இருந்தார். எப்பொழுதும் இன்முகம் காட்டிப் பேசும் திரு ரங்கசாமியிடம் வர்த்தகர்கள் தங்களுக்குக் கஷ்டம் ஏற்படும் பொழுதெல்லாம் நேரில் போய் அவர் யோசனைகளைக் கேட்பார்கள். சிங்களவர்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்றிருந்த திரு ரங்கசாமி அவர்கள் இலங்கையை விட்டுப் போவது இலங்கையின் நஷ்டம். சென்னையின் லாபம்.

இலங்கையிலிருந்து புறப்படும் திரு ரங்கசாமி சென்னையில் ஏற்றுமதி இறக்குமதி கூட்டுப் பிரதம கண்ட்ரோலர் பதவியை ஏற்றுக் கொள்கிறார். இவ்வாரம் இலங்கை இந்திய வர்த்தகச் சங்கத்தினர் அவருக்கு ஒரு உபசார விருந்து நடத்தினார்கள். சென்ற இரண்டு மாதங்களாக அவருக்குக் கொழும்பில் பிரியா விடை உபசார விருந்துகள் நடந்த வண்ணமிருக்கின்றன.

வட்ட மேஜை

"பிருந்தாவனம்"

1958-ல் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்காகச் சென்னை பல்கலைக் கழகத்தினரால் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஆங்கிலப் பாடப் புத்தகத்தில் பாரதத்தின் கவிக்குயில் சரோஜினி அம்மையார் இயற்றிய 'பிருந்தாவனத்தின் குழலூதுவோன்' ("The Flute Player of Brindaban") என்ற கவிதை இடம் பெற்றிருக்கிறது. இக் கவிதையில் யமுனை நதிக்கரையின்கண் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் வேய்ங்குழல் இசையின் வசீகர சக்தியையும் தெய்வீகத் தன்மையையும் அழகுபடச் சித்திரித்திருக்கிறது நன்கு விளங்கும். இப் பாடப் புத்தகத்துக்குப் பொருள் விளக்கி, இலக்கணக் குறிப்புகள் தந்து மொழிப்பயிற்சி யளிக்கும் நோக்கத்துடன் ஒரு துணைப் புத்தகம் (Companion) சென்னை கல்வி இலாகாவினால் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அதில் 168-ம் பக்கத்தில் "பிருந்தாவனம்" என்ற சொல்லுக்கு விளக்கம் கூறப்பட்டிருப்பது விந்தையா யிருக்கிறது.

பிருந்தாவனம்: மைசூருக்கருகில் காவேரிக் கரையிலுள்ள அழகிய நந்தவனங்களில் கிருஷ்ணன் தனது குழந்தைப் பிராயத்திலே குதித்து விளையாடி, புல்லாங்குழலிலே இனிய இசை எழுப்பினான்.

['BRINDABAN': Beautiful gardens beside the river Cauvery near Mysore where Krishna amused himself in his boyhood and played beautiful music upon his flute.]

இது பற்றி என்னென்று கூறுவது ?

அருவங்காடு
7—7—57
பி. எஸ். யக்ஞேச்வரன்

தீர்க்க தரிசனம்

ராஜாஜி அவர்கள் எழுதிய "பலவீனப் படுத்த வேண்டாம்" என்ற அரிய கட்டுரை என்னை மிகவும் கவர்ந்தது. நமது மத்திய அரசாங்கத்தின் ஓரவஞ்சனையை அப்படியே எங்களுக்கு நன்கு அழகாக விளக்கியுள்ளார்கள். பின் நடக்கப் போவதை முன்னதாகவே அறிவித்து விட்டார்கள்.

முன்பு பாகிஸ்தான் பிரிவினை கேட்டார் ஜின்னா. இதை எதிர்த்தனர் நமது தலைவர்கள். ஆனால் ராஜாஜி அவர்கள் பாகிஸ்தான் பிரிவினையை ஆதரித்தார்கள். ஏன்? பின் நடக்கப் போவதைத் தெரிந்தே ஆதரித்தார்கள். அதைப் போல, பின்னும் நடக்கப் போவதை முன்னதாகவே அறிவிக்கும் "மதியூகி" நமது ராஜாஜி அவர்கள் "பலவீனப்படுத்த வேண்டாம்" என்ற கட்டுரையில் நமது மத்திய அரசினருக்குப் புத்திமதிகள் கூறியுள்ளார்கள். ஆகையால் நமது மத்திய அரசாங்கம் "ராஜ்ய அரசாங்கங்களை விளையாட்டுப் பொம்மைகளாக வைத்திருக்காமல் அந்தந்த ராஜ்யங்களுக்கு அந்த ராஜ்ய உரிமைகள் அனைத்தையும் கொடுத்து விட வேண்டும். அப்போதுதான் நாட்டில் ஒற்றுமை மனப்பான்மை ஏற்படும்.

இப்படிப் பல அரிய கருத்துரைகளை எங்களுக்குத் தந்து உதவி புரியும் எங்கள் 'கல்கி'யை, எதையும் துணிந்து முன்னதாகவே கூறிடும் திறமையைப் பெற்ற 'கல்கி'யைப் பாராட்டுகின்றேன்.

கொழும்பு
7—7—57
கிராண்ட்பாஸ் - தாரா

இணையிலாச் செல்வம்

பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்களின் இதயத்திலே முகிழ்க்கும் இணையிலாச் செல்வம் இலக்கியச் செல்வம் எனக் கூறின் மிகையாகாது. தென்றல் தரும் இன்பத்தையும், கூதல்மாரி பெய்யும் குற்றாலக் குளிர் நீரின் தன்மையையும் அவர்களின் இலக்கியச் செல்வத்தில் பொதுளக் காண்கின்றேன். மென்காற்றைத் தென்றலாகத் திரிக்கும் பேராசிரியர் அவர்களின் திருமுயற்சி தனிச் சிறப்பதாக! இத்தகைய இணையிலாத இலக்கியச் செல்வங்கள் பேராசிரியர் அவர்கள்பால் மென்மேலும் முகிழ்ப்பதாக என மனமார வாழ்த்துகின்றேன்; வாயாரப் போற்றுகின்றேன்.

ஆத்தங்குடி
10—7—57
'பண்டிதமணி', 'சக்ராஜப்புலவர்'
லெ. முருக. இலக்குவன்

சென்னைக் கூட்டுறவு யூனியன் பரீட்சை

இவ் வருடத்தில் கூட்டுறவுப் பயிற்சி மாணவர்களுக்கான பரீட்சை ஜூன் மாதம் 22-ந் தேதியிலிருந்து 28-ந் தேதி வரை நடந்ததை நாம் யாவரும் மறக்கலாகாது.


அத் தருணத்தில் நம் சென்னை ராஜ்யத்தில் "இன்புளுயன்சா" என்னும் விஷ ஜுரத் தொத்து வியாதியினால் அநேக ஜனங்களும், மாணவர்களும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தனர்.

எனினும் கூட்டுறவுப் பயிற்சிசாலை நடத்தும் பரீட்சையைத் தள்ளி வைப்பதென்பது இயலாத காரியமாகப் போயிற்று.

பரீட்சை எழுதுவதற்கு எல்லா மாணவர்களும் வந்திருந்தோம். ஆனால் முதல் ஒன்று அல்லது இரண்டு பரீட்சைகள் எழுதிய பிறகு சுமார் முப்பது மாணவர்கள் இந்த விஷ ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு மற்றப் பரீட்சைகளுக்கு வர இயலாமல் போய் விட்டனர். இன்னும் சில மாணவர்கள் முதல் மூன்று, நான்கு பரீட்சைகளை எழுதி விட்டு, கடைசிப் பரீட்சைகளுக்கு வர இயலாமல் "இன்புளுயன்சா"வினால் பாதிக்கப்பட்டனர்.

ஆகவே தயவு செய்து தொத்து வியாதியின் காலத்தை அனுசரித்துக் கடுமையான மார்க் திட்டங்களை விதித்து எங்களை இன்புளுயன்சா நோயைப் போல் கடுமையாகத் தாக்கி விடாமல் இருக்கப் பரீட்சை அதிகாரிகளைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

கோவை
10—7—57
இராமலிங்கம் கூட்டுறவுப் பயிற்சிசாலை மாணவர்கள்



இலக்கியச் செல்வம்.36

சாட்சி எது?

பேராசிரியர்: அ. சீநிவாசராகவன்

பெண் ஒருத்தி அதோ நடந்து செல்கிறாள். சிறு தூற்றல். தெருவிலே யாரும் இல்லை. இந்த இரவிலே எங்கே போகிறாள்? அதோ நின்று, தயக்கத்துடன் திரும்பிப் பார்க்கிறாள். வீதி விளக்கின் மங்கல் ஒளி அவள் முகத்தில் விழுகிறது. என்ன அழகான முகம், எவ்வளவு இளமை, ஆனால் ஏன் அந்த முகத்தில் இவ்வளவு கலக்கம், பயம், பரபரப்பு, மருட்சி?

'பழைய கதைதான்' என்று கவிஞன் பெருமூச்செறிகிறான். அவன் இலட்சிய வாதிதான். ஆனாலும் உலகத்தின் போக்கை நன்றாக அறிந்தவன். மனித உள்ளத்தின் விசித்திரமான கதிகளைத் தொடர்ந்து, அந்தம் வரையில் சென்று பார்த்தவன். மனத்தில் நன்மை இருக்கிறது, அன்பும் தியாகமும் அங்கே பயிராகின்றன என்பது அவனுக்குத் தெரியும். என்றாலும், அடி மனத்தில், சுயநலமும், தீமையும் எப்படியெல்லாம் பதுங்கிக் கிடக்கின்றன, எப்படி விசுவ ரூபம் எடுத்துத் தீமையாய் மூள்கின்றன என்பதையும் கண்டவன்.

அவன் சொல்கிறான்: 'மானைத் தேடிக் கொண்டு, காட்டுக்குள்ளே போனால், புலியும் அங்கே பதுங்கிக் கிடக்கும் என்ற எச்சரிக்கையோடு போக வேண்டாமா? இந்தப் பெண்ணுக்கு அது தெரியவில்லை. அதுதான் கதை. அன்பை நாடிச் சென்றாள். அதைப் பெறுவதற்குத் தன் வெள்ளை உள்ளத்தையே தந்தாள். தன் எழிலையும், பெண்மை நலத்தையும் யௌவனத்தையும் அளித்தாள். நம்பினாள், ஏமாந்தாள். காட்டிலிருந்து மான் துள்ளி வருவதற்குப் பதிலாக, புலி ஒன்று சீறிப் பாய்ந்து வந்தது. அவள் கண்டது இதுதான்.

இப்படி ஒருவனை நம்புகிறோமே, உள்ளத்தைப் பறி கொடுக்கிறோமே, அவன் தன்னிடம் உண்மையாக நடந்து கொள்ளா விட்டால், துன்பம் வருமே என்பது அவளுக்குத் தெரியாதா? தெரியும், சொல் அளவிலே தெரியும். யௌவனத்தின் போதை தலையைக் கிறுக்கும் போது, 'எச்சரிக்கையாக இரு, வசமிழந்து விடாதே, ஏமாந்து போகாதே' என்ற உபதேசம் காதில் ஏறுமா? இப்போதோ, அந்த உபதேசம் எவ்வளவு உண்மையானது என்பது தெரிகிறது. தெரிந்தும் என்ன? இந்தப் பெண்ணின் உலகம் சூன்யமாகி விட்டது. அவள் யாரை நம்பினாளோ, யாருக்குக் களங்கமற்ற காதலின் பெயரால் தன்னையே தந்தாளோ, அவன் அவளைக் கைவிட்டு விட்டான். அது இப்போது தெளிவாகி விட்டது. எதைப் புகலிடமாக எண்ணி இருந்தாளோ அது பொடி மணலாய்ச் சரிந்தது. இனி, ஆறோ, குளமோ... கசங்கிய அவள் உள்ளம் பேசுகிறது, கேள். ஒரு வருஷத்தில் நடந்ததை, காதல் வெள்ளம் வடிந்து மண் மேடிட்ட சோக வரலாற்றைச் சொல்கிறது, உலகமெங்கும் என்றும் நடந்து வரும் பெண்-பாவத்தைப் பேசுகிறது,

கேன்' என்கிறான் கவிஞன். அந்த ஏழைப் பெண்ணின் குரலாகப் பேசுகிறான்:

'காசு பணத்தைக் கேட்டால் கொடுத்திடு
   கையினில் உள்ள பொருள் அனைத்தும்
வீசி எறிந்திடு-உன் பெண் உள்ளத்தை மட்டும்
   வேறொருவர் கொள்ளத் தாராதே.
பொன்னினை முத்தைப் பூந்துகிலைக் கடல்
   பூத்த பவள நிதியத்தினை
என்னத்தைத் தந்தாலும் தந்திடு-உன்
   உள்ளத்தை
   யாருக்கும் தந்து மயங்காதே'
என்ற சொல் காதினில் ஏறவில்லை. ஏனோ?
   என் வயதன்று பதினாறு.
பின்னரும் ஓர் சொல் ஞானி சொல்வான்: 'அடி.
   பேதையே நெஞ்சைப் பறிகொடுத்தால்
என்ன வருமென எண்ணிலையோ நீ
   ஏமாந்து நிற்பாய் எல்லையிலாத்
துன்பம் விலைக்கே வாங்கிடுவாய் தொடர்
   சோகம் விழுங்கத் துடித்திடுவாய்.'
என்றது கேளேன் இன்றவன் சொன்ன சொல்
   உண்மையடி. உண்மை. என்ன செய்வேன்?
என்ன செய்வேன் இனி என்ன செய்வேன் நான்.
   என் வயதின்று பதினேழு*

பதினாறு வயதில் புதிதாக மலர்ந்த பெண்மை, ஒரு வருஷத்தில் நம்பிக்கை இழந்து, கசந்து, ''ஐயோ, கேளாமற் போனேனே, 'நெஞ்சைப் பறி கொடுக்காதே' என்று, உலகின் போக்கை உணர்ந்தவர்கள் சொன்னதை ஏற்காமல் போனேனே என்று இரங்குவதை இந்தப் பாடலில் பார்க்கிறோம். ஆனால், பொல்லாத நெஞ்சு நம்மைக் கேட்டா பறி போகிறது? தாமரையைக் கேட்டா சூரியன் வருகிறான்? வந்தால் 'மலர மாட்டேன்' என்று இதழ்களை இறுக மூடிக் கொள்ளும் தாமரையை யாராவது கண்டதுண்டா? பெண்ணொருத்தியைக் கேட்டுக் கொண்டு காதல் வருவதில்லை. வருகிறது; காற்றைப்போல, சூரியனைப்போல, வருகிறது; வந்தால், நெஞ்சு நெகிழாத பெண்ணும் இல்லை. அவளுடைய அன்புக்குப் பாத்திரமான ஆடவனிடத்தில், குறை எதுவும் இருப்பதாக, அந்தப் பிரேமோதய காலத்தில் அவளுக்குத் தோன்றுவதில்லை. தன்னையே தந்து விடுகிறாள்; தரும்போது, சோறு, துணி, வீடு, ஜீவனாம்சம், இவை யெல்லாம் சட்டப்படி உத்தரவாதம் செய்கின்ற கலியாணம், இவற்றைப் பற்றிய உறுதிச் சீட்டு எழுதி, காதலனிடம் சாட்சிகளின் முன்னர் கையெழுத்து வாங்கி, பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டு, பிறகு அவனைப் பார்த்து, 'இதோ என் அன்பு' என்று பரிவர்த்தனைப் பேச்சு உண்மையான காதலுடையவள் பேசுவதில்லை. காதலுக்குக் காதலர் நெஞ்சைத் தவிர வேறு சாட்சி ஏது? உலகு அறிய, திருமணம் நடக்கும்போது காதலன்-காதலி இருவருக்கும் இடையே எழுந்த உறவின் பெருமை எல்லோருக்கும் தெரிய வருகிறது. கலியாணம் நடப்பதற்கு முன், காதலன் சொன்னபடி வாராவிட்டால், அலட்சியமாக நடந்து கொண்டால், அன்பைத் தராமல் இருந்தால், உண்மையைத் துறந்து விட்டால் பெண் மனம் துடிக்கிறது. 'என்னை அவன் காதலித்தது உண்மைதான். ஆனால் அதை எப்படிக் காட்டுவேன்?' என்று திகைக்கிறது.

இப்படித் திகைக்கிறாள். 'குறுந்தொகை' என்ற பழந் தமிழ்க் கவிதைத் தொகுப்பில், ஒரு பாடலில் வருகின்ற பெண் ஒருத்தி. யாரோ ஒருவன் வந்தான் அவளுடைய வாழ்க்கையில். 'யாரோ ஒருவன்' என்ற நிலையிலிருந்து 'அவன் ஒருவனே' என்ற நிலை கண நேரத்தில் பிறந்து விடுகிறது. இதுதானே காதலின் மாயம்! காதலர் இருவரும் தனியிடத்தில் சந்திக்கிறார்கள். அதில் என்ன ஆச்சரியம்? தங்களைத் தவிர வேறு ஒருவருமே இல்லாத இடத்தைத் தானே காதலர்கள் விரும்புவார்கள்? அப்படி ஏகாந்தமான காட்டு வெளியில் காதலர் இருவரும் சந்திக்கிறார்கள். அப்போது, பெண் தன் நெஞ்சை இழந்து விடுகிறாள்; இல்லை, அந்தக் கள்ளன் அதைத் திருடிக்கொண்டு போய் விடுகிறான்.

இப்போது, 'இல்லை' என்று அவன் சாதித்து விடுவானா? விட்டால்? பெண் மனத்தைத் திருடிச் சென்ற கள்வன் அவனே என்பதற்குச் சாட்சி ஏது? பார்க்கிறாள் அந்தப் பெண்: பழைய காட்சியை, தன் நெஞ்சை விட்டு நீங்கவே நீங்காத அந்த இன்பச் சந்திப்பை, நீள நினைந்து துருவிப் பார்க்கிறாள். சாட்சி ஒன்றும் அகப்படவில்லை. எண்ணுகிறாள்:

'சோலையின் தனிமை. பக்கத்தில் அவன் ஒருவனே, வேறு யாரும் இல்லை. அவன்தான் இருந்தான், உடம்பு புல்லரிக்கிறது. அவன்தான், அவன்தான். அவன்தான். ஆனால் அவனோ கள்வன். ஆமாம், நானா நெஞ்சைப் பறி கொடுத்தேன்? இல்லை, இல்லை. நான்தான் செயலற்றுப் பரவசத்தில் அழுந்தி விட்டேனே! நெஞ்சம் பறிபோனது உண்மைதான்; ஆனால் என்பேரில் குற்ற

* A. E. Housman, ஏ. இ. ஹௌஸ்மான் என்பவர் இயற்றிய ஆங்கிலப் பாடல்.

யில்லை. அவன் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு போனான். குற்றவாளி அவன்; அவனே கள்வன்.

யாரும் இல்லை தானே கள்வன்

'களவாடியவன் 'நான்தான் திருடினேன்' என்று ஒப்புக்கொள்வானா? கள்வனே களவுக்குச் சாட்சியாக வருவது உண்டா? இல்லை என்று சாதித்து விடுவானோ?

தான் அது பொய்ப்பின்

அவன் அதைப் பொய் என்று சொல்லி விட்டால்? எதை? எதுவென்று எப்படிச் சொல்வது? பெண்ணைப் பிறந்து விட்டேனே; அதைத்தான், அவன் கள்வனாக இருந்ததைத்தான். உண்மையிலிருந்து பிறழ்ந்து விட்டால், பொய்த்து விட்டால்,

யான் எவன் செய்கோ

நான் என்ன செய்வேன்? யாரைச் சாட்சியாகச் சொல்வேன்?

'இரு, சாட்சி உண்டு. இப்போது நினைவுக்கு வருகிறது. நாங்கள் இருந்த இடத்தின் அருகிலே ஓடை ஒன்று சலசலத்துச் சென்றது. அதன் கரையிலே நாரை ஒன்று. நன்றாக ஞாபகம் இருக்கிறது. ஒற்றைக் காலில் நின்று கொண்டிருந்தது அந்த நாரை. எவ்வளவு நீண்ட, மெல்லிய, பசுமையான கால், தினைப் பயிரின் தாளைப் போல! அந்தச் 'சிறு பசுங்கால்' நாரைக்குத் தெரியும், நாங்கள் மணந்தது. ஓ, அது சாட்சி சொல்லும்.

'இரு, சொல்லுமா? எப்படிச் சொல்லும்? அது பக்கத்திலே இருந்தது உண்மைதான்:

தினைத்தாள் அன்ன சிறு பசுங்கால

* * * * *

குருகும் உண்டு யாம் மணந்த ஞான்றே

[அன்ன - போன்ற; கால-கால் உடைய; குருகு - நாரை. ஞான்றே - பொழுதில்.]

நாரை அருகிலேதான் நின்றது. ஆனால், அது எங்களை எங்கே பார்த்தது? சலசலவென்று ஒழுகிய ஓடை நீரையல்லவா, மீன் வருமா என்று அது கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தது? மீனுக்காக அல்லவா, வாடி, ஒற்றைக் காலால் தவம் செய்து கொண்டிருந்தது! சனியன் பிடித்த நாரை, அது எங்கே சாட்சி சொல்லப்போகிறது! கேட்டால் 'எனக்கு ஒன்றும் தெரியாது. நான் மீன் வரும் வழிமேல் விழி வைத்து, அலகைத் தீட்டிக் கொண்டிருந்தேன்' என்று சொல்லும்: தரித்திரம்! இது இருந்தது பக்கத்தில், ஒன்றுக்கும் உதவாத இதுவும் இருந்தது.

தினைத்தாள் அன்ன சிறு பசுங்கால
ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு, யாம் மணந்த ஞான்றே.

[ஆரல் - மீன்]

'என்னை ஒன்றும் கேளாதே. மீனைத் தவிர ஒன்றையும் பார்க்காத நாரை தான் சாட்சி, அதாவது அவன்தான் சாட்சி, அவனே கள்வன்.

யாரும் இல்லை தானே கள்வன்
தான் அது பொய்ப்பின் யான் எவன்
செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறு பசுங்கால,
ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு யாம் மணந்த ஞான்றே.

சிறிய பாடல்தான், பட்டை தீர்ந்த வைரத்தைப் போல அளவிலே சிறியது. ஆனால் அதற்குள்ளே பெண் உள்ளத்தின் ஏக்கம் பேருலகமாய்த் திரள்கிறது.

இரண்டு பாடல்களும் பொதுவாக ஒரே மன நிலையிலிருந்து எழுந்தவை. ஆனால் அவற்றில் பேசும் இரண்டு பெண்களுக்கும் நுட்பமான வேறுபாடுகள் உள்ளன. பாடல்களைத் திரும்பவும் படித்துப் பாருங்கள், உங்களைப் போன்ற இலக்கிய ரசிகர்களுக்குத் தெரியாமலா போகும்?

மாதர்குல திலகங்கள்



சென்னை ராஜ்யத்திலிருந்து எல்லைப் பிரிவினையான ஜில்லாக்களில் தென் கன்னட ஜில்லாவும் ஒன்று. அந்தத் தென்கன்னட ஜில்லாவில் ஹோஸ்தூர்க் என்னும் ஊரில் பாலகிருஷ்ணராவ் என்ற பெயருடைய சான்றோர் ஒருவர் இருந்தார். அவர் ஓர் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அரசாங்கத்தில் அடித்தளக் குமாஸ்தாவாக ஊழியம் புரிந்து வரலானார். அவருடைய ஆறாவது புத்திரனின் பெயர் விட்டல் ராவ். விட்டல் ராவ், 'இளமையில் கொடுமை வறுமை' யில் வளர்ந்து கஷ்டப்பட்டு ஹைஸ்கூல் படிப்புவரை கல்வி பயின்றார். பிறகு தொழில் கல்விக்கூடம் ஒன்றில் சேர்ந்து நெசவுக்கலையில் சிறிது தேர்ச்சி பெற்றார். இந்த அநுபவத்தைக் கொண்டு பம்பாய் நகரில் நெசவு ஆலை ஒன்றில் நெசவு போதகராக வேலைக்கு அமர்ந்தார். அந்த ஆலையில் அவருக்கு ஏற்பட்ட தொல்லைகள் கொஞ்சமல்ல. மேலதிகாரிகளின் கெடுபிடிகளும், மிரட்டல்களும், பழிச் சொற்களும் தாளாமல், அவர் ஆலையை விட்டு வெளியேறினார்.

விட்டல் ராவுக்கு அப்போது மணமாகியிருந்தது. குடும்பப் பொறுப்பு மிகுந்திருந்தது. அவற்றையெல்லாம் கடவுள் பொறுப்பில் விட்டு விட்டுத் துறவியாக நித்யானந்தத்தைத் தேடி ஊர் ஊராகச் சுற்றினார். காடுகளிலும், மலைகளிலும் அலைந்து பார்த்தார். கடைசியில் தமக்கு வெகு அருகிலேயே — ஏன் தம் உள்ளத்திலேயே ஆண்டவனின் அருட் குரல் கேட்பதை உணர்ந்தார். அதுதான் "ராம், ராம்" என்ற மந்திரக் குரல்.

இந்த மந்திரச் சொல்லை வாயாரப் பல லட்சம்முறை உச்சரித்தார். மற்றவர்களையும் உச்சரிக்கச் செய்ய ஆசிரமம் ஒன்று அமைத்தார். அந்த ஆசிரமந்தான், தென் கன்னட ஜில்லாவில் பிரசித்தமாக விளங்கி வரும் ஆனந்தாசிரமம்.

காஞ்சங்காடு புகைவண்டி நிலையத்துக்கு அருகில் இந்த ஆனந்தாசிரமம் அமைதியான இடத்தில் அமைந்துள்ளது.

இந்த ஆசிரமத்தை அமைத்த ஸ்ரீ விட்டல் ராவ் அவர்களைத்தான் பக்தர்கள் 'சுவாமி ராம்தாஸ்' என்று போற்றி வணங்கி வருகிறார்கள். இத்தகைய ராமதாஸ் சுவாமிகளாலேயே "மாதாஜி" என்று அழைக்கப்பட்டு வரும் பக்தர்களில் ஒருவர்தான், படத்தில் தோற்றமளிக்கும் அன்னை கிருஷ்ணாபாய் அவர்கள்.

சிறு வயதிலேயே தெய்வ பக்தி மிகுந்து விளங்கிய அன்னை கிருஷ்ணாபாய் தார்வாரைச் சேர்ந்தவர். சிறு வயதிலேயே இல்லறத் தொல்லைகளால் பாதிக்கப்பட்டவர். கணவரின் பிரிவாற்றாமைத் துயரமும் சேர்ந்து விடவே, ஆண்டவனின் சேவையில் அமைதியை நாடலானார். ஆனந்தாசிரமம் அவருக்கு அழைப்பு விடுத்தது. சுவாமி ராமதாஸின் ராமகீதம் அவரைக் கவர்ந்தது. இந்த நிலையற்ற உலகில் அதுவே உய்வளிக்கும் தாரக மந்திரமாக அமைந்தது.

அதுமுதல் ஆனந்தாசிரமத்தில் அடியார் கூட்டத்தில் அன்னையும் ஒருவராகி அரும் பணிகள் புரிந்து வருகின்றார். ஆசிரமத்து நிர்வாகப் பொறுப்புகள் பலவற்றை ஏற்றுச் சேவை புரிந்து வருகிறார். 'மக்கள் தொண்டுதான் கடவுள் தொண்டு ஆகும்' என்பதே ஆனந்தாசிரமத்து லட்சியம். இதன்படி ஆனந்தாசிரமத்தில், ஹரிஜன சேவை, வைத்தியப் பணி, எளியோருக்குக் கல்வி, தொழிற் பயிற்சி, அநாதைகளுக்கு உறைவிடம், பசித்தோருக்கு உணவு, ஆவினங்களுக்கு ஆதரவு முதலிய பணிகள் சாதி, மத பேதமின்றி நடந்தேறி வருகின்றன.

இந்தப் பணிகளில் பெரும்பாலானவற்றை மாதாஜி அவர்களே திறம்பட நிர்வகித்து வருகிறார். இந்த அரிய சேவைகளே அவருக்கு இவ்வுலகத் துயரங்களுக்கெல்லாம் சாந்தி பயக்கும் அருமருந்தாக விளங்குகின்றன. ஆசிரமத்திலுள்ள பக்தர்கள் அனைவரும் அவரை 'மாதாஜி' என்று போற்றிப் புகழ்வதிலிருந்து இவர் தொண்டின் சிறப்பினை நன்கு அறியலாம். ராமநாமம் எப்போதும் முழங்கிவரும் ஆனந்தாசிரமத்தில் மாதாஜி கிருஷ்ணாபாயின் நாமமும் என்றும் ஒலித்து வரவேண்டும் என்று பக்தர்கள் பிரார்த்திக்கிறார்கள். அவர்களுடைய பிரார்த்தனையில் நாமும் கலந்து கொள்வோமாக.




ஈழ நாட்டுப் பிரயாணம் 28

பழமையான பெருங்குலத்தில் வந்த மன்னன் அவன். போர்க்களத்தில் புறமுதுகிடுதலை அறியாத வீர பரம்பரையில் வந்த அரசன் அவன். ஆயினும் அவன் சதா சர்வ காலமும் போர்முனையில்தான் இருந்தானா? இல்லை. மக்களின் நல்வாழ்வுக்காக எவ்வளவோ அற்புதமான காரியங்களைச் செய்தான். மிகப் பெரிய ஏரிகளை வெட்டி விவசாயத்தைப் பெருக்கினான். பல தாகபாக்களைக் கட்டி அன்பையும் தெய்வ பக்தியையும் மக்கள் மத்தியில் பரப்பினான். இந்த உலகில் அன்பையும் அஹிம்சையையும் பரப்பிய தெய்வ மனிதரான மகான் புத்தருக்குச் சிலை எடுத்தான். சிலை என்றால் சாதாரணச் சிலையா? பத்தடி இருபதடி என்று நினைக்கிறீர்களா? இல்லை. நாற்பது அடி நீளத்தில் சிலை அமைத்தான். புத்தபெருமான் சாய்ந்து படுத்து மகா நிர்வாணம் அடைந்து இருக்கும் நிலையும், அவர் அருகில் அவருடைய முதல் மாணவர் ஆனந்தர் பயபக்தியுடன் நின்று கொண்டிருக்கும் நிலையும் கொண்ட சிலைகளை அமைத்தான். இவற்றுக்குப் பக்கத்திலேயே இன்னும் பல புத்தர் சிலைகளையும் அமைத்தான். இந்தச் சிலைகளின் எதிரில் ஏராளமான மக்கள் கூடியிருந்து வழிபடுவதற்கு வசதியாகத் திறந்தவெளி இருக்கும்படி செய்தான். இவைகளை எல்லாம் எங்கே செய்தான்? அந்தக் காலத்து இலங்கைத் தீவின் புகழ்பெற்ற தலைநகரமாக விளங்கிய பொலன்னறுவை நகரத்தில்தான் செய்தான்.

வைசாக பௌர்ணமியின் போதெல்லாம் கோலாகலமாகத் திருவிழா கொண்டாடினான். வெண்ணிலவு எரிக்கும் அந்தப் பௌர்ணமி இரவில் ஆண்களும் பெண்களும் பதினாயிரக்கணக்கில் வந்து கூடுவார்கள். புத்தர் சிலைகளுக்கு எதிரில் பயபக்தியுடன் கைகூப்பி நிற்பார்கள். தாங்கள் கொண்டு வந்திருந்த தாமரை மலர்களைப் புத்தரின் திருப் பாதங்களில் சமர்ப்பித்து வணங்குவார்கள். அப்பொழுது அகில் புகை ஆகாயத்தை அளாவிக் கிளம்பும்.

வாழ்வு






இன்னும் அலங்காரமான யானைகளைக் கொண்டு வந்து நிறுத்தி விழாவுக்கு மேலும் சிறப்பளிப்பார்கள். ஆங்காங்கு பலவிதமான பக்தி பரவசம் பொருந்திய கதா காலக்ஷேபங்களும், நடனங்களும், கூத்துகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கும். இந்தக் குதூகலமான திருவிழாவில் மக்களுடன் மன்னர் குடும்பத்தினரும் சரிநிகர் சமானமாகக் கலந்து கொள்வார்கள். இளவரசிகளும், இளவரசர்களும், மந்திரிமார்களும், அவர்கள் மனைவிகளும், சேனாபதிகளும் அவர்கள் பத்தினிமார்களும், செல்வந்தர்களும் அவர்களுடைய அருமை மனைவிமார்களும் கூடிவந்து புத்தர்பிரானைத் தொழுது நிற்பார்கள். ஆகா! இந்தக் காட்சி மக்களின் நல்வாழ்வை எடுத்துக் காட்டும் மகிழ்ச்சித் திருவிழாவாக இருக்கும். மக்கள் நலனில் அக்கறை கொண்ட மன்னரின் தர்ம ஆட்சிக்கு நன்றி விழா எடுப்பதுபோல இருக்கும். பொலன்னறுவை நகரத்தின் புகழ்பெற்ற வாழ்வு ஒவ்வொரு காரியத்திலும் நன்றாகத் துலங்கி மிளிரும்.

இப்பொழுது இருக்கும் பொலன்னறுவைக் காட்டுக்குள் புகுந்து சென்று, அங்குள்ள புராதனச் சின்னங்களுக்கு முன்னால் நின்று, ஒரு கணம் கண்ணை மூடிக்கொண்டு பழைய கால நிகழ்ச்சிகளை நினைத்துப் பார்த்தால், மேலே கூறிய காட்சிகள்தான் நமக்குத் தோன்றுகின்றன. தற்கால இலங்கைத் தீவை விட்டு நீங்கி, பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் தர்மநெறியில் நின்று அரசு புரிந்த தமிழ் மன்னர்கள், சிங்கள மன்னர்கள் காலத்து இலங்கைத் தீவுக்குச் சென்று விடுகிறோம். கலைகளிலும், நாகரிகத்திலும், பொருள் வளத்திலும், அருள் செல்வத்திலும் சிறந்து விளங்கி வாழ்வாங்கு வாழ்ந்த இலங்கைத் தீவுக்குள்ளே புகுந்து உலாவி வருவது போன்ற பிரமைதான் நமக்கு ஏற்படுகிறது.

மூடிய கண்களைத் திறந்துவிட்டால் இத்தனை நேரமும் நம் மனக்கண் முன்னே நடமாடிய மக்களும், மன்னர்களும், மந்திரிப் பிரதானிகளும் மறைந்து விடுகிறார்கள். அவர்களெல்லாம் இப்போது எங்கே? அவர்கள் எல்லாம் இந்த உலகைவிட்டே மறைந்து விட்டார்கள். ஆகா! இவர்கள் வாழ்வு இன்று எங்கே மறைந்தது? எல்லாம் மாயமாய் மறைந்து போய் விட்டது. அவர்கள் வாழ்வு தாழ்ந்துவிட்ட உண்மையை

தாழ்வும்

பகீரதன்



உணருகிறோம். ஆனாலும் இலங்கைத் தீவின் சரித்திரத்தில் பொன்னான காலத்தை, சிறப்பு மிக்க மன்னர்களின் ஆட்சியின் அடையாளத்தைப் பொலன்னறுவைக் காட்டுக்குள் இருக்கும் ஒவ்வொரு கல்லும், ஒவ்வொரு சிலையும், ஒவ்வொரு குளமும், ஒவ்வொரு கோயிலும், மரமும் செடியும் கொடியும் இன்றைய தினமும் நமக்கு ஆதாரபூர்வமாகவும் அழுத்தம் திருத்தமாகவும் சந்தேகத்துக்கு இடமின்றியும் எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்கின்றன.

*** *** ***

பொலன்னறுவையைப் பார்ப்பதற்குச் சுமார் இருபது மைல் காட்டுக்கு மத்தியில் பிரயாணம் செய்தாகவேண்டும். காட்டுக்கு மத்தியில் அருமையான சாலை அமைத்திருக்கிறார்கள். இந்தப் பொலன்னறுவை நகரம் பல ஆண்டுகளாக இருக்கும் இடம் தெரியாமல் காட்டுக்குள் மறைந்து கிடந்

தது. மன்னரும் மக்களும் கூடியிருந்து வாழ்ந்த இந்தத் தலைநகரம் காட்டு மிருகங்கள் வாழும் காடாகிவிட்டது. சுமார் ஐம்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்னால் ஆயிரத்துத் தொள்ளாயிரத்தோராம் ஆண்டு காட்டில் வேட்டையாடச் சென்ற ஒரு ஆங்கிலேயன் காட்டுக்கு மத்தியில் இருந்த சில சிற்பங்களையும் சிதைந்து போன பல கோயில்களையும் கண்டான். அதற்குப் பின்னர்தான் இலங்கை சர்க்கார் இந்த நகரின் சிறப்பை உணரத் தொடங்கினர். காட்டைத் திருத்திப் புதைந்து போன பொலன்னருவை நகருக்குச் சாலை அமைத்தனர். இலங்கைத் தீவின் இரண்டாயிரம் ஆண்டு சரித்திர வரலாற்றை எடுத்துக் கூறும் இந்தப் புராதன சின்னங்களைப் பக்தியுடன் பாதுகாக்கத் தொடங்கினர்.

பதினோராவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கைத் தீவு முழுவதும் தமிழர்களின் ஆட்சியில்தான் இருந்தது. தமிழ்மன்னர்களின் தர்ம ஆட்சி நடைபெற்ற காலத்தில்தான் பொலன்னருவை இலங்கைத் தீவின் தலைநகரமாக இருந்தது. ஆனால் அப்போது இதற்குப் பொலன்னருவை என்ற பெயர் இல்லை. புலஸ்திய நகரம் என்ற பெயர்தான் வழங்கி வந்தது. இராஜராஜன் காலத்தில் 'ஜனநாதபுரம்' என்ற பெயர் பெற்றது. இராஜராஜனுடைய இன்னொரு பட்டப்பெயர் ஜனநாதன் என்பதாகும். ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவனாதலால் அவனுக்கு ஜனநாதன் என்ற பட்டம் கிடைத்ததாகச் சரித்திரம் கூறுகிறது. ஜனநாதனின் தலைநகருக்கு, ஜனநாதபுரம் என்று பெயர் சூட்டினார்கள். வாருங்கள், ஜனநாதன் கட்டிய சிவாலயங்களைப் பார்க்கலாம்.

பொலன்னருவையில் அழிவுற்றுக் கிடக்கும் பழைய கட்டடங்களில் மிகப்பழைமையானவை சிவன் கோயில்கள்தாம். இவற்றைச் 'சிவ தேவாலே' என்று சிங்களத்தில் சொல்லுகிறார்கள். சுமார் பத்து சிவன் கோயில்கள் இங்கே இருந்ததற்கு வேண்டிய சின்னங்கள் இருக்கின்றன. இவற்றுள் இரண்டு கோயில்கள் உருவம் கெடாமல் இருக்கின்றன. ஒன்று முழுவதும் கல்லால் அமைந்தது. இன்றும் மேல் விமானமும் உள்ளே சிவலிங்கமும் வெளியே நந்தியும் இருக்கின்றன. இந்தப் பகுதிகளில் கிடைத்த செப்பு விக்கிரகங்களை எல்லாம் கொழும்பு தொல்பொருள் கலை மண்டபத்தில் காண முடிகிறது. மற்றொன்று செம்பியன் மாதேவி ஈசுவராலயமாம்.

சுமார் நூற்றைம்பது ஆண்டுகள் பொலன்னருவை 'ஜனநாதபுரம்' என்ற பெயருடன் சோழ மன்னர்களின் தலைநகரமாக விளங்கியது. பின்னர் விஜயபாகு, பராக்கிரமபாகு என்னும் மன்னர்கள் தோன்றி இலங்கையில் தங்கள் ஆட்சியை நிலைநாட்டினார்கள். அப்பொழுது நகரின் பெயரையும் மாற்றினார்கள். அதேபோல அங்கிருந்த பல சிவன் கோயில்களையும் மாற்றி விட்டார்கள். சிவன் கோயில் மூலஸ்தானத்தில் சிவலிங்கம் இருக்கும் இடத்தில் புத்தர் சிலையை அமைத்தார்கள். புதிதாகவும் நமது தமிழ் நாட்டுப் பாணியைக் கொண்ட சிவன்கோயிலை ஒட்டிய முறையில் சில புத்த விஹாரங்களையும் கட்டினார்கள்.

இலங்கைத் தீவில் பல இடங்களில் இவ்வாறு சிவன் கோயில்கள் புத்த விஹாரங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன!

"இதற்கு ஏதாவது ஆதாரம் உண்டோ?"

"உண்டு."

"அதைக் கூற முடியுமா?"

"இதோ சொல்லி விடுகிறேன்."

ஒரு சமயம் தமிழ்ப் பெரும் பேராசிரியர் ஒருவர் இலங்கைக்குச் சென்றிருந்தார். அவருடைய செல்வாக்கை மதித்து அவரை அநுராதபுரத்திலும், பொலன்னருவையிலும் உள்ள புத்த விஹாரங்களுக்கும் அழைத்துச் சென்று காண்பித்தனர் அங்கிருந்த அறிஞர்கள். ஒரு புத்த விஹாரத்துக்குள் ஒரு அறை மட்டும் பூட்டப்பட்டிருந்தது.

"இதற்குள் என்ன இருக்கிறது?" என்று கேட்டார் தமிழ்ப் பேராசிரியர்.

"இது இந்தக் கோயிலின் இரகசிய அறை. இதற்குள் யாரும் போவதில்லை" என்றார் வழிகாட்டி வந்த புத்த பிக்கு.

"இந்த இரகசிய அறையின் சாவி தங்களிடம் இருக்கிறதல்லவா?"

"இருக்கிறது."

"சாவியைப் போட்டு அறையைத் திறங்களேன். பார்த்து விட்டால் போகிறது."

"இதற்குள் நானே சென்று பார்த்ததில்லை. எங்கள் தலைவரைக் கேட்டு விட்டுத்தான் கதவைத் திறந்து காட்ட வேண்டும்."

"தயவுசெய்து கேட்டு விட்டு வாருங்கள்" என்றார் தமிழ்ப் பேராசிரியர்.

பேராசிரியரின் செல்வாக்கை நன்கு உணர்ந்த புத்தபிக்குகளின் தலைவர் அந்த அறையைப் பேராசிரியருக்குத் திறந்து காண்பிக்கும்படி சொன்னாராம். பிக்குவும் அறைக் கதவைத் திறந்து காண்பித்தார். பேராசிரியரும் ஆவலுடன் அறைக்குள் சென்றார். அறையில் ஒரே இருட்டாக இருந்ததால் அதற்குள் இருப்பது என்னவென்று தெரிந்து கொள்ள முடியவில்லை. பின்னர் 'டார்ச்' வெளிச்சத்தின் மூலம் அறையின் இருட்டைப் போக்கினார்கள். அடுத்த கணம் பேராசிரியர் தம்மை மறந்தவராய் "அப்பனே! முருகா! தமிழ்க் கடவுளே! உனக்கா இந்தக் கதி? உன்னை இந்த இருட் சிறையில் அடைத்துவிட்டு உன் இடத்திலா புத்தர் பிரானை எழுந்தருளச் செய்திருக்கிறார்கள்!" என்று கண்ணீர் மல்கக் கதற ஆரம்பித்து விட்டார்.

இந்தச் சம்பவத்தைப் பேராசிரியரே என்னிடம் நேரில் சொல்லியிருந்தார். இதே காட்சியை நானும் இலங்கையில் பார்த்தேன். தமிழ்க் கடவுளான முருகக் கடவுளைப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே சிறையில் அடைத்த சிங்களவர்கள், இப்பொழுது தமிழ் மக்களையும் தமிழையும் இலங்கையை விட்டுத் துரத்துவதற்கு முயன்று வருவதில் என்ன ஆச்சரியம் இருக்கப் போகிறது!

பொலன்னருவையில் அருமையான 'வாடிவீடு' அதாவது விருந்தினர் விடுதி இருக்கிறது. பராக்கிரம சமுத்திரம் என்ற பெரிய ஏரிக் கரையில் இந்த விருந்தினர் விடுதியைக் கட்டியிருக்கிறார்கள். இங்கிலாந்து மகாராணி இலங்கைத் தீவுக்கு வந்தபோது



டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் அதிபர்களில் ஒருவரும் மதராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்டின் மானேஜிங் டைரக்டருமான திரு டி. எஸ். சந்தானம் மோட்டார் தொழில்நுணுக்கங்களையும் நுட்பங்களையும் மேலும் அறிந்து வருவதற்காக ஜூன் 29-ந்தேதி இங்கிலாந்துக்கு விமானம் ஏறினார். அப்பொழுது திரு எம். பி. நாராயணன் (மோட்டார் பார்ட்ஸ்டீலர், 81/82, ஹாரிஸ் ரோடு, சென்னை-2) அவர்கள் திரு சந்தானத்துக்குச் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மலர்மாலை யணிவித்துக் கௌரவித்தார். மலர் மாலையுடன் திரு சந்தானம் மகிழ்ச்சியுடன் நிற்பதையும், அவருக்கு வலது புறத்தில் மதராஸ் ஆட்டோ சர்வீஸ் மானேஜர் திரு வி. ஆர். சிவராமனையும் இடது புறத்தில் திரு எம். பி. நாராயணன் அவர்கள் மலர்ந்த முகத்துடன் வழியனுப்புவதையும் காணலாம்.

அவர் தங்குவதற்கென்று இந்த விருந்தினர் விடுதியை நவீன சாதனங்களுடன் மிகச் சிறந்த முறையில் திருத்தி அமைத்திருக்கிறார்கள். குளிர் சாதன வசதிகளுடன் கூடிய அறைகளும் இருக்கின்றன. இந்த விருந்தினர் விடுதியில் தங்குவதற்காகவே சரித்திரப் புகழ் பெற்ற பொலன்னருவை நகருக்குச் சென்று விட்டு வரலாம் என்று தோன்றுகிறது.

"இந்த விருந்தினர் விடுதிக்கு அருகிலேயே ஏதோ பாழடைந்த மண்டபம்போல் தெரிகிறதே, அது என்ன?"

"இது நிச்சங்க மல்லன் என்னும் அரசனின் ஆஸ்தான மண்டபம்."

"ஓகோ! அப்படியா?" என்று சொல்வதற்குள் நமது கார் விருந்தினர் விடுதிக்கு இடையேயுள்ள நீண்ட சாலை வழியே புகுந்து வேகமாகச் செல்ல ஆரம்பித்து விட்டது.

ஒரு இடிந்த கோயிலுக்கு முன்னால் சென்று கார் நின்றது. "கீழே இறங்குங்கள். இந்தப் புத்த விஹாரத்தைப் பார்க்கலாம்" என்றார் எங்களுக்கு வழிகாட்டி வந்த நண்பர்.

"இந்தக் கோயிலுக்கு என்ன பெயரோ?" என்று கேட்டுக்கொண்டே கீழே இறங்கினோம்.

"இதற்குத் திரிவங்க புத்தர் ஆலயம்" என்று பெயர்.

"அப்படி என்றால்?"

"இந்தக் கோயிலின் மூல ஸ்தானத்தில் உள்ள புத்தர் சிலை மூன்று இடங்களில் வளைந்து நிற்பதனால் இதற்கு இந்தப் பெயர் வந்தது! இந்தக் கோயிலை 'லங்கா திலகம்' என்றும் சொல்லுகிறார்கள்" என்றார்.

இங்கே மிகப் பெரிய செங்கற் சுவர்கள்தான் இருக்கின்றன. மேற்பகுதிகள் பெரும்பாலும் இடிந்து விட்டன. பிரும்மாண்டமான புத்தர் திருவுருவம் நின்ற திருக் கோலத்தில் இருக்கிறது. பெரியது என்றால் சுமார் முப்பது அடி உயரமாவது இருந்திருக்க வேண்டும். செங்கல்லும் சுண்ணாம்பும் கொண்டு அமைத்த சுதையினால் ஆன திருவுருவம். காலம் செய்த சதியால், மனிதர்கள் மிருகமாக மாறிய கோலத்தால் கோயில் சிதைந்து கிடப்பது போலவே புத்தரின் திருவுருவமும் சிதைந்து கிடக்கிறது. மார்புக்கு மேல் புத்தரின் உருவம் இல்லை. கோயில் வாசல் கோபுரத்தின் உள் பக்கச் சுவர்களில் சில அற்புதமான வர்ணச் சித்திரங்கள் இருக்கின்றன. இவை புத்தர் ஜாதகக் கதைகளைச் சித்திரிக்கின்றன. சித்திரங்கள் எல்லாம் சோழ நாட்டுச் சித்திரங்களின் பாணியைச் சேர்ந்தவைதான்.

அடாடா! அந்தச் சித்திரங்களின் அழகை எப்படி வர்ணிப்பேன். சித்திரங்கள் என்னவோ சற்று மங்கியும் மாசு படிந்தும்தான் இருக்கின்றன. அவைகளை அநுபவிப்பதற்கு ஆழ்ந்த கலை உணர்ச்சி அவசியம் வேண்டும். கலை உணர்ச்சி நிறைந்தவர்கள் இந்தச் சித்திரங்களைப் பார்த்து அநுபவிக்கத் தொடங்கி விட்டார்களானால் அவர்களை அங்கிருந்து திருப்பி அழைத்து வரவே முடியாது.

காதலனின் பிரிவாற்றாமையைக் காட்டும் சித்திரம் ஒன்று இருக்கிறது. ஆண் மானை எங்கோ விட்டு வாடும் பெண் மான். காதலனைப் பிரிந்து வாடும் பெண்மணி. இரண்டு பேரும் ஒருவருக்கு ஒருவர் ஆறுதல் சொல்லிக் கொள்கிறார்கள். காதலனின் பிரிவாற்றாமையால் வருத்தப்படும் பெண்மணி தன்னுடைய அருமைக் காதலனைக் காணாது உணவருந்தாமல் இருக்கும் பெண் மானுக்கு உணவு தருகிறான். அது தன்னுடைய நீண்ட விழிகளால் அவளுக்கு ஆறுதல் சொல்கிறது! மிக அபூர்வமான காட்சி.

இன்னும் சில புனிதமான சித்திரங்கள். புத்தர் வான வீதியிலிருந்து இறங்கி வருகிறார். அவருடைய பாதங்களில் கமலங்களை வைத்து அவர் இறங்குவதற்கு உதவி செய்கிறார்கள் தேவர்கள். பக்தி சொட்டும் மகா உயர்ந்த சித்திரம். தேவரும் மூவரும் வான வீதியில் வந்து வணங்கும் புத்தர் திருக்கோலக் காட்சி கண்கொள்ளாக் காட்சி.

புத்தர் ஜனனமாகும் நேரம் நெருங்கி விட்டது. புத்தரின் தாயார் பிரசவ வேதனைப் படுகிறார். சுற்றிலும் தேவகணங்கள் சூழ்ந்து நிற்கின்றன. புத்தர் பிரானின் அன்னை மஞ்சத்தில் படுத்திருக்கும் காட்சி மிக உயர்ந்த பண்போடு காட்டப்படுகிறது. கழுத்து, பின் தலை, முதுகு இவற்றையே பார்க்கிறோம். ஆனாலும் அந்தப் பாகங்களே அன்னையின் வேதனையை நமக்குப் புலப்படுத்தி விடுகின்றன. உள்ளத் தாய்மை துலங்கும் முறையில் இந்தச் சித்திரத்தை வரைந்திருக்கிறார்கள்.

இந்த அமர ஓவியங்களைப் பார்த்துவிட்டுக் கல் விஹாரத்துக்குச் சென்றோம். காட்டுக்கு மத்தியில் உள்ள கருங்கல் குன்றுகளைக் கல்லுளிகளைக் கொண்டு கடவுளர்களாக மாற்றியிருக்கும் விந்தைகளைப் பார்த்து வியந்து போனோம். புத்தர் தியானத்தில் அமர்ந்திருக்கும் திருக் கோலத்திலும், புத்தர் மகா நிர்வாணம் பெற்ற திருக்கோலத்திலுமாகப் பல திருவுருவங்களைப் பார்த்தோம்.

தவத்தில் அமர்ந்த திருக் கோலத்தில் இருக்கும் புத்தரின் திருமுகத்தில் தவழும் சாந்தத்தை எப்படி எழுத்திலே எழுதிக் காட்டுவது? ஞானஒளி வீசும் திருமுகத்தைக் கருங்கல்லிலே கொண்டு வந்திருக்கிறான் கலைஞன். அதற்கு அப்பால் . சிறு குகைக் கோயிலுக்குள் புத்தரின் மற்றொரு திருக் கோலம் இருக்கிறது. இங்கும் தியானத்தில் அமர்ந்தபடியே இருக்கிறார் மகான் புத்தர். அடாடா! இந்தச் சிலையில் புத்தர் ஞானம் பெற்றுவிட்டார் என்பதைக் காட்டுகிறான் கலைஞன். அகர் மன நிம்மதியை முகத்திலே கொண்டு வந்திருக்கிறான் கலைஞன். நம்மையறியாமல் தலைவணங்கி விடுகிறோம்.

அடுத்து நிற்கும் கோலத் திருவுருவமும் அதையொட்டிக் கிடந்த திருக்கோலமும் நம்மை எங்கோ கொண்டு சென்று விடுகின்றன. பகவான் புத்தர் மகா நிர்வாணத் திருக்கோலமும், புத்தரின் பிரிவைத் தாங்க முடியாமல் நிற்கும் அவருடைய மாணவர் ஆனந்தரின் திருவுருவமும் நம்மை என்னென்னவோ செய்து விடுகின்றன.

மகாநிர்வாணம் பெற்றுக் கிடக்கும் புத்தரின் திருக்கோலம் சாமான்யமானதல்ல. சுமார் நாற்பத்தைந்து அடி நீளம் உள்ள நீண்ட நெடுந் திருவுருவம். வலப்பக்கமாகத் திரும்பித் தலையணையின் மேல் வலக்கையை மடித்து வைத்திருக்கும் திருக்கோலம். கருங்கல்லிலே செதுக்கிய திருவுருவமா அது? நாற்பத்தைந்து

அடி நீளமுள்ள புத்தரைப் பார்க்கும்போது நமக்கு என்ன நினைவு உண்டாகிறது? மனித குலத்தில் வந்துதித்த சாதாரண மனிதர் அல்ல இவர். எல்லாருக்கும் எல்லாவற்றுக்கும் பெரியவர் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. சிற்பி அப்படிச் செய்திருக்கிறான் புத்தரின் திருவுருவத்தை. புத்தரின் முகத்திலே தோன்றும் சாந்தத்தைச் சொல்வதா? அவர் அணிந்திருக்கும் ஆடைகளில் விழுந்து கிடக்கும் மடிப்புகளின் அழகைச் சொல்வதா? கைகளின் சைகை அமைப்பைப் பற்றிக் கூறுவதா? பாத கமலங்களில் உள்ள கமல முத்திரைகளின் சிறப்பைப் பற்றிச் சொல்வதா? எதைப் பற்றிச் சொல்வது என்றே தெரியவில்லை. தலையணை கற்கள் என்ற நினைவே நமக்குத் தோன்றவில்லை. நல்ல இலவம் பஞ்சு அடைத்த 'வெல்வெட்' தலையணையாகவே காட்சி தருகிறது. தலையணையின் மீது வலது கையை மடித்து அதன் மீது தலையை வைத்திருப்பதால் தலையணை சற்று அழுந்தியிருப்பதைக் கூடச் சிற்பி காண்பித்திருக்கிறான் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். வெறும் சிற்ப அறிவு கொண்டு மட்டும் உருவாக்கிய சிற்பங்கள் அல்ல இவைகள். பக்தியுணர்ச்சியுடன் பல காலம் நோன்பிருந்து உருவாக்கிய மகா சிற்பங்கள்.

இங்கிருந்து பொத்கல் விகாரத்துக்குச் சென்றோம். அங்கே உள்ள பாறையில் ஆஜானுபாகுவான ஒரு உருவம் நிற்கிறது. சிற்பியின் கைத்திறமை அத்தனையும் கொண்ட அற்புதத் திருவுருவம். இந்தத் திருவுருவம் தாடியும் மீசையுமாகக் கையிலே எதையோ ஏந்திக் கொண்டு கம்பீரமாக நிற்கிறது.

"இது யாருடைய திருவுருவமோ?" என்று கேட்டேன்.

"இதுதான் இந்த நகரை ஆண்ட பராக்கிரம பாகுவின் திருவுருவம்" என்றார் வழி காட்ட உடன் வந்த நண்பர்.

சடையும் முடியும் தாடியும் தொங்கிய காதும் உடைய இந்தத் திருவுருவத்தைப் பார்த்தால் யாரோ முனிவருடைய திருவுருவமாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கத் தோன்றியது. அதனால் "இந்த உருவத்தைப் பார்த்தால் அரசனுடைய திருவுருவம் போல் இல்லையே" என்றேன்.

"ஆமாம். அரசன் தன்னுடைய அரசைத் துறந்து 'இனி நான் போர் செய்ய மாட்டேன்' என்று போர் வாளைப் பெட்டிக்குள் வைத்துச் சமர்ப்பிக்கும் கோலந்தான் இது. அந்தச் சந்தர்ப்பத்தைக் காட்டும் கோலமானதால் அரசனுடைய இலட்சணத்துடன் இதை அமைக்கவில்லை சிற்பி."

"கையில் இருப்பதைப் பார்த்தால் ஏட்டுச் சுவடியைப் போல் அல்லவா இருக்கிறது."

"ஆமாம் அப்படியும் சிலர் அபிப்பிராயப் படுகிறார்கள். இது அகஸ்திய மாமுனிவரின் திருவுருவம் என்று சொல்கிறார்கள். ஆனால் அகத்தியர் குள்ளமான உருவம் உடையவராதலால் அதை ஏற்க முடியவில்லை."

"ஆமாம். அகத்தியராகத்தான் இருக்க வேண்டும். இது பராக்கிரமபாகுவும் இல்லை; புலஸ்தியரும் இல்லை. தமிழ் வளர்த்த அகத்திய முனிவரின் திருவுருவம்தான். புத்தர் பிரானை மிகப் பிரும்மாண்டமாகச் செய்த கலைஞன், அகத்தியனையும் மிகப் பிரும்மாண்டமாகச் செய்திருக்கிறான். அமைப்பிலே குள்ள உருவம் என்ற எண்ணம் பார்ப்பவர்களுக்குத் தோன்றும்படியும் இதைச் செய்திருக்கிறான். அதனால் இது அகத்திய முனிவர்தான். அவர் கையில் வைத்திருப்பது தெய்வத் தமிழ்ச் சுவடிதான்" என்றேன்.

அவர் சிங்கள நண்பர். ஆகையால் இதை ஏற்றுக் கொள்வதற்கு அவர் மனம் ஒப்பவில்லை போலும். யார் என்ன சொன்னாலும் அந்தத் திருவுருவம் அகத்திய முனிவர்தான் என்பதில் எனக்கு என்னமோ சந்தேகமே ஏற்படவில்லை. ஒன்றரை ஆள் உயரத்தில் சிற்பச் சிலை இருப்பதைக் கொண்டு சிலர் அதை ஏற்க மறுக்கிறார்களாம். ஆனாலும் கலைஞன் தன் கற்பனையில் கண்ட அகஸ்தியரின் திருவுருவம் அது. தொலை தூரத்திலே நின்று, சிற்பச் சிலையை உற்றுப் பார்த்தால் இந்தச் சிலை சற்றுக் குள்ள உருவமாகவே தோன்றுகிறது. ஆகையால் இது அகத்திய முனிவரின் சிலைதான் என்பதை விருப்பு வெறுப்பு இல்லாத அறிஞர்கள் ஏற்றுக் கொள்வார்கள்; ஆராய்ச்சியாளர்கள் ஆமோதிப்பார்கள்.

இன்னும் பராக்கிரம பாகுவின் அரண்மனையைப் பார்த்தோம். அரண்மனை என்றால் அரண்மனை இருந்த இடம்தான். அடித்தளத்தின் அமைப்பு அப்படியே இருக்கிறது. அதைக் கொண்டு நாம் அரண்மனையை மனக் கண்ணால் காண முடிகிறது. அரண்மனையின் வாசலில் அற்புதமான சிற்ப வேலைப்பாடுகள் இருக்கின்றன. அரண்மனையை ஒட்டினாற் போல் அந்தப்புரம். அதை அடுத்து நீராடும் பளிங்கு மண்டபம், வாவி எல்லாம் இருக்கின்றன. அதன் அமைப்பே தனி அழகுடன் காட்சி தருகிறது. மன்னரின் சபா மண்டபக் கோலம் அபாரம். நடுவில் மன்னர் அமருவதற்கான உயர்ந்த பீடம். இருபுறமும் அமைச்சர்களும், சேனாபதிகளும் அமருவதற்கான ஆசனங்கள். மத்தியில் மிக நீண்ட கூடம். எல்லாம் தனிச் சிறப்புடையதாக இருக்கின்றன. இவைகளைப் பார்ப்பதில் என்ன பயன் என்று சிலர் கேட்கிறார்கள். நமது முன்னோர்களின் திறமையைப் பார்த்துப் பார்த்து நாம் பெருமையும் மனத் தெம்பும் பெறலாம். நம்முடைய தோள்கள் பூரித்துப் போகும்.

இதற்கும் அப்பால் வட்டதாகை, ஹட்டதாகை, லதா மண்டபம் என்னும் சிற்பச் சின்னங்கள் இருக்கின்றன. இங்கு ஒரு கல் புத்தகம் இருக்கிறது. மிகப் பெரிய கல்லில் ஏதோ ஒரு சாஸனம் எழுதப்பட்டிருக்கிறது. அராஜகமும் குழப்பமும் நிறைந்த காலத்தில் புத்த குருமார்கள் தமிழ்நாட்டு வீரர்களிடம் தங்கள் புத்த விஹாரத்தைக் காப்பாற்றிக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்களாம். புத்த குருமார்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட நம் தமிழ் வீரர்கள் "புத்த கோயில்களைச் சிதையாமல் காப்பாற்றிக் கொடுப்போம்" என்று சம்மதித்து எழுதிக்கொடுத்த சாஸனம் இது என்று சொல்கிறார்கள். தமிழ் மக்களின் பரந்த எண்ணத்துக்கும் உயர்ந்த நோக்கத்துக்கும் இணையற்ற வீரத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்

டாக இன்றும் பொலன்னரு வைக்காட்டுக்குள் இருந்து வரு கிறது இந்தச் சிவாசனம்.

இன்னும் எத்தனையோ பல சின்னங்கள் அங்கு சிதைந்தும் சிதையாமலும் இருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றையும் பற்றி விவரமாக எழுதுவது என்றால் மகா பாரதமாகிவிடும். ஆகையால் இன்னும் இரண்டு விஷயங்களை மட்டும் இந்தக் கட்டுரையில் குறிப்பிட விரும்புகிறேன்.

வானவன் மாதேவி ஈசுவர ஆலயம் என்ற சிவன் கோயில் ஒன்று இருக்கிறது. இந்தக் கோயிலைப் பற்றி முன்னமேயே குறிப்பிட்டிருக்கிறேன். ஆனாலும் அந்தக் கோயிலுக்கு ஒரு தனி விசேஷம் இருக்கிறது. நமது சோழ நாட்டை நினைவூட்டுகிறது இந்தக் கோயில். இந்தக் கோயிலின் முன்னால் வந்து நின்றால் தஞ்சை ஜில்லாவில் ஒரு ஊரில் இருப்பது போலவே இருக்கிறது. இந்தக் கோயிலைப் பார்க்கும் போதுதான் நமது தமிழ் மன்னர்கள் நாட்டிய கொடி இன்றும் இங்கு ஓங்கிப் பறப்பதை உணர முடிந்தது.

மற்றோர் இடத்தில் ஒரு தாமரைக் குளத்தைப் பார்த்தேன். இதில் தண்ணீரும் இல்லை. தாமரை மலரும் இல்லை. ஆனால் குளத்தையே மலர்ந்த தாமரை மலர்போல அமைத்திருக்கிறார்கள். தாமரை இதழ்கள் அடுக்கடுக்காக இதழ் விரிந்து மலர்ந்திருப்பது போன்ற அழகான சிறிய குளம். இந்தக் குளத்தையும் கோயில்களையும் பொலன்னருவைக்குச் செல்லும் எல்லாருமே அனுபவித்து மகிழ முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. இதைக் கட்டிய மன்னர்களின் மிக உயர்ந்த கலை உள்ளத்தைக் கொண்டு பார்த்தால்தான் இவைகளை அனுபவித்து மகிழலாம். ஆகையால் அநுராதபுரம் பொலன்னருவை முதலிய புராதன இடங்களைப் பார்க்கப் போவதற்கு முன்னால் இந்த இடங்களைப் பற்றிய பெருமைகளை ஓரளவாவது புரிந்து கொள்ள வேண்டும். பின்னர் நல்ல சரித்திர அறிவும் கலை உணர்வும் தமிழ் ஞானமும் உள்ள அறிஞர்களின் துணையுடன் பிரயாணத்தை மேற்கொள்ள வேண்டுமாய் நேயர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வாழ்வும் தாழ்வும் மனிதர்களுக்கு ஏற்படுவதுபோலவே ஒரு தேசத்துக்கும் ஏற்படுகிறது என்பதற்கு உதாரணமாக நிற்கிறது பொலன்னருவை நகரம். இப்படி அழிந்து போகும் நிலையற்ற பொருள்களுக்காக இந்த உலகில் என்னென்ன அக்கிரமங்கள் ஏற்படுகின்றன? வஞ்சகம், பொய், பொறாமை, சூதுவாதுகள் நடைபெறுகின்றன. மனிதர்களுக்குள்ளேதான் எவ்வளவு ஏற்றத் தாழ்வு? உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி, ஏழை, பணக்காரன் என்று எத்தனை பாகுபாடுகள்! ஒரு காலத்தில் மகோன்னதமாகத் திகழ்ந்த பொலன்னருவை நகரமும் அதில் வாழ்ந்த மக்களும் இன்று காட்டில் மண்மேடிட்டுக் கிடக்கும் காட்சியையும், அதை ஆண்ட மன்னர்கள் மண்ணோடு மண்ணாகிப் போயிருப்பதையும் பார்த்த பிறகாவது இப்பொழுதுள்ள மனிதர்கள் மனித உணர்ச்சியுடன் நடந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கலாம். யார் மனித உணர்வுடன் நடந்து கொண்டாலும் கொள்ளா விட்டாலும் சிங்கள அரசாங்கம் தன்னுடைய இறந்தகால சரித்திரத்தை எண்ணிப் பார்த்து இப்பொழுது இலங்கைத் தமிழ் மக்களிடம் நியாயமாக நடந்து கொள்ள முயலலாம்.

*** *** ***

என்னுடைய ஈழநாட்டுப் பிரயாணக் கட்டுரைகளை முடிப்பதற்குக் காலம் நெருங்கி விட்டது. இலங்கைத் தீவின் முக்கியமான பகுதிகளை யெல்லாம் பார்த்தாகி விட்டது. இனிமேல் பார்ப்பதற்கென்று இருக்கும் பகுதிகள் தமிழ்மக்கள் வசிக்கும் பகுதிகளான யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திரிகோணமலை ஆகிய பகுதிகள்தான். இந்தத் தமிழ்ப் பகுதிகளை யெல்லாம் நான் மிகவும் அவசரமாகப் பார்த்துவிட்டுத் திரும்பினேன். ஆகையால் அதே அவசரத்தில்தான் நேயர்களையும் அழைத்துப் போக வேண்டும். ஆனாலும் மட்டக்களப்பும், திரிகோணமலையும், யாழ்ப்பாணமும் எங்கே போய்விட்டன? இன்னொரு முறை ஈழநாட்டுக்குச் சென்று தமிழ் மக்கள் வசிக்கும் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று சாவகாசமாக எல்லாவற்றையும் பார்த்து விட்டு வந்தால் போகிறது. ஈழநாட்டுத்தமிழ் பகுதிகளில் நாளைய தினம் அவசரப் பிரயாணம் செய்ய வேண்டும். அதற்குத் தயாராக இருக்கும்படி நேயர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(அடுத்த இதழில் முடியும்)



ஓய்வு பெற்ற உயர்நீதிமன்றத்து நீதிபதி திரு கே. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களின் பேத்தியும், திரு கே. சாரங்கன் அவர்களின் புதல்வியுமான பேபி பானுவின் பரத நாட்டிய அரங்கேற்றம் ஜூலை 3-ந் தேதி சென்னை மயிலாப்பூர் ரஸிகரஞ்சனி சபை மண்டபத்தில் நடைபெற்றது. அரங்கேற்ற விழாவுக்கு ஏராளமான பிரமுகர்களும் ரஸிகர்களும் விஜயம் செய்திருந்தனர். விழாவுக்குத் தலைமை வகித்த உயர்நீதிமன்றத்து நீதிபதி திரு எ. எஸ். பி. ஐயர் அபாரமாக பரதநாட்டியமாடிய பானுவுக்கும், அச்சிறுமிக்கு இவ்வளவு அற்புதமாகப் பரத நாட்டியம் கற்றுக் கொடுத்திருக்கும் நாட்டிய ஆசிரியை திருமதி கௌஸல்யாவுக்கும் தம்முடைய பாராட்டுதலையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டார். நாட்டிய உலகில் பேபி பானுவின் புகழ் ஓங்கி வளர வேண்டும் என்று ஆசீர்வதித்தார்.



ஏதாவது புதுப் படம் வருகிறதா, விமரிசனம் எழுத என்று பத்திரிகையைப் புரட்டிய போது, சுமார் ஒரு மாதத்துக்கு மேலாக என் கண்ணில் பட்டுக் கொண்டே வரும் ஒரு சினிமா விளம்பரம் மீண்டும் கண்ணில் பட்டது. அதைப் பார்த்ததும் எனக்கு ஆச்சரியமாயிருந்தது. அந்தப் படம் ஒன்பதாவது வாரம் கொண்டாடியது! அதுதான் ''பியாஸா.'' உடனே அந்தப் படத்தைப் பார்த்து விடுவது என்று தீர்மானித்தேன்.

''ஹிந்திப் பிக்சர் ரொம்ப அட்வான்ஸாயிருக்கு, ஸார்! அவர்கள் நடிப்பு, பாட்டு எல்லாம் ரொம்ப ஜோர். அந்த ட்யூன்ஸ் எல்லாம் காதிலேயே இருக்கு!'' என்று படத்தைப் பார்த்து விட்டோ, பார்க்காமலோ சில பேர்கள் அடித்துக் கூறும் அபிப்பிராயங்களை நான் அப்படியே எடுத்துக் கொள்ளுவதில்லை. காரணம், ஹிந்திப் படங்களும் திரைக்கதை, வசனம் முதலியவற்றில் கோரமாயிருப்பதைக் காண்கிறோம். சிலர் கூறும் 'ஹிந்தி ட்யூன்ஸ்' கூட, மீண்டும் மீண்டும் ஒரே மாதிரி சாக்லேட்டைச் சுவைப்பது போல் இருக்கக் காண்கிறோம்.

''பியாஸா'' உண்மையிலேயே ஒரு நல்ல படம். குருதத் பிலிம்ஸின் தயாரிப்பான அந்தப் படம் நல்ல கதையம்சத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

திரைக்கதை நன்றாயிருந்தால் நடிகர்களின் ஒத்துழைப்பு இருக்காது. நடிகர்கள் நன்றாய் நடித்திருப்பார்கள்; திரைக் கதையில் உயிர் இருக்காது! இப்படிப் படங்கள் பாழாவதற்குப் பல காரணங்கள்! எல்லா அம்சங்களும் சேர்ந்திருப்பது மிகவும் சிரமம்.

''பியாஸா''வில் அனேகமாக எல்லாம் சேர்ந்திருக்கின்றன என்றே கூறலாம்.

ஒரு அதிர்ஷ்டஹீனன்-அவன் ஒரு கவிஞன் இளமையிலேயே கவிபாடிக் காலங்கழிக்கிறான். அவனது சகோதரர்கள் அவன் கவி பாடுவதை விரும்பவில்லை; அவனை வெளியேற்றி விடுகின்றனர். நம்பிக்கையிழந்து, மனம் முறிந்து வெளியேறினான். அவனுக்கு இன்னொரு துரதிர்ஷ்டம் காத்திருக்கிறது. கல்லூரியில் அவன் காதலித்த ஒரு பெண் ஏழையாகிய அவனை மறந்து ஒரு பணக்காரனைக் கைப்பிடிக்கிறாள். மீண்டும் கவிஞனைச் சந்தித்த போது சலனம் அடைகிறாள். அவன் தற்கொலை புரிந்துகொள்ளும் அளவுக்கு மனம் உடைந்து விட்டபோது, ஒரு பெண் அவனை உள்ளன்போடு காதலிக்கிறாள். தெரு பிறழ்ந்தவளாயினும் அவள் அவன் மீது கொண்ட அன்பு அழிவற்றதாயிருக்கிறது. அவள் அவனது கவிதைகளைத் தன் செலவில் பிரசுரம் செய்கிறாள். அவனுக்குப் பெரும் புகழ் கிட்டுகிறது. அவன் இறந்துவிட்டான் என்ற நம்பிக்கையில்தான் அவனுக்கு அத்தனை புகழ்! மீண்டும் வந்த அவன் அந்தப் புகழைக் கெடுத்துக் கொள்ள விரும்பாமல், உண்மைக் காதலியின் கரம் பற்றி ஊரை விட்டே வெளியேறுகிறான்.

திரைக் கதையின் கருத்து திசை மாறிப் போகாவண்ணம் படத்தயாரிப்பாளர் எடுத்துக் கொண்டிருக்கும் கவனிப்பும் சிரத்தையுமே இப்படத்தின் அடிப்படை வெற்றிக்குக் காரணம் என்று கூறலாம்.

இன்னொரு முக்கியமான காரணம், கவிஞன் கவி பாடியதும், அவன் பட்ட கஷ்டங்களும்,

அவன் காதலும், ஏமாற்றமும், இறுதியில் வெற்றியும் எல்லாமாகச் சேர்ந்து 13,968 அடிகளில் வெள்ளித் திரையில் இடம் பெற்றிருப்பதுதான்!

படாதிபதிகளெல்லாம் நம்மை நாலு அடி வைத்து விட்டாலும் பாதகம் இல்லை. பதினெட்டாயிரம் அடிகள் பத்தொன்பதாயிரம் அடிகள் என்று நீள நீளமாகப் படங்களை எடுத்துத் தொலைக்காமல் இருக்க வேண்டும் என்று அவர்களை அடி வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன்!

காதலோ, கஷ்டமோ, ஏமாற்றமோ பன்னிரண்டு, பதின்மூன்றாயிரம் அடிகளுக்குள் இருந்தால் பார்த்து வைக்கலாம். அதற்கு மேலும் அடிகளைத் தாங்க நம்மால் முடியாது!

படத்தின் அடிக்குறைவினால் ''பியாஸா'' ருசியில் குறைந்து விடவில்லை. விறுவிறுப்போடு படம் பார்ப்பவர்களின் 'பியாஸ்' (தாகம்) அதிகமாகிக் கொண்டே போகிறது. இந்தப் படத்தை, துணிந்து இன்னும் சில நூறு அடிகள் குறைத்திருந்தால், தரம் குறையாமலும், சுவை குன்றாமலும் இருந்திருக்கும். ஆரம்பத்தில் சில காட்சிகள் குழப்பமாகவும், அலுப்புத்தட்டும் வகையிலும் இருக்கின்றன. கதையைப் புரிந்துகொள்ள முடியாமல் தடுக்கின்றன. அவை வெட்டப்பட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கலாம்.

கதாநாயகன் மதுவருந்திக் கொண்டே பாரதத்தின் பண்புகளைப் பற்றி உருகிப் பாடுவது மனத்துக்குக் கொஞ்சம் கஷ்டமாய்த்தான் இருக்கிறது. ஆனால் அந்தப் பாட்டும், அப்பொழுது தோன்றும் பின்னணிக் காட்சிகளும் நன்றாக இருக்கின்றன.

இசை யமைப்பும் மெட்டுக்களும் இதயத்தைத் தொடும் விதத்தில் அமைந்திருப்பது பாராட்டுக்கு உரியது. திரைக் கதை வசனம் சுருக்கமாகவும் சுவையுடனும் இருக்கிறது.

கதாநாயகனின் நனவு வாழ்க்கையில் நழுவிப் போன நல்ல சந்தர்ப்பங்களெல்லாம், இன்ப அநுபவங்களெல்லாம் கனவு வாழ்க்கையில் தாராளமாகக் கிட்டுகின்றன. அக் காட்சிகள் நன்கு தயாரிக்கப்பட்டு, படத்தின் சோகத்துக்கு ஈடு செய்கின்றன.

கதாநாயகனாக—கவிஞனாக — நடிக்கும் டைரக்டர் குருதத் பாத்திரத்தை உணர்ந்து நன்றாய் நடித்திருக்கிறார்.

கல்லூரியிலிருந்து கவிஞனின் காதலியான மாலாஸின்ஹா தம் விசாலமான விழிகளால் யாவரையும் கவர்ந்து விடுகிறார். தம்மைக் கைப்பிடித்த நாயகனுக் கெதிரில், பழைய காதலனைக் கண்டு உள்ளம் குமையும்போது அவர் நடிப்பு நன்றாயிருக்கிறது.

'தேல் மாலிஷ்வாலா'வாக (எண்ணெய் தேய்ப்பவன்) நடிக்கும் ஜானிவாக்கர் படத்தின் ஹாஸ்யப் பகுதியை நிரப்புகிறார். அப்பொழுது அவர் பாடும் பாட்டு மிகவும் தமாஷாயிருக்கிறது. ஆனால் அவர் நடிப்பும் கோணங்கித்தனங்களும் கொஞ்சம் மிதமிஞ்சியும் போகின்றன.

இந்தப் படத்தில் எல்லா நடிகர்களும் நன்றாக நடித்திருக்கின்றனர். ஆனால் வீழ்ச்சியடைந்த வாழ்வில் உழலும் அபலையாக, அதிர்ஷ்டஹீனனான கவிஞனைக் கைப்பிடித்து அவன் வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்தும் தேவ மங்கையாக நடிக்கும் வஹீதா ரஹ்மானுக்குத்தான் முதல் இடம் கொடுக்கத் தோன்றுகிறது. அவரது முக பாவங்கள், நடை, உடை, பேச்சு எல்லாமே மிகவும் பொருத்தமாயும், அவர் ஏற்றுக்கொண்ட பாத்திரத்துக்கு உயிர் ஊட்டுவனவாயும் அமைந்திருக்கின்றன. கவிஞனின் கவிதைகள் அச்சுவாகனம் ஏற அவர் உறுதுணையாயிருப்பது போல் திரைக்கதையின் சிறந்த பாத்திரமாகவும் சுடர் விடுகிறார்.

காட்சி ஜோடனைகள் மிகவும் கருத்தோடு புனையப்பட் டிருக்கின்றன. படப் பிடிப்புக் கலையின் நுணுக்கமான அம்சங்களை 'காமிராக் கலைஞர்' கைத்திறனுடன் புனைந்திருக்கிறார்.

''பியாஸா'' கதை மிக மிகப் புதியது என்று நான் சொல்லத் தயாராயில்லை. சாதாரணமாகக் கடையில் விற்கும் மல்லிகை மலர்ச்சரத்தை வாங்கி, ஒரு அழகியின் 'அஜந்தாக் கொண்டை'யில் அணிவித்து அழகு பார்ப்பதுபோல், சாதாரணக் கதையையே நல்லதோர் திரைக் கதையாகத் தயாரித்திருக்கிறார்கள்.

கடைசியாக, சினிமா நேயர்கள் மனசுக்குள் மிகவும் திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டிய முக்கிய அம்சம் ''பியாஸா''வில் இருக்கிறது. சுமார் பதினாலாயிரம் அடிகளுக்குள் தயாரிக்கப் பட்டிருக்கும் இப்படத்தைப் பார்த்ததும் பஸ்ஸை நினைத்து ஏங்க வேண்டாம்! பஸ் நிச்சயம் கிடைக்கும்.





11

பிரார்த்தனையின் பொழுது, 'ஆ!' என்று கதறிக் கூப்பிட வேண்டியதில்லை. பகவான் அருகிலேயே இருக்கிறான். தூரத்தில் இல்லை. மிக அண்மையில் எப்போதுமே இருக்கிறான். பெரிய மதிற்சுவர் கொண்ட கோயிலில் அவனில்லை. உள்ளத்திலேயே இருந்து வருகிறான். உன் உள்ளமே ஒரு சிறுகோவில். வேறு எங்கேயும் தேடிப் போகவேண்டியதில்லை. இருந்த இடத்தில் அவனை அடையலாம். யாரும் அறியாமல் மெதுவாக அடக்கமாக, பிரியமாக அவனுடன் பேசலாம். எல்லாருமே இந்தச் சாந்நித்தியத்தை அடையக்கூடும். நம்முடைய தாரதம்யமும் சக்திக் குறைவும் அவனுக்குத் தெரியும். அதை அனுசரித்து அவன் அருள்வான்.

காலதாமதம் செய்யலாகாது. நமக்காக அவன் காத்திருக்கிறான். தைரியமாக அவனை அடையும் முயற்சியை ஆரம்பிக்கலாம். உனக்கு வயது அறுபத்துநாலாயிற்று. எனக்கு எண்பது முடிந்தது. இனிமேல் தாமதம் செய்யலாகாது. இனி நமக்கு இருக்கும் காலத்தை அவன் அருகில் முடிக்கலாம்.

இந்த முறையை அப்பியாசம் செய். கொஞ்சம் கொஞ்சமாகப் பயிற்சியடைவாய். ஆண்டவனை வணங்கி அவன் அருளுக்காக இறைஞ்சுவாய். உள்ளத்தை அவனுக்கென்றே கொடுத்துவிடு. பகல் வேளையிலாயினும் சரி, இரவிலாயினும் சரி, வேலை செய்துகொண்டிருக்கும்போதும் சும்மாயிருக்கும் போதும், சாத்தியமான வரையில் நான் சொன்ன முறையில் பகவானை மனத்தில் நிறுத்திக் கொண்டிருப்பாய். அடக்கத்துடன் இப்படிச் செய்து வந்தால் மற்ற விரதங்களை வைத்துக்கொண்டு வீணாகக் கஷ்டப்பட வேண்டியதில்லை. பக்தியுடன் தைரியமாக இந்த முறையை அனுசரிப்பாய். ஆண்டவனுக்கு உன்னுடைய அன்புதான் வேண்டும். ஜபங்கள் அல்ல. உபகரணங்கள் அல்ல.

தியானம் செய்யும்போது உண்டாகும் தடைகளைப் பற்றிச் சொல்லுகிறாய். நீ சொல்லுவதில் ஒன்றும் புதிய

தில்லை. எல்லாருக்குமே இம்மாதிரி தியானத்தில் தடை ஏற்படுகிறது. இந்த இடைஞ்சல் உனக்கு மட்டுமல்ல. மனத்தை ஒருமுகமாக நிறுத்துவது கஷ்டம். இங்குமங்கும் அலையும். அதன் இயற்கை குணம் இது. ஆனால் அதை அடக்கியாளும் சக்தி நமக்கு உண்டு. அது எங்கு சென்றாலும் அதைப் பிடித்து இழுத்துத் திருப்பிக் கொண்டு வரவேண்டும். ''உன் குறிக்கோள் ஆண்டவன். அதை விட்டுவிட்டு எங்கே போகிறாய்?'' என்று அதற்குச் சொல்லித் திரும்பத் திரும்பப் பிடித்துப் பிடித்து நிறுத்த வேண்டும். இங்கும் அங்கும் அலைய விடாமல் இழுத்துப் பிடித்து நிறுத்திக் கொள்ள வேண்டும்.

வழக்கம் பொல்லாதது. அலையும் வழக்கத்திலிருந்து மனத்தைத் திருத்துவது கடினம். நம் இஷ்டத்துக்கு விரோதமாகவே அது இங்குமங்கும் ஓடும். தியானம் செய்யும்போது, ஆண்டவனை விட்டு விட்டு, உலக விஷயங்களை நினைத்துக் கொண்டு திரியும். இதற்கு மருந்து நான் கண்டது ஒன்றே. இந்தப் பிழையை பகவானுக்குச் சொல்லி ஒப்புக்கொண்டு அவன் பாதத்தில் விழுந்து அழுவது ஒன்றே.

பிரார்த்தனை செய்யும்போது நீண்ட பிரசங்கத்தில் இறங்க வேண்டாம். பேச்சும் பிரசங்கமும் என்னத்துக்கு? கால் இழந்த ஊமைப் பிச்சைக்காரன் ஒருவன், பணக்காரன் வீட்டு வாயிலில் பிச்சைக்குக் காப்பது போல் ஆண்டவனுக்குப் பிரார்த்தனை செலுத்து. ஈசன் சந்நிதியில் மனத்தை நிறுத்துவது ஒன்றே கவனத்தில் வை. அவனை விட்டு மனம் எங்கும் சென்று விடாமல் பார்த்துக் கொள்.

மனம் அலையும்போது அதைப் பற்றிக் கவலைப்பட்டு நிலை இழந்து விட வேண்டாம். அது உதவுவதில்லை. அதனால் இன்னும் கவனக் கேடு உண்டாகும்.

உள்ளத்துக்கு மெதுவாகச் சொல்லித் திரும்பவும் சந்நிதானத்தில் நிறுத்து. இப்படி முயற்சித்தால் ஆண்டவனுடைய அருளைப் பெறுவாய்.

பிரார்த்தனைக் காலத்தில் மனம் நிலையில் நிற்க வேண்டுமானால் மற்ற காலங்களிலும் பகவானை நினைவில் வைத்திருக்க அப்பியாசம் செய்ய வேண்டும். எப்போதுமே மனம் பகவானை நோக்கி நிற்கப் பயில வேண்டும். இவ்வாறு விடா முயற்சியுடன் பழகிக் கொண்டால் பிரார்த்தனைக் காலத்தில் மனம் நிலையில் நிற்கும். நிலை தவறினாலும் திரும்ப நிலைக்கு வருவது எளிதாகும். பழக்கத்தினால் ஆகாதது ஒன்றுமில்லை.

இந்த உலகத்தில் படுகுழிகளுக்குக் கணக்கில்லை. எப்போதும் ஆண்டவனைப் பக்கத்திலேயே நிறுத்திக் கொண்டால்தான் அவற்றில் விழாமல் தப்புவோம்.

இடைவிடாமல் பிரார்த்தனைசெலுத்த வேண்டுமென்றால் எங்கேயோ தூரத்தில் ஆண்டவனை வைத்துக் கொண்டால் முடியாது. பக்கத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அவனைத் தியானித்தால் அல்லவோ இது சாத்தியமாகும். தியானிப்பதற்கு இடைவிடாத அப்பியாசம் வேண்டும்.

ஒரு விஷயத்தையே நான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்பாய். உண்மை. இது ஒன்றே எனக்குத் தெரிந்தது. வேறு வழியை நான் காணவில்லை. நான் கையாண்டு வரும் முறையும் இது ஒன்றே. இதைத்தான் நான் மற்றவர்களுக்கும் சொல்லுகிறேன். வேறு என்ன செய்ய முடியும்?



24. நண்பர் கேள்விகளுக்கு

'ஊமை ஒருவன். உளறுவாயன் ஒருவன். இவ்விருவரில் விரும்பத்தக்கவன் யார்?' என்று கேட்பதுண்டு.

"ஊமைக்கு உளறுவாயன் சண்டப் பிரசண்டன்" என்பார்களாதலால் உளறுவாயன் உயர்ந்தவன் என்பார் உண்டு. ஊமையின் மதிப்பில் உளறுவாயன் எவ்வளவோ உயர்ந்தவனாகத் தென்படலாம். ஆனால் பேசக்கூடிய-நன்றாகப் பேசக் கூடிய-சாதாரண மனிதனுக்கு இருவருமே ஒரே விதந்தான். ஒருவன் பேசுவது என்னவென்றே புரியாது. அரைகுறையாய்ப் பேசுவதால். இன்னொருவன் பேசவே மாட்டான். கேட்டுப் புரிந்து கொள்வதற்கு முடியாத நிலையில் இருவருமே இருப்பதால். இவ்விருவரில் விரும்பத் தக்கவன் யார் என்பதற்கு, 'இருவருமே இல்லை' என்றுதான் பதில் சொல்ல வேண்டும்.

ஒரு விஷயத்தைச் சொன்னால் செம்மையாகச் சொல்லவேண்டும். முழுவதும் சொல்ல வேண்டும். அரை குறையாய்ச் சொல்வதும், புரியாத மாதிரி உளறிக் கொட்டுவதும் ஒரே விதம் உபயோகமற்றவைதான்.

சென்ற கட்டுரையில் தனிப்பட்ட முறையில் சிலருக்கு இன்புளுயன்ஸா ஜுரம் தீரத் தெரிவித்த மருந்துகளைப் பற்றியும் அவற்றை உபயோகித்த நண்பர்கள் நல்ல பலனைக் கண்டதாகவும் நன்றியுடன் தெரிவித் திருந்ததையும் எழுதியபோது ஒரு விஷயத்தை எழுதவில்லை. அதுதான் ஜலதோஷம். முட்ட முட்ட இருக்கும் சளி. இத்துடன் கூடிய தலைவலி. அல்லது சளி அவ்வளவாக இல்லாவிட்டாலும் கண்ணைத் திறக்கவும் முடியாத தலைவலி இருக்கும். இத்துடன் மிகவும் அதிகரித்த ஜுரம். இந்தத் தலைவலியைக் குறைக்கவும், ஜுர வேகத்தைத் தணிக்கவும் தலைவலிப் பற்றும் தெரிவித்திருந்தேன். இப்பற்றில் இரு வகை உண்டு. இரண்டில் எதை வேண்டுமானாலும் உபயோகிக்கலாம்.

தலைவலிக்குப் பற்று: இலவங்கம் (இதைச் சிலர் கிராம்பு என்பர்) ஏலரிசி, வெற்றிலைக் காம்பு இம்மூன்றையும் சமனிடையில் எடுத்துப் பால் விட்டு அம்மியில் அரைத்துப் பாலிலேயே குழப்பிச் சுடவைத்துப் பொறுக்கும் சூடாக இருக்கும் போது நெற்றியில் பற்றிட வேண்டும். இது உலர உலரச் சளி முறியும், தலைவலி நீங்கும். இதை மேற்சொன்ன விதம் அரைத்துக் கழற்சியளவு மாத்திரைகளாக வெய்யிலில் உலர்த்தி வைத்துக் கொள்ளலாம். தேவையான



போது இந்த மாத்திரைகளில் ஒன்றிரண்டை மேற்சொன்ன விதம் பாலிலோ, ஜலத்திலோ கரைத்துப் புகையில்லாத தீயில் கொதிக்கவைத்துப் பற்றுண்டாக்க உபயோகிக்கலாம்.

நீர்க்கோவை மாத்திரை: கப்பு மஞ்சள் — கஸ்தூரி மஞ்சள் — இரண்டும் வகைக்கு ஒரு பலம். பொரித்துப் பொடித்த வெங்காரம், தனித்துப் பொடித்த சாம்பிராணி, மிளகு, சுக்கு, ஜாதிக்காய் ஆகிய ஐந்தும் வகைக்கு அரைப் பலம். இலவங்கம், கற்பூரம் இரண்டும் வகைக்குக் கால் பலம் என்று எடுத்து, யாவற்றையும் ஒன்றாய்க் கூட்டித் தேவையான அளவு எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு, வெண்ணெய் போல் அரைத்துக் கொள்ளவும். இதைக் கழற்சிக் காயளவாக உருட்டி, வெய்யிலில் வைத்துப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும் இதையும் மேற்சொன்ன விதம் தலைவலிக்குப் பற்றிடலாம். அல்லது சிறிது தண்ணீர் விட்டுச் சந்தனக் கல்லில் உரசி நெற்றிக்குக் குளிர்ச்சியாகவே பற்றிடலாம். மேற்சொன்ன பற்றைப் போலவே ஜலதோஷம் இருந்தால் சளியை முறிக்கும். தலைவலியைப் போக்கும். ஜுரத்தையும் தணிக்கும்.

இவ்விரு வகைப் பற்றுகளும் ஒவ்வொரு நாளும் தயாராகச் செய்து கையிருப்பில் வைத்திருப்பது அவசியம். இரண்டாவது மருந்தைக் குழந்தைகளுக்கும் உபயோகிக்கலாம். சிசுக்களுக்கு இரண்டுமே உதவாது. தனித்த குங்குமப் பூவைத் தாய்ப் பாலிலோ பசுவின் பாலிலோ சந்தனக் கல்லில் உரசி நெற்றிக்குப் போட வேண்டும்.

* * *

"நாட்டு வைத்தியம் என்ற தலைப்பின் கீழ், புதிதாக எழுதுவதற்கு என்ன

விஷயம் வைத்திருக்கிறீர்கள்?'' என்று சேலம் நண்பர் கேட்கிறார்.

தெரிந்த விஷயத்தைத் திரும்பவும் சொல்லப் போகிறாயா என்ற கேள்வி இதில் மறைந்திருக்கிறது.

அன்பரே, ஒரு விஷயம்: ''பஹுதா ச்ரோதவ்யம். பஹுப்ய: ச்ரோதவ்யம்' என்று ஒரு முதுமொழியுண்டு. அறிவைப் பெருக்கவல்ல விஷயங்களைப் பன்முறை கேட்பது அவசியம். பலர் வாயிலாகவும் கேட்பது அவசியம் என்று பொருள். புதிய விஷயமேதும் இல்லாவிட்டாலும் சொன்னதையே சொல்வதாலும் பாதகமில்லை. தாங்கள் கேட்டதையே கேட்பது நல்லதுதான். ஆயினும் நம் நாட்டு வைத்திய விஷயமாகத் தமிழில் உள்ள நூல்களிலிருந்து கிடைக்கக் கூடிய புதிய விஷயங்களை நாட்டு வைத்தியமென்ற தலைப்பில் விளக்க வேண்டுமென்று திட்டம். இவற்றை நான் சொல்வது இதுதான் முதல் தடவையாகும். ஆகவே தெரிந்தவற்றுள் சிலவற்றை மறுமுறை தெரிந்து கொள்வதானாலும் புதிய விஷயங்கள் சிலவற்றை அறிவதானாலும் இரு வகையிலும் இந்தக் கட்டுரைகள் உதவக்கூடியவைகளாயிருக்கும். கட்டாயமாகச் சொல்கிறேன், தந்தைக்கு உபதேசித்தோனின் திருநாமத்தைப் பெற்ற அன்பரே! குறிப்பிட்ட கட்டுரை மட்டும் எப்படியோ கைதவறிப் போய் விட்டதென்று பிறகு தெரிவிக்கக் கூடாது.

* * *

அம்மாப்பேட்டை நண்பர் (202ல்) எழுதுகிறார். ''....19வது கட்டுரையில்....11வது சரீர வேகமான வாந்தியைத் தடை செய்வதால் ஏற்படும் ரோகங்கள்....அவற்றில் முன்பாதி என்னிடத்தில் அமைந்துள்ளன. அதாவது தடிப்புக் குஷ்டம், உடம்பில் கொப்புளங்கள், நமைச்சல் முதலியன''.... பிறகு நமைச்சல் ஆரம்பித்து உடலில் பல பாகங்களில் பரவி—பிறகு இது சிறு கொப்புளங்களாக மாறி இதைச் சொறியவும்—நீர் போன்ற திரவம் கசியவும் ஏற்பட்டதுபோன்ற விவரங்களை விளக்கி ''இவ்வளவுக்கும் நான் ஒருபொழுதும் வாந்தியைத் தடை செய்ததில்லையே!'' என்கிறார்.

ஐயோ பாவம், நண்பரே! ஒரு விஷயம். நீங்கள் உங்கள் மகனைப் பார்த்து, ''மகனே! மழையில் நனைந்தால் ஜுரம் வரும்'' என்று சொல்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். உடனே அம் மகன் ''இந்தத் தம்பிப் பாப்பாவுக்குப் போன வாரம் ஜுரம் வந்ததே! தம்பி என்ன மழையில் நனைந்ததா?'' என்று கேட்டால் என்ன பதில் சொல்வீர்கள்? சிரங்கும் சொறியும் நமைச்சலும் எத்தனையோ காரணங்களால் வரலாம். வாந்தியைப் பலாத்காரமாக அடக்கிவிடுவதாலும் வரலாம். மழையில் நனைந்தவருக்கு ஜுரம் வராமல் இருக்கலாம். அதனால் நீங்கள் உங்கள் மகனை மழையில் நனைய வேண்டாம் என்று சொன்னது, ''வீண் பயத்தை உண்டாக்கும் புரளி எனலாமா?'' உங்களுக்குள்ள நோய்க்கு வேறு காரணங்கள் இருக்கலாம். அவ்வளவுதான்.

* * *

பருக்கிலிருக்கும் ஒரு சகோதரி தன் சரீரத்திலிருந்த எரிச்சல் முதலியவைகளுக்கு என்ன செய்யவேணு மென்று கேட்டிருந்தார். ஒரு தைலத்தை எழுதி உபயோகிக்கச் சொன்னேன். அதை எப்படிச் செய்வது? மருந்துகளின் மலையாளப் பெயர்களுடன் தெரிவிக்கவும் என்று எழுதினார். சின்னஞ் சிறுமியானாலும் மகா ரோஷக்காரி. படுசூடிகை. 'அம்மா தாயே' என்று சமாதானப் பேச்சுகளுடன் விரும்பிய விஷயத்தைத் தெரிவித்தேன். மருந்தைப் பதினைந்து நாட்கள் உபயோகித்துப் பிறகு எழுதுகிறார் (208ல்).

''இந்தப் பதினைந்து நாட்களில் உடலில் தாபம் எத்தனையோ தணிந்து விட்டிருக்கிறது.. நான்கு வருடங்களுக்குப் பின் தங்கள் குழம்பு (உடம்புக்குத் தேய்க்கும் எண்ணெயைக் கேரளத்தில் குழம்பு என்பர்) ஒன்றில்தான் சிறிது விடிவு ஏற்பட்டது. அதனால் நான் இனி பூரண குணமடைந்து விடுவேன் என்பதில் சிறிதும் ஐயமில்லை....''

''....ஆனால் ஒரு தடவையாயினும் அர்டிகேரியா மும்முரமாக வரவில்லை. முன்போல் அவ்வளவு அரிப்பும் இல்லை'' என்று இக்போய் நண்பர் 209ல் எழுதுகிறார். இவை இந் நண்பருக்கு நம்பிக்கையை ஊட்டப் போதுமல்லவா?

* * *

ஊத்துக்குழி நண்பர் (201ல்) கேட்டிருக்கிறார். ''பல்விளக்க நாயுருவி வேர் மட்டுந்தானே ஏற்கத்தக்கது? இது பச்சையாகத்தானே இருக்க வேண்டும்? அவ்வாறாயின் தினம் ஒரு செடி வேணுமே. இதற்கு இந்த ஊர் முழுவதும் தேடினாலும் போதுமானது கிடைக்காதே! என்ன செய்யலாம்?'' என்கிறார்.


இதற்கு விடையை அடுத்த இதழில் எழுதுகிறேன். (தொடரும்)



கூந்தல் மற்றும் மூளை
அபிவிருத்திக்கான தைலம்
செழுமையாகக் கூந்தல் வளர உதவுகிறது. வழுக்கையைத் தடுப்பதுடன் கேசம் உதிர்வதையும் நிறுத்துகிறது. ஞாபக சக்தியை அதிகரித்து ஆழ்ந்த நித்திரையை அளிக்கிறது. எல்லோருக்கும் எக்காலத்திலும் ஏற்றது.
பெரிய பாட்டில் ரூ. 3-50
சிறிய பாட்டில் ரூ. 2-00
எங்கும் கிடைக்கும்
ராம்தீர்த்
ராம்தீர்த் யோகாஷ்ரமம்
பம்பாய்-14. (C.Rly)
சென்னை டெப்போ:
4/441, தங்கசாலைத் தெரு, சென்னை



ஐயோ இருமல் கொல்கிறதே
EPHRILIME
எப்ரிலைம்
அவசர ஆஸ்த்மா உபாதைகளைக் குணப்படுத்த எப்ரிலைம் மிகச் சிறந்தது. ஒரு பாட்டில் மருந்தை உபயோகித்தால் அதன் பூரண பலன்களைக் காண்பார்.
நீண்ட காலப்பட்டதும், மிக்க உபாதை தரக் கூடியதுமான ப்ராங்கைடிஸ், ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த நிவாரண மருந்து
யூனியன் டிரக் கம்பெனி, லிட்.
மதராஸ்டிப்போ: 2,ஜோன்ஸ்லேன்,மதராஸ்-1



சுலேகா
ரிஜிஸ்டர்டு
பேனுக்கள்
திருப்திகரமான
சேவைக்கு
SULEKHA
SOLD EVERYWHERE
Sole Distributors:
PENMAN'S INDUSTRIAL SERVICES
KANDIVLI, BOMBAY (S.D.)



அத்தியாயம் 3

மனக் குழப்பம்

பராந்தகன் குறும்பாகச் சிரித்துக் கொண்டே, "மிக்க மகிழ்ச்சி! யோசிக்க வேண்டிய விஷயம்தான். ஆனால் இதில் என்னைக் கலந்துகொண்டு அபிப்பிராயம் சொல்வதில் என்ன இருக்கப் போகிறது....? தஞ்சை மன்னரின் குடும்பத்தில் பெண் கொடுத்து நாம் உறவு கொள்வது மிகவும் பெருமை யுடையது தான். ஆனால் ஒரு குழப்பம்..." என்றான்.

"என்ன?" என்றார் புலிப்பள்ளியார் ஆத்திரம் மிக்கவராக.

"இளந்திரையரைக் கல்யாணம் செய்து கொள்ளப் போவது நானோ தமையனோ—இல்லை. அனுபமா! அவளை யும் கொஞ்சம் கலந்தாலோசிக்க வேண்டும். அவள் ஒரு வீரனுக்குத்தான் மாலை இடுவேன் என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள்" என்று சொல்லி நிறுத்தினான் பராந்தகன்.

இதைக் கேட்டதும் புலிப்பள்ளியாருக்கு ஆத்திரமும் கோபமும் ஏற்பட்டன. "நீங்கள் சொல்வதைப் பார்த்தால் முத்தரையரின் புத்திரர் இளந்திரையர் வீரரல்ல என்று சொல்லுவது போலல்லவா இருக்கிறது?" என்றார்.

"ஒரு பெரிய அரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகிக்கும் தங்களுக்கு இப்படித் திடீரென்று கோபமும் ஆத்திரமும் ஏற்படுமென்று நான் நினைக்கவில்லை. அனுபமா ஒரு வீரனுக்குத்தான் மாலையிடுவேன் என்று சொல்கிறாள் என்று சொன்னேனே தவிர இளந்திரையர் ஒரு வீரரல்ல என்று நான் சொல்லவில்லை. இளந்திரையர் ஒரு வீரர் என்றோ வீரர் இல்லை என்றோ முடிவு செய்வது அனுபமாவைச் சேர்ந்தது" என்றான் பராந்தகன்.

"இளந்திரையர் ஒரு வீரர்தான். ஆனால் அவருடைய வீரத் தன்மையை அறிவதற்கு நமக்குச் சந்தர்ப்பம் ஏற்படாததுதான் ஒரு பெரிய குறை" என்றான் ஆதித்தன்.

புலிப்பள்ளியார் தம் மனத்தில் எழுந்த கோபத்தைச் சிறிது அடக்கிக் கொண்டவராக, "மகாவீரராகிய முத்தரைய பூபதியின் குமாரரை ஒரு வீரரா என்று நீங்கள் சந்தேகிப்பது மிகவும் வேடிக்கை. இளந்திரையரின் வீரத்தை அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்கா விட்டாலும் அவருடைய தந்தையரின் வீரத்தைப் பற்றி உங்களுக்குத் தெரியாமல் போய் விடாது. சந்தர்ப்பம் ஏற்படும்போது எங்கள் இளவரசர் இளந்திரையரின் வீரத்தையும் தாங்கள் உணராமலா இருக்கப் போகிறீர்கள்?" என்றார்.

"சந்தர்ப்பம் கிடைத்தபோது என்று சொல்வானேன்? அதற்கான சந்தர்ப்பத்தை நாமே ஏற்பாடு செய்துவிட்டால் போகிறது.." என்றான் பராந்தகன்.

"அதுவும் நல்ல யோசனைதான்" என்றான் ஆதித்தன்.

"வேடிக்கையாக இருக்கிறதே! எங்கள் இளவரசரின் வீரத்தை நீங்கள் சோதனை செய்து பார்க்க விரும்புகிறீர்களா...?

இதை எங்கள் அரசர் அறிந்தால் மிகவும் வருத்தப் படுவார்....'' என்றார் புலிப் பள்ளி கொண்டார்.

''நாங்கள் சோதனை செய்து பார்க்க விரும்பவில்லை. அனுபமா சோதனை செய்து பார்க்க விரும்பினால்...?'' என்றான் பராந்தகன்.

''ஆம்! அவள் விருப்பம் அப்படித் தான் இருக்கும்'' என்றான் ஆதித்தன்.

புலிப்பள்ளியார் சிறிது அலட்சியமாகச் சிரித்துக் கொண்டே, ''தேர்ச்சி பெறாத ஒரு சிறு பெண் வீரத்தைப் பற்றிச் சோதனை நடத்தப் போகிறாளா? அழகாய் இருக்கிறது. இதையெல்லாம் கேட்டுக் கொண்டு அவள் விருப்பப்படி விவாகம் செய்வதென்றால் அப்புறம் உங்களைப் போன்றவர்களுக்குள்ள மதிப்புத்தான் என்ன?'' என்றார்.

''இதில் எங்களுடைய மதிப்புக்குக் குறைவு ஏற்பட்டுவிட என்ன இருக்கிறது? ஒரு பெண்ணின் விருப்பம் சிறந்ததாக இருந்தால் அவள் விருப்பத்துக்கு ஏற்ப அவளுக்கு மணாளனைத் தேட நினைக்கிறோம். இதில் என்ன தீமை இருக்கிறது? இதில் என்ன மதிப்புக் குறைவு இருக்கிறது? ஒரு பெண்ணின் சிறந்த விருப்பங்களை அறிந்து அதற்கேற்ற முறையில் காரியம் செய்வதுதான் நம்முடைய மதிப்பை உயர்த்தும். அதிலும் மற்றக் குலத்தில் உதித்த பெண்கள் மனம் எப்படி இருப்பினும் இந்த வீரர் குலத்து உதித்த மங்கையர்களின் மன விருப்பமெல்லாம் இப்படித்தான் இருக்கும்'' என்றான் பராந்தகன்.

இதைக் கேட்டதும் புலிப்பள்ளியாருக்குக் கோபமும் ஆத்திரமும் பொங்கி எழுந்தன. ''அப்படியென்றால் தன்னிச்சையாக இல்லாமல் குடும்பத்திலுள்ள பெரியவர்களின் அபிப்பிராயங்களுக்கு அடங்கி நடக்கும் பெண்களெல்லாம் சிறந்த வீரர்கள் குலத்தில் உதிக்காத பெண்கள் என்று அர்த்தமா?'' என்றார் படபடப்போடு.

''அமைச்சர் பெருமானுக்கு இப்படித் திடீர் திடீரென்று கோபம் வருவதுதான் எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. வீரர் குலத்தில் உதித்த பெண்ணா, இல்லையா என்பது அவர்கள் பெற்றோர்கள் இருக்கும் நிலையைப் பொறுத்ததல்லவா? அனுபமா வீரர் குலத்தில் உதித்த பெண். அவள் விருப்பம் இப்படி இருக்கிறது என்று சொல்வதில் ஏதேனும் குற்றமிருக்கிறதா...?'' என்றான் ஆதித்தன் சாவதானமான குரலில்.

''பொதுவாக நான் சொல்வது ஒரே ஒரு வார்த்தைதான். பல்லவ பூபதியின் ஆலோசனைப்படியும் விருப்பப்படியும் தஞ்சை மன்னர் தங்களுடைய சகோதரியைத் தமக்கு மருமகளாக்கிக் கொள்ள விரும்புகிறார். இதை மனத்தில் எண்ணித் தங்களுக்குச் சம்மதமா இல்லையா என்று தெரிவிப்பதுதான் இப்பொழுது உசிதமானது'' என்றார் புலிப் பள்ளியார் கண்டிப்பான குரலில்.

''பல்லவ மன்னரின் விருப்பமும் அபிப்பிராயமும் அப்படி இருக்கலாம். அதற்கு எவ்வளவோ காரணங்களும் இருக்கலாம். அதில் குற்றமில்லை. ஆனால் இவ்விஷயத்தில் திருமணம் செய்துகொள்ள வேண்டிய பெண்ணின் விருப்பத்தையும் அறிந்து நடப்பதுதான் சிறந்ததாகும். இடங்காக்கப் பிறந்தார் தம் மகளின் மனோநிலையை அனுசரிக்காமலேயே



அவளை ஒருவனுக்கு விவாகம் செய்து கொடுக்க வாக்குறுதி அளித்தது போல் நாங்கள் வாக்குறுதி அளிக்க முடியாது'' என்றான் பராந்தகன்.

இடங்காக்கப் பிறந்தாரின் மகள் திருபுவனியைத் தம் மகன் கோளாந்தகனுக்கு விவாகம் செய்து கொடுக்க நிச்சயித்திருக்கும் விஷயம் கொடும்பாளூர் வரையில் எட்டி இருப்பதை அறிந்து புலிப்பள்ளி கொண்டார் திகைப்புற்றார்.

''உங்கள் வார்த்தையிலிருந்து இடங் காக்கப் பிறந்தார் தம் மகளை என் புதல்வனுக்கு விவாகம் செய்து கொடுக்கப் போவதாக வாக்களித்திருக்கும் விஷயம் தங்கள் வரையில் எட்டியிருக்கிறது என்று தெரிகிறது. அதை நானே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். முன்னதாகவே தங்களுக்குத் தெரிந்ததில் மிகவும் சந்தோஷம். இடங்காக்கப் பிறந்தார் தீர ஆலோசனை செய்யாமல் இக்காரியத்தில் இறங்கி விடவில்லை. அவர் தம் மகளின் அபிப்பிராயத்தைக் கேட்கவில்லை என்பதற்காக அவரைத் தாழ்வாகப் பேசிவிட வேண்டாம். நெடு நாட்களாகக் காணமல் போய் அகப்பட்டுக் குடும்பத்துக்கு வந்திருக்கும் ஒரு பெண்ணுக்கு என்ன தெரியும்? அவளுடைய ஆலோசனையைக் கேட்டு நடக்க வேண்டுமென்பது அவசியமில்லை அல்லவா...?'' என்றார் புலிப்பள்ளியார்.

''அது உண்மை. நெடுநாட்கள் வரையில் குடும்பத்தாரோடு சம்பந்தமில்லாது இருந்த பெண் எப்படி இருந்தாள்? அவள் நிலையென்ன? அவள் நோக்கமென்ன என்பதைத் தெரிந்து கொள்ளாமல் ஒரு காரியத்தை முடிவு செய்வதும் தவறுதான்'' என்றான் ஆதித்தன்.

''இதில் தெரிந்துகொள்ள வேண்டியது எதுவுமே இல்லை. முடிவு செய்த வரையில் வேறு எதுவுமே இல்லை. கள்வர்களால் அபகரிக்கப்பட்டு ஒரு இசைக் கணிகையிடம் விலைக்கு விற்கப்பட்ட அவள் அனாதையாக விடப்பட்டு புத்த பிக்ஷுணியாகி விட்டாள். அவள் மீண்டும் தன் குடும்பத்தாரோடு சேர்ந்த பிறகு முற்றிலும் மனம் மாறி இருக்கமாட்டாளா? தன் வீட்டுக்கு வந்த பிறகும் சிலநாட்கள் சீவர ஆடையையே அவள் அணிந்திருந்தாளாம்.'' ஆனால்





அன்னமிட்ட கை

மஞ்சுவின் உடல் தேறுவதற்காக அவள் கணவர் அவளோடு உதகமண்டலம் போய்த் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்; போகும் மார்க்கத்திலேயே அவளது பிறந்தகம் இருந்தபடியால், அங்கு தங்கிவிட்டுப் போவது நல்லது என்று அபிப்பிராயப்பட்டார். மஞ்சுவோ உற்சாகமின்றி, "போனால் என் தங்கை தேவகி ஒருத்திக்காகத்தான் போகவேண்டும். பாவம், தாயில்லாப் பெண்; ஏற்கனவே கறிவேப்பிலைக் குச்சி மாதிரி ஒடிந்துவிழும் தேகம்!" என்று அங்கலாய்த்தாள்.

அப்பெண்களின் தகப்பனாரான அருணாசலம் தமது ஊர்ப் பள்ளிக்கூடத்தில் ட்ரில் உபாத்தியாயர். முதல் மனைவி இறந்தபின் மறு விவாகம் செய்துகொண்டவர்; அதன் பிறகு அகத்துக்காரி அன்னபூரணியிடம் அவரே ட்ரில் பழகுவதாக ஊர்க்காரர்கள் பேசுவதுண்டு.

பிறந்தகம் போய்ச் சேர்ந்ததும் தகப்பனாரிடமிருந்து கிடைத்த அமோகமான வரவேற்பு. சித்தியானவள் மூத்த பெண்ணுக்கு ஆரத்தி எடுத்த வைபவம்—எல்லாமே ஒரு மாய்மாலம் போலத் தோன்றியது மஞ்சுவுக்கு.

"இன்றிரவே நீலகிரி எக்ஸ்பிரஸைப் பிடிக்கவேண்டும். இப்போதெல்லாம் என் உடம்புக்கு ஏதும் ஒத்துக் கொள்வதில்லை—அதுசரி, தேவகி எங்கே?" என்றாள் மஞ்சு.

"அவளுக்கு ஸ்கூல் பைனல் பரீட்சை கடைசி நாள் இன்னிக்கு. சாயங்காலந்தான் வருவாள்" என்று அருணாசலம் பதிலளித்துவிட்டு, மூத்த பெண்ணின் அந்தஸ்துக் கேற்றபடி முதல்தரமான விருந்து சமைக்க மனைவியிடம் அச்சாரம் கொடுத்துவிட்டு, கொல்லைப்புறம் வாழையிலை பறிக்கப்போனார்.

தனிமையிலிருந்த சமயம் மஞ்சு தன் கணவரிடம் "என்ன சமையல் நடக்கப்போகுதோ! தேவகியை இவர்கள் வளர்க்கும் இலட்சணம் எனக்குத் தெரியாதா. இப்போது அந்தப் பெண் மேலும் இளைத்துத் துரும்பாயிருப்பது நிச்சயம். ஆடு மாதிரி பச்சைக் கறிகாய்களை சாப்பிடச் சொல்லுவாள்!" என்றாள்.

"பேஷ். நீ சமைக்கும் வேகாத சமையலைவிட பச்சைக் கறிகாய்கள் மோசமில்லையே. எனக்கும் நீ எப்போதுதான் முழுப் பச்சைக் கறிகாய்கள் தரப்போகிறாயோ!" என்று தமாஷ் செய்தார் அவள் கணவர்.

"சித்தியைப்போல எனக்குமென்ன அடுப்பு மூட்ட சோம்பலா? அப்படி அவள் சமைத்தாலும் என்ன சமைக்கிறாள்—கீரை, கொவைக்காய், வாழைத் தண்டு... காசு போட்டுக் கறிகாய் வாங்க மனசு வராது அவளுக்கு. அப்படி மிச்சம் செய்து சேர்த்த பணத்தால் என்னதான் கோட்டை கட்டப் போகிறாளோ—ஆனா, நான் சமைப்பது எவ்வளவு ஒசத்தி ஒசத்தியா . . . !"

"தெரியாதா, உன்னோட ஒசத்திச் சமையல்தானே இப்போ உதகமண்டலத்துக்கு டிக்கெட் வாங்கும்படி கேட்கிறது!" என்று கேலி செய்தார் அவர்.

பேசிக் கொண்டிருந்தபோது, தரையில் உடைந்து கிடந்த கண்ணாடி வளையல் துண்டுகள் மஞ்சுவின் கண்களில் பட்டன. "என்ன அபசகுனம்! தேவகியின் வளையல் போலிருக்கிறதே!" என்று துணுக்குற்றாள் அவள். சித்தியின் பிடியிலே தேவகி சிக்கித் தவிப்பதுபோலவும், வளையல்கள் உடைபட்டு, மூளிக் கையுடன் தேவகி உலவுவது போலவும் கற்பனை செய்துகொண்டு ஆத்திரப்பட்டாள் மஞ்சு. அப்பா வந்ததும் தன் ஆத்திரத்தை வெளியிட்டாள். அவரோ சமாதானமாக, "வளரும் பெண்ணுக்கு அடிக்கடி வளையல் உடைவது சகஜந்தானே, மஞ்சு. தேவகிக்கு ஒரு குறையுமில்லை. வீணாக ஏன் அலட்டிக் கொள்கிறாய்.

என்னைப் பார். அவள் சாப்பிடும் சாப்பாட்டைத்தானே நானும் சாப்பிடுகிறேன். பொழுதெல்லாம் டீல் செய்தாக்கூட இப்போதெல்லாம் எனக்கு சோர்வு ஏற்படுவதில்லை!" என்று கூறிவிட்டு, எல்லோரையும் சாப்பிடக் கூப்பிட்டார்.

உண்மையிலேயே அருணாசலம் பத்து வயது குறைந்தவராகக் காணப்பட்டதாக மஞ்சுவே ஒத்துக் கொள்ளும்படி இருந்தது. அன்றைய சாப்பாடும் ருசியாகத்தான் இருந்தது.

"எல்லாமே எண்ணெயில் செய்திருப்பீர்களோ என்று முதலில் பயந்தேன். நல்ல வேளையாக..." என்றாள் மஞ்சு

"மஞ்சு, நாலு வருஷம் சோக்கியாயிருந்தபோது, ஹோட்டலிலிருந்து வந்த எண்ணெய் சாப்பாட்டால் இளைத்துப்போன அனுபவம் எனக்கு உண்டு. அன்னபூரணி வந்தபிறகு எங்கள் சமையலே மாறிவிட்டது. பற்பல கடைகளில் திறந்து கிடக்கும் டின்களில் விற்கும் தூசிபடிந்து நாற்றமெடுத்த எண்ணெய்களை நாங்கள் வாங்குவதில்லை. சிக்கனம் செய்யும் கையாலேயே விதவித விதமான புதுப்புது ஆகாரங்களை அவள் பண்ணிப் போடும் அழகே அழகு. சில நாட்கள் நீங்கள் தங்கிவிட்டுப் போனால் உங்களுக்கே தெரியும்" என்றார் அருணாசலம்.

"எண்ணெய்களுக்குப் பதிலாக டால்டா வனஸ்பதி உபயோகிக்கிறீர்களா?" என்று கேட்டாள் மஞ்சு.

"ஆம், சுத்தம்புதிய தாவர எண்ணெய்களிலிருந்து பரிசுத்தத்தோடு தயாரிக்கப்பட்டு அடக்கமான டின்களில் கிடைக்கும் உயர்தர தாவரக் கொழுப்பே டால்டா வனஸ்பதி. நெய்யிலுள்ள அதே அளவு வைட்டமின் ஏ, டி ஆகிய இரண்டும் டால்டாவிலும் இருப்பதனால் அவை நமது பற்களுக்கும் எலும்புகளுக்கும் பலம் தந்து, நோய்நொடி வராமல் பாதுகாக்கின்றன. டால்டாவில் எந்தப் பண்டம் தயாரித்தாலும் அதன் பூரணமான ருசி பரிமளிக்கும்', என்றார் அருணாசலம். "வனஸ்பதியை சாப்பிட்ட எலிகளின் ஆரோக்கியம் பாதிக்கப்பட்டதாக கேள்விப் பட்டதுண்டு" என்று குறுக்கிட்டார் மாப்பிள்ளை.

"பாதிக்கப்பட்ட காரணம் வனஸ்பதியல்ல; மற்ற சத்துள்ள உணவுகள் ஏதும் எலிகளுக்குக் கொடுக்காததுதான் காரணம். பிற்பாடு அரசாங்கமே மூன்று வருஷகாலம் வனஸ்பதியைப் பூரணமாகப் பரிசோதித்துவிட்டு, ஆரோக்யத்திற்கு உத்தமமான கொழுப்பு வனஸ்பதி என்று நிர்ணயித்து விட்டனர். சர்வ சத்துக்களும் அடங்கிய பல்வேறு ஆகாரங்களையும் டால்டாவில் சமைத்து உண்டு, தினசரி பாலும் பருகி வருவோர்கள் ஆரோக்கியத்திற்கு எந்தவிதமான பழுதும் வராது!" என்று அழுத்தமாகக் கூறினார் அருணாசலம்.

"அப்படியானால் நாமும் ஒரு ஜாடி டால்டா வாங்கிப் பார்க்கலாமா, மஞ்சு!" என்று கேட்டார் மாப்பிள்ளை.

"ஜாடியில் விற்காது டால்டா. பச்சை மரத்தின் படமும் 'டால்டா' என்ற பெயரும் உடைய பக்குவமான டின்களில் கிடைப்பதுதான் டால்டா வனஸ்பதி" என்று அருணாசலம் தொடர்வதற்குள், "அம்மா" என்ற குரல் வாசற்புறம் ஒலித்தது. வாசலுக்கு விரைந்தாள் சித்தி; கையோடு அவள் அழைத்து வந்த வடிவழகியைப் பார்த்ததும் மஞ்சுவுக்கே அடையாளம் தெரியவில்லை. தங்கச் சிலைபோல் கொழித்து வளர்ந்திருந்த அந்தக் கட்டழகியே நிலைசென்று "அக்கா" என்று கூவியதும் அப்படியே பூரித்துப் போனாள் மஞ்சு.

அதே சமயம், வெப்புக் காகிதம் சுற்றிய பொட்டலம் ஒன்றைத் திறந்து அதிலிருந்த இரு ஜோடி பொன் வளையல்களை தேவகியின் கரங்களில் அணிவித்தாள் சித்தி!

திகைப்படைந்துவிட்ட மஞ்சு, "சித்தி, உங்கள் பொன்னான கைக்குத்தான் இந்தப் பொன் வளையல் பொருந்தும்—அன்னமிட்ட கையல்லவா, அம்மா" என்றாள். "அம்மா" என்றழைத்த அந்த ஒரு வார்த்தையே மஞ்சுவின் உள்ளத்தை விளக்கிவிட்டது.

பிறகு மனம் மாறி நல்ல ஆடை ஆபரணங்களையெல்லாம் அணியத் தொடங்கி விட்டாளாம்..'' என்றான்.

''அது உண்மைதான். அவள் சீவர ஆடையைக் களைந்து பட்டாடைகளையும் ஆபரணங்களையும் அணிந்து கொண்டது உண்மைதான். ஆனால் அவளைத் தங்களுடைய புதல்வருக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதாக உத்தேசம் செய்திருக்கிறார்கள் என்பதை அறிந்ததும் அவள் பட்டாடை ஆபரணங்களைக் களைந்து விட்டு மறுபடியும் சீவர ஆடையை அணிந்துகொண்டு விட்டாள் என்பது தங்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன்'' என்றான் பராந்தகன்.

''அப்படியா....?''

''இதற்குத்தான் பெண்களைக் கலந்து கொள்ளாமல் அவர்கள் விவாகத்தைப் பற்றி நாமே முடிவு செய்வது தவறு என்று சொல்லுகிறேன். அனுபமாவைக் கலந்து ஆலோசிக்காமல் அவளை முத்தரையரின் புத்திரருக்கு விவாகம் செய்து கொடுப்பதாக நாம் முடிவு செய்தால் அவளும் இடங்காக்கப் பிறந்தாரின் மகளைப் போல நல்லாடைகளையெல்லாம் களைந்து விட்டுச் சீவர ஆடைகளை அணிந்து எங்கேனும் கிளம்பி விடுவாளோ என்று பயமாக இருக்கிறது'' என்றான் ஆதித்தன்.

''நிச்சயம் செய்தாலும் செய்து விடுவாள். அனுபமா-தன்னுடைய திருமண விஷயத்தில் அவ்வளவு தீவிரமாக இருக்கிறாள் அவள். நாம் இந்தக் காரியத்தில் மிகவும் ஜாக்கிரதையாகவே நடந்து கொள்ள வேண்டும்'' என்றான் பராந்தகன்.

புலிப்பள்ளியாருக்குப் பராந்தகனின் வார்த்தைகளும், ஆதித்தனின் வார்த்தைகளும் குழப்பத்தை அளித்தன. முக்கியமாக அவர் குழப்பத்துக்குக் காரணமாக இருந்தது பராந்தகன் அறிவித்த செய்திதான். இடங்காக்கப் பிறந்தாரின் பெண் திருபுவனி பட்டாடைகளைக் களைந்து மறுபடியும் சீவர ஆடைகளை அணிந்து கொண்டு விட்டாள் என்ற செய்தியை இப்பொழுதுதான் அவர் கேள்விப்படுகிறார். அவருக்குத் திகைப்பும் குழப்பமும் ஏற்படாமல் எப்படி இருக்கும்? இச் செய்தி இதுவரையில் அவருக்குத் தெரியாதது ஆச்சர்யம்தான். உண்மையாகவே திருபுவனி மறுபடியும் பிக்ஷுணிக் கோலம் பூண்டிருப்பாள் என்பதை அவரால் நம்ப முடியவில்லை. திருமணத்துக்காக நாள் குறிப்பிட்டு இடங்காக்கப் பிறந்தார் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார் என்பதுதான் அவர் நேற்று வரையில் அறிந்து கொண்ட செய்தி. இன்று பராந்தகன் இப்படிச் சொல்லவே அதை நம்புவதா வேண்டாமா என்ற குழப்பம்தான் அவருக்கு ஏற்பட்டது. ''இடங்காக்கப் பிறந்தாரின் மகள் மறுபடியும் சீவர ஆடை அணிந்து கொண்டு விட்டாளா? இதை என்னால் நம்ப முடியாது. இதையெல்லாம் யோசித்தால் எனக்கும் இடங்காக்கப் பிறந்தாருக்கும் ஏற்பட இருக்கும் உறவைத் தடுக்கச் சில வஞ்சகர்கள் சூழ்ச்சி செய்வது போல்தான் இருக்கிறது'' என்று கூறினார்.

''பதற்றப்படாதீர்கள். குழப்பமடைந்து அவசரமாக ஒரு முடிவுக்கு வந்து விடாதீர்கள். உங்களுக்கும் இடங்காக்கப் பிறந்தாருக்கும் ஏற்படப் போகும் உறவை எவரும் சதி செய்து தடுத்துவிட முடியாது. ஏனென்றால் இடங்காக்கப் பிறந்தார் தம் மகளை உங்கள் புத்திரருக்கே திருமணம் செய்து கொடுப்பதில் தீவிரமாக இருக்கிறார். அவரை விட அவருடைய மகன் பொற்கோமன் தம் சகோதரியை பிக்ஷுணிக் கோலத்திலேயே பலாத்காரமாகத் தங்களுடைய புதல்வர் கோனாந்தகருக்கு விவாகம் செய்து வைக்க உறுதி பூண்டிருக்கிறார். அப்படி இருக்க உங்களுக்கு அவர்களுடைய உறவு ஏற்படாமல் போகக் காரணம் என்ன இருக்கிறது?'' என்றான் பராந்தகன்.

இதைக் கேட்டதும் புலிப்பள்ளி கொண்டாரின் மீசை துடித்தது. அவர் படபடப்போடு ''இதென்ன அநியாயம்! பிக்ஷுணிக் கோலத்திலேயே திருமணம் செய்து கொடுக்கத் தயாராய் இருக்கிறார்களா? இதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்'' என்றார்.

இதைக்கேட்டதும் பராந்தகன் அவரிடம் பரிவும் அனுதாபமும் கொண்டவன் போல் அவருக்குச் சமீபமாக நெருங்கி வந்து அமர்ந்தான். மிகவும் அந்தரங்கத்துடன், ''நீங்கள் ஒப்புக் கொள்ளாவிட்டால் நல்லதாகப் போய் விட்டது அவர்களுக்கு. நீங்கள் அப்படிச் சொல்ல வேண்டுமென்பதற்காகவே அவர்கள் இச் சூழ்ச்சிகளெல்லாம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பெண்ணை உங்கள் மகனுக்குத் திருமணம் செய்து கொடுப்பதாய் வாக்குறுதி அளித்த பின் திருபுவனியின் அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறார்கள். அவளுக்கு உங்கள் புத்திரன் கோனாந்தகனைத் திருமணம் செய்து கொள்வதில் விருப்பமில்லை. இவ்விஷயத்தை அறிந்த பின் உங்களுக்கு அளித்த வாக்குறுதியை எப்படி மீறுவது என்று தெரியாமல் அவளை மறுபடியும் பிக்ஷுணிக் கோலமே கொள்ளச் செய்தால் நீங்கள் விரும்பமாட்டீர்கள் என்று

கருதி இந்தச் சூழ்ச்சியைச் செய்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. நீங்கள் அவர்களுடைய சூழ்ச்சியைத் தகர்த்தெறிய வேண்டுமென்றால் அப் பெண் சீவர ஆடை அணிந்து பிக்ஷுணிக் கோலத்திலேயே இருந்தாலும் தயங்காமல் விவாகத்தை முடித்துக் கொண்டு விடுவதுதான் புத்திசாலித்தனமாகும்'' என்றான் பராந்தகன்.

பராந்தகனின் வார்த்தைகளைக் கேட்ட புலிப்பள்ளியாருக்குக் குழப்பத்தின்மேல் குழப்பம்தான் ஏற்பட்டது. அவர் படபடப்பான குரலில், ''இந்தச் செய்திகளெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டார்.

''பழையாறை நகரிலிருந்து இங்கு வந்திருந்தவர்கள் சொன்னார்கள். இந்தச் செய்தி எவ்வளவு உண்மையோ எனக்குத் தெரியாது. நான் கேள்விப்பட்ட விவரங்களைத்தான் உங்களுக்குச் சொன்னேன். இதைத்தவிர இன்னொரு செய்தியும் கேள்விப்பட்டேன். அதுவும் எவ்வளவு தூரம் உண்மையோ....?'' என்றான் பராந்தகன்.

புலிப்பள்ளியார் மேலும் பதற்றம் மிக்கவராக, ''அதென்ன விஷயம்?'' என்று வினவினார்.

''இடங்காக்கப் பிறந்தாரின் மகளுக்குச் சித்த சுவாதீனமில்லை என்றும் சொல்லிக் கொள்கிறார்களாம். அவள் ஒரு நிலையில் நின்று பேசுவதாகவும் தெரியவில்லையாம்.. அதோடு, நினைத்தால் புத்த பிக்ஷுணி போல் சீவர ஆடை அணிந்து கொள்கிறாளாம். மறுகணம் அவைகளைக் களைந்தெறிந்து விட்டுப் பட்டாடை ஆபரணங்களெல்லாம் அணிந்து கொள்கிறாளாம். இதையெல்லாம் கேட்க விநோதமா யில்லையா...?'' என்றான் பராந்தகன்.

''மிகவும் விநோதமாகத்தான் இருக்கிறது'' என்றான் ஆதித்தன், அவன் வார்த்தைகளை ஆமோதிப்பவன் போல்.

புலிப்பள்ளியார் எவ்வித பதிலும் சொல்லாமல் சித்தம் கலங்கியவர் போல் உட்கார்ந்திருந்தார்.

''இதைப்பற்றி எண்ணி நீங்கள் குழப்பமடையவே கூடாது. அவர்களே ஏன் அந்தப் பெண்ணைச் சித்த சுவாதீனம் இல்லாதவள் போல் நடிக்கச் சொல்லி இருக்கக் கூடாது? இதைப் பற்றியெல்லாம் நீங்கள் யோசிக்கவே யோசிக்காதீர்கள். அவள் பித்துப் பிடித்தவள் போல் நடந்து கொண்டாலும் தீவிரமாக நின்று திருமணத்தை முடிக்கப் பாருங்கள். சூழ்ச்சியினால் பிறரை ஏமாற்றி விடலாம் என்று நினைப்பவர்களைச் சூழ்ச்சியினாலேயே நாம் ஏமாற்றி விடவேண்டும். இவ்விஷயத்தில் உங்களுக்கு அவசியமான உதவிகளைச் செய்யத்தக்க மனிதர்கள் இருக்கிறார்கள். நானே அவர்களுடைய உதவி உங்களுக்குக் கிடைக்கும் வண்ணம் செய்கிறேன். உண்மையாகவே அப்பெண்ணுக்குப் பைத்தியமா அல்லது வெறும் வேஷமா என்பதை அறிந்து சொல்லக் கூடியவர்கள் இருக்கிறார்கள். உங்களுக்கு அபிப்பிராயம் இருக்குமானால், அவர்களுடைய உதவி உங்களுக்கு வேண்டியிருக்குமென்று பட்டால் சொல்லுங்கள். அவரைக் கொண்டு உங்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்யச் சொல்லுகிறேன்'' என்றான்.

''எனக்கு இவ்விஷயத்தில் தக்க மனிதர்களின் உதவி வேண்டியதுதான்.



அப்படி உதவி செய்யக் கூடியவர்கள் யாரேனும் இருந்தால் அவர்களை நானே சென்று பார்க்கிறேன்'' என்றார்.

''கொடீச்சுவரத்தில் சந்தகர் என்ற சோதிடர் இருக்கிறாரே, உங்களுக்குத் தெரியுமா?'' என்றான் பராந்தகன்.

''சந்தகரா! சோதிட சாஸ்திரத்தில் கரைகண்டவராயிற்றே. மாந்திரீக வித்தையில் மகா நிபுணராயிற்றே? பராந்தகா! இந்தச் சமயத்தில் அதுவும் இந்தக் காரியத்தில் சந்தகரின் நட்பு தஞ்சை அமைச்சருக்கு அவசியம் வேண்டியதுதான்'' என்று கூறினான் ஆதித்தன் பராந்தகனின் யோசனையை அங்கீகரிப்பவன்போல்.

''சந்தகரா! அவரைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சோதிடத்தி லும் மாந்திரீகத்திலும் மகா நிபுணர் தான். ஆனால் அந்த மனிதர் இந்நாட்டில் பல்லவ சாம்ராஜ்யத்தைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்யும் சிலருக்கு அந்தரங்க மானவர் என்று கலங்கமாலரையர் என் னிடம் கூறி இருக்கிறார். அப்படிப்பட்ட வர்களின் நட்பு எனக்கு எப்படி நன்மை விளைவிக்கும்....?'' என்று கேட்டார் புலிப்பள்ளி கொண்டார்.

* * *

''சந்தகர் பல்லவ சாம்ராஜ்யத்தைக் கவிழ்க்க நினைப்பவரோடு சேர்ந்தவரோ, பாண்டிய சாம்ராஜ்யத்தைக் குலைக்க நினைப்பவர்களோடு நட்பு பாராட்டு கிறவரோ, அதைப் பற்றி நமக்கென்ன கவலை? அவருடைய ஜீவனம் சோதிடம். அவரிடம் பலர் வருவார்கள், போவார் கள். நீங்கள் அவரைத் தொழில் துறை யில்தானே நெருங்கப் போகிறீர்கள்? அவருடைய மனக் கொள்கைகள் பல விதமாக இருக்கலாம். அவரால் நமது காரியங்கள் பலனடையுமா என்பதைத் தானே நீங்கள் முக்கியமாகக் கருத வேண்டும்?'' என்றான் பராந்தகன்.

''நீங்கள் சொல்வதும் உண்மைதான். கலங்கமாலரையர் அடிக்கடி என்னிடம் சொல்லி இருப்பதால் நான் அப்படிச் சொன்னேன். ஆனால் கலங்கமாலரைய ருக்கே சிலரைக் கண்டால் பிடிக்காது. அவர் சொல்கிற ஒவ்வொன்றையும் நான் ஒப்புக் கொள்கிறவனல்ல'' என்றார் புலிப்பள்ளி கொண்டார்.

''ஒரு அமைச்சராக இருப்பவர் ஒரு சாதாரண சேனாதிபதியாக இருக்கும் ஒருவருடைய வார்த்தை எல்லாவற்றை யுமே எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? அப்புறம் அமைச்சர் என்ற மதிப்புக்குத் தான் என்ன உயர்வு? நீங்கள் நன்கு படித்தவர்கள். அதோடு சாதுர்யமாக நடக்கக் கூடியவர்கள். அரசாங்கக் காரி யத்தில் நல்ல அனுபவமும் தேர்ச்சி யும் பெற்றவர்கள்'' என்று புகழ்மாலை சூட்டினான் பராந்தகன்.

''இந்த உண்மையை நீங்கள்தான் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள். தஞ்சை மன்னர் முத்தரையருக்கு ஏதோ நன்மைகள் செய்வதுபோல் கலங்கமா லரையர் பல காரியங்கள் செய்திருக் கிறார். அவை எனக்குப் பிடிப்பதில்லை. இருந்தாலும் அரசாங்கத்தில் கலங்க மாலரையருக்குத்தான் அதிக மதிப்பு இருக்கிறது. என்னுடைய மகன் கோளாந்தகன்தான் கலங்கமாலரையர் வகித்த சேனாதிபதிப் பதவியை இன்று வகிக்கிறான். அவன் இந்தப் பதவி வகிப்பதில் கூடக் கலங்கமாலரையருக்கு விருப்பமில்லை....'' என்றார்.

''அவர்தான் துறவிக் கோலம் பூண்டு விட்டாரே-அவருக்கு ஏன் இன்னும் இந்த ஆசையெல்லாம்?'' என்றான் ஆதித்தன் மெதுவாக.

''உண்மையாகத் துறவிக் கோலம் பூண்டிருந்தால் அல்லவா அவருக்கு இந்த ஆசை எல்லாம் இருக்காது?'' என்றான் பராந்தகன்.

''ஆமாம்! கலங்கமாலரையர் ஏன் திடீரென்று துறவுக்கோலம் பூண்டார் என்பது தான் எனக்கு விளங்கவில்லை. எப்படியோ அவர் துறவுக்கோலம் பூண்டதினால் தான் என் மகன் சேனாதி பதியாக முடிந்தது. ஆனாலும் அவர் பௌத்த பிக்ஷுவான பின்பும் இன்னும் ஏன் அரசாங்கக் காரியங்களில் கவலை கொள்கிறார் என்பது தான் தெரிய வில்லை. காவிரிப்பூம் பட்டினத்து புத்த சேதியத்தில் இருந்தவர் திடீ ரென்று இப்பொழுது காஞ்சிக்குப் போயிருப்பதாகத் தெரிய வருகிறது. எதிலும் நேரடியான முயற்சியில் ஈடு படுவதுதான் எனக்குப் பிடிக்குமே தவிர இப்படி யெல்லாம் வேஷம் மாறி மறைந்து ஒளிந்து நின்று செய்யும் சூழ்ச்சிகளெல்லாம் எனக்குக் கொஞ்ச மும் பிடிக்கவே பிடிக்காது'' என்றார்.

''அடாடா! உங்களுடைய சுபாவம் எனக்குத் தெரியாதா? கலங்க மாலரை யர் புத்த பிக்ஷுக்கோலம் பூண்டு திரிவது ஏதோ சூழ்ச்சி செய்வதற்காக என்பதை விட இப்படித் துறவுக்கோலம் பூண்டு விட்டால் தம் உயிரையும் காப்பாற்றிக் கொள்ளலாம் என்ற எண்ணமும் இருக்கலா மல்லவா?''

''ஆமாம்! அந்த உண்மையையும் நீங்கள் அறிந்திருப்பது வியப்பாகத் தானிருக்கிறது. முக்கியமாகப் பழையா றையிலுள்ள சோழ அரசரின் மகனை அவர் கொன்று விட ஏதோ சூழ்ச்சி செய்ததாகத் தெரிகிறது. இதை அறிந்த சில வீரர்கள் அவரைப் பழி தீர்த்து விட நினைத்ததாகவும் தெரிகிறது. இதன் காரணமாகத் தான் அவர் துறவுக் கோலம் பூண்டு திரிகிறார் என்று நினைக் கிறேன்—'' என்றார் புலிப்பள்ளியார்.

''அதுதான் உண்மை. பழையாறையி லுள்ள சோழ வம்சத்தினரை நாசமாக்க ஒருவன் முயற்சி செய்யும் வரையில் கொடும்பாளூரிலுள்ள வீரர்கள் பொறுத் துக் கொண்டிருக்க மாட்டார்களல் லவா?'' என்றான் பராந்தகன் மிகுந்த படபடப்போடு. **(தொடரும்)**



உங்கள் குழந்தைக்கு
அழகான ஆடைகள்
வாங்க உங்களால் முடியும்!
மிகக் குறைந்த விலையில் காட்டன் துணிகளின் அழகிய டிசைன்களும் வசீகரிக்கும் கலர்களும் கிடைக்கின்றன என்பது உங்களுக்கே ஆச்சரியமாயிருக்கும். ஆனால் ரெஸிஸ்ட் பிரின்ட் வாங்கினால் நம்பகம் உண்டாகும். இந்தத்துணியில் உங்கள் சேலைகளுக்கும், ஸ்கர்ட்டுகளுக்கும், குழந்தைகள் ஆடைகளுக்கும், நீங்கள் எதிர்பார்க்கும் நீடித்த உழைப்பு, பட்டுப்போன்ற மிருதுவான தொடு, குறைந்த விலை முதலிய அம்சங்கள் பொருந்தியுள்ளன.
Resist Print
உயர்தர புடவைகள் வேஷ்டிகள் பிரின்ட் துணிகள் முதலியவைகளுக்கு கீழே கண்ட இடத்திற்கு எழுதுங்கள்.
ஜஹாங்கீர் வக்கீல் மில்ஸ் கம்பெனி லிமிடெட்
ஆமதாபாத்.
கீழே குறிப்பிட்டுள்ள நபர்களை விசாரிக்கவும்:-
(1) திலீப்குமார் ரமண்லால் (2) கனிலால் சந்தன்மல்
(3) வீணீலால் அசோக்குமார் (4) கேசவலால் ஸ்ரீதரலால்
(5) காந்திலால் லக்ஷ்மிதாஸ், மஸ்கட்டி மார்க்கெட் ஆமதாபாத்.



பல மாதங்களாகத் திறவாத தன் பச்சை நிற 'டிரங்' பெட்டியை இடுப்பு ஒடிய எடுத்து வந்து ஓலைப் பாயின் மீது வைத்தபோது சலீமா பேகத்துக்கு நெடு மூச்சு வாங்கியது. 'அல்லாவே' என்று அலுப்புடன் கூறிக் கொண்டு அதன் அருகில் சோர்வுடன் அமர்ந்தாள். பூட்டைக் கழற்றி விட்டுப் பெட்டியைத் திறந்தாள். தன் கல்யாண தினத்தன்று தான் உடுத்தியிருந்த பொன்னிறப் பூக்கள் போடப்பட்ட கொடுக்காப்புளி வர்ண ஜிமிக்கித் தாவணியைக் கண்டதும் அவ் வனிதையின் செம்பவழ இதழ்களில் மந்தஹாஸம் உலாவியது. கீழ் உதட்டைக் கடித்துக் கொண்டு வெகு ஜாக்கிரதையாக அந்த 'மடி'யை எடுத்துத் தன் மடிமீது வைத்துக் கொண்டாள்.

அந் நங்கையின் தளிர்மேனி உவகையினால் துள்ளியது. அந்த அணியை மடி கலையாது வெகு நாசூக்காக அகற்றிய போது அதற்கடியில் காட்சியளித்த சிறு பெட்டியின் மீது அவள் பார்வை விழுந்ததும் சலீமா பேகம் சற்றுக் கலக்கமடைந்தாள். அதைத் திறப்பதற்கு முயன்ற போது அந்த எழிலரசியின் காந்தள் விரல்களில் நடுக்கம் ஊர்ந்தது. பெட்டிக்குள்ளிருந்த கணையாழியை நோக்கியதும் அக்காரிகையின் கருவிள மலர்போன்ற விழிகள் கழன்றன. நெடுமூச்சு அவள் மார்பகத்தை மேலும் கீழும் அழுத்தியது. நினைவு நாகங்கள் அவள் நெஞ்சில் படமெடுத்தாடின.

சலீமா பேகத்தின் மருதாணியிட்ட விரல்களுக்கிடையில் சிக்கித் தத்தளித்த பச்சைக் கல் பதித்த அந்த மோதிரம் அந்த ஏந்திழையாளுக்குக் காணிக்கையாகக் கிடைத்த கதை ஒரு வேடிக்கையாகும்!



தமையன் அளித்த காணிக்கை

உருது மொழியை தாய் பாஷையாகக் கொண்ட 'தக்கனி'ப் பிரிவைச் சேர்ந்த வட ஆற்காடு ஜில்லா, மஞ்சம் பேட்டை ஆதம்சா சாஹேப் மூன்று புத்திரர்களுக்கும் ஒரே ஒரு செல்விக்கும் தகப்பனாராக இருந்தார். அவருடைய முதல் 'பீபி'யான பாத்திமா பேகம் ரஹ்மானை ஈன்றெடுத்துத் தன் நாயகனிடம் ஒப்படைத்து விட்டு இந்த 'துனியாவுக்கு' இறுதி சலாம் வைத்து விட்டு மறைந்து விட்டாள். இந்த அதிர்ச்சியிலிருந்து பல மாதங்களாக மீள முடியாத வேதனை வெள்ளத்தில் மூழ்கி விட்ட ஆதம்சா உற்றார் உறவினர்களின் பிடுங்கலைத் தாளாது குல்ஸூம் பேகத்தைத் துணைவியாக ஏற்றுக் கொண்டு விட்டார். இளையவளின் மூலம் இரு குமாரர்களையும் ஒரு புத்திரியையும் தாம் அடையும் படியான பாக்கியத்தையும் பெற்றுவிட்டார்!

தாயை இழந்த மூத்த மகன் ரஹ்மானைச் செல்லமாக ஆதம்சா வளர்த்து வந்ததன் பலன் அந்த இளைஞன் ஒரு தம்பிடிக்கும் பிரயோசனமில்லாமல் போனதுதான்! கெட்டவர்களின் சகவாசத்தினால் குடியாத்தம் தாலூக்காவில் 'கேப்மாரி' என்ற விருதைப் பெறுவதில் ரஹ்மான் 'பிறைகொடி' நாட்டி விட்டான். இந்தச் செய்தியைச் செவி மடுத்ததும் ஆதம்சாவின் தலை மீது பேரிடி விழுந்தது போலாகி விட்டது.

சோதாக்களின் கும்பலில் கும்மாளமடித்துக் கொண்டும், காலாடிகளின் கோதாவில் தன் வஸ்தாத் வேலைகளைக் காட்டியும் வந்த மூத்த மகன் யாரோ ஒரு பெண் வீசிய வலையில் மாட்டிக் கொண்டு ஊரை விட்டு விலகி ஏதோ ஒரு குக்கிராமத்தில் குடியேறிவிட்டதாகத் தெரிய வந்ததும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த ஆதம்சா வெல வெலத்துப் போனார். அவமானம் அவர் மாசற்ற நெஞ்சைத் துண்டு துண்டாக நறுக்கித் தள்ளியது. துயரம் அவர் இதயத்தைக் கௌவியதும் அவர் உடல் காந்தியது. ரஹ்மான் தன் வீட்டின் வாசற்படிக்குள் காலடி எடுத்து வைக்கக் கூடாதென்று வீட்டிலுள்ளவர்களுக்குக் கடுமையான உத்தரவு போட்டார். தமக்கும் தம் மூத்த மகனுக்கும் யாதொரு தொடர்பும் இல்லையென்று ஊரில் 'நகா'ரா அடிக்கச் செய்தார்.

அவர் செய்து விட்ட இந்த விபரீத முடிவு ஊரில் ஓர் சிறிய பூகம்பத்தை உண்டாக்கி விட்டது. தந்தையின் 'ஜபர்தஸ்த்' கட்டளையைக் கேட்டுத் திகிலடைந்த தனயன், தான் பிறந்து வளர்ந்த இல்லத்தை விட்டு எவருடைய கண்களுக்கும் தென்படாமல் இரவோடு இரவாக மறைந்து விட்டான்.

தந்தை அயலூருக்குப் போயிருந்த சமயங்களில் யாரும் அறியாத வண்ணம் தன் மனைக்குச் சென்று வருவது ரஹ்மானுக்குச் சிறிது காலம் வழக்கமாக இருந்தது. இந்த வழக்கத்தை மாத்திரம் ரஹ்மானால் நிறுத்திக் கொள்ள முடியாததற்கு முக்கிய காரணமாக இருந்தவள் சலீமா பேகம்தான்! அந்த மாற்றாந்தாய் குழந்தைக்கு ரஹ்மான் என்றால் உயிர்! இளம் பிராயத்தில் வெளியே சென்று திரும்பி வரும்போதெல்லாம் பஞ்ச வர்ண அஞ்சறைப் பெட்டியையாவது, பட்டு நூல் உருண்டையையாவது, வண்ண ரிப்பன்களையாவது வாங்கிக் கொண்டுவந்து தன் தங்கைக்குக் கொடுக்காமல் இருக்கமாட்டான் ரஹ்மான். இப்பொருள்களைத் தன் சகோதரனிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக வழிமேல் விழி வைத்து வாசற்கதவுக்கருகில் மணிக் கணக்காக அவன் வரவுக்குக் காத்திருக்கும் அப்பேதை. அண்ணன் தென்பட்டவுடன் அவன் கையிலுள்ள சாமான்களை 'லபக்' என்று பிடுங்கிக் கொண்டு மான் குட்டிபோல் துள்ளிக் குதித்து வீட்டுக்குள் ஓடி விடுவாள்.

தகாத சகவாசத்தினால் ரஹ்மானின் நடத்தை சீரழிந்து கொண்டிருந்த நாட்களிலும் சலீமா பேகத்துக்கு அண்ணனிடமிருந்த வாஞ்சை ஒரு அணுகூடக் குறைந்து போய்

ஜமீலா



விடவில்லை. அவனைச் சந்தித்து ஓர் அன்புச் சொல்லை உதிர்க்காது போனால் அவனுக்கு ஒரு வேலையும் ஓடாது!

முன் கோபியான தன்னுடைய தந்தை பாசத்தையும் பந்தத்தையும், ஆசையையும் ஆதங்கத்தையும் உதறிவிட்டுத் தம் அண்ணனை வீட்டை விட்டுத் துரத்தி விட்டார் என்ற கொடூரச் செய்தி சலீமாவின் செவிகளை மோதியதும் அந்தப் பேதையின் மனம் படீரென்று வெடித்து விட்டது. விதிர் விதிர்த்துப்போன அவளுடைய நயனங்களிலிருந்து வழிந்தோடியது சோகம் தோய்ந்த கண்ணீர்.

தம் மகனின் இழிவான வாழ்க்கையினால் மனம் நொடிந்துபோன ஆதம்சா நடைப் பிணம்போல் நாட்களைப் போக்கி வந்த வேளையில் மற்றொரு மின்னல் அவரைத் தாக்கியது. குடியாத்தத்தில் நடந்து வந்த தம்முடைய வியாபாரம் திடீரென்று முறிந்து விட்டதாகவும், இருந்ததைச் சுருட்டிக்கொண்டு கணக்குப் பிள்ளை கம்பி நீட்டி விட்டதாகவும் கேள்விப் பட்டவுடன் ஏற்கனவே புண்பட்ட அவர் இதயம் இரு கூறுகளாகி விட்டது.

எஞ்சி நின்ற சொத்தில் தம் மகளின் திருமணத்தை விரைவில் நடத்திவிடத் தீர்மானித்தார் ஆதம்சா. வாணிபம் தமக்குக் கற்பித்த படிப்பினையை உணர்ந்த அவர் அரசாங்க உத்தியோகத்தில் மாதா மாதம் 'கணிசமாக' ஊதியம் பெறும் வாலிபனைத் தம் அருமை மகளுக்காகத் தேடி அலைந்தார்.

மரம் வைத்தவன் அதற்கு நீர் ஊற்றத் தவறுவதுபோல அந்த வடிவழகி சலீமா பேகத்தைச் சிருஷ்டித்த அல்லாஹுத்தாலா அந்தத் தளிர்க் கொடியைத் தாங்கிக் கொள்வதற்கு அதே சமயத்தில் ஒரு கொழுகொம்பை வளர்த்து வைக்க மறக்கவில்லை. 'சடாவா' செருப்புகள் தரையோடு தரையாகத் தேய்ந்துவிட எங்கெங்கேயோ திரிந்து உறவினர்களை அணுகாது, அயலார்களிடம் கடன் வாங்கித் தம் புனித கடமையை ஒருவாறு செய்து முடித்தார் ஆதம்சா. வளத்தூர் சத்தார் சாஹேபுக்கும் சலீமா பேகத்துக்கும் நடந்த நிக்காஹ் பந்தலில் பெரிய பெரிய 'சஹன்' பாத்திரங்களில் பரிமாறப்பட்ட நறுமணம் கமழும் 'பிரியாணி' சோற்றை வயிறு புடைக்க உண்டு மணத் தம்பதிகளை வாயார வாழ்த்திச் சென்றனர் கிராம மக்கள்.

இந்த மங்களகரமான நிகழ்ச்சி நிரலின் துயரம் கவிந்த அத்தியாயம் என்னவென்றால், ஆதம்சாவின் மூத்த குமாரனான ரஹ்மான் தன் உயிருக்கு உயிரான தங்கையின் திருமண வைபவத்தில் கலந்து கொள்ளாததுதான்! உடனே கிளம்பி வரும்படி தந்தையிடமிருந்து வந்த கடிதத்தைப் பெற்றுக் கொண்டபோது ரஹ்மான் தடுமாறிப் போனான்.

அந்தச் சுப வைபவத்தில் தன் தலையைக் காட்டுவதற்கு அவன் மனசாட்சி தடையாக நின்றது. தன் கேவலமான வாழ்க்கையை நன்றாக அறிந்த சில கிழங்கள் கல்யாண வீட்டில் தன்னைப் பற்றி இழிவாகப் பேசி எக்களிக்கத் தயங்க மாட்டார்கள் என்ற பீதி ரஹ்மானின் உள்ளக் குகையில் பூதாகாரமாகச் சிரிப்பை எழுப்பியது.

ஆனால் தங்கையின் இன்முகம் மனக்கண் முன் வட்டமிட்டு வதைக்கத் தொடங்கியவுடன் பாசம், அன்பு ஆகிய இத்தளைகளை உடைத்தெறிய முடியாது தத்தளித்தான் ரஹ்மான். வெறிபிடித்தவன் போல் எழுந்தான். அன்று காலையில் துவைத்து உலர வைத்த உடைகளைத் தரித்துக் கொண்டான். தன் தங்கைக்கு ஏதாவது பரிசை வாங்கிச் செல்ல அவன் உள்ளம் ஏங்கித் துடித்தபோதிலும், அவனுடைய பரிதாபகரமான பொருளாதார நிலை அதற்கு இடம் கொடுக்கவில்லை. வெளி மாடத்திலிருந்த சில அணாக்களை எடுத்துக் கொண்டு மஞ்சம் பேட்டையை நோக்கி அவன் விறுவிறு வென்று நடந்து கொண்டிருக்கையில் பகலவன் தன் பணியை முடித்துக் கொண்டு குடவாயிலில் பதுங்கிக் கொண்டிருந்தான்.

நிக்காஹ் நடந்த அன்று, மாதர் குழாம் மணமக்களைக் குதர்க்கமாகவும் வேடிக்கையாகவும் பேசி "மஜாக்" பண்ணிக் கொண்டு 'கொல்' என்ற சிரிப்பொலியைக் கிளப்பிய வண்ணம் இருந்தது. மணமக்களுக்குப் பரிசுகள் அளிக்கவேண்டிய நேரம் வந்து விடவே, அந்த இடத்தில் கூட்டம் நிரம்பி விட்டது. பன்னீர் செம்பு, சந்தனப் பியாலா, சில்க்-உருமால், பெட்டகம், கடிகாரம், வெள்ளிச் சாமான்கள் ஆகியவைகளைத் தங்கள் தங்கள் பரிசுகளாகத் தம்பதிகளுக்கு உற்றார் உறவினர்கள் அளித்தார்கள். சிரிப்பொலியும் கூக்குரலும் செவிகளைத் துளைக்கும்படி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த அந்த மண்டபத்தில் அழுக்கேறிய உடைகளுடனும், சோகம் கப்பிய வதனத்துடனும் தன் முன்னால் சிரம் கவிழ்த்து நின்ற ரஹ்மானைக் கண்டதும் சலீமா பேகம் அசந்து விட்டாள். பல நாட்களாகக் காணாத தன் சகோதரனைப் பார்க்கப் பார்க்க அவ்வனிதையின் உள்ளம் ஊசலாடிற்று.

தன் இடுப்பைச் சுற்றியிருந்த பச்சைநிறச் சிங்கப்பூர் பெல்டின் தோல் பையை மெல்லத் திறந்தான் ரஹ்மான். அதிலிருந்த மோதிரத்தை எடுத்தபோது அவன் மேனி சிலிர்த்தது. தங்கையின் கரத்தை ஆசையுடன் பற்றித் தன் காணிக்கையாக அந்தக் கணையாழியை அவள் விரலில் அன்போடு பொருத்தியபோது அவன் இதயம் 'படக் படக்' என்று அடித்துக் கொண்டது. நுதலில் கசிந்து வழிந்தோடிய வியர்வையைக் கண்டு விரலால் நீக்கிவிட்டு ஒரு வார்த்தையும் பேசாது வெறிச்சோடிய விழிகளுடன் அவ்விடத்தை விட்டு மறைந்தான் ரஹ்மான்.

இந்த ஒரு நிகழ்ச்சி சலீமா பேகத்தின் நினைவில் சுழன்றபோது அவள் திகிப்பிரமையுடன் ஓலைப் பாயில் தன் பெட்டிக்கு முன்னால் உட்கார்ந்திருந்ததை முன்பே சொன்னோம்! அந்தச் சம்பவம் நடந்து எத்தனையோ மாதங்கள் உருண்டோடிய போதிலும் ஏதோ நேற்று நடந்ததுபோல் சலீமாவுக்குப் பட்டது.

அண்ணன் அளித்த காணிக்கையை நீர் கரந்த தன் கண்களில் ஒற்றிக் கொண்டிருக்கையில் வாசற் கதவை யாரோ இடிக்கும் ஓசையைக் கேட்டுச் சுய உணர்வு பெற்றாள். தாவணியின் தலைப்பினால் நயனங்களைத் துடைத்துக் கொண்டாள். சலீமா வாசற் கதவைத் திறந்தபோது, அங்கு அவள் கண்ட

காட்சி அவளை அதிர வைத்துவிட்டது. எந்தச் சகோதரனை நினைந்து குடம் குடமாகக் கண்ணீர் வடித்தாளோ, அவன் பரிதாப கோலத்தில் வாசற்படியிடம் நின்று கொண்டிருந்ததைப் பார்த்ததும் சலீமா மலைத்துப்போனாள்.

''வாங்கோ பாய்...உள்ளே வாங்கோ !'' என்று தழுதழுத்த தொனியில் பரிவுடன் வரவேற்றுத் தன் அண்ணனைக் கூடத்துக்கு அழைத்துச் சென்றாள் சலீமா பேகம்.

''பாய்! சொக்காயைக் கழற்றிவிட்டு மூக்காலியில் உட்காருங்கோ. பசியாற ஏதாச்சும் கொண்டு வாரேன்'' என்று கனிவுடன் பகர்ந்தாள் சலீமா. மாடத்திலிருந்த கோழி முட்டைகளையும் வாணலி சட்டியையும் எடுத்துக் கொண்டு கொவ்வை அதரங்களில் குறுநகை தவழ, குவளைக் கண்களில் களிப்பு நீர் ததும்ப அடுக்களைக்கு ஓடினாள். பத்து நிமிஷம் கழித்து, ''பாய் 'நாஸ்த்தா' தயாராயிடுச்சு. கை கால் கழுவி விட்டுப் பாயில் வந்து உட்காருங்கோ'' என்று தங்கையின் பாசம் நிறைந்த குரலைக் கேட்டு எழுந்தான் ரஹ்மான்.

தரையில் நேர்த்தியாக விரிக்கப்பட்டிருந்த 'தஸ்தரில்' அமர்ந்தான். தன் சகோதரியின் கைகளினாலே பரிமாறப்பட்ட பணியாரங்களைச் சாப்பிட்டபோது தங்கையின் வாஞ்சை ரஹ்மானை ஓர் உலுக்கு உலுக்கி விட்டது.

திண்ணையில் ஏதோ அரவம் கேட்டு வாசற்கதவைச் சாத்துவதற்கு விரைந்தாள் சலீமா. கூடத்தில் தாறுமாறாகத் தரையில் பெட்டியைச் சுற்றிச் சிதறிக் கிடந்த ஆடைகளின் மீது பார்வை விழுந்ததும் அவள் நெஞ்சு திக்கென்றது. அவைகளைப் பொறுக்கி யெடுத்துப் பெட்டிக்குள் திணித்தாள். மோதிரத்தை வைக்கும் பெட்டகத்தை எடுத்துத் திறந்தாள். ஓலைப்பாயில் தான் வைத்துச் சென்ற கணையாழியைக் காணாததும் அவள் நெஞ்சு பகீரென்றது! பெட்டிக்குள் திணித்த துணிமணிகளை எடுத்து உதறிப் பார்த்தாள். ஓலைப்பாயை எடுத்து உதறினாள். மூலை முடுக்கெல்லாம் துழாவிப் பார்த்தும் அந்த மோதிரம் தென்படவில்லை! நாகூர் 'மினாரா' போல் ஸ்தம்பித்து நின்று விட்டாள் சலீமா.

யார் அதை எடுத்திருப்பார்கள்? அந்தச் சமயத்தில் கூடத்தில் தன்னையும் தன் சகோதரனையும் தவிர வேறு யாருமில்லையே! வாசற்கதவு திறந்து கிடந்தபோது, எதிர்வீட்டுப் பித்துக்குளி மூஸாவோ அல்லது அடுத்த வீட்டு அந்தப் பொல்லாத கிழவி ஜைனப் பீவியோ வீட்டுக்குள் புகுந்து அதைத் திருடிக் கொண்டு போய் விட்டார்களா? ''அட, அல்லாவே! இது என்ன சோதனை?'' என்று ஈனக்குரலில் புலம்பிக்கொண்டு மனமொடிந்து விரல்களை அவள் நொடித்துக் கொண்டிருந்த வேளையில், ''சலீமா! குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொடு'' என்று தமையன் எழுப்பிய குரலைக் கேட்டு ஒருவாறு தன்னைச் சுதாரித்துக் கொண்டாள். மனப் பதற்றத்தை வெளியே காட்டாது உள்ளே சென்றாள். ''சலீமா! போன பக்ரீத் பண்டிகையில் உன்னைப் பார்த்தவன்தான்! சரி, மச்சான் எங்கே?'' என்றான் ரஹ்மான்.

''அவர் பீமாபுரத்துக்கு 'டியூட்டியில்' போய் இருக்கிறார். 'நாளைக் கருக்கலிலே வந்துடுவேன்' என்று சொல்லித்தான் போனார்'' என்றாள் சலீமா சிரத்திலிருந்து நழுவிய தாவணியை சரிப்படுத்திக் கொண்டு.

''நீ செய்த பணியாரம் ஒன்றையும் மீந்து வைக்கவில்லை'' என்று சொல்லி, கலகலவென்று உரக்கச் சிரித்துவிட்டு, ''சலீமா, ஒரு சின்ன விஷயமாகத் தான் நான் இங்கே வந்து சேர்ந்தேன்'' என்றான் கம்மிய குரலில்.

சலீமா மௌனம் சாதித்தாள். ''உன் நிக்காஹின் போது காலையில் வந்து புலவு சோற்றைச் சாப்பிடுவதற்குப் பதிலாக இரவு அங்கே வந்தது உனக்கு நினைவு இருக்கலாம்'' என்று பீடிகை போட்டான் ரஹ்மான்.

''ஆமாம்... ஞாபகமிருக்கு'' என்று கூறி அண்ணனை அன்புடன் பார்த்தாள் சலீமா.

''பெற்றெடுத்த தகப்பனாரே என்னை வீட்டை விட்டுத் துரத்தி விட்டார். ஊர்க்காரர்களும் என்னென்னமோ என்னைப் பற்றிக் கேவலமாகப் பேசிவிட்டார்களாம். அமீராக வாழ்ந்த நான் ஏதோ வழி தவறிப் பக்கிரியாகப் போய் விட்டேன். ஏழையாகிக் கஷ்டப்பட்ட நான் என்னிடமிருந்த சில காசுகளைப் போட்டு மோதிரம் ஒன்று வாங்கி உனக்கு என் கல்யாணப் பரிசாகக் கொடுத்து என் கடமையைத் தீர்த்துக் கொண்டேன்'' என்றான் ரஹ்மான்.

''பாய்! அப்போது நான் எவ்வளவு சந்தோஷப்பட்டேன், தெரியுமா!'' சலீமாவின் வதனத்தில் களிப்பு மிதந்தது.

''நான் இப்போது இங்கே வந்த விஷயமும் அதைப் பற்றித்தான் சலீமா!''

''சொல்லுங்கோ பாய்'' என்றாள். சலீமாவின் தொனியில் ஆவல் பிரதிபலித்தது.

''நான் எந்தப் பொருளை என் பரிசாக உனக்குக் கொடுத்தேனோ, அந்த மோதிரத்தை எடுத்து வா. ஒரு முறை பார்த்துவிட்டு நான் போய் விடுகிறேன்'' என்று ரஹ்மான் கூறியதும் சலீமாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது! ஆயிரம் கருந்தேள்கள் ஒரே சமயத்தில் கொட்டினாற்போல் வேதனை உண்டாயிற்று.

சற்றுமுன் 'காணாமல் போன' அந்தக் கணையாழியைப் பற்றித் தன் சகோதரனிடம் ஏதா

★★★★★★★★★★★★★★★★★

அருள் வாக்கு

பழைய காலத்தில் அன்றாடக் காலட்சேபத்தைப் பற்றிக் குறைவே இல்லாமல் இருந்தது. 'வேலை இல்லையே! எப்படிச் சாப்பிடுவோம்!' என்று நினைக்கமாட்டார்கள். சாப்பாட்டைப் பற்றிய கவலையே கிடையாது. எவ்வளவு ஏழையானாலும் சாப்பாட்டுக் கவலை அவனுக்கு இராது. வீடு கூரை வீடாகத்தான் இருக்கும். இந்தக் காலத்திலோ வீடு பெரியதாக இருக்கிறது; சட்டைத் துணிமணிகளும் அதிகம். ஆனாலும், 'அடுத்த மாதம் என்ன பண்ணுவோம்!' என்று பயப்படுகிறார்கள். இத்தகைய ஸ்திதி இப்பொழுது வந்திருக்கிறது. வியாபார சௌகரியம் அதிகமாக ஏற்பட்டதனால் விளைந்த 'சுகம்' இது.

—ஸ்ரீ சங்கராச்சாரியார், காமகோடி பீடம்.

★★★★★★★★★★★★★★★★★

அருள் வாக்கு

இப்பொழுது அதிகப் பணம் இருப்பதாகப் பாவனை மட்டும் இருக்கிறது. நெல் விளைகிறது; மிஞ்சுகிறது. ஆனால் நெஞ்சில் நிலை போகவில்லை. எல்லாத் தேசத்து ஜனங்களும் கஷ்டப்படுகிறார்கள். வேகமாக லாபம் சம்பாதிக்க ஆரம்பித்ததின் பலன் இது.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

வது காரணம் கூறி மழுப்பிவிட வேண்டும் என்று அப்போதை நினைத்தாள்.

"பெரிய பாய்! நீங்கள் அளித்த அந்தக் கணையாழியை அழித்துக் காதுக்கு மாட்டல் செய்து போட்டுக்கிட்டேன்." தட்டுத் தடுமாறிக்கொண்டு சொல்லி மழுப்பினாள் சலீமா.

"அப்படியா செஞ்சுட்டே! நல்லதாகப் போச்சு போ" என்று சாவதானமாக உரைத்துவிட்டுக் கை கழுவ எழுந்தான் ரஹ்மான். நீர் நிறைந்த செப்பு லோட்டாவை எடுத்துக்கொண்டு சகோதரனைத் தொடர்ந்து சென்றாள் சலீமா.

"சலீமா...டவுனில் கொஞ்சம் வேலை இருக்கு. மத்தியானம் சூரியன் சாய்ந்த பிறகுதான் வருவேன். எனக்காக ஒன்றும் சமைத்து வைக்காதே" என்று ரஹ்மான் புறப்பட்டு விட்டான்.

அண்ணன் சந்தின் மூலையைக் கடந்த பின் கதவைச் சாத்தினாள் சலீமா. துடைப்பத்தை எடுத்துக் கொண்டு வந்து வீடு முழுவதையும் பெருக்கிக் குப்பையை ஒரு மூலையில் குவித்தாள். அதைச் சல்லடை போட்டு அலசிப் பார்த்தும் மோதிரம் கிடைக்கவேயில்லை!

மாலை ஐந்து மணிக்கு ரஹ்மான் திரும்பினான். வாழைப் பழங்களையும், கொய்யாக் கனிகளையும் தொங்குகளையும் கொண்ட கூடையுடன் சகோதரன் வீடு வந்து சேர்ந்ததும் சலீமாவுக்குப் பேரானந்தம் உண்டாயிற்று.

"சலீமா! இன்னும் கால்மணி நேரத்தில் பஸ் வந்துவிடும். நான் அதற்குள் கிளம்பியாக வேண்டும்" என்றான் ரஹ்மான்.

"ராத்திரி ஆற அமர இருந்துதான் போங்களேன் பாய். எந்த ஹிஜ்ரி வருஷமோ உங்களைப் பார்த்தது!"

"இருக்கட்டும். இன்னொரு நாள் வந்து சாவதானமாக மச்சானோடு சேர்ந்து உட்கார்ந்து பரியாறிப் போகிறேன்" என்று சொல்லி விட்டுப் பிறகு தொடர்ந்தான்:

"சலீமா! நான் உனக்குத் திருமணப் பரிசாகக் கொடுத்த மோதிரத்தை நீ அழித்து விட்டதாகச் சொன்னபோது எனக்கு என்னமோபோலிருந்தது. அதற்காக மற்றொரு கணையாழியை வாங்கிவந்திருக்கிறேன். இதை வாங்கிக் கொள்" என்று தன் மடியிலிருந்த கணையாழியை ரஹ்மான் எடுத்துக் கொடுத்ததும் சலீமா திகைத்துப் போய்விட்டாள்.

"அண்ணே!...ஏன் இதை வாங்கினீங்க?" என்றாள் சலீமா உணர்ச்சி வசப்பட்டு.

"சலீமா...நான் அளித்த அந்த மோதிரத்தை அழித்து மாட்டலாகச் செய்து போட்டுக்கொண்டாய் என்று நீ சொன்னது பொய் தானே! மறைக்காதே!" என்று சொல்லிச் சிரித்தான். சலீமா திடுக்கிட்டாள்.

"நான் உன் அண்ணன் என்பதை மறந்து விடாதே, சலீமா! நிகழ்ந்து மறைந்த ஒரு கதையை உனக்கு நான் சொல்லும்படியான தருணம் வந்து விட்டது!"

"கதையா?"

"ஆம்! இத்தனை நாட்களாக என் நெஞ்சில் புகைந்து கொண்டிருந்த கதைதான், சலீமா! உன் முகத்தில் தைரியத்துடன் விழிப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்து கொண்டு வந்தேன்."

"என்ன சொல்றீங்க, பாய்!"

"கேள் சலீமா, கேள். நான் வீட்டில் நுழைந்தபோது களைப்பாறும் பொருட்டு என்னை நீ கூடத்தில் உட்காரச் செய்தாய் அல்லவா? அப்போது ஓலைப்பாயிலிருந்த பெட்டியைச் சுற்றிக் கிடந்த சாமான்களின் மீது என் பார்வை விழுந்தது. எந்தப் பொருளை நாடி இங்கே வந்தேனோ, அதை இங்கே கண்டதும் எனக்குக் கட்டுக்கடங்காத குஷி உண்டாயிற்று. நான் உனக்குப் பரிசாக அளித்த அந்த மோதிரம்...ஆம்..பச்சைக்கல் பதித்த அதே மோதிரம் பெட்டியருகில் கிடந்ததைப் பார்த்ததும் அதை எடுத்து என் பைக்குள் போட்டுக் கொண்டேன்!"

"நீங்களா?"

"ஆமாம்...உன் அண்ணன் தான்! அது என் பிடிக்குள் வந்த பிறகு தான் என் மனத்தில் அமைதி ஏற்பட்டது."

"என்ன?..."

"அந்த மோதிரத்தை ஏதாவது ஒரு குட்டையில் எறிந்து விடத் தான் நான் வெளியே புறப்பட்டேன்."

"அப்படியே செஞ்சுட்டீங்களா பாய்!" வாய்விட்டுக் கதறி விட்டாள் சலீமா.

"தூக்கி எறிந்தும் விட்டேன். அதற்குப் பதிலாக இந்தக் கணையாழியை வாங்கி வந்தேன். இதை நீ உன் கைகளினாலே பெற்றுக் கொண்ட பிறகு தான் என் இதயப் படபடப்பு அடங்கியது" என்றான். கற்சிலையைப்போல் செயலற்று நின்று கொண்டிருந்த தன் தங்கையை நீர் மல்கிய நேத்திரங்களால் பாசம் பொங்கப் பார்த்தான்.

"சலீமா! இனி இந்தப் பாவியை நீ மன்னித்து விடவேண்டும்" என்று ரஹ்மான் கூறியதும் சலீமா அதிர்ந்து போய் விட்டாள்.

"நான் மன்னிப்பதா? உங்களையா? மோதிரத்தை எடுத்துச் சென்றதற்காகவா?" என்றாள். அவள் நெஞ்சு படபடத்தது.

"அது மாத்திரமல்ல. உனக்கு நான் இழைத்து விட்ட மற்றொரு குற்றமும் இருக்கிறது!" என்றான் ரஹ்மான்.

இதைக் கேட்டதும் சலீமாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. கண்களில் அந்தகாரம் சூழ்ந்து கொண்டது.

"சலீமா! இத்தனை நாட்களாக அதை வெளிப்படுத்த என் நாக்கு புரள மறுத்து விட்டது. இனி எனக்குப் பயமில்லை. தங்கை

யாகிய உன்னிடம் மானத்தையும் வெட்கத்தையும் காற்றில் பறக்கவிட்டுத் திடமனத்துடன் சொல்லிவிடத் துணிந்து விட்டேன். கடந்த காலத்தில் நான் அனுபவித்த ஏழைமையான நிலை உனக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. பெற்ற தகப்பனாரே என் காலை வாரி விட்ட காலம் சலீமா! அந்தச் சமயத்தில்தான் உன் நிக்காஹ் பத்திரிகை என்னைத் தேடி வந்து சேர்ந்தது. என் உயிருக்கு உயிரான தங்கைக்கு அண்ணனான நான் ஒரு கல்யாணப் பரிசு கொடுக்காமல் இருந்தால் இந்த மனித ஜன்மம் எடுத்துத்தான் என்ன பிரயோசனம்? இந்த எண்ணம்தான் என்னைச் சைத்தான் மாதிரி பிடித்து ஆட்டிவிட்டது. ஏதோ என்னிடம் மீந்திருந்ததே நாலைந்து அணுக்கள்! அவற்றை எடுத்துக் கொண்டேன். கிளம்பினேன். ஒரு கணையாழியை வாங்கிக் கொண்டேன். இரவு வேளையாகப் பார்த்து உன் மணப் பந்தலில் நுழைந்தேன். கூட்டத்தின் சந்தடியிலே உன் விரலில் அந்த மோதிரத்தை ஆசையுடன் பொருத்தி விட்டு உடனே அவ்விடத்தை விட்டு ஓசைப்படாது நான் நீங்கியது உனக்கு நினைவு இருக்கும். அப்படி நான் செய்த அந்த ஒரு காரியம் தான் இன்று வரை என் நெஞ்சைச் சித்திரவதை செய்து வந்தது. சலீமா! எந்தக் கணையாழியை என் காணிக்கையாக உனக்கு அளித்தேனோ அதன் தரத்தை மாத்திரம் நீ அறிந்திருப்பாயானால் இந்தப் பாவி அண்ணன் முகத்தில் கூட நீ விழித்திருக்க மாட்டாய்! நான் செய்து விட்ட இந்தச் செயலுக்குப் பிராயச் சித்தமாக ஒரு வழியைத் தேடினேன். மாதா மாதம் ஐந்து ரூபாயாக ஒரு வருஷ காலமாகச் சேர்க்க லானேன். அந்தத் தொகையைக் கொண்டு ஒரு நல்ல தங்கமோதிரத்தை வாங்கினேன். அதை உன் விரலில் பொருத்தியும் விட்டேன். இப்போது என் மனத்திலும் சாந்தி நிரம்பிவிட்டது'' என்று கூறி முடித்தான் ரஹ்மான்.

''அட என் அருமை அண்ணாவே! இதற்காகத்தான் இவ்வளவு மனவேதனைப் பட்டாயா? எந்த நிமிஷத்தில் உன் காணிக்கையை நான் மகிழ்வுடன் பெற்றுக் கொண்டேனோ, அதே கணத்தில் அந்தக் கணையாழி ஒரு பித்தளை மோதிரம் என்று நான் அறிந்து கொள்ளாமல் போகவில்லை. என் அண்ணன் அளித்த பரிசு பித்தளையாக இருந்தாலென்ன? அல்லது ஓட்டாஞ்சல்லியாகத்தான் இருந்தாலென்ன? எனக்குப்போட்ட தங்க நகைகளை விட அது மிக மிக உயர்ந்தது. இத்தனை மாதங்களாக அதை என் உயிர்போல் காப்பாற்றி வந்தேன் என்பதைத் தெரிந்து கொள். நீ என் பெரிய பாய்! உன் அன்பு ஒன்றே எனக்குப் போதும்'' என்று இதமாகக் கூறிக்கொண்டே சகோதரனின் சிரடிகளைக் குனிந்து வணங்கினாள் சலீமா.

ரஹ்மானின் இதயம் பாகாய் உருகிவிட்டது. வாயடைத்து விட்டது. நயனங்களில் பாசம் மிதக்க, நெஞ்சில் அன்பு சுரக்க அவ்விடத்தை விட்டு அகன்றான் தமையன்.



நங்கையின் செல்வம்

இனஜா

"பொங்கி ஓடும் புது வெள்ளத்தைக் கண்டா மயங்கி விட்டீர்கள்?" என்ற குரல் கேட்டுத் திகைப்புடன் நிமிர்ந்தாள் சித்ரா.

ஆற்றின் குறுக்கே தழைத்து செல்லும் ஆல மரக்கிளையில் உட்கார்ந்தபடி, பெருகி ஓடும் ஆற்றின் அழகையும், அதில் துள்ளும் மீன்களையும் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள் சித்ரா. அவளுக்கு இந்தப் புதிய குரல் வியப்பையளித்தது. நிமிர்ந்தவள் தன் முன் நிற்பவரைக் கண்டதும் வியப்புமேலிட்டு,கிளையை விட்டு எழுந்தாள். ..

"என்னை மறந்து விட்டீர்களா? மகாமகப் பொருட்காட்சியில், காந்திஜியின் வாழ்க்கைக் குறிப்பை மிக அழகாக எடுத்துக் காட்டி வரையப்பட்ட ஒரு படத்தை இருவருமே விலை கேட்க வில்லையா?" என்றான் புன்னகையுடன் அவள் முன் நின்ற வாலிபன்.

சித்ரா அந்தச் சம்பவத்தை மறக்கவில்லை. மனத்தைக் கவர்ந்த அந்தப் படத்தைச் சித்ராவுக்கும் விட மனமில்லை. வாலிபனுக்கும் விட மனமில்லை. போட்டியில் விலையைக் கூட ஏற்றி விட்டார்கள். ஆனால் கடைசியில் அந்த வாலிபன்தான் விட்டுக் கொடுத்தான்.

"உங்களை எப்படி மறக்க முடியும்? படத்தைப் பார்க்கும் போதெல்லாம் உங்கள் பெருந்தன்மையை வியக்காமல் இருக்க முடியாதே" என்றாள் சித்ரா: அவள் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது.

தினகரன் என்ற அந்த வாலிபனும் ஆல விருக்ஷத்தின் மற்றொரு கிளையில் உட்கார, சித்ராவும் பழைய கிளையில் வந்து உட்கார்ந்தாள். இப்படித்தான் ஆரம்பித்தது அவர்கள் இருவருக்கும் நேசம்.

நாள் தவறினாலும் சித்ரா தினகரனைச் சந்திக்கத் தவறியதில்லை. அன்றும் அவள் அவனைச் சந்திக்கப் புறப்பட்டபோது, மாடி அறையில் தகப்பனார் யாருடனோ கோபமாகப் பேசுவதைக் கேட்டுப் படி அருகில் திகைப்புடன் நின்றாள்.

"அந்தத் தனி வீட்டை விலைக்கு வாங்குவதாக நான் முன்பே தீர்மானித்து விட்டேன். என் தீர்மானத்தை மாற்ற முடியாது. அடுத்த வருஷம் படிப்பு முடிந்து வரப்போகும் என் சகோதரி மகனுக்கு அங்கு ஆஸ்பத்திரி அமைத்துக் கொடுக்க வேண்டும் என்பது என் நெடுநாளையத் திட்டம். அந்தத் திட்டத்தைக் குலைக்க முயன்றால் நான் சும்மா விடமாட்டேன்" என்று சித்ராவின் தந்தை சொல்லிக் கொண்டிருந்தார்.

"நான் வசதிக் குறைவானவன். அந்தச் சொந்தக்காரர் பல தவணைகளாகப் பணம் வாங்கிக் கொள்வதாகச் சொல்கிறார். அதனால் தான் உங்களிடம் வந்தேன். பொருள் வசதியுள்ள உங்களுக்கு வேறு நல்ல இடம் கிடைக்கலாம். நீங்கள் எனக்கு இந்த உதவி செய்யத்தான் வேண்டும். இந்த உதவியை நான் மறக்கவே மாட்டேன்" என்று பணிவாகக் கேட்டவரின் குரல் சித்ராவைத் திடுக்கிட வைத்தது.

"இல்லை. என் திட்டத்துக்கு எதிராக வேலை துவக்கும் உங்களுக்கு நான் எந்த உதவியும் செய்ய முடியாது. இங்கு இரண்டு டாக்டர்கள் அவசியமில்லை. என் தீர்மானத்தை என்றுமே நான் மாற்றியதில்லை. ஆகையால் நீங்கள் போகலாம்" என்று முகத்தை முறித்துக் கூறினார் தாமோதரன்.

குரலுக்குடையவர் தினகரன் என்பதை உணர்ந்ததுமே சித்ராவுக்குத் 'திக்' கென்றது. காரணம் அவள் தகப்பனார் மிகவும் பிடிவாதக்காரர். தமது தீர்மானத்தை மாற்றவே மாட்டார் என்பதோடு அதை எதிர்ப்பவர்களை மன்னிக்கவும் மாட்டார்.

தந்தையின் கோபத்துக்குப் பாத்திரமானவர் தினகரன் என்று அறிந்தபோது சித்ராவின் மனம் மிகவும் வேதனைப்பட்டது. தினகரனின் பணிவான பேச்சுக்குத் தந்தை அளித்த உதாசீனமான பதில் அவள் மனத்தை மேலும் புண்படுத்தியது. தினகரன் ஒரு டாக்டர் என்பது அவளுக்குப் பெரும் வியப்பும் களிப்பும் கொடுத்தது.

இன்பமும், துன்பமும் மனத்தைக் குழப்ப, திகைத்துப் போய் நின்று கொண்டிருந்தாள் சித்ரா. அருகில் வந்து விட்ட தினகரன், பெரும் வியப்புடன், "அட! நீ.....நீங்கள் தாமோதரன் புதல்வியா?" என்றான்; விழிகள் விரியத் திகைத்து நின்றவன் சட்டென்று சமாளித்துக் கொண்டு ஒரு பெருமூச்சுடன், "சித்ரா! என்னை மன்னியுங்கள்; நான் வருகிறேன்" என்று கூறி வேகமாகப் படிகளைக் கடந்து சென்று விட்டான்.

அன்று இரவு மிகக் கோபத்துடன் மகளது அறைக்குள் வந்த தாமோதரன், "இந்த வதந்தி உண்மையா, குழந்தை? தினமும் நீ அந்தக் காலிப் பயலுடன் காவேரிக் கரையில் உட்கார்ந்து பேசுகிறாயாமே? வாஸ்தவமா?" என்று கேட்டார்



சித்ராவுக்குக் 'குப்' பென்று வியர்த்தது. முகம் சிவக்க, ''யாரப்பா அது...'' என்று கேட்க வந்தவள் தந்தையின் முகத்தில் ஒளிரும் கோபத்தைக் கண்டு நிறுத்திக் கொண்டாள்.

''அதுதான் எனக்கு விரோதமாகக் கிளம்பி யிருக்கிறானே, தினகரன் என்ற பிரகஸ்பதி. அவனுடன் பேசுவதை இன்றுடன் நிறுத்திக் கொள்ளம்மா'' என்றவர் தம்மை நிதானித்துக் கொண்டு மகளது அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

''குழந்தாய்! குடும்பக் கௌரவத்தில் நான் எவ்வளவு அக்கறை கொண்டவன் என்பது உனக்குத் தெரியும். இருந்தாலும் இந்த விஷயத்தையும் நீ தெரிந்து கொள்வது நல்லது என்று சொல்கிறேன். உனக்கு ஒரு அத்தை இருந்தாள். — ஏன், இன்னும் இருக்கலாம். அவள் உன் வயதாக இருக்கும்போது உன்னைப் போலவே மிகவும் அழகாக இருப்பாள். ஒரே செல்வ மகள் என்பதால் என் தகப்பனார் அவளிடம் அதிக அன்பு வைத்திருந்தார். அவர் மகளிடம் வைத்துள்ள அன்பைப் போலவே தம் குடும்பக் கௌரவத்திலும் அன்பும், பக்தியும் கொண்டிருந்தார். அதனால் அவர் உன் அத்தைக்குக் கௌரவப்பட்ட பெரிய இடத்தில் வரன் நிச்சயம் செய்திருந்தார். இந்தச் சமயத்தில்தான் உன் அத்தை எங்களைக் காலை வாரி விட்டதுடன் குடும்பக் கௌரவத்தையும் குலைத்துவிட்டாள். ஊர் பேர் தெரியாத ஒரு பையனுடன் சிநேகம் வைத்துக் கொண்டு, அவனைத்தான் கலியாணம் செய்து கொள்வேன் என்று அடம் செய்து அவள் ஆசையை நிறைவேற்றிக்



கொண்டு போய் விட்டாள். அப்பா அன்று அருமையாக வளர்த்த பெண்ணுக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு அன்றுடன் அவளை மறந்தும் விட்டார். தந்தைக்குப் பிறகு அவள் எழுதிய கடிதங்களைக் கூடப் பிரிக்காமலே கிழித்துப் போட்டேன். இதையெல்லாம் எதற்குச் சொல்லுகிறேன் தெரியுமா, குழந்தை? உன் அத்தையைப் போல நீயும் என் அன்பை இழந்துவிடக் கூடாது என்பதற்கே. பசையுள்ள கௌரவமான குடும்பத்தில் பிறந்த ரகுநாதனை உனக்கு ஏற்ற வரனாக வெகு நாட்களுக்கு முன்பே நிச்சயம் செய்து விட்டேன். இது நிறைவேறினால் தான் உன் அத்தையால் ஏற்பட்ட புண் ஆறும், தெரிந்ததா அம்மா?'' என்று முடித்தார் தாமோதரன்.

அன்று இரவு சித்ராவுக்குத் தூக்கம் வெம்பாகக் கசந்தது. அன்றுவரை தினகரன் அவளுக்கு ஒரு நண்பராகத்தான் இருந்தார். ஆனால் தந்தையின் எச்சரிக்கைக்குப் பிறகோ, 'தன் வாழ்வின் ஜீவ ஒளியே தினகரன்தான்' என்ற எண்ணம் அவள் மனத்தில் அழுத்தமாக வந்து நின்றது.

தம் ஏற்பாட்டைச் சொன்ன பிறகு சித்ரா உற்சாகமாக இல்லை என்பதைத் தாமோதரன் நன்றாக உணர்ந்தார். அவள் மனத்தை எப்படியாவது மாற்றிவிட வேண்டும் என்று பல யோசனைகளும் செய்தார். ஆனால் அவர் சற்றும் நினைக்காத ஒரு சம்பவம் தானாகவே வந்து வாய்த்துக் கொண்டது.

அன்று தாமோதரன் மிக உற்சாகமாகச் சித்ராவின் அறைக்குள் வந்தவர், "கேட்டாயாம்மா விஷயத்தை! நிர்மலா என்ற பெண்ணுடன் தினகரன் ஊர் சுற்றுகிறானும். முகமறியாத இந்தப் பையன்களை யெல்லாம் நம்பக் கூடாது, அம்மா!'' என்றார்.

சித்ரா திடுக்கிட்டாள். ஆனாலும் அப்பா சொல்வதில் அவளுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. சீக்கிரமே சித்ரா நம்பும்படியான அளவுக்குத் தினகரன், நிர்மலா பற்றிய தகவல்கள் அவளுக்குக் கிடைத்தன.

அன்று சித்ரா அரசலாற்றுக்குப் புறப்பட்டாள். இன்பத்திலும், துன்பத்திலும் அவளுடன் பங்கு கொள்ளும் அந்த ஆல விருக்ஷத்தின் கிளையைச் சமீபிப்பதற்கு முன்பே அவள் கால்கள் நின்றுவிட்டன. காரணம் தினகரனும் அவளும் உட்கார்ந்து பேசும் அதே கிளையில், இன்று தினகரனும், மற்றொரு பெண்ணும் நெருங்கி உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததுதான். சித்ராவுக்கு அதற்கு மேல் அங்கு நிற்க விருப்பமில்லை.

சித்ரா படித்த பெண்தான். நல்ல விவேகி. தினகரனுடன் அவள் அதிக நாட்களும் பழகி விடவில்லை. ஆயினும் பழகிய கொஞ்ச நாட்களில் அவனது குணமும், அழகும் அவளைக் கவர்ந்து விட்டது உண்மை. அதனால் வேறொரு பெண்ணுடன் தினகரனைப் பார்த்த போது அவளது உள்ளம் பொறாமையால் தடுமாறியது. உடனே வீடு திரும்பிவிட்டாள். அன்று தாமோதரன், "உன் விவாகத்தையும் இந்த மாதமே நடத்தி விடலாம் என்று பார்க்கிறேன், அம்மா! உனக்கு ஒன்றும் ஆட்சேபம் இல்லையே?'' என்றார்.

"எனக்கு என்னப்பா ஆட்சேபம்? நீங்கள் செய்தால் சரிதான்'' என்றாள் சித்ரா.

தோல்வியை எதிர்பார்த்து வந்த தாமோதரனுக்குச் சித்ராவின் சம்மதம் அளவற்ற மகிழ்ச்சியை அளித்தது.

மகளின் கலியாணத்தை அதிக விமரிசையாக நடத்தத் திட்டமிட்டார் தாமோதரன். மாயவரத்துக்கு ஆட்களை அனுப்பிக் கலியாணத்துக்கான சகல பொருள்களையும் சேகரித்தார். முக்கியமானவைகளைத் தாமே நேரில் சென்று வாங்கினார்.

அன்று மாயவரம் சென்று திரும்பிய தாமோதரன் புகைவண்டியிலிருந்து இறங்கும்

அருள் வாக்கு

வியாபாரம் முதலியவைகள் இப்பொழுது அதிகமாய் விட்டன. லாபத்தில் அதிக ஆசையால் வேகமாகக் காரியங்கள் நடக்கின்றன. கிராமத்தில் இருக்கிறவன் பட்டணத்துக்கு வந்து விடுகிறான். கிராமத்தில் குட்டிச் சுவர்கள் அதிகமாகின்றன. இங்கே வந்தால் அதிகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. இவைகளுக்கெல்லாம் காரணம் மோட்டார் பஸ் வேகந்தான். வேகமான நிலைமை தாரித்திரியத்தில் கொண்டு வந்து விட்டு விட்டது.

ஸ்ரீ சங்கராச்சாரியார், காஞ்சி காமகோடி பீடம்

போது காலை இசகு பிசகாக வைத்ததால் கால் தொடுத்துத் தலை குப்புறக் கீழே விழுந்து விட்டார். தலையிலும், காலிலும் பலமான அடிபட்டு மயக்கமடைந்து விட்டார்.

கூடியிருந்தவர்களில் ஒருவர் ஓடிச் சென்று புதிதாகத் தொழில் தொடங்கியிருக்கும் டாக்டர் தினகரனை அழைத்து வந்தார். தினகரன் ரத்தப் போக்கை நிறுத்தி முதல் சிகிச்சையைச் செய்து அவரை வீட்டுக்கு எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்தான்.

தாமோதரனுக்கு நல்ல நினைவு வரச் சில தினங்கள் பிடித்தன. நினைவு பெற்ற அன்றே சித்ரா மூலம் விஷயத்தை தெரிந்து திகைத்தார்.

அன்று தினகரன் சிகிச்சைக்காக வந்த போது, "தினகர், ஏற்கெனவே, நான் பிள்ளை என்ற ஊன்றுகோல் இல்லாத கிழவன்; இப்போது காலும் முடமாகி விட்டது. நீ என்னைப் பிழைக்க வைத்தது பெரிதில்லை. பிள்ளையாகவும், முடவனின் ஊன்றுகோலாகவும் நின்று கலியாணத்தையும் நடத்திக் கொடுத்து விடு. கலியாணத்துக்கு ஒரு வாரம் முன்னதாகவே நீ இங்கு வந்து விட வேண்டும். பேசாமல் இருந்து என்னைத் தவிக்க விட்டு விடாதே" என்றார்.

தாமோதரனின் உருக்கமான பேச்சு தினகரனின் கண்களைக் கலங்கச் செய்தது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்ட சித்ரா சந்தர்ப்பத்தை நழுவ விடாமல், "என்ன அப்பா அவரை மட்டும் அழைக்கிறீர்களே?" என்றவள் தினகரன் பக்கம் திரும்பினாள். "டாக்டர்! உங்களுடன் இருக்கும் பெண்மணியையும் அழைத்து வந்து விடுங்கள். அவர் உங்கள்....." மேலே என்ன கேட்பது என்பது புரியவில்லை. அவளுக்கு வெட்கத்தால் முகம் சிவக்க நிறுத்தி விட்டாள்.

வியப்பால் அகல விரிந்த விழிகளால் அவளைக் கூர்ந்து நோக்கிய தினகரன் மெல்ல நகைத்தான். பிறகு சட்டென்று எழுந்தான். "நான் வருகிறேன். அவசியமான அலுவல் ஒன்றை மறந்து வந்து விட்டேன்" என்றவன் விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து வேகமாகப் போய் விட்டான்.

ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்த தாமோதரன் சித்ராவின் கேள்வியைக் கவனிக்கவில்லை. கீழே இறங்கி வந்த சித்ரா, முற்றத்தில் துளசி மாடத் தருகில் இருந்த மேடையின் மேல் 'பொத்' தென்று உட்கார்ந்தாள். 'நட்பு முறையில் பழகிய அவரை நான்தான் தவறாக நினைத்து விட்டேன். அவளும் அவரும் ரொம்ப நாட்களாகப் பழகி அன்பு கொண்டிருக்கலாம். விவரம் அறியாமல் அவர் நேர்மைக்குக் களங்கம் கற்பிப்பதும் தவறு' என்று மனத்தைத் தேற்றிக் கொண்ட சித்ரா, 'தினகரனின் அன்புக்குப் பாத்திரமான அந்த நிர்மலாவைத் தானே நேரில் சென்று அழைத்து வருவது' என்ற முடிவுடன் நிம்மதியாக எழுந்தாள்.

தினகரன் இல்லத்துக்குள் தயங்கியபடியே நுழைந்த சித்ராவை வியப்பும், மகிழ்ச்சியும் முகத்தில் பொங்க வரவேற்று உட்கார வைத்தாள் நிர்மலா.

"'அஜந்தா ஓவியம்' என்று அண்ணா வர்ணிப்பார் உங்களை. அது நூற்றுக்கு நூறு உண்மைதான்" என்றாள் நிர்மலா சிரித்தபடி.

"அண்ணாவா? யார் அது?" என்றாள் சித்ரா. திடுக்கிட்ட நிர்மலா, "அடடா! அண்ணாவின் கண்டிப்பான கட்டளையை மறந்து விட்டேனே!" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

"தினகரன் உங்கள் அண்ணாவா?" பரபரப்புடன் மீண்டும் கேட்டாள் சித்ரா.

வருத்தத்துடன் நிமிர்ந்த நிர்மலா, "என்னை மன்னித்து விடுங்கள், சித்ரா! அண்ணா சொன்னபடி நிம்மதியடைந்திருந்த உங்கள் மனத்தை மீண்டும் குழப்பத்துக்கு உள்ளாக்கி விட்டேன். நான் வேண்டுமென்று செய்யவில்லை. பழக்கம் குறுக்கிட்டு விட்டது. டாக்டர் தினகரன் என் ஒன்று விட்ட அண்ணாதான். நேற்றெல்லாம் அண்ணாவோடு சண்டை போட்டேன். 'உங்களை உள்ளன்போடு நேசிக்கும் பெண்ணை ஏமாற்றுவது பாபம்' என்றுகூட அவரிடம் வாதாடினேன். ஆனால் அவர் கேட்கவில்லையே!" என்றாள்.

இருக்கை விட்டு எழுந்த சித்ரா, "அப்படியானால் அவர் என்னை நேசிக்க வில்லையா?" என்று கேட்டாள் துடிப்புடன்.

"உங்களை அவர் அளவுக்கு மீறி நேசிப்பதால்தான் இந்தத் தொல்லை" என்று கூறினாள் நிர்மலா.

நிர்மலாவின் இரு கைகளையும் பிடித்துக் கொண்ட சித்ரா, "நிர்மலா, ஏன் என் மனத்தைக் குழப்புகிறீர்கள்? விவரமாகச் சொல்ல மாட்டீர்களா?" என்றாள்.

அவளைத் தன் அருகில் உட்கார வைத்து அணைத்துக் கொண்ட நிர்மலா, "சித்ரா, தனக்குப் பிடித்தமானவரை மணந்ததால் பிறந்த இடத்து இன்பத்தையே இழந்து விட்ட ஒரு பெண் அதே ஏக்கத்தால் வாடிக் கடைசியில் இறந்தே விட்டாள். அவளது துன்பத்தைக் கிட்டவே இருந்து அனுபவித்த அண்ணாவுக்கு உன்னையும் அத்தகைய துன்பத்துக்கு ஆளாக்க விருப்பமில்லை. அதனால்தான் அண்ணா என் வேண்டுகோளையும் ஏற்கவில்லை" என்றாள்.

"நிர்மலா! உன் அண்ணா தவறாக நினைத்து விட்டார். என் தகப்பனாரின் மனத்தை மாற்றிய பிறகே நான் அவரை மணக்க விரும்பி


ஜாக்கிரதை! சிறிதும் சிந்தக்கூடாது
சிந்திய பாலைப்பற்றி கவலைப்பட்டு பிரயோஜனமில்லை எனக் கேள்விப்பட்டிருக்கிறேன்! ஆனால் ருசிவாய்ந்த என் க்ளாக்ஸோ ஆகாரத்தை ஒரு துளி சிந்த நேரிட்டாலும், எனக்கு அழுது கூச்சலிட நியாயம் உண்டு என்பதைத் தெரிவிக்கிறேன். இது தவிர வேறு ஒரு பொழுதும் நான் முணு முணுப்பதை நீங்கள் பார்க்கமாட்டீர்கள். ஒழுங்காக எனக்கு க்ளாக்ஸோ கொடுக்க ஆரம்பித்த காலத்திலிருந்து, எல்லா க்ளாக்ஸோ குழந்தைகளைப் போல, நானும் குறைவற்ற செல்வமாக விளங்குகிறேன்.
நான் சிபாரிசு செய்வது க்ளாக்ஸோ
Glaxo
குழந்தைகளின் பரிசுத்தமான
பால் உணவு
SUNSHINE
Glaxo
க்ளாக்ஸோ லாபரட்டரீஸ் (பிரைவேட்) லிட்., பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • புது டில்லி

னேன். ஆனால் இன்று என் வாழ்வே அல்லவா சூன்யமாகி விட்டது!'' என்றவள் நிர்மலாவின் மார்பிலே தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு குழந்தை போல் விம்மிக் கதறி விட்டாள்.

அவள் முகத்தை நிமிர்த்திக் கண்ணீரைத் துடைத்த நிர்மலா, ''அழுவதில் பயனில்லை, சித்ரா! அதைவிட்டு இனியாவது முயன்று பார்ப்பது நல்லதல்லவா?'' என்றாள்.

இது நடந்த சில தினங்களுக்குப் பிறகு சித்ராவின் தந்தை, தினகரனை உடனே பார்க்க விரும்புவதாக ஆள் வந்து அழைக்கவே, உடையை மாற்றிக் கொண்டு உடனே புறப்பட்டான் தினகரன். அவரைப் பார்த்துப் பேசி விட்டு, சில மணி நேரத்துக்குப் பிறகு திரும்பி வந்த தினகரன், சித்ரா தன் வருகைக்காகக் காத்திருப்பதைக் கண்டான்.

''சித்ரா! நான் ரொம்பவும் பாக்கியசாலி'' என்றவன் மெதுவாக, ''சித்ரா, இவ்வளவு சீக்கிரம் உன் தகப்பனாரின் மனம் மாறியதற்குக் காரணம் ஏதாவது இருக்குமே, அதை நானும் அறியலாமா?'' என்று கேட்டபடியே அவள் அருகில் வந்தான்.

அருகில் இருந்த மேஜை டிராயரை இழுத்த சித்ரா, அதிலிருந்த ஒரு கடிதத்தை எடுத்துப் பிரித்து அவன் கையில் கொடுத்தாள்.

''.....இவ்வளவு ஏற்பாடுகள் செய்த பின் அறிவிப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என்னை மன்னித்து விடுங்கள். என்னுடன் படித்த ஒரு பெண்ணுடன் பதிவுத் திருமணம் செய்து கொண்டு விட்டேன். மன்னித்து விடுங்கள்.....

ரகுநாதன்''

என்று கடிதத்தில் எழுதியிருந்த விஷயத்தைப் படித்த தினகரன் புன்னகையுடன், ''இதெல்லாம் நிர்மலாவின் வேலையா? பேஷ்! இனியும் அந்தத் துஷ்டப் பெண்ணை நம்முடன் வைத்திருப்பது ஆபத்து! காலா காலத்தில் அவளுக்கும் ஒரு ஏற்பாடு செய்கிறேன்'' என்று சொல்லிப் புறப்பட்டான்.

'ஒருவருக்குமே தெரியாமல் செய்த ஏற்பாட்டை ஒரு நொடியில் யூகித்து விட்டாரே!' என்ற வியப்பில் மலைத்து மௌனமாக நின்று விட்டாள் சித்ரா.

முன் குறித்த அதே முகூர்த்தத்தில் தாமோதரனின் அருமைச் செல்வி சித்ராவின் கழுத்திலே மாலை சூட்டி, மங்கள நாணையும் பூட்டினான் டாக்டர் தினகரன்.

ஆனந்தக் கண்ணீர் பொங்கி வழியத் தம்பதிகளை ஆசீர்வதித்த தாமோதரன், ''தினகர்! உன் தாய் தந்தையரின் படம் இருந்தால் இருவரும் வணங்குங்கள்'' என்று அவர் சொல்லும் போது, வாசலில் வண்டியொன்று வந்து நிற்க அதிலிருந்து ரகுநாதன் இறங்கி வந்தான். அவனைக் கண்டதும் தாமோதரன் தம் முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொண்டார்.

ரகுநாதனை மகிழ்ச்சியுடன் வரவேற்ற தினகரன், தாமோதரன் பக்கம் திரும்பினான். ''ரகு எழுதிய கடிதத்தில், ஒரு விஷயம் பொய். அதாவது 'பதிவுத் திருமணம் செய்து கொண்டு விட்டேன்' என்பது. அதற்கு அவரை மன்னித்து விடுங்கள். காரணம்....'' தயக்கத்துடன் தாமோதரன் முகத்தைப் பார்த்தான் தினகரன்.

குழப்பத்துடன் அவரும் அவனைப் பார்த்த போது, தினகரன் விஷயத்தைப் பக்குவமாக விளக்கிச் சொல்லி விட்டுத் தொடர்ந்து சொன்னான். ''என் சகோதரி நிர்மலாவும் இவரும் பள்ளித் தோழர்கள், அதனால் உங்கள் ஆசியுடன் மணத்தை முடித்துக் கொள்ள விரும்புகிறார்கள்'' என்றான்.

''அப்படிச் சொல்லு! அதுதானா அவ்வளவு துடியாக முயற்சி செய்தாய்? கள்ளி!'' என்று மகிழ்ச்சிப் பூரிப்பில் நிர்மலாவின் தோளைப் பிடித்து உலுக்கினாள் சித்ரா.

தாமோதரனோ தாரை, தாரையாகக் கண்ணீரைச் சொரிந்தபடி சொன்னார்: ''வயதில் சிறியவர்களான நீங்கள், பரந்த மனப்பான்மையுடன் பொறுமையாக இருந்து காரியங்களை நடத்தி, ஒருவருக்கு மற்றவர் உதவி, நடக்க விருந்த பல தவறுகளையும் தவிர்த்து விட்டீர்கள். அன்று எனக்கும் உங்கள் வயது தான். ஆனால் இந்தப் பரந்த மனப்பான்மை இல்லாததால் பல ஒத்தாசைகள் செய்து உதவியுடன் நிற்க வேண்டிய அண்ணனை நான் அசட்டுப் பிடிவாதத்துடன் பல கொடுமைகள் செய்து என் தங்கையின் மனத்தைப் புண்ணாக்கினேன். பாவம், அவள்தான் பொறுமையாக எத்தனை கடிதங்கள் எழுதினாள்....'' இதைச் சொல்லும் போது அவர் குரல் தடைப்பட்டது.

அவர் துன்பம் எல்லாரையும் கலங்கச் செய்தது. தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்ட தினகரன், ''அப்படியானால் இனியாவது உங்கள் சகோதரியை, 'சகோதரி' என்று ஏற்றுக் கொள்வீர்களா?'' என்று கேட்டான் மிகுந்த ஆவலுடன்.


வியப்புடன் அவனைப் பார்த்த தாமோதரன், ''தினகர்! என் தங்கை இருக்குமிடம் தெரியுமா உனக்கு? என்னை அவள் இருக்குமிடம் அழைத்துச் செல்வாயா?'' என்றார். அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

தினகரன் கண்கள் மீண்டும் கலங்கின. குரல் தழுதழுக்க அவன் சொன்னான்: ''தெய்வமாகிவிட்ட அவரை இனி நீங்கள் காண முடியாது. படத்தில் வேண்டுமானால் காணலாம். இதோ பாருங்கள்!'' என்றவன் எழுந்து, எதிர்ச்சுவரில் மாட்டப்பட்டுப் பட்டுத் திரையால் மறைக்கப்பட்டிருந்த இரு படங்களின் திரையை அகற்றினான்.

படங்களைக் கண்ட தாமோதரன் குழந்தை போலத் தேம்பினார். ''தினகரன். நீ...நீ... என் தங்கையின் செல்வமா?'' என்றவர் கால் காயத்தையும் மறந்து எழுந்து விட்டார்.

ஓடிவந்து அவரைத் தாங்கி உட்கார வைத்த தினகரன், ''ஆம், மாமா!'' என்றான். அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை.

''அத்தான்! உங்கள் மனம் இரும்புப் பெட்டி!'' என்று சித்ரா சொல்லவும், ''சித்ராவின் அத்தான் ஒரு இரும்புப் பெட்டியாக இல்லாவிடில், சித்ரா என்ற விலை மதிப்பற்ற மாணிக்கத்தை எப்படிப் பாதுகாக்க முடியும்?'' என்று தினகரன் பதில் சொல்லவும் எல்லோரும் சிரித்து விட்டார்கள்.



மரப்பாச்சி மாப்பிள்ளை

மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை.
மரப்பாச்சி மாப்பிள்ளை.

பூப்போட்ட சட்டையைப்
போட்டிருக்கும் மாப்பிள்ளை.

சாப்பிடவே மாட்டாராம்.
சாது போலே இருப்பாராம்.
கூப்பிட் டாலும் திரும்பியே
குரல் கொடுக்க மாட்டாராம்

மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை
மரப்பாச்சி மாப்பிள்ளை

கறுத்த நிறம். ஆனாலும்
களை யுடனே இருப்பாராம்.
சிரித்த முகம். ஒருபோதும்
சிடுசிடுக்க மாட்டாராம்.

மாப்பிள்ளையாம் மாப்பிள்ளை
மரப்பாச்சி மாப்பிள்ளை

கண்ணை மூட மாட்டாராம்
கால் கடுக்க நிற்பாராம்.
சின்னப் பிள்ளை கூட்டத்திலே
தினந்தோறும் இருப்பாராம்

மாப்பிள்ளை யாம் மாப்பிள்ளை
மரப்பாச்சி மாப்பிள்ளை

அழ. வள்ளியப்பா





வஞ்சனை நெஞ்சத்துடன் மங்கு சொன்னான்: "ஷாமின்ஷா ஷாலிமார் அவர்களே! உங்களிடமுள்ள மகிமை பொருந்திய பெல்ட்டைக் கொண்டு எவ்விதமான மந்திர சக்தியையும் வென்று விடலாமே."


மன்னர் திகைத்தார். "பாக்தாத் நகரை ஆளும் மன்னர்களுக்கு அறிவும் ஆற்றலும் அளிக்கவல்லது இந்த பெல்ட். இது என் மூதாதையர்களின் பொக்கிஷம். இதைப் பிறரிடம் கொடுக்க முடியாது" என்றார் ஷாலிமார்.





"உங்கள் ஆசை மகள் ஆய்ஷாவை விட அது அருமையானதா அரசே? ஆய்ஷாவை மீட்கவே அதைக் கேட்கிறேன். காரியம் முடிந்ததும் அதை உங்களிடமே திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்றான் மங்கு.

"எங்கள் வம்சத்தின் வழிவழி வந்த இந்த பெல்ட்டை நீ ஆய்ஷாவின் விடுதலைக்குப் பின் கொடுத்துவிட வேண்டும். என் பொக்கிஷத்தையே உனக்குத் திறந்து விடுகிறேன்" என்று பெல்ட்டை அவிழ்க்கலானார் மன்னர்.





மங்கு வஞ்சகமாகச் சிரித்துக் கொண்டான். 'சொன்ன சொல்லை மீறமாட்டேன்' என்று ஆவலுடன் கையை நீட்டினான். இவ்வளவையும் திரை மறைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தது ஒரு உருவம்.

அது வேறு யாருமல்ல. நிஜக் காசிமேதான்! 'அரசே, நிறுத்துங்கள் கொடுக்காதீர்கள்' என்று கத்தினான் காசிம். மங்குவின் மகிழ்ச்சி முகத்தை மாற்றி விட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.



திடீரென்று கேட்ட காசிமின் குரலால் திகைப்படைந்த மன்னர் ஹாஸிமாருக்கு ஏதும் புரியவில்லை. இடையிலிருந்து கழற்றிய பெல்ட்டைக் கையில் ஏந்தியபடி நின்று கொண்டிருந்தார்.




ஆனால் மங்கு அப்படி நிற்கவில்லை. தான் வகுத்த திட்டம் பாழாவதை விரும்பாத அவன் மன்னரின் கையிலிருந்த மந்திர பெல்ட்டைக் குபீரென்று தாவிப் பறித்துக் கொண்டான்.



திறந்திருந்த ஜன்னல் வழியாக மந்திரப் பெல்ட்டுடன் மங்கு தாவிக் குதித்து ஓடினான்.




பால்கனியில் நின்றபடி பயங்கரமான குரலில் 'ஷஸாம்' என்று கர்ஜித்தபடி இரண்டு கைகளையும் வானத்தை நோக்கி நீட்டினான் மங்கு.



அந்த நொடி இடியோசைபோல் கூடிய கண்களைப் பறிக்கும் மின்னலொளி ஒன்று தோன்றியது. அதன் நடுவே இறக்கைகளோடு கூடிய பறக்கும் குதிரைகள் பூட்டிய தேர் ஒன்று காட்சி அளித்தது.



வெற்றி எக்களிப்போடு மங்கு பயங்கரமாகச் சிரித்துக் கொண்டே அந்தத் தேரில் ஏறிக் கொண்டான். மறுகணம் அரசரும் காசிமும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே மங்கு மறைந்து போனான். (தொடரும்)



பென்சில் எப்படிச் செய்கிறார்கள் ?

நாம் எல்லோரும் எழுதும் பென்சில் கிராபைட் என்னும் பொருளையும் வழுவழு வென்று வடிகட்டி எடுக்கப்படும் ஒரு விதமான களிமண்ணையும் சேர்த்துச் செய்யப்படுவது.

கிராபைட் என்னும் பொருளை நன்றாக வடிகட்டி எடுக்கிறார்கள். இதற்குப் பிரத்தியேகமான மூன்று தொட்டிகள் ஒன்றின் கீழ் ஒன்றாக வைக்கப்பட்டு முதல் தொட்டியில் கிராபைட்டையும் தண்ணீரையும் கலந்து கொட்டுகிறார்கள். வடிகட்டி வரும் போது முதல் தொட்டியில் கிராபைட் சற்றுக் கனமாகவும், அதற்கடுத்த இரண்டு தொட்டிகளின் செல்லுகையில் மிருதுவாகவும், வழுவழுப்பான கிராபைட்டாகவும் கிடைக்கிறது. இதிலிருந்து எடுக்கப்பட்ட கிராபைட்டைக் களி மண்ணுடன் பலவிதமாகக் கலக்கிறார்கள்.

பிறகு இந்தக் களிமண்-கிராபைட் சேர்க்கை, அடியில் நிறையத் துவாரங்கள் கொண்ட இரும்புப் பாத்திரத்தில் போடப்படுகிறது. பிறகு ஒரு இயந்திரத்துடன் சேர்க்கப்பட்ட ஒரு இரும்புப் பிஸ்டனை அந்தப் பாத்திரத்தினுள் செலுத்தி அழுத்தப்படுகிறது. அழுத்தப்பட்டதும் கீழே உள்ள துவாரங்கள் வழியாக அந்த கிராபைட்டு-களிமண் சேர்க்கை, கம்பியாக 'வளர்ந்து வளர்ந்து வெளியே தள்ளப்படுகிறது. அந்த வேளையிலேயே அதன் ஈரத்தைப் போக்கி ஒரே அளவாக நீட்டி இரண்டு இரண்டு பென்சில்களுக்குத் தேவையான நீள அளவுக்கு வெட்டி எடுக்கிறார்கள்.

பிறகு வெட்டி எடுத்த இந்த பென்சில் 'லெட்'டை உலையில் வைத்துச் சுடுகிறார்கள். உலையிலிருந்து வெளி எடுத்த அந்த 'லெட்'டுகள் இப்பொழுது பென்சிலாகத் தயாராக இருக்கின்றன.

செடார் மரப் பலகைகள் இரண்டினிடையில் 'லெட்'டைப் பொருத்தி இயந்திரங்களில் செலுத்திப் பலவிதமான, அழகான பென்சில்களாகச் செய்கின்றனர்.



நூதனக் கணக்கு

ஒரு நூதனக் கணக்கு. அதன் உதவியினால் மற்றவர்களின் பிறந்த கிழமையையும், வயதையும் சொல்லி விடலாம்.

உங்களுடைய தோழர்களில் ஒருவன் புதன்கிழமை பிறந்தவன் என்று வைத்துக் கொள்ளுங்கள். புதன்கிழமை வாரத்திலே 4வது நாள் அல்லவா? அதே மாதிரி ஞாயிறு என்றால் 1. திங்கள் 2. செவ்வாய் 3, புதன் 4, வியாழன் 5, வெள்ளி 6, சனி 7, என்று கணக்கிடவேண்டும். பிறகு அவன் பிறந்தமாதத்தை ஜனவரி 1, பிப்ரவரி 2, என்று கணக்கிட வேண்டும்.

"நீ பிறந்த கிழமையின் எண்ணை நான்கால் பெருக்கு. ஐந்தைக் கூட்டு. நூறால் பெருக்கு. ஐந்நூற்றைக் கழி. நான்கால் வகு. நீ பிறந்த மாதத்தின் எண்ணைக் கூட்டு. நூறால் பெருக்கு. உன் வயதைக் கூட்டு. வரும் தொகையைக் கூறு" என்று சொல்லுங்கள். உங்கள் தோழன் ஏப்ரல் மாதம், வெள்ளிக்கிழமை பிறந்தானென்றும், வயது 12 ஆகிறதென்றும் வைத்துக் கொள்ளுங்கள்.

வெள்ளிக்கிழமை வாரத்தில் 6வது நாள்; ஏப்ரல் வருடத்தில் 4வது மாதம்.

4 ஆல் பெருக்க 24; 5 ஐக் கூட்ட 29; 100 ஆல் பெருக்க 2900; 500 ஐக் கழிக்க 2400; 4 ஆல் வகுக்க 600; பிறந்த மாதம் கூட்ட 604; 100 ஆல் பெருக்க 60400; வயதைக் கூட்ட 60412. 60412ல் பத்து ஸ்தானமும், ஒன்று ஸ்தானமும் வயதைக் குறிக்கும் (12); 1000 ஸ்தானமும், 100 ஸ்தானமும் பிறந்த மாதத்தைக் குறிக்கும். (4) 10000 ஸ்தானம் பிறந்த கிழமையைத் தெரிவிக்கும். (6) எப்படி இந்தக் கணக்கு! — கிரு





இருமலின்
மூலகாரணத்தை
அகற்றுங்கள்
SIROLIN
'ROCHE'
ஸிரோலின்
சாப்பிடுங்கள்
குடும்பத்தினர்
யாவருக்கும்
ஏற்ற
ஔஷதம்
ஸிரோலின் இருமலை நிறுத்து
வதோடு இருமலுக்குக் காரண
மான தீங்கிழைக்கும் கிருமி
களைக் கொல்லவும் செய்கிறது.



மாயப் பந்து

16. போலீஸ் வந்தது!

பொல்லாத மனிதனுகிய ஜீக் சீசாவி லிருந்து எடுத்துத் தேநீரில் போட்டது சர்க் கரை யல்ல. அது மனிதர்களை உருவம் மாறச் செய்யும் ஒரு அற்புத மருந்து. அது மால்கோஷுக்கும் கலாவுக்கும் தெரியக் கூடாது என்பதற்காகத்தான் அதை எடுத்த போது ஜீக் கைக்குட்டையால் மூடிக் கொண்டான்.

மால்கோஷும் கலாவும் இரண்டு கண் டெலிகளாக மாறி இரண்டு முக்காலிகளில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்த 'ஜீக்' ஆனந்தமடைந்து கூத்தாடினுன். அவை எங்கேயாவது தப்பி ஓடிவிடுமோ என்று அறையின் கதவுகளைச் சாத்தினுன்.

"என் சிநேகிதனுக்குத் தீங்கு இழைத்த நீங்கள் இருவரும் கண்டெலியாக இருந்து கஷ்டப்படுவதுதான் எனக்குத் திருப்தி. இனிமேல் உங்களை ஒருவரும் கண்டுபிடிக்க முடியாது. உங்கள் கதி அதோகதிதான். இந்தச் சமயத்தில் எனக்கு ஒரே ஒரு வருத்தம்தான். உங்களை இப்படிக் கண் டெலியாக மாற்றியிருப்பதை என் சிநேகி தன் மாத்திரம் பார்த்தாளுனல் என்ன சந்தோஷம் அடைவான்!" என்று கண்



டெலிகளைப் பார்த்துச் சொன்னான். மூக்காலியில் உட்கார்ந்திருந்த சுண்டெலிகள் கீழே குதித்தன. பிறகு இரண்டு சுண்டெலிகளும் சேர்ந்தாற்போல அறையைச் சுற்றிச் சுற்றி வந்தன. எலி வளைகள் இருக்கின்றனவா என்று பார்த்தன.

சுண்டெலிகள் இங்கும் அங்குமாக ஓடுவதைப் பார்த்த மந்திரவாதி 'ஜிக்' வேலைக்காரப் பையனிடம் ஏதோ ஒன்றைக் கடையிலிருந்து சீக்கிரம் வாங்கி வரும்படி சைகை காட்டி அனுப்பினான். சிறிது நேரத்துக்கெல்லாம் வேலைக்காரப் பையன் ஒரு எலிப்பொறி வாங்கி வந்தான். எலிப்பொறியைக் கண்ட ஜிக் அதைச் சந்தோஷத்துடன் வாங்கிக் கொண்டு சுண்டெலிகளை அதனுள் பிடிக்க முயன்றான்.

ஆனால் சுண்டெலிகள் இரண்டும் ஜோடியாக மந்திரவாதி ஜிக்கின் கைகளில் அகப்படாமல் தப்பி அறைக்குள் ஓடிக் கொண்டிருந்தன. கோபமடைந்த மந்திரவாதி எலிகளை அடித்துக் கொன்று விடலாம்என்றுதனது மந்திரக்கோலை ஓங்கவே பயந்து போன சுண்டெலிகள் அவைகளுக்கு எதிரில் இருந்த எலிப்பொறிக்குள் ஓடின. உடனே எலிப் பொறியின் கதவு சாத்தப்பட்டது. "எனது சிறையில் அகப்பட்டு விட்டீர்களா! இனிமேல் உங்கள் கதி அதோகதிதான். ஒரு பெரிய மந்திரவாதியை அவமானப்படுத்திய மால்கோஷ் எனது கருணையில் அல்லவா இப்பொழுது இருக்கிறான்! ஹாஹாஹா" என்று 'ஜிக்' பெரிதாகச் சிரித்தான்.

அன்று இரவு முழுவதும் மந்திரவாதி 'ஜிக்' தூங்கவே இல்லை. அறையில் இருந்த மூக்காலியில் உட்கார்ந்து கொண்டு எலிப் பொறிக்குள் வாடி வதங்கி வரும் சுண்டெலிகளைப் பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தான். சுண்டெலிகளுக்கோ பசி; அதனால் எலிப்பொறிகளின் இரும்புக் கம்பிகளின் வழியாக அவை முகத்தை வெளியே நீட்டியவண்ணமாக இருந்தன.

மறு நாள் பொழுது விடிந்தது. திடீர் என்று மால்கோஷும், கலாவும் காணாமற் போன விஷயம் தினசரிப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகியிருந்தது. அதைப் படித்துப் பார்த்த 'ஜிக்', "எனது சிநேகிதன் மந்திரவாதி மாத்திரம் உயிருடன் இருந்தால் இந்தச் செய்தியைப் படித்துச் சந்தோஷமடைவான்" என்று சொல்லித் தன்னைத் தானே பாராட்டி மகிழ்ந்து கொண்டான்.

மாமா குல்மா, மால்கோஷ், கலா





திருவனந்தபுரம் சங்கீத அகாடமிப் பேராசிரியர் தெய்வமாகிய திரு என். ஜி. சீதாராமய்யர் அவர்களின் செல்வப் புதல்வி மீனாட்சிக்கும் தந்தி இலாகாவில் பணியாற்றி வரும் ஸ்ரீபுரம் திரு கிருஷ்ணா அவர்களுக்கும் ஜூன் மாதம் ஒன்பதாம் தேதி திருவனந்தபுரத்தில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. திருமணத்துக்கு ஏராளமான நண்பர்களும், பிரமுகர்களும், உறவினர்களும் விஜயம் செய்து மணமக்களுக்கு ஆசி கூறினார்கள்.

இருவரையும் தேடாத இடம் கிடையாது. அவர்கள் இருவரும் முதல் நாள் மாலை ஜிக் வீட்டுக்குச் சென்றதைப் பார்த்த சிலர் அவரிடம் சொன்னார்கள். அந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட குல்மா, "அந்த வீட்டுக்கு எதற்காகப் போனார்கள்? அவன் மிகவும் கொடியவனாயிற்றே!" என்று மனம் கலங்கிக் கொண்டு ஓடோடியும் ஜிக்கின் வீட்டை நோக்கிச் சென்றார்.

குல்மாவைப் பார்த்த ஜிக் ஒன்றும் தெரியாதவன் போல அவரை வரவேற்றான். குல்மா கோபத்துடன் ஜிக்கைப் பார்த்து, "மால்கோஷும் அவன் தங்கையும் நேற்று மாலை உங்கள் வீட்டுக்கு வந்துவிட்டு எங்கே போனார்கள்?" என்று கேட்டார்.

"நான் அவர்கள் இருவரையும் பார்க்கவே இல்லை. எனக்கு ஒன்றும் தெரியாது" என்று கூறி விட்டான் ஜிக்.


ஆனால் குல்மாவுக்கு அவன் பேச்சில் நம்பிக்கை ஏற்படவில்லை. நேரே அரண்மனைக்குப் போய் விட்டார்.

மூன்றாவது மாடியில் பட்டினியால் வாடிக் கிடக்கும் கண்டெலிகளை எலிப் பொறியில் அடைத்து விட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஜிக் அவன் வீட்டு வாசற்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டான். வேகமாகச் சென்று மாடியிலிருந்து எட்டிப் பார்த்தான். அவன் பார்த்தவுடன் ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றான். அவன் திகைத்து நின்றதற்குக் காரணம் போலீஸ் சிப்பந்திகளும் கூட்டமாக அவன் வீட்டுக்கு எதிரில் நின்று கொண்டிருந்ததுதான். அதுவுமல்லாமல் புதிதாக அரண்மனையில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கும் திறமை மிகுந்த மந்திரவாதியும் அங்கு இருந்தான். ஜிக் எதிர்பாராத விதமாக அவர்களைப் பார்த்தவுடன் என்ன செய்வது என்று தெரியாமல் விழித்தான். 'சற்றுத் தாமதித்தேன் என்றால் என்னுடைய விஷயம் கண்டு பிடிக்கப்பட்டு விடும். அவர்கள் எல்லாம் மேலே வருவதற்குள் என்னிடமுள்ள மாற்று மந்திரப் பவுடரை உடனே உபயோகித்து இரு கண்டெலிகளையும் உண்மையான உருவத்துக்கு மாற்றி விட்டால் தப்பிவிடலாம்' என்று தீர்மானித்து ஒரு பெரிய கண்ணாடி ஜாடியை எடுத்தான். அதில் மஞ்சள் நிறமுள்ள பவுடர் இருந்தது. அந்தக் கண்ணாடி ஜாடியின் மேல் 'வேறு உருவமாக மாறிய மனிதர்களை மீண்டும் பழைய உருவத்தை அடையச் செய்வது' என்று எழுதியிருந்தது. கண்ணாடி ஜாடியைத் திறந்தான். திறந்த ஜாடியையும், மூடியையும் தனித் தனியே அறையிலிருந்த சிறிய மேஜையில் வைத்தான். உடனே சற்று யோசித்தான். 'எதற்காக இந்தக் கண்டெலிகளை அவைகளின் சுயஉருவத்துக்கு மாற்ற வேண்டும்? என் சிநேகிதனுக்கு அவர்கள் செய்த தீங்குக்காக மால்கோஷையும் கலாவையும் சும்மாவிடக் கூடாது. அவர்கள் இறந்தே ஆகவேண்டும். இதனால் எனக்கு என்ன ஆபத்து வந்தாலும் நான் பொருட்படுத்தப் போவதில்லை' என்று மனத்துக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

அப்பொழுது அவன் வீட்டு வாசற்கதவைப் பலத்த சப்தத்துடன் பல பேர்கள் தட்டுவது அவன் காதில் விழுந்தது. உடனே பரபரப்புடன் எலிப் பொறியைத் திறந்தான். கண்டெலிகள் மெதுவாக வெளியே வந்தன. கண்டெலிகள் இருந்த அறைக்கு அருகிலேயே மற்றொரு சிறிய அறை இருந்தது. கண்டெலிகளை எலிப்பொறியிலிருந்து அறைக்கு வெளியே விட்டவுடன் அவசர அவசரமாகப் பூட்டியிருந்த பக்கத்திலுள்ள மற்றொரு அறையையும் திறந்து விட்டு வேகமாக வெளியே சென்றான் ஜிக்.

எலிப்பொறியை விட்டு விடுதலை அடைந்து வெளியே வந்த கண்டெலிகள் பசியால் தவித்தன. மேஜையின் மீது அவன் திறந்து வைத்து விட்டுப் போன மாற்றுப் பவுடர் கண்ணாடி ஜாடியின் மீது அவற்றின் கண்கள் சென்றன. கண்ணாடி ஜாடியில் ஏதோ தின்பண்டம் இருக்கிறது என்று நினைத்து இரண்டு கண்டெலிகளும் வெகு வேகமாக மேஜையின்மீது இருந்த கண்ணாடி ஜாடியின் மீது ஏறுவதற்குத் தயாராக இருந்தன. அப்பொழுது ஒரு அதிசயம் நிகழ்ந்தது!

(தொடரும்)



தேவியின் கடிதம்

மணப்பெண்ணுக்கு

வசுமதி ராமசாமி

அன்புக்குரிய சுஜாதா,

கல்யாணம் ஆன தம்பதிகள் குதூகலமான மலைப் பிரதேசங்களுக்கும், படக் காட்சிகளுக்கும் போவதும், தாங்கள் சிரித்துக் கொள்வதும் பார்க்க ஆனந்தமாக இருக்கிறதென்று எழுதி இருக்கிறாய். உண்மை தான். எவ்வளவு கல்யாணங்களைப் பார்த்தாலும் அலுப்பதில்லை. வயது சென்றவர்களும் தங்கள் இளம் வயது இன்பங்களை அந்தச் சந்தர்ப்பத்தில் நினைத்துச் சந்தோஷப் படுகிறார்கள்.

பெற்றோர்கள் அன்புடன் வாங்கிக்கொடுத்த பளபளத்த ஆபரணங்கள், மஞ்சள் நிறமான புதுச்சரடு, புதியபுடவை சலசலக்க முகத்தில் மகிழ்ச்சி பொங்கக் கல்யாணப் பெண்ணின் தோற்றம் நம் மனக் கண்ணில் தோன்றுகிறது. ஒரு அறிஞர் "இன்றுபோல் என்றும் இருங்கள்" என ஆசிகள் அனுப்புவது வழக்கம். அன்று போல் என்றைக்கும் இருப்பதில்லை. இன்பம் குறைகிறது. இன்பம் குறையக் கூடாதென்ற உயர்ந்த கருத்துதான் நமது இலட்சியம்.

தம்பதிகள் குடும்பம் நடத்த ஆரம்பித்துச் சிறிது காலத்துக்குப் பிறகு பொருளாதாரம் தான் சச்சரவுகளுக்கு அடிப்படையின் காரணமாகிறது. இன்றைய நிலையில் பெண்களுக்குப் பெரும் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. சொத்துரிமை வந்து விட்டது. உத்தியோகம் செய்து சம்பாதிக்கும் பெண்களும் இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் பங்கு குறைவு. பெரும்பாலான பெண்கள் செலவுக்குப் புருஷனிடம் பணம் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டியவர்களாகத்தா னிருக்கிறார்கள்.

மத்திய தரக் குடும்பத்தில் பெண்களும் சம்பாதித்தால் கொஞ்சம் வசதியாகக் குடும்பம் நடத்தலாமென்ற நன்மை இருக்கிறது. அதே சமயம் தீமைகளும் இருக்கின்றன. புருஷர்களில் சிலர் சோம்பேறிகளாகவும் பொறுப்பற்றவர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். புதுப் பெண்களுக்குச் சில யோசனை சொல்ல விரும்புகிறேன். கல்யாணம் ஆன உடன் கணவன் எழுதும் அன்புக் கடிதங்களைப் பத்திரப்படுத்தி வையுங்கள். நீங்களே அன்பு மிகுதியால் அப்படிச் செய்வீர்கள். ஆனால் அவைகளுக்குப் பத்து வருஷங்களுக்குப் பிறகு சிறந்த உபயோகம் இருக்கிறது. குடும்பம் நடத்தும் சிக்கலில் சில சமயம் சச்சரவுகள் வரும். பணத்தைப் பற்றி விவாதம் வரும். ஆண்கள் வெறுப்பாகச் சம்சார பந்தத்தைக் குறை சொல்ல நேரிடலாம். அப்பொழுது அந்தக் கடிதங்களை அவர்களிடம் காட்டிப் படிக்கச் சொன்னால் வெட்கமடைவார்கள். பிறகு அதிகச் சண்டையின்றி ஒதுங்கி விடுவார்கள் அல்லவா? அநுபவமுள்ள ஒரு சிநேகிதி இந்த முறையைக் கையாண்டு வெற்றி பெற்றதாகச் சொன்னாள்.

செலவே செய்யாமல் பணம் கேட்காமல் இருக்கும் மனைவிகளைத் தான் கணவன்மார்கள் விரும்புகிறார்கள். பொதுவாகப் பெண்கள் அதிகம் செலவு செய்கிறவர்கள் என்ற மனப்பான்மை ஆண்களிடம் ஆணித்தரமாக இருக்கிறது. அது தவறு. இரண்டு பேரிலும் செலவாளிகள், சிக்கனக்காரர்கள் இருக்கிறார்கள். பிரித்துக் காட்ட முடியாது.

வாழ்க்கைப் பாதையில் வழி நடக்க ஒரு பெண் துணைவனின் கையைப் பிடிக்கிறாள். அந்தப் பெண் கணவரின் குணத்தைப் பற்றி அறிந்து கொண்டு அதற்கேற்றாற் போல் நடந்து கொள்வது நன்மை. மூன்று ஜன்மங்களாகப் பழகின மாதிரி சகல விஷயத்தையும் கொட்டி அளக்க வேண்டாம்.

புக்ககத்துக்கு வந்ததும் முதலில் கணவன் மனம் நோகாமல் நடக்க வேண்டும். புக்ககத்திலுள்ளவர்களின் மனப் போக்கையறிந்து பழகி, அவர்களுடைய அன்பையும் நல்லெண்ணத்தையும் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். மாமியாரோ, மாமனாரோ, அல்லது கணவனின் சகோதரிகளோ ஏதாவது மனத்தாங்கல் ஏற்படும்படி பேசி விட்டால், அவர்களிடம் பதில் பேசக்கூடாது. அத்துடன், அதனால் மன வேற்றுமை கொண்டு முகத்தைச் சிணுங்கவும் கூடாது.

கணவனுக்குச் சகோதரர்கள் தாய்-தந்தையரிடம் அன்பு அதிகமென்று அறிந்து கொண்டு அவர்களிடம் விசேஷ அன்பு செலுத்த வேண்டும். கணவனின் நல்லெண்ணத்தைப் பெறும் சிறந்த வழி இதுதான். புதுப் பெண் தங்கள் சொந்தக்காரர்களைப் பற்றிய குறைபாடுகளை முதலில் சொல்லிக் கொள்ள வேண்டாம். பிறகு அவர்கள் மனம் மாறாது. அவர்களை லட்சியம் செய்யாமல் போய்விட்டால் பெண்கள் மனம் அதையும் பொறுக்காது.

தங்கள் பிறந்த வீட்டு வசதிகளை அதிகம் சொல்லிக் கொள்ள வேண்டாம். அதைக் கணவன்மார்கள் அவ்வளவாக விரும்புவதில்லை. அழகாக ஆரம்பமாகும் தாம்பத்தியம் என்றென்றும் நன்றாக இருக்கப் பெண்கள் கணவனின் மனம் விருப்பு, வெறுப்பு, ருசி எல்லாம் அறிந்து கொண்டு நடந்து கொண்டால் சந்தோஷம் நிலைக்கும்.

அடுத்த கடிதத்தில் யார் எந்தச் செலவுகளை ஏற்பது என்பது பற்றி எழுதுகிறேன்.

இப்படிக்கு,
பூமாதேவி

மழைச்சாரல்

முன் கதை



மாஜிஸ்திரேட் சேகரன் ஒரு பெரிய தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டார். ஒரு நாள் மிகுந்த மன வேதனையுடன் கழுகு மலைக் காட்டில் அலைந்து விட்டுத் திரும்பியபோது, பாதை ஓரத்துப் புதரில் சலசலப்பு ஏற்படுவதைக் கண்டார். துஷ்டமிருகமாக இருக்குமென்று பயந்துபோய்த் தம் துப்பாக்கியால் சுட்டார். மனிதக் குரல் ஒலி கேட்டதும் பதறிப் போய் அருகில் சென்று பார்த்தார். விழுந்து கிடந்தது யாரென்பதை அறிந்ததும் அவருடைய மனம் படாத பாடுபட்டது. வேறு ஒன்றும் செய்யத் தோன்றாதவராய் அங்கிருந்து ஓடினார். அன்றே புறப்பட்டு நாகபூரில் உள்ள தம்முடைய நண்பரான சீனிவாசமூர்த்தியின் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அவரிடம் தம் கதையைக் கூறத் தொடங்கினார்.

கழுகுமலைக்கு அவர் சென்றும் வரையில் பெண்களைப் பற்றியும், விவாகத்தைப் பற்றியும் விசித்திரமான எண்ணங்கள் கொண்டிருந்தார் சேகரன். விவாகம் என்பது ஒரு விலங்கு என்று கருதி வந்தார். ஆனால் கழுகு மலையில் மாதவி என்ற ஒரு கொடி இருப்பதைக் கண்டதும் அவர் மனம் மாறியது. அந்தக் கொடிக்குக் கொழுகொம்பாக இருக்க அவர் மனம் விழைந்தது.

மாதவியின் சகோதரன் கருணாகரன் மிகுந்த முன்கோபக்காரன். அவனுக்கும் அவர்களுடைய சித்தப்பா முகுந்தனுக்கும் விரோதம் முற்றியிருந்தது. முகுந்தனின் பிள்ளை அச்சுதன் பலமுறை கருணாகரனிடம் சிநேகம் பாராட்ட முயன்றான். ஆனால் கருணாகரன் அதற்கு இடம் கொடுக்காமல் வெறுப்பையே வளர்த்து வந்தான். இது சேகரனுக்கு அவ்வளவாகப் பிடிக்க வில்லை. சேகரன் அச்சுதனிடம் பிரியமாக இருப்பதைக் கண்டு மனம் பொறாத கருணாகரன் தன் தமக்கையிடம் அவரைப் பற்றி ஒரு நாள் நிந்தனை செய்தான். மாதவி மிகவும் வருத்தமடைந்தாள்.

அவனுடைய காதலி ஜயந்தி கழுகு மலையில் தேங்காய் எண்ணெய்த் தொழிற்சாலையின் முதலாளியான விஜயராகவனின் மகள். படிப்பிலும், குணத்திலும் சிறந்தவள். தாயில்லாத பெண்ணாகையால் விஜயராகவன் அவளைச் செல்வமாக வளர்த்து வந்தார். அவரும் கருணாகரனுக்குத் தன் மகளைக் கொடுக்க விருப்பமுள்ளவராக இருந்தார். அதனாலேயே அவனுக்கு ஆலையின் மானேஜர் வேலையும் கொடுத்துக் கௌரவித்திருந்தார் விஜயராகவன்.

கருணாகரன் தன் தமக்கையிடம் அவ்வாறு தாக்கி எறிந்து பேசியது ஜயந்திக்கும் பிடிக்கவில்லை. அவனுக்கு இதமாகப் புத்திமதி சொன்னாள். முன்கோபத்தை விட்டு விடும்படி கூறினாள். கருணாகரன் மனம் அதைக் கேட்டுக் குழைந்தது. மாதவியிடம் சென்று மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். மாதவியின் மனம் சமாதானம் அடைந்தது.

பிறகு சில நாட்கள் அமைதியாகச் சென்றன. அப்போது கோவிந்தன் என்ற ஒரு புதிய மனிதர் விஜயராகவன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். ஜயந்தி அவருடன் நெருங்கிப் பழகியதைக் கண்டு கருணாகரன் வெறுப்படைந்தான். தன்னை அலட்சியம் செய்கிறாள் என்று மனம் நொந்தான்.

இந்தச் சமயத்தில் ஒரு நாள் ஆலையில் கலகம் ஏற்பட்டது. எதனாலேயோ ஆலைத் தொழிலாளிகளுக்குக் கருணாகரன் மீது வெறுப்பு உண்டாயிருந்தது. அவன் தொழிலாளிகளிடம் மிகவும் கடுமையாக



நடந்து கொண்டான். ஆகவே அவன் தொழிலாளிகளுக்கு நன்மை செய்தால் கூட அதை அவர்கள் பரிகாசமாகவே பேசி வந்தார்கள். ஒரு நாள் வேலாயுதம் என்ற தொழிலாளி தன் சிநேகிதனிடம் கருணாகரனைப் பற்றி வம்பு பேசிக் கொண்டிருந்ததைக் கருணாகரன் கேட்க நேர்ந்தது. அவன் மாதவியைப் பற்றியும் இழிவாகப் பேசியதை அவனால் பொறுக்க முடியவில்லை. ஆகவே வேலாயுதத்தை நன்றாக அடித்து விட்டான்.

இதைக் காரணமாக வைத்துக் கொண்டு தொழிலாளர் சங்கம் கருணாகரன் மீது வழக்குத் தொடர்ந்தது. விஜயராகவன் இது முற்றாமலிருக்க எடுத்துக் கொண்ட முயற்சிகளெல்லாம் வீணாயின.

கருணாகரனுக்கு வழக்கு நிச்சயம் ஜயிக்கும் என்ற நம்பிக்கை இல்லா விட்டாலும், சிவசங்கரன் தனக்கு எதிராகத் தீர்ப்பு கூறமாட்டார் என்ற அசட்டு நம்பிக்கை இருந்தது. ஆனால் அதை அவரிடம் அவன் நேரில் சொல்லவில்லை. சிவசங்கரன் மனசாட்சி உள்ளவராகையால் வழக்கு முடியும் வரையில் அவர்களைப் பார்த்துப் பேசுவதை நிறுத்திக் கொண்டார்.

வழக்கு கருணாகரனுக்கு எதிராகவே முடிந்தது. கருணாகரனால் அதைப் பொறுக்க முடியவில்லை. வழக்கு நடந்த மறுநாள் தன் சகோதரியிடம் சிவசங்கரனைப் பற்றித் திட்டிக் கொண்டிருந்தான். அவர் மோசம் செய்து விட்டார் என்றும், தன் சித்தப்பாவிடம் லஞ்சம் வாங்கிக் கொண்டு தனக்கு விரோதமாகத் தீர்ப்பு அளித்து விட்டார் என்றும் கூறினான். மாதவியைப் பார்க்க வேண்டுமென்று ஆவலுடன் அங்கே வந்த சிவசங்கரன் இதைக் கேட்டதும் திக்பிரமை அடைந்தார். மாதவி அவரைப் பற்றி அவதூறு சொல்ல வேண்டாமென்று கருணாகரனைத் தடுக்கவில்லை. மேலும் 'நீங்கள் என் தம்பியை முன்னாலேயே எச்சரித்திருக்க வேண்டும்' என்று கூறினாள். பிறகு தன் தம்பி கோபத்தில் அவரை ஏதாவது செய்து விடப் போகிறானே என்ற பயத்தில் 'இப்போது நீங்கள் இங்கிருந்து போய் விடுங்கள்' என்று சொன்னாள். சிவசங்கரனுக்கு வானமே இடிந்து தம் தலையின் மீது விழுந்து விட்டது போலிருந்தது.

இத்தனை நாட்களாக யாருடைய மோகவலையிலும் சிக்காத நாம், இந்தக் கழுகு மலையில் வந்து ஒரு மாய மோகினி வீசிய வலையில் சிக்கிக் கொண்டதை



நினைந்து வருந்திக் கொண்டே, ஆத்திரத் துடன் மலைமீது ஏறிச் சென்றார். வழக்கமாக அவர் எடுத்துச் செல்லும் துப்பாக்கியும் அவர் கையில் இருந்தது.

மலைமீது அவர் உட்கார்ந்திருக்கும் போது அச்சுதன் அவரைத் தேடி வந்து விஜய ராகவன் ஜயந்தியைச் சிவசங்கரனுக்கு விவாகம் செய்து கொடுக்கத் தீர்மானித் திருப்பதாகவும், அதைக் கோவிந்தன் கூறிய தாகவும் சொன்னான். சிவசங்கரன் இந்த மாதிரி கதைகளையெல்லாம் நம்ப வேண்டா மென்று அச்சுதனுக்கும் புத்தி சொல்லி விட்டுக் காட்டுப் பகுதியில் புகுந்து சென்றார். அன்று கருணாகரன் மிகவும் வேதனையுடன் இருந்தான். எல்லோர் மீதும் அவனுக்குக் கோபம் வந்தது. ஜயந்திக்குத் தன்னை மறந்து விடும்படியும், திரும்பி வரா விட்டால் ஆச்சரியப் பட வேண்டாமென்றும் எழுதி வைத்து விட்டு மலைமீது ஏறிச் சென்றான். அவன் கையில் துப்பாக்கியுடன் மலையேறிச் செல்வதைக் கவலையுடன் பார்த்துக் கொண் டிருந்தாள் மாதவி.

இந்தக் கதையைத்தான் சீனிவாசமூர்த்திக் குக் கூறினார் சிவசங்கரன்.

அத்தியாயம் 37

விபரீத சம்பவம்

அச்சுதனிடம் கடுமையாகப் பேசி விட்டு எழுந்து சென்ற சிவசங்கரன் மனித சஞ்சாரமில்லாத இடத்துக்குப் போக வேண்டுமென்பதற்காக ஒற்றை யடிப் பாதையில் புகுந்து சென்றார். கால் போன திக்கில் அலைந்து விட்டு நன்றாக இருள் சூழும் சமயத்தில் திரும்பி வந்து கொண்டிருந்தார்.

ஒற்றையடிப் பாதை, மலைமீது ஏறும் பெரிய பாதையில் சேரும் இடத்தில் அந்தப் பயங்கரமான சம்பவம் நடந்தது.

அவர் பயந்து போய்த் தற்காப்புக் காகவே துப்பாக்கியைப் பிரயோகம் செய்தார் என்ற உண்மைக்கு, வானத் தில் சுடர் வீசும் சின்னஞ் சிறு நட்சத் திரங்களும், கமுகமலையில் ஓங்கி வளர்ந் திருக்கும் மரங்களும், சில இராப் பட்சி களும்தான் சாட்சியாக இருந்தன.

இத்தனை நேரம் சிவசங்கரன் கூறிவந்த கதையை மூச்சு விடாமல் கேட்டுக் கொண்டிருந்த சீனிவாசமூர்த்தியும், அவருடைய மனைவி சுபாஷிணியும் ஒரே சமயத்தில் "பிறகு என்ன ஆயிற்று?" என்று கேட்டார்கள்.

"துப்பாக்கி வெடித்ததும் உடனே 'ஆ' என்ற அலறல் அந்தப் புதரி லிருந்து கேட்டதுதான் எனக்குத் தெரி யும். அதன் பிறகு நடந்ததெல்லாம் கனவு மாதிரி தோன்றுகிறது. அந்த மாதிரி ஒரு நிலையில் நான் ஒரு நாள் இருப்பேனென்று கற்பனை கூடச் செய்து பார்த்ததில்லை. கைகால்கள் எல்லாம் செயலற்றுப் போயின. அருகில் போய்ப் பார்க்கக் கூட உடலில் சக்தி இல்லை. சில நிமிடங்களுக்குப் பிறகு தான் உணர்வு வந்து புதரின் அருகில் சென்று, குனிந்து பார்த்தேன். என் துப்பாக்கிக்கு இரை யானது யாரென்பதைக் கண்டதும் எனக்கு உயிரே போய்விட்ட மாதிரி இருந்தது" என்று கூறி விட்டு நிறுத் தினார் சிவசங்கரன்.

"பிறகு என்ன ஆயிற்று என்று சொல் லுங்கள்" என்றாள் சுபாஷிணி.

"என்னத்தைச் சொல்வது? துக்கம் தொண்டையை அடைத்தது. உட லெல்லாம் பதறியது. என்னால் சுடப் பட்டு இறந்து போனது கருணாகரன் என்பதை அறிந்ததும், மாதவியின் கண் ணீர் ததும்பும் முகம் கண் முன்னால் வந்தது. கதறியழும் ஜயந்தியின் உருவம் எதிரே தோன்றியது. இருவரும் என்னைச் சபிப்பதுபோலக் கற்பனை எழுந்தது.

"அடுத்த கணம் என் படம் பத்திரிகை களிலெல்லாம் பிரசுரமாவது போலவும் 'நீதிபதியே கொலை செய்தார்' என்று கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப் பட்டிருப்பது போலவும் தோன்றின.

"நானும் கருணாகரனும் சண்டை போட்டுக் கொண்டதற்குப் பல சாட்சி கள் இருந்தார்கள். மாதவியே இருக் கிறாள். அதைத்தவிர அன்று வாசலில் யார் யாரோ நின்று வேடிக்கை பார்த் துக் கொண்டிருந்தார்கள். அச்சுதனுக்கு உடனே விஷயம் தெரிந்து போய் என்னைத் தேடிக் கொண்டு வந்தானே.

"ஆனால் கருணாகரன் சுடப்பட்டது தற்செயலாக நேர்ந்தது என்பதற்குச் சாட்சிகள் கிடையாது. நான் நிரபராதி என்பதை நிரூபிக்க எவ்வாறு இயலும்? 'இப்போது உடனே எங்கேயாவது போய்விட வேண்டும். நல்ல வேளையாக ஓரிருவரிடம் நான் விடுமுறைக்கு வெளி யூர் போவேன் என்று சொல்லி வைத் திருக்கிறேன். ஆகவே நான் போவது யாருக்கும் சந்தேகத்தைக் கிளப்பாது. இப்போது என்னைக் காப்பாற்றிக் கொள்ள வேறு வழியே இல்லை. எங்கே யாவது போய்விடலாம். பிறகு யோசித் துக் கொள்ளலாம்' என்றெல்லாம் அந்தச் சமயத்தில் தோன்றியது. அவ் வளவு அதிர்ச்சி அடைந்த நிலையிலும் இவ்வளவு எண்ணங்கள் என் மனத்தில் மின்னல் வேகத்தில் ஒன்றன்பின் ஒன்


ஜூலை 19 முதல்
சென்னையில்
வெலிங்டன், சயானி
மற்றும் தென்னாடெங்கும்
★
21-7-57 முதல்
சென்னை
கிரௌனிலும்
சிட்டாடல்
மல்லிகா
புரொடியூஸர் & டைரக்டர்
ஜோஸப் தளியத் Jr


இருமல்!
COUGH SYRUP
இதமளித்து
நீடித்த நிவாரணமளிக்க
பி. ஐ. காப் ஸிரப்
ஒரு பெங்கால் இம்யூனிட்டி தயாரிப்பு
டிப்போ:
மெஸர்ஸ். மஹேந்திரா அண்டு கம்பெனி
161, நைனியப்ப நாயக் தெரு - சென்னை-3

ளாக எழுந்தன. பிறகு கீழே போட்டிருந்த என் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஓட்டமாக ஓடினேன். யாரும் நான் இறங்கிச் சென்றதைப் பார்க்கவில்லை. மலைச்சாரல் பங்களாவை அப்போது கூடப் பார்க்கத் தோன்றியது. ஒரு ஜன்னலில் மாத்திரம் வெளிச்சம் தெரிந்தது. மாதவியைப் பார்த்து விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தைப் பிடிவாதமாகப் போக்கிக்கொண்டு வீட்டுக்கு ஓடினேன்.''

''பாவம்! உங்களால் அந்த நிலையில் மாதவியை எவ்வாறு பார்த்துப் பேசியிருக்க முடியும்? மேலும் மாதவி உங்களை நிச்சயமாகப் புரிந்து கொண்டிருக்க மாட்டாள்'' என்று பரிவுடன் கூறினாள் சுபாஷிணி. அவளுடைய கண்களின் ஓரத்தில் கண்ணீர் கசிந்திருந்தது.

ஸ்ரீனிவாசமூர்த்தி அதைப் பார்த்துவிட்டு, ''சுபாஷிணிக்கு மிகவும் மென்மையான மனம். இந்தமாதிரிகாட்சியை ஏதாவது சினிமாவில் பார்த்தாலே அழுது விடுவாள். நேரில் நீ சொல்வதைக் கேட்டுக் கலங்கிப் போய்விட்டாள். அது கிடக்கட்டும். பிறகு என்ன ஆயிற்று என்பதைச் சொல்'' என்றார்.

''பிறகு என்ன? இங்கே வந்தேன். அவ்வளவுதான்'' என்றார் சிவசங்கரன்.

''அப்படிச் சொன்னால் போதாது, சிவசங்கரா! நீ வீட்டுக்குப் போகும் போது தெருவில் உன்னை யாருமே பார்க்கவில்லையா? எனக்கு விவரமாகச் சொல்ல வேண்டும்.''

''ஊருக்குள் வந்தபோது நன்றாக இருட்டி விட்டது. மேலும் மழை மேகங்கள் திடீரென்று கவிந்து கொண்டன. தூற்றல்போட ஆரம்பித்திருந்தது. ஆகவே தெருவிலும் ஆள் நடமாட்டமில்லை. எதிரே வந்த ஓரிருவர் யாரென்பதை என்னால் பார்க்க முடியவில்லை. ஆகவே என் முகத்தையும் அவர்களால் பார்த்திருக்க முடியாது.

''வீட்டுக்கு வந்ததும் பெட்டியில் அவசர அவசரமாகச் சில துணிமணிகளை எடுத்து வைத்துக் கொண்டேன். அன்று இரவே கழுகுமலையிலிருந்து புறப்பட்டுச் சென்னைக்கு வந்து விட்டால், மறுநாள் விமானத்தில் இங்கு வரச் சந்தர்ப்பம் இருந்தது. ஒருவேளை பகல் விமானத்தைப் பிடிக்க முடியாவிட்டாலும் இரவு விமானத்தில் நிச்சயம் இடம் கிடைக்கும் என்று எண்ணினேன். அதே மாதிரி மறுநாள் இரவு விமானத்தில் புறப்பட்டு இங்கு வந்து சேர்ந்தேன்.''

''அது சரி. உன்னுடைய தாயாரிடம் என்ன சொன்னாய்? அவர் உன்னை ஏதும் கேட்கவில்லையா?''

''கேட்க நான் இடம் கொடுக்கவில்லை. என்னுடைய விசித்திரமான சுபாவம் அவளுக்குப் பழக்கமாகியிருக்கிறது. என்னைப் பற்றி அவள் அதிகமாகக் கவலைப் படுவதில்லை. அவளிடம் நான் அவசரகாரியமாகச் சென்னைக்குப் போவதாகவும் அங்கேயிருந்து வேறு எங்கேயாவது போக நேர்ந்தால் கடிதம் எழுதித் தெரிவிப்பதாகவும் கூறினேன். அதற்கு மேல் அவளுடன் பேச எனக்கு நேரம் இருக்கவில்லை. நல்ல வேளையாக ரயிலுக்குச் சரியான நேரத்தில் வந்து சேர்ந்தேன். அன்று ரயிலிலும், மறுநாள் விமானத்திலும் நான் ஒரு கணம் கூடத் தூங்கவில்லை. என் மன அமைதி அடியோடு குலைந்துபோய் விட்டது. அந்த இரண்டு நாட்களும் இந்த அவமானத்திலிருந்து மீட்சி அடைந்தால் இனிமேல் துப்பாக்கியையே தொடுவதில்லை



என்றும், ஜீவ ஹிம்சை செய்வதில்லை என்றும் எத்தனையோ தடவைகள் பிரதிக்ஞை செய்து கொண்டேன்.''

''உன் நிலைமை எனக்குப் புரிந்தது, சிவசங்கரா! ஆனால் இந்தக் கதையில் ஏதோ ஒன்று சரியாகப் பொருந்தவில்லை. எனக்கு உன் கதை அவ்வளவு திருப்தியாக இல்லை. நீ நன்றாக யோசனை செய்து ஏதாவது விஷயத்தைக் கூறாமல் விட்டு விட்டாயா என்று பார்த்துச் சொல்லு'' என்றார் ஸ்ரீனிவாசமூர்த்தி.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''

''பாலகோபால் உன்னை மிரட்டியதற்குக் காரணம் வேண்டுமே. அவர்களுக்கு நீ இரவு மலையிலிருந்து இறங்கி வந்தது தெரிந்திருந்தால் தவிர உன்னைப் பயமுறுத்த முடியாதே. அதற்குச் சாட்சி ஏதாவது வேண்டுமே.''

''யாரும் என்னைக் கவனித்ததாக எனக்குத் தெரியவில்லை.''

''பின் வேறு ஏதாவது காரணம் இருக்க வேண்டும். அது என்னவாக இருக்கும் என்றுதான் தெரியவில்லை.''

''பொதுவாக எனக்கு நான் செய்தது மிகவும் அவமானமாக இருக்கிறது. சருணாகரனிடம் என் கடமையைச்செய்த தாகக் கூறிப் பெருமைப் பட்டேனே. அதை எண்ணினால் ரொம்ப வருத்தமாக இருக்கிறது. பிறர் விஷயத்தில் தான் கடமையைச் செய்யத் துணிவு இருக்கிறது. நமக்கென்று வரும்போது அந்தத் துணிவு இருப்பதில்லை. நான் நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று, வந்தது வரட்டும் என்று நடந்தவற்றைத் தைரியமாகச் சொல்லி யிருக்கவேண்டும். அப்படிச் செய்திருந்தால் ஒருவேளை சாட்சியங்கள் போதாமல் விடுதலையாக வழி யிருந்தது. ஆனால் இப்படி நான் பயந்து ஓடி வந்த பிறகு, இனிமேல் உண்மையை ஒப்புக் கொண்டால் நிச்சயம் தூக்கு மேடைதான். மனத்தால் நினைக்காத குற்றத்துக்குத் தண்டனை அடைவது என்றாலும் மனம் ஒப்புக் கொள்ள மாட்டேன் என்கிறது'' என்று அளவிலாத துயரத்துடன் கூறினார் சிவசங்கரன்.

''நீங்கள் இப்படி எண்ணவே கூடாது. ஒருநாளும் நீங்கள் தண்டனை அடைவதை இவர் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். கொஞ்சமும் கவலைப்படாதீர்கள். சீக்கிரம் நீங்கள் மாதவியைப் பார்த்து விஷயத்தை விளக்கமாகக் கூறும் காலம் வரும்'' என்று ஆறுதலாகக் கூறினாள் சுபாஷிணி.

சிவசங்கரன் துயரத்துடனேயே சிரித்தார். ''இனிமேல் என்னால் மாதவியின் முகத்தில் விழிக்க முடியுமா? அதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது? நான் செய்துவிட்ட துரோகத்துக்கு, எந்த வகையிலும் பரிகாரம் செய்ய முடியாதே. மாதவி என்னை எவ்வாறு மன்னிப்பாள்? அதை நினைக்கும்போதே என் நெஞ்சை வலிக்கிறது'' என்றார் சிவசங்கரன். அதைக் கூறும்போது அவருடைய குரல் தழதழத்தது.

''பெண்களுடைய மனத்தை உங்களால் அறிய முடியாது, மிஸ்டர் சிவசங்கரன்! அவர்களுடைய மன்னிக்கும் தன்மை எவ்வளவு உயர்ந்தது என்று உங்களால் உணரவே முடியாது. கருணையும், அன்பும் மாதர் குலத்தில் குடி கொண்டிருப்பதால் தான் உலகில் இன்னமும் நாகரிகம் என்பது அழியாமல் இருந்து வருகிறது'' என்று உணர்ச்சியுடன் கூறினாள் சுபாஷிணி.

''இருக்கலாம். மாதவி என்னை மன்னிப்பாள். ஒருவேளை என்னைக் கணவனாக ஏற்றுக் கொள்ளக்கூடச் சித்தமாக இருப்பாள். ஆனால் அவளுடைய மன்னிப்பை என்னால் ஒருநாளும் ஏற்றுக் கொள்ள முடியாது. அவளை மணந்து கொள்ளவும் என்னால் முடியாது. இப்படிப்பட்ட மகத்தான ஒரு துரோகத்தை அவளுக்கு இழைத்து விட்டு, அவளுடன் இன்பமான வாழ்க்கை என்னால் நடத்த முடியுமா? இதற்குப் பரிகாரமாக நான் பிரம்மச்சாரியாகவே இருந்து காலம் கழித்து விடுவதென்று தீர்மானித்துக் கொண்டிருக்கிறேன். அப்படித் தீர்மானித்த பிறகு தான் சிறிதளவு என் மனவேதனை குறைந்திருக்கிறது'' என்று கூறிவிட்டு ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் சிவசங்கரன்.

''ஆமாம்! இது சம்பந்தமான பத்திரிகைச் செய்திகளையெல்லாம் படித்து வந்தாய் அல்லவா?''

''ஒன்றுகூட விடாமல் படித்தேன். ஆனால் அச்சுதனைக் கைது செய்திருக்கிறார்கள் என்ற விஷயத்துக்கு மேல் வேறு எந்த முக்கிய விஷயமும் தெரியவில்லை. ஒருநாள், தற்கொலையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது என்ற செய்தி வந்தது. ஜயந்திக்கு அவன் எழுதிய கடிதத்தில் 'நான் திரும்பி வரா

விட்டால் அதிசயப் படவேண்டாம்' என்று எழுதி யிருந்தாலும். அதனால் ஒருவேளை தற்கொலையாக இருக்கலா மென்று எண்ணினார்கள். மறுநாள் பத்தி ரிகையில் அப்படி இல்லை என்று செய்தி வந்து விட்டது.''

''எனக்கு இதில் எல்லாவற்றையும் விட, ஜயந்தியின் நிலையை எண்ணினால் தான் ரொம்ப வேதனையாக இருக்கிறது. அவளுக்கு இவ்வளவு சிறிய வயதிலேயே எப்படிப்பட்ட கஷ்டம் வந்து விட்டது? பாவம்! அவளைப் பார்த்துத் தேறுதல் சொல்ல வேண்டும் என்று தோன்று கிறது'' என்றாள் சுபாஷிணி.

''எனக்கும் அவளை நினைத்தால் பகீர் என்கிறது. பச்சைக் குழந்தை அவள். எப்படிப்பட்ட அநீதி இழைத்து விட் டேன். தப்பிக்க வேறு விரும்புகிறேன்'' என்று சொல்லி வருந்தினார் சிவசங்கரன். இருவரும் அவருக்குத் தைரியம் சொல் லித் தேற்றினார்கள். அவர் வேண்டு மென்றே செய்யாதபடியால் அவர் உண் மையில் குற்றம் செய்யவில்லை என்றும், விதி என்பது இப்படித்தான் சில சமயம் பயங்கரமான சொரூபத்துடன் எதிரில் வந்து நிற்கிறது என்றும் சொல்லிச் சமாதானப் படுத்தினார்கள்.

அவர்கள் என்ன சொன்னாலும் சிவ சங்கரனின் மனம் சமாதானம் அடைய வில்லை. தாம் உடனே போலீஸில் அறிவித்திருக்க வேண்டும் என்றுதான் அவர்களும் நினைக்கிறார்கள் என்றும், தம்மைச் சமாதானப் படுத்துவதற்காக இவ்வாறு இனிய வார்த்தைகள் சொல்லு கிறார்கள் என்றும் நினைத்துக் கொண்டு இன்னும் சங்கடப்பட்டார்.

அத்தியாயம் 38

உண்மை விளங்கியது

சிவசங்கரனின் மனம் மிகவும் குழம் பிப் போயிருந்தது. அவரால் எதையும் தொடர்ச்சியாகச் சிந்திக்க முடியவில்லை. அச்சுதன் கைது செய்யப்பட்ட விவரம் தெரிந்தது முதல் அவருக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. தாம் செய்த குற்றத்துக்கு இன்னொருவன் கஷ்டம் அடைகிறானே என்று துயரப்பட்டார். உடனே போய்க் குற்றத்தை ஒப்புக் கொண்டு அச்சுதனை விடுதலை செய்து விட்டால் என்ன என்றுகூடத் தோன்றிக் கொண்டே இருந்தது. ஆனால் தாம் வேண்டுமென்று கொலை செய்யவில்லை என்பதை ஒருநாளும் நிரூபிக்க முடியாது என்பதும், மாதவி இது தெரிந்தால் என்ன பாடு படுவாள் என்ற எண்ணமும் தான் அவரை உடனே அவ்வாறு செய்ய விடாமல் தடுத்தன.

தம்முடைய கதையைச் சீனிவாசமூர்த் திக்கும், சுபாஷிணிக்கும் கூறிய பிறகு ஓரளவுக்கு அவர் மனம் சமாதானம் அடைந்திருந்தது. அன்றிரவு நன்றாகத் தூங்கினார் என்றே சொல்ல வேண்டும். மறுநாள் காலையில் எழுந்ததும் மறுபடி யும் குழப்பம் வந்து மேகம் கவிந்து கொள்வது போல் அவருடைய மனத்தை இருளடையச் செய்தது.

கடைசியில் சீனிவாசமூர்த்தியைத் தேடிக் கொண்டு சென்றார். சீனிவாச மூர்த்தி வாசலில் நாற்காலியில் உட் கார்ந்து பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தார். சிவசங்கரனைப் பார்த் ததும் அவர் பத்திரிகையை மூடி வைத்து விட்டு, ''வா! சிவசங்கரா! காப்பி சாப்பிட்டாயா?'' என்று விசாரித்தார்.

''சாப்பிட்டேன் ஸ்ரீநிவாஸ்! என் அறைக்கே வந்துவிட்டது'' என்று பதில் சொன்னார் சிவசங்கரன்.

''இரவு முழுவதும் உன்னைப் பற்றியே தான் சிந்தனை செய்து கொண்டிருந் தேன். சுபாஷிணிகூட உன்னைப் பற்றித் தான் பேசிக் கொண்டிருந்தாள். எங்கள் இருவருக்கும் தூக்கமே வரவில்லை. நானும் எத்தனையோ வழக்குகளை நடத்தி யிருக்கிறேன். ஆனால் இந்தமாதிரி ஒரு கதையை எந்தக் கட்சிக்காரரும் சொல் லிக் கேட்டதில்லை'' என்று கூறினார் சீனிவாசமூர்த்தி.

''இந்தக் கதையை நீ வெறும் கதை என்று எண்ணாமல் நம்புகிறாயே, அதுவே எனக்குத் திருப்தியாக இருக்கிறது. நீ தான் இந்த வட்டாரத்தில் சிறந்த வக்கீல் என்று பெயர் வாங்கி யிருக் கிறாயே. இந்தத் தர்ம சங்கடத்திலிருந்து மீள எனக்கு ஒரு வழி சொல்லேன். நான் போய்க் குற்றத்தை ஒப்புக் கொண்டு அச்சுதனை விடுதலை செய்தால்தான் மனம் நிம்மதியடையும் போலிருக்கிறது. அப்படிச் செய்து விடட்டுமா? பிறகு வழக்கில் பார்த்துக் கொள்வோமே.''

''அப்படி நீ இப்போது செய்தால் தற்கொலைக்குச் சமானமாகும். நீதிபதி யாக இருந்து வழக்குகளுக்குத் தீர்ப் பளிக்கும் உனக்கு இது தெரிய வேண் டாமா?'' என்றார் அவர்.

''தெரிகிறது. ஆனால் நான் என் கடமையைச் செய்ய வேண்டாமா?''

"முதலில் கடமை என்பது என்ன என்பதை யோசிக்க வேண்டும். உனக்கும் நீ செய்து கொள்ள வேண்டிய கடமைகள் சில இருக்கின்றன. அச்சுதன் சில நாட்கள் லாக்-அப்பில் இருப்பதனால் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடாது. அவன் குற்றம் செய்யவில்லையென்பது நமக்குத் தெரியும். நீதானே வழக்கை நடத்தப் போகிறாய்? ஆகையால் அவன் விடுதலை அடைவது ஒன்றும் கஷ்டமில்லை. வழக்கைத் தள்ளுபடி செய்து விடலாம் அல்லவா?"

"என் மனசாட்சி அதற்கு இடம் கொடுக்க வேண்டுமே, ஸ்ரீநிவாஸ்! அச்சுதனும் நான் வழக்கை நடத்தினால் அவனை விடுதலை செய்து விடுவேன் என்று நினைக்கிறான் போலிருக்கிறது. பாலகோபாலை அவன் அனுப்பியதன் நோக்கமும் அதுவாகத்தான் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அவனுக்கு மாத்திரம் எப்படி உண்மை தெரிந்திருக்க முடியும் என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது. ஒரு வேளை வழக்கு அவனுக்கு விரோதமாகப்போய், அதனால் அவன் என்மீது குற்றம் சுமத்தினால் ரொம்ப அவமானமாகப் போய் விடும் அல்லவா? அதைவிட நானாகவே ஒப்புக் கொண்டு விடுவது நல்லது. வக்கீலான உனக்கு நான் இதைச் சொல்ல வேண்டுமா?"

"வக்கீலாக இருந்து என்ன பயன் சங்கர்? கடைசியில் எல்லாம் ஜூரர்களின் கையிலும், நீதிபதியின் கையிலும் அல்லவா இருக்கிறது? உனக்குத் தெரியாத விஷயமா இது?"

"அப்படிச் சொல்லாதே. வக்கீல்கள் நிச்சயமாக மக்களுக்குத் தொண்டு செய்யத்தான் செய்கிறார்கள்."

"அது என்னமோ! நீ சொல்வது போல வேறு யாரும் வக்கீல் தொழிலைப் பற்றி நினைப்பதில்லை. மற்றவர்களுடைய துன்பத்தைத் தன்னுடைய நலனுக்காக உபயோகப்படுத்திக் கொள்பவன்தான் வக்கீல் என்று எண்ணுகிறார்கள். அது கிடக்கட்டும், உன்னைச் சில கேள்விகள் கேட்டு நடந்ததையெல்லாம் விவரமாகப் புரிந்துகொள்ள வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். இப்போது கேட்கட்டுமா?"

"ஓ! பேஷாகக் கேள்."

"நீ புதரை நோக்கிச் சுட்டபொழுது மணி என்ன இருக்கும்?"

"புதருக்கருகில் போய் யாரென்று பார்த்து விட்டுச் சில நிமிஷங்கள் திக்பிரமை அடைந்து நின்றேன். பிறகு ஓடிவரத் தொடங்கினேன். துப்பாக்கியை அங்கே போட்டு விட்டு வந்தது நினைவுக்கு வந்தது. அதை எடுக்கத் திரும்பிப் போனபோது கடிகாரத்தில் மணி பார்த்தேன். ஏழு இருபது ஆகியிருந்தது நன்றாக ஞாபகம் இருக்கிறது. அதற்கு ஐந்து அல்லது ஆறு நிமிஷங்களுக்கு முன்னால் சுட்டிருக்கவேண்டும்."

"அவ்வளவு நேரமாகி இருந்தால் நன்றாக இருட்டியிருக்க வேண்டுமே. எப்படி மணி தெரிந்தது?"

"என் கடிகாரமுள் இருளில் தெரிவதற்காக ரேடியம் தடவப்பட்டது."

"அப்படியானால் சரி. கருணாகரனின் உடலில் எங்கே காயம் பட்டிருந்தது என்பதைக் கவனித்தாயா?"

"என்னுடைய கலவரத்தில் அதைப் பார்க்கத் தோன்றவில்லை. மேலும் புதருக்கருகில் ரொம்ப இருட்டாக இருந்தது. கூர்ந்து பார்த்த பிறகுதான் யாரென்பதே தெரிந்தது. நாடியைப் பார்த்தேன். சுவாசம் வருகிறதா என்று பார்த்தேன். இரண்டும் இல்லை. நிச்சயமாக உயிர் போய் விட்டது என்று தெரிந்த பிறகு தான் ஓடி வரத் தொடங்கினேன்."

"எடுத்துக் கொண்டு வந்த துப்பாக்கியை என்ன செய்தாய்?"

"என்னிடம்தான் இருக்கிறது. அன்று அதையும் பெட்டியின் அடியில் எறிந்துப் போட்டுக் கொண்டு வந்து விட்டேன். அதன் பிறகு அதைத் தொடவே பிடிக்கவில்லை. பெட்டியிலேயே கிடக்கிறது."

"அதை என்னிடம் காட்டு" என்றார் சீனிவாசமூர்த்தி.

இருவரும் எழுந்து சிவசங்கரனின் அறைக்குச் சென்றார்கள். கதவைத் தாழ்ப்பாள்போட்டுவிட்டுத் தம்முடைய பெட்டியைத் திறந்தார் சிவசங்கரன்.

சீனிவாசமூர்த்தி துப்பாக்கியை எடுத்தார். அதைக் கூர்ந்து கவனித்தார்.

துப்பாக்கியை அவர் பரிசோதிக்கும் விதத்தைக் கண்டு, "நீயும் துப்பாக்கியை உபயோகித்துப் பழகியிருக்கிறாய் போலிருக்கிறதே" என்று வியப்புடன் சொன்னார் சிவசங்கரன்.

சீனிவாசமூர்த்தி எதுவும் பதில் சொல்லவில்லை. அவருடைய முகபாவம் மாறிப் போயிருப்பதைக் கண்டதும், "என்ன ஸ்ரீநிவாஸ்?" என்று கவலையுடன் கேட்டார் சிவசங்கரன்.

"இது உன்னுடைய துப்பாக்கியா என்று பார், சங்கரா!" என்று சொல்லிக்கொண்டே அவரிடம் அதைக் கொடுத்தார் சீனிவாசமூர்த்தி.

சிவசங்கரன் துப்பாக்கியைத் தம் கையில் வாங்கிப் பார்த்தார். அவருக்குத் தம் உடலிலுள்ள ரத்தமெல்லாம் சுண்டிப் போய்விட்ட மாதிரி இருந்தது. என்ன நடந்திருக்க வேண்டுமென்று அவருக்கு விளங்க ஆரம்பித்தது. (தொடரும்)


பாருங்கள்! ஒரு அரை வில்லை ஸன்லைட் தான்
இவ்வளவு சலவையும் செய்து
முடித்தது!
SUNLIGHT SOAP
அதன் அதிகப்படியான நுரையே
இதை நிறைவேற்றியது!
பளிச்சென்று வெண்மையாக
வெளுப்பது ஸன்லைட் சோப்
S. 248-50 TM

மீனாட்சிதேவி

ஜான்ஸி ராணி நினைவு விழா. கூட்டம் அமர்க்களமாக நடந்தது. பலர் ஜான்ஸி ராணியின் வீரதீரச் செயல்களைப் பற்றி ஆவேசம் பொங்கச் சொற்பொழிவாற்றினர்.

கூட்டம் சீக்கிரமாகவே முடிந்து விட்டது. நிலா பால் போல் காய்ந்து கொண்டிருந்தது. ஆற்றங்கரைப் பக்கமாகச் சென்று சிறிதுநேரம் காற்றாட உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்து விட்டு வரலாமென்று நானும் திருவாளர் திருவடியா பிள்ளையும் கிளம்பினோம்.

ஜான்ஸி ராணி, மங்கம்மாள் என்று இந்தத் தேசத்து வீராங்கனைகளைப் பற்றிப் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்தோம். ''மங்கம்மாளுக்கு அப்புறம் அடுத்த தலைமுறையில் இருபத்தாறு ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் ஒரு பெண் மதுரைச் சீமையில் அரியணை ஏறினாள். அதாவது இன்றைக்கு மூன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னால் என்று வைத்துக்



கொள்ளுங்களேன். அவள் கதை மிகவும் பரிதாபகரமானது'' என்று பேச்சுக்கு நடுவே ஒரு முக்கியமான திருப்பத்துக்கு வந்தார் திருவடியா பிள்ளை.


''அந்தக் கதையை எனக்குச் சொன்னால் மிகவும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்'' என்று கதைக்கு அடி போட்டேன் நான். அப்போது என் வேண்டுகோளுக்கு இணங்கி அவர் சொன்னதிலிருந்தும், சில சரித்திர ஆதாரங்களிலிருந்தும், இதற்கென்று மதுரை ஜில்லாவின் பழைய 'மானுவல்'களைப் புரட்டிப் பார்த்துத் தெரிந்து கொண்டதிலிருந்தும், இராணி மீனாட்சி தேவியின் கதையைக் கீழே எழுதுகிறேன்.

* * *

தாயின் மடியில் தூங்கும் சிறு குழந்தையைப் போல் இரவின் அமைதியில் உறக்கத்தின் பிடியில் கட்டுண்ட அந்த மாபெரும் நகரத்தை நிலா முற்றத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

நல்ல உயரம். வாளிப்பான தேகக்கட்டு. முகத்தில் இராஜ வம்சத்துக்கே உரிய





கம்பீரம். ஒரு அரசிக்குரிய எல்லா அலங்காரங்களும் அவள் உடலில் குறைவின்றி நிறைந்திருந்தன. சந்திரப் பிறை போல் தூக்கி வளைத்து முடிந்த கூந்தலிலுள்ள மல்லிகைச் சரம் நிலா முற்றம் முழுதும் மணத்தைப் பரப்பிக் கொண்டிருந்தது. வரிந்து கட்டியிருந்த பட்டுப் புடவையுடன் இடையில் ஒரு நீண்ட உடைவாள் தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தாலே அவள் ஒரு வீராங்கனை என்பதை அனுமானிக்க முடியும். மதுரைச் சீமை முழுவதையும் ஆளும் பெண்ணரசி அவள். மதுரையின் தெய்வமான அங்கயற்கண்ணியின் பெயர்தான் அவளுக்கும் வாய்த்திருந்தது. 'இராணி மீனாட்சி தேவி' என்றால் தெற்குச் சீமை யெல்லாம் நன்கு தெரியும்.

ஒரு பெண் அரசியாக வாழ்வதென்றால் பகைகள் குறைவாகவா தோன்றும்? பகைமை எவ்வளவு பெரிதாக, எவ்வளவு பயங்கர மானதாக இருந்தாலும் அதைச் சமாளிக்கும் வீரம் மீனாட்சி தேவியிடம் இருந்தது.

இதோ இப்போது நிலா முற்றத்தில்கூட ஒரு பயங்கரமான ஆண் எதிரியை எதிர் பார்த்தே அவள் உலாவிக் கொண்டிருக் கிறாள். அரண்மனையில் எத்தனையோ வீரர்கள் இருக்கிறார்கள். ஆனால் ,திருட்டுத்தனமாக இரகசியமாக வரும் எதிரியை இரகசியமாக வரவேற்று மடக்குவதுதான் அவள் வழக்கம்.

பங்காரு திருமலை என்று நாயக்க வம்சத்தின் கிளை வழித் தோன்றல் ஒருவன் தளவாய் நாராயணப்பன் என்பவனின் உதவியைக் கொண்டு மீனாட்சிதேவியின் ஆட்சிக்கு எதிராகக் கலகம் செய்து வந்தான். மதுரை ஆட்சி தன் கைக்கு மாறி விடவேண்டும் என்பது பங்காரு திருமலையின் அடக்க முடியாத ஆசை.

அன்றிரவு யாருக்கும் தெரியாமல் நிலா முற்றத்தின் வழியே ஏறிக் குதித்து இராணியைக் கொலை செய்ய அவன் திட்டமிட்டிருந்தான். அரண்மனை ஒற்றர்கள் மூலம் இந்தச் செய்தி இராணிக்குத் தெரிந்து விட்டது. தெரிந்த பின்பும் பிரமாதமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யவில்லை அவள். எந்தப் பாதுகாப்பு ஏற்பாடும் செய்யக்



கூடாதென்றே உத்தரவிட்டிருந்தாள். பங்காரு திருமலையின் வரவை எதிர்பார்த்துத் தன் வாளின் துணையோடு நிலா முற்றத்தில் உலாவிக் கொண்டிருந்தாள்.

அவள் ஒவ்வொரு அடி நடக்கும்போதும் சிலம்பு ஒலித்தது. இடையிடையே வளையல்கள் குலுங்கின. இரவின் தனிமையில் நிசப்தமான நிலா முற்றத்தில் அந்த ஒலிகள் பொருத்தமில்லாமல் தோன்றின. ஏறக்குறைய நடு யாமம் ஆகிவிட்டது. இனிமேல் அவன் வருவான் என்ற நம்பிக்கை சிறிது சிறிதாக அவள் மனத்தில் குன்றியது. அந்தப்புரத்துக்குச் செல்லலாம் என்று நிலா முற்றத்தின் படிகளில் இறங்கினாள். படிகளின் கைப்பிடிச்சுவரை ஒட்டி வளர்ந்திருந்த வெண்கடம்ப மரம் திடீரென்று ஆடி அசைந்தது. கிளைகளும் இலைகளும் சலசலத்தன! மீனாட்சி தேவி அப்படியே நின்றாள். அவள் வலக்கரம் இடுப்பிலிருந்த உடைவாளின் பிடியைத் தொட்டுக் கொண்டிருந்தது. மரக் கிளைகளின் அடர்ந்த பகுதியை அவள் விழிகள் கூர்ந்து துழாவின.

குபீரென்று அவள் குனிந்து உட்கார்ந்து கொண்டாள். கடம்ப மரக் கிளையிலிருந்து ஒரு கத்தி 'விர்' என்று பாய்ந்தது. மின்னல் நெளிந்து வருவதுபோல் அவள் கழுத்தை நோக்கி வந்த அது குனிந்து உட்கார்ந்து கொண்டதன் காரணமாகக் குறி தவறி நிலா முற்றத்துச் சுவரில் மோதிக் கீழே விழுந்தது.

இராணி அதைத் தன் காலால் மிதித்துக் கொண்டே மரக் கிளையில் பதுங்கி யிருந்தவனுக்குக் கேட்கும் குரலில், "நீ ஒரு மானமுள்ள ஆண் பிள்ளையானால் கீழே இறங்கி வா. இப்படிக் கடம்ப மரக் கிளையில் மறைந்து கொண்டு ஒரு பெண்ணின்மேல் கத்தியை வீசி எறிவதற்கு நீ வெட்கப்படவில்லையா?" என்று கூறினாள்.

"வளை சுமக்கும் கைகள் வாள் சுமப்பதைப் பார்த்து இந்தத் தேசமல்லவா வெட்கப்பட வேண்டும்? நான் ஏன் வெட்கப்படுகிறேன்?"—ஏளனச் சிரிப்போடு இப்படிக் கூறிக் கொண்டே மரக்கிளையிலிருந்து நிலா முற்றத்தில் குதித்தான் வாட்டசாட்டமான ஒரு ஆடவன்.

"யார்? பங்காரு திருமலையா? வா அப்பா, வா! நீ இன்றிரவு என்னைக் கொல்ல வரப் போவதாகத் தெரியும். ஆனாலும் இப்படி ஒளிந்திருந்து தாக்கும் அளவுக்குக் கோழையாக இருப்பாய் என்று எண்ணவில்லை."

யாரையும் எதையும் துச்சமாக மதிக்கும் புன்னகை ஒன்று இராணியின் இதழ்களில் விளையாடியது.

"யாருக்கு யார் கோழைப் பட்டம் கட்டுவது? இராணியார் மரியாதை கொடுத்துப் பேசுவதற்குப் படித்துக் கொள்ள வேண்டும்" என்று சொல்லிக்கொண்டே சரேலெனக் குனிந்து அவள் காலடியில் இருந்த தன் கத்தியை எடுக்க முயன்றான் திருமலை. அவன் அப்படி ஏதாவது முரட்டுத்தனமாகச் செய்வான் என்பதை விநாடிக்கு விநாடி எதிர்பார்த்துக்கொண்டிருந்த இராணி தன் உடைவாளை உருவி அதன் கைப்பிடியால் அவனை உந்தித் தள்ளினாள். பெண்புலி போன்றவளின் அந்தத் தள்ளுதலால் நிலைகுலைந்து தடுமாறிய அவன் கால் பிசகிப் படிகளில் உருண்டான். நாலு படிகள் உருண்டு ஐந்தாவது படியில் தான் சமாளித்துக் கொண்டான் திருமலை.

மீனாட்சி தேவி கலகலவென்று சிரித்தாள். "திருமலை! மங்கம்மாளுக்குப் பிறகு மீண்டும் இந்தத் தேசத்தை ஒரு பெண் ஆளுவது உங்களுக்குப் பொறுக்கவில்லை. உனக்கு இந்த அரசின்மேல் கண். நீ அரசனானால் தனக்குத் தளவாய் பதவி கிடைக்குமே என்று நாராயணப்பனுக்கு ஆசை. என்னைக் கொல்ல வேண்டுமென்பது உங்கள் இருவருக்கும் ஆசை. முடிந்தால் செய்யுங்கள்."

"இப்போது சந்தர்ப்பம் சரியில்லை. இன்னொரு முறை உன்னைப் பார்த்துக் கொள்கிறேன்."—என்று சொல்லி விட்டுக் கடம்ப மரக்கிளை வழியே கீழே வேகமாக இறங்கிச் சென்றான் திருமலை.

"பேடிப் பயல்! பிழைத்துப் போகட்டும் என்று விட்டால் திமிராகப் பேசிக்கொண்டு போகிறான். கோழை..."

மீனாட்சி கீழே இறங்கி அந்தப்புரத்துக்குச் சென்றாள். எஞ்சிய இரவிலாவது கண்களுக்கும் மனத்துக்கும் ஓய்வு கொடுக்க விரும்பினாள் அவள். உறக்கம் அவளுக்கு அதை அளித்தது.

*

அரண்மனை மதிலோரம் பதுங்கித் திருமலையின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான் நாராயணப்பன்.

கடம்ப மரத்திலிருந்து ஆள் குதித்த ஓசை கேட்டதும் திருமலைதான் திரும்பி விட்டானென்று தெரிந்தது.

"என்ன திருமலை? போன காரியம் என்ன ஆயிற்று? மீனாட்சி முடிந்து விட்டாளா?"

"ஓய் தளவாய்! மீனாட்சி என்னை முடித்து விடாமல் தப்பி வர அனுமதித்தாளே, அது பெரிய காரியம்."

"என்னப்பா, நீயே இப்படிக் கூறுகிறாய்...? அவள் ஒரு பெண்தானே?"

"இங்கே நின்று பேசுவதே ஆபத்து. வாரும்! வேகமாக இங்கிருந்து வெளியேறிச் செல்ல வேண்டும். மற்ற விஷயங்களை வைகைக் கரையில் போய்ப் பேசுவோம்."

தளவாய் நாராயணப்பனும், பங்காரு திருமலையும் வேகமாக அங்கிருந்து வெளியேறினர். அவர்கள் இருவரும் வைகை ஆற்றின் கரையை அடையும்போது பின்னிரவின் குளிர்ந்த காற்று தொடங்கி விட்டது.

அவர்கள் இருவரும் மணல்மேல் அமர்ந்து பேச்சைத் தொடங்கினார்கள்.

"தளவாய்! நாமும்தான் இத்தனை நாட்களாக முயற்சி செய்து பார்க்கிறோமே. இந்த மீனாட்சியைச் சிறிதாவது அசைக்க முடிகிறதா? இதிலிருந்து என்ன தெரிகிறது? நாம் மட்டும் முயன்று பயனில்லை. வேறோர் பலம் வாய்ந்த துணையை அருகில் வைத்துக் கொண்டு அவளைப் பயமுறுத்த வேண்டும்."

"பங்காரு! என்னுடைய அபிப்பிராயமும் அதுதான். ஆர்க்காட்டு நவாபின் புதல்வன் சாப்தர் அலி திருச்சிராப்பள்ளியில் வந்து தங்கியிருக்கிறான். மீனாட்சியின் அரசைக் கவிழ்ப்பதற்கு அவன் உதவியை நாடுவோம்."

"இந்த நவாபுகள் எப்போதும் நம்பத் தகுந்தவர்கள் இல்லையே? மீனாட்சி ஒழிந்த பின் அவர்கள் நம்மையும் கவிழ்த்து விட்டுத் தாங்களே மதுரையை ஆள முயன்றால்...?"

"செய்தாலும் செய்வார்கள். ஆனால் அதை எண்ணியே நாம் சும்மா இருக்கக் கூடாது. முதலில் இவளை ஒழிப்போம்."

"மீனாட்சியை ஒழிப்பது சுலபத்தில் முடியக் கூடிய காரியமில்லை. அவள் ஒரு பெண் புலி. எதற்கும் துணிந்தவள். நீயும், நானும், சாப்தர் அலியும் சேர்ந்து அவள் கழுத்தைக் குறி வைத்து வாளை உருவினால் கூடச் சிரித்துக் கொண்டே நம்மை எதிர்க்கத் தயாராகி விடுவாள் அவள்."

"அதையெல்லாம் அப்புறம் பார்க்கலாம். முதலில் திருச்சிக்குப் புறப்படு. சாப்தர் அலியைச் சந்திப்போம்."

அன்றிரவு நாராயணப்பனும் திருமலையும் உறங்கவே இல்லை. வைகைக் கரையிலிருந்து திருமலையின் மாளிகை மிக அருகில்தான் இருந்தது. அங்கே போய்ப் பிரயாணத்துக்குக் குதிரைகளைத் தயார் செய்து கொண்டு கிளம்பினர். விடிந்ததும் சாப்தர் அலியின் முகத்தில் விழிக்க வேண்டுமென்பது அவர்கள் திட்டம். ஒரு பெண் தன்னைக் கீழே உருட்டித் தள்ளியதோடன்றிப் பயந்து ஓடும்படி செய்து விட்டாளே என்று கொதித்துக் கொண்டிருந்தது திருமலையின் நெஞ்சம்.

சாப்தர் அலி தெற்கேயுள்ள சிற்றரசர்களையெல்லாம் பயமுறுத்திக் கப்பம் வாங்கிக் கொண்டு போவதற்கு வந்திருந்தான். அவனோடு அவன் மகன் சந்தா சாகிப்பும் உடன் வந்திருந்தான். அவர்களோடு பலம் பொருந்திய முகலாயப் படை ஒன்றும் வந்து தங்கியிருந்தது.

திருமலையும், நாராயணப்பனும் சாப்தர் அலியைச் சந்திக்கச் சென்றபோது அவன் மூச்சு முட்ட ஹுக்கா புகையை இழுத்துக் கொண்டிருந்தான்.

"சலாம் ஆலேகும் சாகிப்! நாங்கள் மதுரையிலிருந்து வருகிறோம்."


"சலாம்! சலாம்! என்ன காரியமாக நீங்கள் வந்தீர்கள்?"

"என் பெயர் பங்காரு திருமலை. நான் நாயக்க வம்ச அரச பரம்பரையில் பிறந்தவன். இன்று மதுரையை ஆண்டு கொண்டிருக்க வேண்டியவன். மீனாட்சி தேவி என்று ஒரு பெண் மதுரைச் சீமையை ஆண்டு வருகிறாள். நவாபுக்குத் தெரிந்திருக்கும். இவர் தளவாய் நாராயணப்பன். நாங்கள் இருவரும் ஒரு பெண் மதுரையை ஆளக்கூடாதென்று கிளர்ச்சி செய்து வருகிறோம்."

"அதெல்லாம் சரி. நம்மைச் சந்திக்க வந்த காரியம்? அதைச் சொல்லுங்கள்."

"மதுரையின் ஆட்சி ஆண் வரிசையில் உரிமையுடையவனான என்னைச் சேர்வதற்கு மேன்மை வாய்ந்த நவாபின் உதவி கிடைக்க வேண்டும்." பங்காரு கெஞ்சும் குரலில் வேண்டிக் கொண்டான்.

சாப்தர் அலி பதில் பேசாமல் சிரித்தான். தலையை நிமிர்த்தித் திருமலையையும் நாராயணப்பனையும் இமையாமல் உற்றுப் பார்த்தான். பின் மெதுவாகக் கேட்டான்!



பையன்:—அப்பா!.. அந்த வீட்டு மாமாவை விட்டு எனக்கு ஒரு காக்காய் பிடிச்சுக் கொடுக்கச் சொல்லு அப்பா, விளையாட?......

அப்பா:—சீ... மரியாதை இல்லாமல் இது என்னடா பேச்சு......?"

பையன்:—வீட்டு மாமா நன்னு காக்கா பிடிப்பார்னு நீதானே அப்பா அம்மாகிட்டே சொல்லிண்டு இருந்தே......

"ஹூம்! ஆட்சி உங்களுக்கு வேண்டும். அதற்கு நாம் உதவ வேண்டும். உதவினால் நமக்கு என்ன செய்வீர்கள்?"

"எது வேண்டுமானாலும் செய்யக் காத்திருக்கிறோம். மீனாட்சி இப்போது எவ்வளவு கப்பம் கட்டி வருகிறாளோ, அதைப்போல் இரண்டு மடங்கு கப்பம் கட்டுகிறோம்."

"சரி! நீங்கள் ஊருக்குப் போய் இருங்கள். நாம் சில நாட்களில் மதுரை வரக் காத்திருக்கிறோம். அப்போது உங்களுக்கு உதவி செய்கிறோம்."

திருமலையும் நாராயணப்பனும் விடை பெற்றுக்கொண்டு சென்றார்கள். அவர்கள் மனங்களில் ஒடுங்கியிருந்த ஆசைக்குச் சரியான பற்றுக்கோடு கிடைத்து விட்டது. இனி என்ன கவலை?

இப்படி இவர்கள் திருச்சிராப்பள்ளிக்குச் சென்று நவாப்புடன் சதியாலோசனை செய்ததை மறுநாளே ஒற்றர்கள் மூலம் தெரிந்து கொண்டாள் மீனாட்சி.

அன்று மாலை திருமலையின் மாளிகைக்கு ஒரு சோதிடர் விஜயம் செய்தார். கண்ணைக் கொட்டும் அந்தச் சோதிடரின் முகத்தில் கருகருவென வளர்ந்திருந்த தாடியும் அழகாகத்தான் இருந்தது. அவருடைய அழகில் பெண் ஜாடை இருந்தது. பாலிய வயதினராகத்தான் தோன்றினார்.

"திருமலை! உனக்கு மங்களம் உண்டாகுக! திருச்சி சென்று வந்த காரியம் பழமா?" குரல் கூட ஏறக்குறைய பெண்ணினுடையது போலவே இருந்தது. எங்கோ அடிக்கடி கேட்டிருப்பது போலவும் தோன்றியது. அப்போது நாராயணப்பன் அங்கு இல்லை. திருமலை மட்டுமே தனியாக இருந்தான்.

"சோதிடரே! நம் மனத்தில் ஒரு எண்ணம் இருக்கிறது. அது நிறைவேறுமோ?"

"இராணி மீனாட்சியைத் தொலைத்துவிட்டு மதுரைச் சீமையை ஆளும் எண்ணம்தானே?"

"அடடே! நீராகவே எல்லாம் சொல்லி விடுகிறீரே!"

பங்காரு திருமலை எதிரே அமர்ந்திருந்த சோதிடனை மீண்டும் பார்த்தான். அவன் வாய் பேசிக் கொண்டிருந்ததே ஒழியக் கண்களும் மனமும் எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தன.

"சாப்தர் அலி உங்களுக்கு உதவுவதாக வாக்களித்திருக்கிறார் போலிருக்கிறது."

"ஊம்...."

"நீங்கள் மீனாட்சியைத் தீர்ப்பது உறுதி தான்" என்று சோதிடர் பேசிக் கொண்டே போனார். திருமலையின் கண்களில் சந்தேகம் மின்னியது. பேசிக் கொண்டே உட்கார்ந்திருந்தவன் திடீரென்று சோதிடர் மேல் பாய்ந்து தாடியைப் பற்றி இழுத்தான். தாடி கையோடு வந்து விட்டது. மீனாட்சி நின்று கொண்டிருந்தாள் எதிரே. அவளுடைய கன்னத்தில் பளீரென்று ஒரு அறை விழுந்தது. திருமலைக்குத் தலை சுற்றியது. கண்கள் கலங்கின. மீனாட்சி தப்பிச் சென்று வாசலில் நின்று கொண்டிருந்த குதிரையில் ஏறி ஓடி விட்டாள். அவன் அடிபட்ட கன்னத்தைத் தடவிக் கொண்டு நின்றான்.

* * *

"மகாராணி! இதோ இந்தத் திருமுகம் சாப்தர் அலியால் திருச்சியிலிருந்து அனுப்பப் பட்டிருக்கிறது"—அமைச்சர் ஒரு திருமுகத்தை மீனாட்சி தேவியிடம் நீட்டினார்.

மீனாட்சி அதைக் கையில் வாங்கிப் பிரித்துப் படிக்கலானாள்.

"மதுரையை ஆளும் மீனாட்சி தேவிக்கு ஆர்க்காட்டு நவாப்பின் புதல்வர் சாப்தர் அலி எழுதுவது. நாம் நாளை கழித்து மறு நாள் நமது படைகளோடு மதுரை வருகிறோம். நமக்குச் சேர வேண்டிய கப்பத் தொகையை இம்முறை இரு பங்காகச் செலுத்த வேண்டும். சென்ற முறை போல் குறைந்த கப்பத்தை இம்முறை வாங்கிக் கொள்ள முடியாது. கப்பம் தர மறுத்தால் மதுரையை ஆளும் உரிமை உங்களிடமிருந்து பறி முதல் செய்யப்படும்."

"நீசனே! திருமலையால் தூண்டப்பெற்று, இதை எழுதியிருக்கிறான் இரண்டு மடங்கு வேண்டுமா?"

"மகாராணி! நவாப் ஒரு முரடன். ஏற்கனவே திருமலையும், நாராயணப்பனும் எதிரிகளாக இருக்கின்றனர். இந்நிலையில் நவாப்பையும் பகைத்துக் கொள்வது மிகவும் பயங்கரமாக முடியும்."

"அது சரி! ஆனால் அவன் கேட்கிறபடியே கப்பத்தைக் கொடுத்த பின்பும் அவனால் நமக்குத் துன்பம் ஏற்படாதென்பது என்ன நிச்சயம்: கப்பத்தையும் வாங்கிக் கொண்டு திருமலையோடு சேர்ந்து விட்டால்...?"

"யோசிக்க வேண்டிய விஷயந்தான்."

"எதற்கும் பதில் எழுதிவிடுங்கள். விருப்பம் போலவே கப்பம் தர இணங்குவதாகவே எழுதுங்கள். நேரில் பேசிக் கொள்ளலாம்."

அப்படியே செய்வதாகக் கூறிவிட்டுச் சென்றார் அமைச்சர். மீனாட்சியின் மனத்தில் முதன் முதலாக மலைப்பு என்ற உணர்ச்சி தோன்றியது. மனம் குழம்புகிற போதெல்லாம் தன் பெயரைக் கொண்ட தாயின் கோயிலுக்குச் சென்று வணங்கி வருவது அவளுடைய வழக்கம்.

அன்று கோயிலில் உள்ளமுருகப் பிரார்த்தனை செய்தாள் அந்தப் பெண்ணரசி.

குறிப்பிட்ட நாளில் சாப்தர் அலி தன் படைகளுடனும், மகன் சந்தா சாகிப்புடனும், மதுரைக்கு விஜயம் செய்தான். மீனாட்சிக்கு உள்ளூற வெறுப்பிருந்தாலும் வெளிக்கு ஆடம்பரமாகவே வரவேற்றாள். நகர் எல்லையில் மீனாட்சி வரவேற்பதற்கு முன்பாகவே பங்காரு திருமலை கோஷ்டி சாப்தர் அலியைச் சந்தித்து விட்டது. திருமலையும் நாராயணப்பனும் அரும்பாடுபட்டுச் சேகரித்திருந்த பொருளையும் பொன்னையும் வாரிக் காணிக்கையாக வழங்கினர். நவாப்பின் கருணையும் கவனமும் தங்கள் மேல் திரும்புவதற்கு அவர்கள் செய்த சூழ்ச்சி இது.

முகலாயப் படைகள் நகருக்கு வெளியே கூடாரங்கள் அமைத்துத் தங்கின. சாப்தர் அலியும் அவன் மகன் சந்தா சாகிப்பும் அரண்மனைக்கு வந்தனர். அரசவையில் அமைச்சர்கள், பிரதானிகள் புடைசூழ மீனாட்சி கொலு வீற்றிருந்தாள். நாயக்க மரபினரின் அழகும் பெருமையும் பொருந்திய அந்த அரண்மனையை ஆவல் பொங்கும் விழிகளால் பார்த்துக் கொண்டே அரசவைக்குள் நுழைந்தனர், சாப்தர் அலியும் அவன் மகனும்.

மீனாட்சி அரியணையிலிருந்து எழுந்து சென்று அவர்களை எதிர்கொண்டு வரவேற்றாள்.

"நவாப்பின் வருகையால் மதுரை நகரம் பெருமை கொள்கிறது. இந்த அரண்மனையிலுள்ளவர்களும் நாமும் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்."

நவாப்பும் மகனும் வரவேற்பை ஏற்றுக் கொண்டு அமர்ந்தனர். அவன் சுற்றி வளைத்துப் பேசாமல் நேரடியாகவே பேச்சை ஆரம்பித்து விட்டான்.

"நல்லது, மீனாட்சி தேவி! நீங்கள் நான் கேட்டிருந்தபடி இரண்டு மடங்காகக் கப்பம் தருவதற்கு இசைந்து கடிதம் அனுப்பியிருந்தீர்கள். மிகவும் மகிழ்கிறேன்."

"ஒரு நிபந்தனையோடுதான் அப்படிக் கொடுக்க இணங்குகிறேன் நவாப்!"—நிபந்தனை என்ற வார்த்தையைக் கேட்டதுமே சாப்தர் அலியின் முக பாவம் மாறியது.

நுணுக்கமாகத் தென்பட்ட அந்த மாறுதலை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல், "என்ன நிபந்தனை? சொல்லுங்கள். முடியுமானால் ஏற்றுக் கொள்வேன்" என்று கேட்டான். மீனாட்சி தேவி கூறலானாள்:

"நவாப்! நீங்கள் தவறாக நினைத்துக் கொள்ளக் கூடாது. இங்குள்ள சூழ்நிலை என் ஆட்சிக்குப் பல வகையிலும் அழிவு தேடுவதாகவே இருக்கிறது. ஆனால் அந்த எதிர்ப்புச் சக்திகள் தனியாக இருக்கிறவரையில் நான் அவைகளுக்குப் பயப்படப் போவதில்லை. சந்தர்ப்ப வசத்தால் உங்களைப் போன்ற படைபலமுள்ளவர்களும் என்னை எதிர்ப்பவர்களுக்கு உதவ நேர்ந்தால் நான் பொறுக்க மாட்டேன்!"

"உங்கள் நிபந்தனையைச் சுருக்கமாகச் சொல்லுங்கள்."—சாப்தர் அலி கண்டிப்பான குரலில் சொன்னான்.


''சுருக்கமாகத்தான் சொல்லுகிறேன். என்னிடம் கப்பம் வாங்கிக் கொள்வதற்கு முன் உங்களது தெய்விக மதநூலான குரானின்மீது ஆணையாக அதைத் தொட்டு ஒரு சத்தியம் செய்ய வேண்டும்!''

''என்னது? சத்தியமா? எதற்காக...?''—சாப்தர் அலியின் புருவம் வளைந்து கண்கள் சிவப்பதைப் பார்த்தால் அவனுக்குக் கோபம் வந்து விட்டதென்று தோன்றியது.

''ஆம்! சத்தியமேதான். 'இராணி மீனாட்சி தேவியின் தலைமுறையில் இந்த ஆட்சியை அழிக்க யார் கிளர்ச்சி செய்தாலும் அவர்களுக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ நான் படை உதவி செய்வதில்லை. என்னுடைய இஸ்லாத்தின் புனித கிரந்தமான குரானின்மீது ஆணையாக இந்தச் சத்தியத்தை நான் செய்கிறேன்' என்று நீங்கள் குரானைத் தொட்டுக் கூற வேண்டும்.''

''கூறிவிட்டால்...?''

''என்ன நவாப்? உடனே ஆத்திரப்பட்டு விடுகிறீர்களே? மீனாட்சிக்கு இந்த உதவிகூட நீங்கள் செய்யக் கூடாதா? நான் உங்களை வற்புறுத்தவா போகிறேன்? ஒரு அன்புரிமையோடு கேட்கிறேன்.''—மீனாட்சி குழைந்து குழைந்து பேசினாள்.



சாப்தர் அலி கபடம் நிறைந்த சிரிப்பை இதழ்களிடையே சிந்தினான். ''நல்லது! செய்கிறோம். எத்தனை சத்தியம் வேண்டுமானாலும் செய்கிறோம்'' என்று மீனாட்சிக்குச் சொல்லி விட்டுத் தன் மகனை சந்தா சாகிப்பை அருகில் அழைத்து அவன் காதோடு இரகசியமாக ஏதோ கூறினான்.

சந்தாசாகிப் உடனே வேகமாக வெளியேறினான்.

''உங்கள் மகனை நீங்கள் எங்கே அனுப்புகிறீர்கள், நவாப்?''

''எங்கள் விடுதியிலிருந்து 'குரான் புத்தகம்' எடுத்து வரச் சொல்லி அனுப்பியிருக்கிறேன். நான் வழிபடும் குரானை எல்லோரும் தொட்டு எடுப்பதற்கு அனுமதிக்க மாட்டேன்.''

''ஓ! அப்படியா? சரிதான்.''—மீனாட்சி சாப்தர் அலியின் கண்களில் ஒளிரும் சூழ்ச்சியைப் புரிந்து கொண்டாள். அவள் மனம் துரிதமான சிந்தனையைச் செய்யலாயிற்று.

சிறிது நேரத்தில் சந்தா சாகிப் குரான் புத்தகத்தோடு வந்தான். ஒரு வட்டவடிவமான தந்தப் பேழையில் எதையோ வைத்து மேலே கனமான பட்டுத் துணியால் இறுக்கி மூடி அதைக் கையில் கொண்டு வந்தான் சந்தா சாகிப்.

''இதோ 'குரான்' வந்து விட்டது. நான் சத்தியம் செய்யட்டுமா?''

''செய்யுங்கள்! ஆனால் அந்தப் பட்டுப் போர்வையை விலக்கி விட்டுச் செய்வது நல்லது. உங்கள் குரான் புத்தகத்தை நாங்களும் பார்க்கலாமல்லவா?''—மீனாட்சி புன்னகையோடு கூறினாள்.

''முடியாது, இராணி! பட்டுப் போர்வையை நீக்கி விட நான் சம்மதிக்க மாட்டேன். என் குரானை இங்குள்ள பிற மதத்தினர் பார்ப்பதை நான் விரும்பவில்லை.''

மீனாட்சியின் மனத்தில் சந்தேகம் உறுதிப்பட்டது. 'சாப்தர் அலி ஏதோ ஒரு வகையில் தன்னை ஏமாற்றப் பார்க்கிறான்' என்று அந்தரங்கத்தில் உணர்ந்தாள் அவள்.

''சரி, உங்கள் விருப்பம்போல் நடக்கட்டும். ஆனால் நீங்கள் சத்தியம் செய்யும்போது அந்தப் பேழையை நான் என் கைகளில் ஏந்திக் கொள்ளவாவது இணங்குங்கள்.''

சாப்தர் அலி அரைகுறை மனத்தோடு அதற்கு இணங்கினான். மீனாட்சி சந்தா சாகிப்பின் கையிலிருந்து பேழையை வாங்கித் தன் இரு கைகளிலும் ஏந்திக் கொண்டாள். பேழை ஒரேயடியாகக் கனத்தது. ஒரு குரான் புத்தகத்துக்கா அவ்வளவு கனம்? அவள் மனத்தில் சந்தேகம் முன்னிலும் பலமாக உறுத்தியது.

சத்தியம் செய்வதற்காக ஏதோ தியானம் செய்வதுபோல் கண்களை மூடினர் நவாப்பும் அவன் மகனும். அந்தக் கணநேர அவகாசத்தைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டாள் மீனாட்சி. அவள் வலது கை விரல்கள் பட்டுப் போர்வையை விலக்கிக் கொண்டு பேழைக்குள் சென்று வெளி வந்தன. உண்மையைத் தெரிந்துகொண்ட உணர்வு முகத்தில் பிரதிபலித்து விடாதபடி அடக்கிக்கொண்டாள் அவள்.

நவாப்பின் பேழையில் பட்டுத் துணியின் உட்புறம் குரான் புத்தகம் இல்லை. இரண்டு கனமான செங்கற்கள் தாம் இருந்தன. விரல்களால் தடவி அவள் புரிந்து கொண்ட அந்த உண்மை குரூரமாக இருந்தது. அந்த மர்மத்தைச் சபை நடுவில் உடைத்து, சாப்தர் அலியின் மானத்தை வாங்க விரும்பவில்லை அவள். வஞ்சகத்தை வஞ்சகத்தாலேயே வேரறுக்க விரும்பினாள். அவள் எல்லாவற்றையும் நம்பியதாக எண்ணிக் கொண்ட சாப்தர் அலி நிபந்தனைப்படி பேழையைத் தொட்டுச் சத்தியம் செய்தான்.

''நவாப்! நீங்கள் கேட்டபடி ஒரு கோடிப் பொன் கப்பம் அனுப்பி விடுகிறேன். மாலைப் பொழுதுக்குள் வந்து சேர்ந்து விடும்.''

* * *

அந்தி நேரம். சாப்தர் அலியின் கூடாரத்தில் அவன் மகனுடன், பங்காரு திருமலை, தளவாய் நாராயணப்பன் ஆகியோரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர். மீனாட்சி தேவியை முடித்துக் கட்டுவது பற்றிச் சதிக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

அவர்கள் பேசிக் கொண்டிருந்தபோது தூக்க முடியாமல் ஒரு பெரிய மரப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு நான்கு சேவகர்கள் கூடாரத்துக்குள் நுழைந்தனர்.

"பிரபு! நாங்கள் அரண்மனைச் சேவகர்கள். இந்தப் பெட்டியில் தங்களுக்குச் சேரவேண்டிய கப்பப் பணம் இருக்கிறது. இதை இங்கே சேர்த்து வரும்படி இராணி மீனாட்சி தேவியாரின் உத்தரவு."—பெட்டியைக் கீழே வைத்தவுடன் நவாப்புக்கு வணக்கம் செலுத்தி விட்டுச் சென்றனர் சேவகர்.

"சந்தா! இந்தப் பெட்டியைத் திற. பார்க்கலாம்" என்று தன் மகனை அழைத்து ஏவினான் சாப்தர் அலி.

சந்தா சாகிப் பெட்டியைத் திறந்ததும் 'ஆ' என்று அலறினான்.

திறந்த பெட்டி நிறையச் செங்கல் தூள்கள் கிடந்தன. செங்கல்தூள்களுக்கு மேல் ஒரு ஓலைச் சுருள் கிடந்தது. சந்தா சாகிப் அதை எடுத்து விரித்து எல்லோருக்கும் கேட்கிற குரலில் இரைந்து படித்தான்.

"நவாப் சாகிப் அவர்களுக்கு மதுரை மகாராணி மீனாட்சி தேவி எழுதும் திருமுகம்.

"குரான் புத்தகம் செங்கலாக மாறும் போது ஒரு கோடிப் பொன் செங்கற் கட்டிகளாக மாறுவது விந்தையல்ல. பெண் என்றால் ஏமாற்றுவது எளிதென்று நினைத்து விட்டீர்கள். பெண்ணுக்கு ஒரு முறை ஏமாறத் தெரிவதை விட நான்கு முறை மற்றவர்களை ஏமாற்றத் தெரியும். இதைக் கண்டதும் நீங்களும் ஏற்கெனவே இங்குள்ள பங்காரு குழுவினரும் ஆயிரக்கணக்கான படை வீரர்களோடு என்மேல் படையெடுப்பீர்களென்று எனக்குத் தெரியும். ஆனால் அப்போது நான் என்ன செய்வேன், தெரியுமா? சொல்வானேன்! ஒரு தமிழ்ப் பெண் மானத்தைக் காத்துக் கொள்ள என்ன செய்வாளென்று பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள். உன்னை அண்டி அடிமை நாய்களாகத் திரியும் தளவாய் நாராயணப்பனுக்கும் பங்காரு திருமலைக்கும் கூடக் காட்டு."

"சூழ்ச்சிக்காரி, என்னிடமா விளையாடுகிறாள்? நாளைப் பொழுது விடியும்போது அரண்மனை வாசலில் நிறுத்தி மானத்தை வாங்குகிறேன்"—சாப்தர் அலி எரிமலையாக மாறினான். அந்த எரிமலையைப் புகையச் செய்யும் துணைக் கருவிகளாக அமைந்தனர் தளவாயும் பங்காரு திருமலையும்.

"சந்தா! உடனே நம் படைகளைத் தயார் செய்." தன் மகனை விளித்து உத்தரவிட்டான் அலி. திருமலையின் கோஷ்டியைச் சேர்ந்த வீரர்களும் முகலாயப் படையுடன் சேர்ந்து கொண்டனர். கடல் போல் திரண்டெழுந்தது பெரும் படை. சாப்தர் அலியும் திருமலை நாராயணப்பன், சந்தா சாகிப் ஆகியோரும் போர்க்கோலம் பூண்டு படைகளுடன் சென்றனர். சூரியன் மறைந்து நான்கு நாழிகையிருக்கும். வளைத்துக்கொண்ட எதிரிப் படைகள் கோட்டையின் கதவுகளையும் சுவர்களையும் உடைத்துக் கொண்டும், இடித்துக் கொண்டும் உள்ளே நுழைய முயன்றன. மீனாட்சிதேவியின் வீரர்கள் முடிந்த அளவில் அந்த வலிமையான தாக்குதலைச் சமாளித்துக் கொண்டிருந்தனர்.

அன்னை மீனாட்சியின் சந்நிதியில் ராணியின் பிரார்த்தனை முடிந்தது. எல்லாக் கடமைகளையும் செய்து முடித்தாற் போன்ற மன நிறைவுடன் சுரங்க வழியே அரண்மனைக்குத் திரும்பினாள். அந்தப்புரத்தில் நுழைந்ததும் ஐந்தாறு பணிப்பெண்கள் பரபரப்பாக அவளை நோக்கி ஓடி வந்தனர்.

"மகாராணி! ஆபத்தான செய்தி. முகலாயப் படைகள் கோட்டைக்குள் நுழைந்து விட்டன. நாற்புறமும் கோட்டை தகர்ந்து விட்டது. உடனே நாம் இங்கிருந்து வெளியேற வேண்டும்."

"நீங்கள் எல்லோரும் இரகசிய வழியாக வெளியேறுங்கள். நான் சிறிது பொறுத்து வருகிறேன்."

"மகாராணி!"

"சொன்னால் சொன்னபடி கேட்க வேண்டும்! முதலில் வெளியேறுங்கள்"—இராணி கூச்சலிட்டாள். அந்தப் பெண்கள் பதில் பேசாமல் மௌனமாக வெளியேறினர். அவர்களை அனுப்பியபின் மீனாட்சி தேவி தன் அந்தரங்க அறைக்குள் சென்றாள். கதவுகளைச் சாத்தி உட்புறம் தாழிட்டுக் கொண்டாள். ஒரு கிண்ணம் நிறையத் தண்ணீரை எடுத்தாள். சிறிது மயில்துத்தத்தைப் பொடி செய்து அதில் கலக்கினாள். மகிழ்ச்சியோடு பருகினாள். அறையினுள் எரிந்து கொண்டிருந்த தூண்டா விளக்கில் தான் அணிந்திருந்த ஆடையின் நுனியைத் தூக்கிப் பிடித்தாள். ஆடை தீப்பற்றியது.

அப்படியே அங்கிருந்த பஞ்சணைகளோடு கூடிய மஞ்சத்தில் ஏறித் தூங்குகிறவள் போல் படுத்துக் கண்களை மூடினாள். தீ மஞ்சத்திலும் பற்றிப் பின்பு சிறிது நேரத்தில் அறை முழுவதும் பற்றியது.

சாப்தர் அலி ஆட்களை விட்டுக் கதவை உடைத்தான். அவனருகே பங்காரு திருமலையும் நாராயணப்பனும் நின்று கொண்டிருந்தனர். கதவு உடைந்ததும் உட்புறமிருந்து புகை பாய்ந்து வந்தது. அறையினுள் தீ நாக்குகள் சுடர்விட்டு எங்கும் நீக்கமற எரிந்து கொண்டிருந்தன. உள்ளே புக முடியவில்லை. சிறிதுநேரம் அப்படியே அதைப் பார்த்துக்கொண்டே நின்றான் நவாப். திடீரென்று அவன் இரண்டு கரங்களும் மேலெழுந்து இருபுறமும் நின்ற திருமலை, நாராயணப்பன் ஆகிய இருவரின் பிடரிகளையும் பிடித்தன.

"பேராசைப் பிண்டங்களே! நீங்களும் தொலைந்து போங்கள்." இருவரையும் அவர்கள் கொஞ்சமும் எதிர்பாராத விதத்தில் நெருப்பில் பிடித்துத் தள்ளி விட்டான் சாப்தர் அலி. அலறிக் கொண்டே இரண்டு உடல்கள் நெருப்பில் விழுந்தன.

அடுத்தகணம் அந்த அலங்கோலமான நிலையில் அதே இடத்தில் கீழே மண்டியிட்டு உட்கார்ந்தான். இரு கைகளையும் உயர்த்தி அல்லாவைப் பிரார்த்தித்தான்.

"அல்லா! என்னை மன்னித்து விடு! நான் பெரிய பாவத்தைச் செய்துவிட்டேன்" என்று அவன் வாய் முணுமுணுத்தது. எதை நினைத்தோ அவன் கண்களில் இரண்டு சொட்டு நீர்த் துளிகள் உருண்டன.

அந்த இருள் நிறைந்த நேரத்தில் ஒரு தமிழ்ப் பெண்ணின் மாபெரும் பண்பாட்டைப் புரிந்துகொண்ட பெருமையோடு படைகளை வடதிசையில் செலுத்திக் கொண்டு சென்றான் சாப்தர் அலி.


பிரகாசமுள்ள
வெண்ணிறப் பற்கள்
மட்டுமல்ல
அத்துடன்
ஆரோக்கியமான
ஈறுகளும்!
ஈறுகளை கெட்டியாகவும், ஆரோக்கியமாகவும் வைக்கவும் மற்றும் பற்களுக்கு ஸ்படிகத்தைப் போன்ற வெண்மையை அளிக்க வேண்டும் என்றே போர்ஹான்ஸ் டூத்பேஸ்ட் விசேஷமாய்த் தயாரிக்கப்படுகிறது. உங்களை ஈறுகள் சம்பந்தமான நோய்கள் தொற்றிக்கொண்டு அவதி கொடுக்காதிருக்கவே யாவரும் அறிந்த இப்பற்பசையில் டாக்டர் ஆர். ஜே. போர்ஹான் டி. டி. எஸ் அவர்கள் பக்குவப்படுத்திய முறையில் விசேஷ காரப் பொருள் கலக்கப் படுகிறது. ரத்தக் கசிவு வீங்கிய ஈறு புண்ணானதும் மற்றும் கூசும் ஈறுகளை லேசாக போர்ஹான்ஸ் கொண்டு தேய்க்க வேண்டும். அவை உடனே கெட்டியான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பிவிடும் ஆனபடியால் இந்த இரட்டைக் காரியமுள்ள பற்பசையை நீங்கள் உபயோகித்து பளிச்சென இருக்கும் வெண் பற்களையும் நல்ல ஆரோக்கியமான ஈறுகளையும் உடையவரெனப் பெருமைப் படலாம்.
தந்த வைத்தியரால்
செய்யப்பட்ட டூத்பேஸ்ட்
போர்ஹான்ஸ்
ஈறுகளுக்குகந்தது



அன்று வகுப்பிலே நடந்து விட்ட சம்பவத்தை எண்ணிய பொழுது நீலகண்டனுக்கு ரொம்பவும் வேதனையாக இருந்தது. என்னதான் இருந்தாலும் கல்லூரியிலே பட்டப் படிப்பில் கடைசி வருஷம் படிக்கும் மாணவர்கள், தங்கள் பேராசிரியரைப் பார்த்து வெளிப்படையாகக் கேட்கக் கூடிய கேள்விகளா அவை? அவர்களுக்குக் கொஞ்சமாவது இங்கிதம் தெரிந்திருக்க வேண்டாமா? என்ன மாணவர்கள்!

தத்துவ சாஸ்திரம் என்கிற பாடம் மாணவர்களுக்கெல்லாம் எவ்வளவு புரியாத விஷயமாக இருந்ததோ, அதைவிடப் புரியாத ஒரு புதிராக விளங்கி வந்தார் பேராசிரியர் சிதம்பரநாதன் என்றால் அது உண்மைதான். —ஏன், அவருடைய பிரியத்துக்குகந்த மாணவன் என்று எல்லோராலும் நம்பப்பட்ட நீலகண்டனுக்கே அவரைப் பற்றிய பல விஷயங்கள் பிடிபடவில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! ஆனால் வேண்டாத இந்தப் புதிரை விடுவிப்பதில் மாணவர்களுக்கு ஏன் இத்தனை அக்கறை இருக்க வேண்டும்?

ஒருவன் வருவான்: "ஏண்டா நீலகண்டா! நம்முடைய பிலாஸபி புரொபஸர் சிதம்பரநாதன் எங்கே குடியிருக்கிறார்? போன மாதம் தென்னூரிலிருந்து வந்தார்; இப்பொழுது உறையூரிலிருந்து வருகிறார்! அடிக்கடி குடும்பத்தை மாற்றிக் கொண்டிருக்கிறாரே, ஏன் அப்படி, தெரியுமா?" என்று கேட்பான்.

இன்னொருவன் சந்தேகமோ இன்னும் ஒரு படி மேலே போய்விடும். "ஆமாம், நம்முடைய சிதம்பரநாதன் ஒரு பிரம்மச்சாரியாமே! நாற்பது வயதுக்கு மேலிருக்குமே! என்ன வைராக்கியமோ?" என்பான்.

"போடா இடியட்! பிரம்மச்சாரியாவது கத்திரிக்காயாவது! மூன்று கல்யாணம் பண்ணியும் ஒருத்திகூட இப்போது உயிரோடு இல்லை; அடுத்தடுத்துச் செத்துப் போய்விட்டார்களாம். அதன் காரணமாக உடைந்து போன மனம், ஒன்று சேருவதற்குள் பாழும் விரக்தி வந்து தொலைத்து விட்டதாம்! நான் கூட நேற்று ஹோட்டலில் தனியாகக் கண்டேன். பாவம், மனிதன் உள்ளத்தைத் திறந்து ஒரு வார்த்தையாவது சொல்ல வேண்டுமே? ம்ஹூம்!" என்பான் இன்னொரு பிரகஸ்பதி.

"அட போடா! அவருக்கு வாலிப வயதில் படிப்பே கதியென்றிருந்ததால் கல்யாணம் என்ற நினைவே அவர் உள்ளத்தில் தோன்றாமலிருந்ததாக்கும்!"

இப்படியாகச் சிதம்பரநாதன் கற்றுத் தந்த பாடத்தை விட்டு விட்டு, அவருடைய வாழ்க்கைப் பொய்கையில் மூழ்கி அடிமண் எடுக்க முயன்றவர்கள் எத்தனையோ பேர்.

குப்புசாமி என்ற ஒரு மாணவன் மனத் தத்துவ ரீதியிலேயே அவரை ஆராய ஆரம்பித்து விட்டான். ஒரு நாள் சிதம்பரநாதன் வகுப்புக்குள் நுழைந்ததும் மேஜையின்மேல் பார்வையைச் செலுத்தி விட்டு மெல்ல ஒரு புன்முறுவல் பூத்தார். வகுப்பிலிருந்த அத்தனை மாணவர்களுடைய பார்வையும் ஏக காலத்தில் மேஜையின் மேல் பாய்ந்தன. அங்கே?—அத்தனை பேருடைய வியப்புக்கும் காரணமாக இரண்டே இரண்டு மல்லிகை அரும்புகள் கிடந்தன! அதைப் பார்த்தும் பார்க்காதபடி பாடத்தை—சொற்பொழிவை ஆரம்பித்தார் சிதம்பரநாதன். அவ்வளவு தான்; கொஞ்ச நேரத்துக்கெல்லாம் மலர் அரும்புகள் இரண்டும் அவருடைய கரங்களில் ஏறித் தவழ்ந்தன. லாகவமாகக் கையில் எடுத்துச் சுழற்றிய வண்ணம் பாடம் சொல்லிக்கொண்டே போனார். வகுப்பு முடிந்து வெளியே போனதும் மாணவர்கள் ஒரே பாய்ச்சலில் மேஜையைச் சூழ்ந்து கொண்டு பார்த்தனர். என்ன ஆச்சர்யம்! மேஜையின் மேலே அந்த மலர் அரும்புகள் இரண்டும் அப்படியே கிடந்தன. கொஞ்சமாவது கசங்கியிருக்க வேண்டுமே! ம்ஹூம்! அப்படியே மூனை முடியாமல் காட்சி யளித்தன. இந்தச் சோதனையை வைத்துக் கொண்டு குப்புசாமி அவருடைய வாழ்க்கைக்கு ஒரு வியாக்கியானமே கொடுத்து விட்டான்!

இப்படி மாணவர்களின் வேண்டாத ஆராய்ச்சிகளில் எல்லாம் அகப்பட்டுக் கொண்டு திண்டாடிய சிதம்பரநாதன், அன்று வகுப்புக்குள் நுழைந்ததும் நுழையாததுமாகச் சொன்னார்:

"அருமை மாணவர்களே! தேர்வுக்கான பாடங்களெல்லாம் முடிவடைந்து விட்டன. இந்த வருஷத்தில், உங்களுக்கு இதுதான் கடைசி வகுப்பு. ஆகவே என்னிடம் ஏதாவது சந்தேகங்கள்—விளக்கங்கள் கேட்க வேண்டுமென்றிருந்தால் தாராளமாகக் கேட்கலாம். இதில் இன்னொரு விசேஷமும் இருக்கிறது: இத்தனை நாளும் நானே உங்களைக் கேள்வி கேட்டு இம்சித்து வந்தேன் அல்லவா? அதற்குப் பிராயச்சித்தமாக இன்றைக்கு நீங்கள் என்னைக் கேள்வி கேட்கும் ஒரு சந்தர்ப்பத்தை அளிக்கிறேன். எங்கே கேளுங்கள், பார்க்கலாம்!" என்றார்.

சிதம்பரநாதன் உண்மையில் விரும்பியது பாடசம்பந்தமான கேள்வியா, இல்லை, குசலப்பிரச்னையா என்பதே புரியாமல்தான்



இருந்தது! ஆனால் அவ்வளவு தூரம் யார் யோசிக்கப் போகிறார்கள்? மறுகணமே மாணவர்களிடமிருந்து கேள்விச் சரங்கள் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தன!

"ஸார்! மன்னிக்க வேண்டும். உங்களைப்பற்றிச் சில விஷயங்களை அறிய எங்களுக்கெல்லாம் ஆவலாக இருக்கிறது. அதாவது......உங்களுக்குக் கல்யாணமாகி விட்டதா? எத்தனை குழந்தைகள்?"

"நீங்கள் ஒரு பிரம்மச்சாரி என்று எங்களிடையே ஒரு அபிப்பிராயம் நிலவுகிறது. ஏன் இத்தனை வயதுவரை கல்யாணமே செய்து கொள்ளவில்லை? அதற்குக் காரணமென்ன?"

கேள்விகள் இந்த ரீதியில் அமையவே, சிரிப்பும் கைதட்டலும் வகுப்பைப் பிளந்தன! சிதம்பரநாதன் கொஞ்சமாவது கோபப்படவில்லை. தம் வழக்கமான புன்சிரிப்பால் ஆரவாரத்தை அடக்கி, அமைதியை நிலை நாட்டிவிட்டு வேகமாக வெளியே போய் விட்டார். கேள்விகள் அப்படியே அந்தரத்தில் நின்று விட்டன!

எல்லா மாணவர்களும் வெளியேறிய பின்னர்தான் நீலகண்டன் இடத்தை விட்டு எழுந்தான். அத்தனை கும்பலிலும் இதுவரை மௌனமாக உட்கார்ந்திருந்தவன் அவன் ஒருவன்தான். இப்போது அவன் மனம் ஏனோ வேதனைப்பட்டது. அவனுடைய நினைவுச் சுழற்சியிலே ஆசிரியர் சிதம்பரநாதனுடைய புன்னகை மட்டும் நிரந்தரமாகப் பிடிபட்டு விட்டது. அதன் ஒளி நீருண்ட மேகத்தை வெட்டிப் பிளந்துகொண்டு பாய்கிற மின்னல், அதைப்போல இருந்தது! புன்னகையா அது? இதயத்திலிருந்து வெடித்துக் கிளம்புகிற உணர்ச்சிகளுக்கு உதட்டின் விளிம்பிலே போடப்பட்ட ஒரு அணையாக இருக்கலாமோ?

நீலகண்டனுக்கு நெஞ்சு நெகிழ்ந்தது. அன்று கல்லூரி விட்டு வந்ததும் டிபனை முடித்துக் கொண்டு நேரே உறையூரை நோக்கிப் புறப்பட்டான். எப்படியும் சிதம்பரநாதனைக் கண்டு மாணவர்கள் சார்பில் சமாதானம் சொல்லத் துடிதுடித்தது அவனுக்கு. ஆகவே விலாசம் சரியாகத் தெரியாத நிலைமையிலும் அவரைத் தேடிக் கொண்டு வெளியில் இறங்கி நடந்தான் நீலகண்டன்.

* * *

"ஸார்! உங்களைத் தேடி எங்கெல்லாம் அலைந்து விட்டேன். நல்ல வேளை! நீங்களாவது மாடியிலிருந்து கூப்பிட்டீர்களே!" என்றான் நீலகண்டன். தேடிவந்தவரைக் கண்ட மகிழ்ச்சியிலே கால்வலியும் அசதியும் மாயமாய்ப் பறந்து போயின.

"நீ எப்படியும் இன்று வருவாய் என்று எனக்குத் தெரியும். உன்னை எதிர்பார்த்துத்தான் வெளியில் கூடப் போகாமல் நின்று கொண்டிருக்கிறேன்!" என்று சிரித்த வண்ணம் கூறிய சிதம்பரநாதன் "வா நீலகண்டா! மாடிக்குப் போகலாம்" என்று அவனை அன்போடு மாடிக்கு அழைத்துக் கொண்டு போனார்.

நீலகண்டன் அந்த விசாலமான ஹால் முழுவதையும் வியப்போடு ஒரு நோட்டம் விட்டான்.

சுவர்கள் எல்லாம் தூய்மையாக, நிர்மலமாக நின்றன. ஒரு ஆணியோ, ஆணியறைந்த வடுக்களோ இல்லை. எங்கும் லக்ஷ்மீகரம் தவழ்ந்து கொண்டிருந்தது.

நீலகண்டன் மன உணர்ச்சிகளைக் காட்டிக் கொள்ளாமல் இருக்க எவ்வளவோ பாடுபட்டான். என்றாலும் அவனையுமறியாமல் கேள்விகள் பொங்கிக் கொண்டு வந்தன.

"ஏன், ஸார்! இத்தனை பெரிய வீட்டில் நீங்கள் மட்டும் தனியாகத்தான் இருக்கிறீர்களோ?" என்று கேட்டான் நீலகண்டன்.

சிதம்பரநாதன் கடகடவென்று மனம் விட்டுச் சிரித்து விட்டார். இப்படிக் கேட்பான் என்பதை அவர் முன்னமே அறிந்து தானே வைத்திருந்தார்! பிறகு சொன்னார்:

"தம்பி! 'தனிமை' என்று நீ எதனைக் கேட்கிறாய்? இந்த உலகத்தில் தனிமையிலே வாடுபவன் என்று யாராவது உண்டா? ஒவ்வொருவனும் இதயத்தில் என்னென்னவோ ஆசாபாசங்களை, லட்சியங்களை வைத்துக் கொண்டு, சதா அவைகளோடு போராடிக் கொண்டிருக்கிறான். ஏன், நீயும் ஒரு வாலிபப் பிள்ளை. உன் உள்ளத்தை ஊடுருவிப் பார்க்கும் சக்தி எனக்கு இருந்தால் அதற்குள்ளே குமைந்து கொண்டிருக்கும்

இளமைக் கனவுகளையும் லட்சிய ரூபங்களையும் காண முடியும் அல்லவா ?''

சிரிப்போடு சிரிப்பாக இப்படி ஒரு போடு போட்ட சிதம்பர நாதன் மாணவனுக்கு அருந்து வதற்கு ஏதாவது பானம் கொண்டு வருவதற்குக் கீழே போனார்.

நீலகண்டன் ஒரு கணத்துக்குள் அயர்ந்து போய் விட்டான். ஆசிரியர் தன் உள்ளத்தில் ஒளிந்து கொண்டிருக்கும் காதலை இனம் கண்டு கொண்டாரோ என்று உண்மையிலேயே பயந்தான் அவன். இந்தப் பயத்துக்குக்



காரணமாக அமைந்த அந்தச் சம்பவம் அவன் மனக் கண் முன்னே வந்து நின்றது.

பொதுவாக, எல்லா மாணவர்களுக்கும் சிந்தனை எங்கோ அலைகிற நேரத்தில் நோட்டுப் புத்தகத்திலே கிறுக்கி வைக்கும் பழக்கம் உண்டு! அப்படி நீலகண்டன் ஒரு நாள் தன்னை மறந்த நிலையில் கிறுக்கி வைத்த ஒரு விஷயம், அவனை ஆசிரியர் சிதம்பரநாதனிடம் பிடித்துக் கொடுத்து விட்டது.

அந்த விஷயம் வேறொன்றும் இல்லை. இரண்டு வரிக் கவிதைதான்.

'' நின்று வழியினைப் பார்த்திருந்தேன்—ஒரு
நெட்டுயிர்ப்பில் யுகம் காத்திருந்தேன்!''

'' ஆசிரியர் இந்தக் கவிதையைப் பார்த்து விட்டு என்ன நினைத்திருப்பார்? பயல் எங்கோ இதயத்தைத்

உங்கள் குழந்தைக்கு டுமெக்ஸ்
கொடுக்கும்பொழுது அவன் வளர்ச்சி
யைப்பற்றி கவலைப்பட வேண்
டியதில்லை. மிகவும் நேர்த்தியானதும்,
புதுமை கெடாமலும், நிறைய விட
மின் அடங்கியுள்ள இந்தப் பால் உணவு
காற்றுப் புகாமல் சீலிடப்பட்ட
டின்களில் கிடைக்கின்றன.
ஆகவே குழந்தைகளுக்குச் சிறந்ததும்,
பாதுகாப்பு அளிக்கும்
பால் உணவு டுமெக்ஸைக் காட்டிலும்
வேறொன்றும் இல்லை.



உங்கள் குழந்தைகளுக்கு

டுமெக்ஸ்

பால் உணவைக்

கொடுத்து அவர்களின் வளர்ச்சியைக் கவனியுங்கள்

தொலைத்து விட்டுத் தேடிக் கொண்டிருக்கிறான் என்று நினைத்து விட்டால்?'' என்ற கேள்வி அலைகள் நீலகண்டனுடைய மனத்திலே எழுந்தன. தனக்குள்ளாகவே ஒரு சமாதானத்தையும் தேடிக் கொண்டான். பத்து மணிக் கெடுபுடியில் பஸ்ஸுக்காகத் தவமிருந்து சலிப்படைந்த தருணத்தில் உதயமாகிய கவிதை என்று சொல்லித் தப்பித்துக் கொள்ள முடியாதா? சிதம்பரநாதனே ஒருநாள் வலிய வந்து அவனைப் பிடித்துக் கொண்டு விட்டார்.

நீலகண்டன் சிரிக்கத்தான் செய்தான்! அசட்டுத்தனத்தை மறைக்கத்தான் போலும்!

"நீலகண்டா! உனக்குக் கவிதையும் வரும் என்று எனக்குத் தெரியாதே! ரொம்ப சந்தோஷம். ஆனால் காதல் கீதல் என்று சிறு பிள்ளைத்தனமாக மனத்தைத் தொலைத்து விடாதே. பிறகு 'நின்று வழியினைப் பார்க்கவும், ஒரு நெட்டுயிர்ப்பில் யுகம் காக்க'வுமே இந்த வாழ்க்கை முழுதும் சரியாகப் போய் விடும்!''

இதைச் சொல்லும் பொழுது சிதம்பரநாதனின் குரலிலே தொனித்து வந்த சோகத்தையும் தாபத்தையும் கண்டு வியப்பினால் அவரை நிமிர்ந்து பார்த்தான் நீலகண்டன். தன்னைப் பற்றிய நினைவைக் கொஞ்சம் மறந்து விட்டு ஆசிரியருடைய கண்களிலே மிதக்கும் அந்த நூதனமான ஒளி வெள்ளத்தின் ஊடே இப்போது தன் கருத்தைச் செலுத்த ஆரம்பித்தான். எத்தனை எத்தனையோ சுழல்கள், பல வேறு வடிவங்களுடன் அவன் கண்ணுக்கு முன்பாக வட்டமிட்டன.

மறுகணம் அவன் சிந்தனை தடைப்பட்டது. கீழேயிருந்து சிதம்பரநாதன் மாடிக்கு வந்து சேர்ந்தார். கூடவே காப்பியின் நறுமணமும் தொடர்ந்து வந்தது.

"தங்களுக்கு எவ்வளவு சிரமம்?...'' என்றபடியே காப்பியைப் பெற்றுக் கொண்டான் நீலகண்டன்.

"நான் சொல்லப் போகிற கதையைக் கேட்பதற்கு உனக்குத் தெம்பு வேண்டாமா? அதற்குத்தான் இந்த முன்னேற்பாடெல்லாம்!'' என்று சிரித்துக் கொண்டே கதையைத் தொடர்ந்தார் சிதம்பரநாதன்.

* * *

இருபது வருடங்களுக்கு முன்பு, தூத்துக்குடியிலே செல்வரங்கம் என்றால் தெரியாதவர் கிடையாது. முத்துச் சலாபம் கண்டிராக்டும் உப்பள வருமானமுமே அவருக்குப் பொன் காய்க்கும் மரங்களாக இருந்தன.

பெரிய பங்களா! ஆனால் மனைவி தவறிப் போய் நெடுநாளாகிறது. அவள் போகும் பொழுது அவருடைய தலையிலே சுமத்திவிட்டுப் போயிருந்த பூங்கொடியான கண்ணம்மா இப்போது கல்யாணத்துக்காகக் காத்து நின்றாள். கண்ணம்மாளுக்கு அத்தான் சிதம்பரநாதனிடம் உயிர்! சிதம்பரத்தின் பெற்றோர்கள் ஒரு விபத்தில் உயிர் துறந்த பிறகு, மாமா செல்வரங்கத்தின் அன்பிலே தோய்ந்து இளமைமுதலே அவளோடு ஒன்றாக வளர்ந்து, வாலிபப் பருவத்தையும் எய்தியவன் அவன். அதோடு ஆனர்ஸ் பட்டமும் அவன் பெருமையை உலகுக்குப் பறைசாற்றியது.

செல்வரங்கம் நினைத்தார்: "கண்ணம்மாளும் சிதம்பரமும் ஒரே கூட்டில் வளர்ந்த வண்ணப் பறவைகள். இன்பமோ, துன்பமோ ஒருவருக் கொருவர் ஒத்துப் போவார்கள். இவர்களைத் தம்பதிகளாக்கி விட்டால் என் வாழ்க்கை லட்சியம் நிறைவேறிவிட்ட மாதிரிதான்.''

இத்தகைய எண்ணத்தோடு காலத்தை எதிர்நோக்கியிருந்த செல்வரங்கத்துக்கு அந்தச் சேதி எவ்வளவு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும்?

ஒரு நாள் அத்தான் சிதம்பரநாதனுடைய அறையை வழக்கம்போல் ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த கண்ணம்மாளின் கண்களில் கடிதம் ஒன்று பட்டு விட்டது. எடுத்துப் படித்துப் பார்த்தாள். முத்து முத்தான ஒவ்வொரு எழுத்திலும் அவன்—அவளுடைய அத்தான் சிதம்பரநாதனின் இதயம் நின்று பேசியது, யாரோ ஒரு பெண்ணிடம்!

கண்ணம்மாளுக்குத் துக்கம் பொங்கிக் கொண்டு வந்தது. நீண்ட நாட்கள் நெஞ்சிலே கொண்டிருந்த காதலெல்லாம் கண்ணீர் கரைத்துக் கொண்டு ஓடி வருவதைப் போலக் கண்ணீர் வெள்ளம் பெருகியது.

மறுபடியும் கடிதத்தைப் பார்த்தாள்.

"...உன் உருவமும் உள்ளமும் என் இதயத்திலே நிரந்தரமாகப் பதிந்து விட்டன. எனக்கு நீ கூட வேண்டாம். உன் நினைவு மட்டும் போதும்....''

கடிதம் ஓடிக் கொண்டிருந்தது. அதைத் தாங்கக்கூடிய தைரியம் கண்ணம்மாளுக்கு இல்லை. "யாரோ ஒரு பெண், சிதம்பரத்தின் இதயத்தில் இடம் பிடித்துக் கொண்டாள்' என்ற நினைவில் அவள் உள்ளம் வெடித்தது. நேரே கடிதத்தை எடுத்துக் கொண்டு தந்தையிடம் ஓடினாள்.

செல்வரங்கம் கடிதத்தைப் படித்து விட்டு வெளிப்படையாகச் சிரித்தார். ஆனால் உள்ளுக்குள் அவர் இதயம் மௌனமாக அழுதது!

"கண்ணு! கடவுள் சித்தம் இப்படி ஆகுமென்று நான் கனவில் கூட நினைத்ததில்லை. அதற்காக இனிமேல் வருத்தப்படுவதில் புண்ணியமில்லை. இந்தக் கடிதத்திலிருந்து

சிதம்பரத்தின் தூய காதலை நான் எடை போடுகிறேன். அதற்குக் குறுக்கே நிற்க எனக்கு விருப்பமில்லை ; அது அழகும் ஆகாது.

"மனித இதயம் என்பது ரொம்பவும் விசித்திரமான ஒரு பொருள்! அதிலே பிறக்கும் உணர்ச்சிகளும் அப்படித்தான்.

"மேக மண்டலத்திலிருந்து சிதறும் நீர்த்துளி எங்கே? ஆழ்கடலுக்கு அடியிலே கிடக்கும் சிப்பி எங்கே? காலம் என்று வரும்பொழுது உறங்கிக் கிடந்த கிளிஞ்சல் எப்படியோ ஓட்டமாக நீர் மட்டத்துக்கு மேலே ஓடி வந்து, தன் இதயத்துக்குள்ளே நீர்த்துளியை ஏந்திக் கொண்டு போய் விடுகிறது!

"நீ உறங்கிக் கொண்டிருந்து விட்டாய்; யாரோ ஒரு புத்திசாலிப் பெண் உன்னை முந்திக் கொண்டு விட்டாள். ஆகவே உனக்கு நான் வேறு வரன் பார்க்கத் தீர்மானித்து விட்டேன். அவனிடம் போய் ஏதாவது தத்துப் பித்தென்று உளறி வைக்காதே!.... இதோ, இந்தக் கடிதத்தையும் அது இருந்த இடத்திலேயே வைத்து விடு!"

கண்ணம்மா கற்சிலையைப் போல நின்று விட்டாள். ஆனாலும் உள்ளுக்குள் துடித்த இதய ஒலி வெளியேயும் கேட்டது!

கண்ணம்மாளுக்குக் கல்யாணம் நடந்தது. தகுந்த வரன்தான்! சிதம்பரநாதனும் கல்யாண வீட்டில் பல சிரித்த முகத்துடன் அங்கு மிங்கும் அலைந்து கொண்டிருந்ததைச் சிற்சில சமயங்களில் செல்வரங்கம் கவனித்தார். ஆனால் கண்ணம்மாளோ?....

"அப்பா, அத்தானை இப்படியே விட்டு விடாதீர்கள். வருகிற தையில் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்து விடுங்கள்! நானும் ஒரு வாரமாகப் பார்க்கிறேன், அத்தான் முகத்தில் களையே இல்லை. உள்ளத்துக்குள் வேதனைப் படுபவரைப்போலத் தோன்றுகிறது."

தம்முடைய பார்வைக்கும் மகளுடைய பார்வைக்கும் இடையேயுள்ள வேற்றுமையின் பொருளைப் புரிந்து கொள்ள முடியாமல் திணறினார் செல்வரங்கம்.

அன்று மறுவீடு. கண்ணம்மா கணவனுடன் இன்னும் கொஞ்ச நேரத்தில் புறப்பட்டு விடுவாள். புறப்பட அரைநாழிகை இருக்கும் பொழுது மாடியில் சிதம்பர நாதனைத் தனியே சந்தித்தாள் கண்ணம்மா. கண்ணீரும் சிரிப்பும் கலந்து வந்தன!

"அத்தான்! நான் போய் வருகிறேன். அப்பாவைக் கவனித்துக் கொள்ளுங்கள். உங்கள் விஷயமாக அப்பாவிடம் எல்லா விவரங்களையும் கூறி விட்டேன். இனிமேலும் ஏன் உள்ளத்தை மூடி மூடி வைக்கிறீர்கள்? அந்தப் பெண்ணின் விலாசத்தை மட்டும் அப்பாவிடம் கொடுத்து விடுங்கள். எல்லாம் உங்கள் விருப்பப்படியே நடக்கும்."

கண்ணம்மாள் பேசப் பேசச் சிதம்பரநாதனின் உள்ளம் ஊர்த்துவதாண்டவம் ஆடியது. பொலபொல வென்று கண்ணீரைச் சிந்திய படியே அவளை வழியனுப்பி விட்டான்!...

* * *

சிதம்பரநாதன் இப்போது பேசினார்:

"செல்வரங்கம் உள்பட அனைவரும் அன்று மிகவும் வியப்படைந்தார்கள். அன்று வியந்த அந்த வியப்பு இன்று வரை சிதம்பரநாதனைத் துரத்திக் கொண்டுதான் இருக்கிறது...."

இந்த இடத்தில் கதையை முடித்து விட்டு நீண்ட பெருமூச்சுவிட்டார் சிதம்பரநாதன்.

"அப்புறம்?" என்றான் நீலகண்டன்.

"அப்புறமென்ன? காதல் வாழ்வில் நான் வரைந்த முதல்கடிதமே என்னை ஆட்கொண்டு விட்டது. நான் யாருக்காக அந்தக் கடிதத்தை எழுதினேனோ, அவள் இன்று வரையில் என் உள்ளத்தில் பசுமையாக இருக்கிறாள். இனி எப்போதும் இருப்பாள். என் வாழ்க்கையில் ஏற்படும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளிலும்-அது இன்பமோ, துன்பமோ — அவள் மானசீகமாகப் பங்கு பெறுகிறாள். அவள் என்னோடு இல்லை என்ற நினைப்பே என்னுள் இல்லை. இப்போது நீயே சொல் நீலகண்டா! நானா பிரம்மச்சாரி? நானா தனிக்கட்டை?"

நீலகண்டன் ஆவலோடு குறுக்கிட்டான்.

"ஸார், ஒரு சந்தேகம். அப்படியானால் 'அந்தப்' பெண் யார்? அவளைப் பற்றித் தங்கள் மாமாவிடம் நீங்கள் ஏன் பிரஸ்தாபிக்கவில்லை?" என்று கேட்டான்.

"எப்படித் தெரிவிக்க முடியும்?...உண்மையாகக் கண்ணம்மாவே என் காதலியாக இருக்கும்பொழுது..."

"என்ன? நிஜமாகவா?"

"ஆமாம்!"

"அப்படியானால் தங்கள் கடிதத்தில் 'அன்பே' என்று எழுதாமல் 'அருமைக் கண்ணம்மாவுக்கு' என்று எழுதி யிருந்தால் இத்தனை சிக்கல் வந்திராதல்லவா?"

"ஆனால் ஒரு விஷயம்-முக்கியமான விஷயம். 'அன்பே!' என்று எழுதியவன் 'அருமைக் கண்ணம்மாளுக்கு!' என்று எழுதியிருந்தால் இவ்வளவு தூரம் வந்திருக்காது என்று நினைக்கிறாய்? அதுதான் இல்லை. வேண்டுமென்றே தான் நான் கண்ணம்மாளை அந்தக் கடிதத்தில் இழுக்கவில்லை. காரணம்...."

சொல்லிக் கொண்டே பின்புறமாகத் திரும்பி முதுகுக்கு நேரே சட்டையை விலக்கினார் சிதம்பரநாதன். நீலகண்டன் பார்வையிலே சோகத்தோடு ஒரு பயங்கரம்! சிதம்பரநாதனின் முதுகின் வலது பக்கத்தில் ஒரு சாண் அளவுக்கு ஆபரேஷன் செய்து தைத்த வடு காட்சியளித்தது.

"அப்போது நான் அந்தப் பயங்கரமான டி. பி. நோய்க்கு ஆளாகியிருந்தேன். உணர்வுக்குள் வளர்ந்து வந்த காதலைப் போல் என் உடலுக்குள் வளர்ந்து வந்த நோய்க்கு என் அருமைக் கண்ணம்மாளையும் என்னோடு பலி கொடுக்க நான் விரும்பவில்லை. அவளிடம் நான் கொண்டிருந்த தூய அன்பே—காதலே அவளைத் தியாகம் செய்யத் தூண்டி விட்டது. இப்போது அவள் சந்தோஷமாக இருக்கிறாள். நானும் சந்தோஷமாக இருக்கிறேன். ஆகவே நான் வரைந்த முதல் கடிதம் எங்கள் இருவர் வாழ்வுக்கும் காரணமாக — விதியின் எழுத்தாக அமைந்து விட்டது! அவ்வளவுதான்."

நீலகண்டனுடைய கண்களில் நீர் முத்துக்கள் அரும்பித் தெறித்தன. அவனுடைய இதயத்தைக் கவர்ந்தவளுக்கு எழுதிய முதல் கடிதத்தை நினைத்ததால் உண்டான ஆனந்தக் கண்ணீரோ, ஆசிரியருக்காகச் சிந்திய சோகத் துளிகளோ, யார் கண்டார்கள்?



நாலணா காசு!

அன்றையத் தபாலில் வந்த கடிதங்களில் இருந்த ஒரு திருமண அழைப்பு எனது கவனத்தை வெகுவாகக் கவர்ந்தது.

குமாரலிங்கத்தின் புதல்வன் சுகுமாரனுக்கு லலிதாவை விவாகம் செய்து கொடுப்பதாய்ப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதாகவும், திருமணம் செங்கற்பட்டில் நடப்பதாகவும் கண்டிருந்தது.

யோசித்தேன் : எந்தக் குமாரலிங்கம் என்று உடனே புரிந்து கொள்ள மாட்டாமல் திண்டாடினேன். தபாலிலிருந்த மற்றொரு கடிதம் என் சந்தேகத்தைப் போக்கியது.

"அன்பர் அவர்களுக்கு.

என்னைத் தங்களுக்கு நினைவிருக்கும் என நம்புகிறேன். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் சந்தித்தது. பல்லவராயன் குளத்தருகில் நிகழ்ந்த அந்தப் பரிதாபகரமான சம்பவத்தைத் தாங்கள் மறந்திருக்க மாட்டீர்கள். அதன் பின்னர் நாம் நேரில் சந்திக்கவில்லையென்றாலும் நான் தங்களுக்கு இரண்டொரு கடிதங்கள் எழுதியிருந்தேன். ஆண்டவன் அருளால் என் புதல்வனின் திருமணம் அடுத்த வெள்ளியன்று நடைபெறுவதாக இருக்கிறது. நானும் என் மனைவியும் தங்கள் வரவை ஆவலோடு எதிர்பார்க்கிறோம். அவசியம் வருகை தருவீர்களென்று நம்புகிறோம்.

தங்கள் —குமாரலிங்கம்."

பல்லவராயன் குளம்!...அந்தச் சம்பவத்தை இன்று நினைத்தாலும் உள்ளம் நடுங்குகிறது!.....எத்தனை கோரம்!....

நான் ஒரு ரெவின்யூ இன்ஸ்பெக்டர். 'ஜமாபந்தி'க்காக அந்தக் கிராமத்துக்குச் சென்றிருந்தேன். ஊருக்கு வெளியே சற்றுத் தொலைவில் சில பாழடைந்த மண்டபங்கள் இருந்தன. பல்லவ மன்னர்களால் ஸ்தாபிக்கப்பட்ட சில உன்னதமான சிற்பங்கள் அங்கு காணக் கிடைப்பதாகக் கேள்வியுற்றேன். ஓய்வு நேரத்தில் அந்தக் கலைக் கோயில்களைக் காணச் சென்றேன்.

எங்கிருந்தோ வெள்ளி மணியின்நாதம் போன்ற கிண்கிணிச் சிரிப்பொலி கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.

சிறிது தூரத்தில் ஒரு பளிங்கு நீர்த் தடாகம் அதன் கரையில் வானத்தை அளாவியிருந்த ஒரு அரசமரம். மர நிழலில் ஒரு ஆடவனும் ஒரு அழகியும் வீற்றிருந்தனர். சற்றுத் தூரத்துக்கு அப்பால் அவர்களது மோட்டார் கார் நிறுத்தப்பட்டிருந்தது.







என்னையுமறியாமல் கால்கள் அந்தப் பக்கமாகத் திரும்பி நடந்தன. குளத்து நீரை வேடிக்கை பார்த்த வண்ணம் அடி வைத்தேன். வெப்பம் குறைந்து காணப்பட்ட சூரியன், மேல்திசையில் மெல்ல மெல்லக் கீழ்நோக்கி இறங்கிக் கொண்டிருந்தான். இளங்காற்று நீர் நிலையை ஸ்பரிசித்துக் கொண்டு குளுமையாக வீசியது. சுற்றித் திரிந்த அலுப்புத் தீரச் சற்று அப்பாலிருந்த வேப்பமர நிழலில் அமர்ந்தேன். பார்வை அவர்கள் பக்கம் சென்றது.

அவளுக்குச் சுமார் முப்பது வயதிருக்கும். கட்டுத் தளராத பொன் மேனியிலே நாகரிகமான உடையலங்காரம். ஒருமுறை பார்த்தால் இரண்டாம் முறையும் பார்க்கத் தூண்டும் எழில் வாய்ந்த முகம். அந்த மனிதருக்கு அவளை விட ஐந்தாறு வயது அதிகமிருக்கலாம். மாநிறமான முகத்திலே பரம்பரைச் செல்வத்தின் பொலிவு. இருவருக்கும் இடையே பலகாரக் கூடையும் 'தர்மாஸ் பிளாஸ்க்'கும் வைக்கப்பட்டிருந்தன.


மூன்றாவது ஆசாமி இருப்பதையே பொருட்படுத்தாது, புதுத் தம்பதிகளைப் போல் கெக்கலி கொட்டிச் சிரித்து ஊடல் புரிந்து வனபோஜனம் நடத்திக் கொண்டிருந்தனர். வாழ்க்கையை அனுபவிக்கத்தெரிந்த அவர்கள் பாக்கியசாலிகள்!

அப்போதுதான் கவனித்தேன். குளக் கரையில் இருந்த புதரில் உட்கார்ந்திருந்த ஒரு சிறுவனும் அவர்களது கொம்மாளத்தைக் கண் கொட்டாது கவனித்துக் கொண்டிருந்தான். சுமார் பதின்மூன்று, பதினொன்று வயதுக்கு மேலிராது. ஆடை என்ற பெயரில் அரையில் ஒரு அழுக்கேறிய கந்தல் துணி. முதுகோடு ஒட்டிய வயிறு. உள்ளத்தில் வேதனையைத் தூண்டும் பரிதாபமான, ஏக்கம் நிறைந்த பார்வை. ஒருகால் அவர்கள் சாப்பிடுவதில் தனக்கும் சிறிதளவு தரமாட்டார்களா என்று ஏங்கினானோ என்னவோ? ஓரிருமுறை தயங்கிக் கொண்டே எழுந்தான். ஆனால் லஜ்ஜையுற்றவனைப் போல மீண்டும் உட்கார்ந்து விட்டான். பிச்சைக்காரனுக்கு லஜ்ஜை ஜன்ம விரோதி என்ற உண்மையை உணரக்கூடிய பக்குவமில்லை போலும்!

அவள் அந்தச் சிறுவனைக் கவனித்து விட்டாள்:

"பையா, இங்கே வா!"

பையன் எழுந்தான். ஆவலோடு ஓடி வந்தான். அவள் கூடையிலிருந்து கொஞ்சம் தின்பண்டத்தை எடுத்து, அவ



னிடம் நீட்டினாள். ஆனால் அந்த விசித்திரச் சிறுவன் அதை வாங்கிக் கொள்ளத் தன் கையை நீட்டாததைக் கண்டு நான் ஆச்சரியம் அடைந்தேன்.

"ஏண்டா பசிக்கவில்லையா? வெட்கப் படாதே! இந்தா!" என்றாள் அவள் இலேசாகச் சிரித்துக் கொண்டே.

"பலகாரம் வேண்டாம் அம்மா,.....ஒரு நாலணா காசு இருந்தால்..."

"ஹஹ்ஹஹ்ஹஹ்ஹா!" என்று அந்தப் பிராந்தியமே எதிரொலிக்கும்படி சிரித்தார் அந்த மனிதர்.

"பலே ஆசாமியடா நீ! எல்லாப் பிச்சைக்காரர்களும் காலணா அரையணா கேட்டால் நீ முழுசாக நாலணா கேட்கிறாயே!"

பையன் பதில் பேசவில்லை. அவனது முகம் மட்டும் வேதனையைப் பிரதிபலித்தது.

"நாலணாவாக இராது. காலணாத்தான் கேட்டிருப்பான்!" என்றாள் அவள்.

"சரிதான், என் காது இன்னும் பழுதாகவில்லை! நாலணாத்தான் கேட்டான். அவன் மேல் தவறில்லை! உன் அலங்காரத்தையும் டம்பத்தையும் பார்த்த பிறகு பிச்சைக்காரனுக்குக்கூட உன்னைக் காலணா கேட்பது கௌரவக் குறைவாகப் பட்டிருக்கலாம்!"

சிறுவனின் மாநிறமான முகம் ரோஷத்தினால் கறுத்தது.

"நான் பிச்சைக்காரனில்லை, ஐயா!"

அவர் மீண்டும் சிரித்தார்.

"உன்னைப் பிச்சைக்காரனென்று சொல்லியது தவறுதான் அப்பா! சோம்பேறி என்று சொல்லியிருக்க வேண்டும்!"

இந்தக் குத்தலான பேச்சு அவனது உள்ளத்தில் சுருக்கென்று தைத்திருக்க வேண்டும். அவனது கண்கள் கலங்கின. திக்கித்திக்கொண்டே அவன் பேசினான்:

"ஏதோ அவசரத்துக்காக நாலணா கேட்டேனுங்க ஐயா. நான் பிச்சைக்காரனுமில்லை. சோம்பேறியுமில்லை. உங்களுக்குக் கொடுக்க விருப்பமில்லாவிட்டால் திட்டாமலாவது இருங்க!" என்று சொல்லிவிட்டு நகரத் தொடங்கினான் அவன்.

பேசாமல் நாமே அவனைக் கூப்பிட்டு ஒரு நாலணா காசு கொடுத்தால்தான் என்ன என்று எண்ணிக்கொண்டே சட்டைப்பையில் கைவிட்டேன் நான். இதற்குள் அவள் தன்னுடைய கணவனிடம் "போனால் போகிறது! நாலணாதானே! ஒரு ஏழைக்கு நாலணா கொடுத்தால் குறைந்தா போய்விடும்!" என்று வாதம் செய்தாள்.

இந்தச் சமயத்தில்தான் சற்றும் எதிர்பாராத ஒரு சம்பவம் — பின்னால் நடக்கப் போவதற்குச் சூசகம்போல நேர்ந்தது.

சிறிது நேரமாகவே ஆகாயத்திலே ஒரு பருந்து சஞ்சரித்துக் கொண்டிருந்தது. பலகாரக் கூடையைக் கண்டுவிட்டதுபோல் மெதுவாக இறங்கி அரசமரத்துக்குச் சம உயரத்தில் பறந்து வட்டமிடத் தொடங்கியது. பேச்சு சுவாரஸ்யத்தில் அதை எவருமே கவனிக்கவில்லை. சற்றும் எதிர்பாராத நேரத்தில், சின்னஞ்சிறிய யுத்த விமானமொன்று செங்குத்தாக இறங்குவதைப் போலத் திடீரென்று கீழ் நோக்கிப் பாய்ந்து படபடவென்று சிறகடித்து, கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில், தரையில் கிடந்த அவளது டம்பப் பையைத் தன் கால்களினால் கவர்ந்துகொண்டு 'விர்'ரென்று உயரப் பறந்தது.

அவர்கள் திடுக்கிட்டு எழுந்தனர். அவள் "பை! பை!" என்று கூச்சலிட்டாள். அவர் கலகலவென்று நகைத்தார்.

"பருந்துக்குக்கூட உன் டம்பப் பையின் மீது எவ்வளவு மோகம் பார்த்தாயா!" என்று வேடிக்கையாகப் பேசினார்.

அவளுக்கு அவரது ஹாஸ்யப் பேச்சு ரசிக்கவில்லை. "போதும் உங்கள் பரிகாசம்! அந்தப் பையில் எனது வைர மோதிரம் இருக்கிறது!"

"வைர மோதிரமா? அதைக் கொண்டு போய்ப் பையில் வைப்பானேன்?"

"விரலுக்குச் சற்றுத் தளர்த்தியாக இருந்தது என்று கழற்றி வைத்தேன்!"

பருந்து அரசமரத்தின் உச்சாணிக் கிளையில் உட்கார்ந்து கொண்டது. அவள் கவலையோடு நோக்கினாள். அவர் இரண்டொரு சிறு கற்களைப் பொறுக்கி அதை நோக்கி வீசினார். ஆனால் அவை குறி தவறிக் கீழே விழுந்தன. அருகே கற்கள் வருவதைக்கண்ட அப்பறவை தாவிப்போய்க் குளத்தின் பக்கமாக நீண்டு வளர்ந்திருந்த கிளையின் மீதிருந்த கூட்டின்மேல் உட்கார்ந்து கொண்டது.

"கல்லை வீசாதீர்கள் ஸார்! அந்தக் கிளை குளத்தின் பக்கமாக வளர்ந்திருக்கிறது பாருங்கள்! கல், கூட்டின்மீது பட்டால் பை குளத்தில் விழுந்து விடும்!" என்று எச்சரித்தேன் நான்.

"இதற்கு ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டுமே?" என்றார் மிகுந்த கவலையோடு.

"ஐயா!..." அந்தச் சிறுவன்தான் கூப்பிட்டான். இன்னும் அவன் போகவில்லை. நடந்தவற்றைக் கவனித்துக் கொண்டு அங்கேயே நின்றிருந்தான் போலும்!

"சட்! வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் பிச்சை கேட்க வந்துவிட்டான்!"

"பிச்சை இல்லை ஐயா! நான் மரத்தின்மேல் ஏறி அதை எடுத்துக் கொடுத்தால்?..."

அவர் துள்ளிக் குதித்தார்.

"சபாஷ்! இப்போது நீ நல்ல பையன். ஏறு பார்க்கலாம், மடமடவென்று!"

"நாலணா கூலி கொடுப்பதானால்..."

"நாலணா என்ன, எட்டணாவாகத் தருகிறேன். ஏறு!"

"வேண்டாம்! நாலணா போதுமுங்க!"

பெரிய மனிதர் சட்டென்று தமது பணப் பையிலிருந்து ஒரு நாலணா நாணயத்தை எடுத்து அந்தச் சிறுவனின் கையில் வைத்து அவனைத் துரிதப் படுத்தினார். அவனது உள்ளத்தில் பொங்கிய எல்லையற்ற ஆனந்தம் முகத்தில் பிரதிபலித்தது. அந்த நாணயத்தை ஆவலோடு வாங்கிச் சடக்கென்று தன் வாயில் போட்டுத் தாடையில் அடக்கிக் கொண்டான். துணியை வரிந்து கட்டிக் கொண்டு உற்சாகத்தோடு மரத்தின்மீது ஏறத் தொடங்கினான்.

எல்லோரும் வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தோம். பாதி மரம் ஏறிவிட்டான். எனக்கென்னவோ மரத்தின் உயரத்தைப்பார்க்கப்பார்க்க அச்சமாகஇருந்தது.


"உன்னுடைய ஆடைகளுக்கும் டினோ-
பால் உபயோகப்படுத்தியிருக்கிறாய்
என்று கவனிக்கிறேன்."
டினோபாலினால் மினுமினுக்கும் வெண்மை யாக்கப்பட்ட வெள்ளை ஆடைகள் எல்லோ ருடைய கவனத்தை கவர்ந்து உங்களை தனியாக எடுத்துக் காட்டுகிறது. சிறிதளவு டினோபால் நீண்ட நாள் தாங்கும் மூன்று, நான்கு சலவைகளுக்கு ஒரு தரம் டினோபால் உபயோகித்தால் போதும்.
டினோபால்
ஷுஹரிட் கெய்கிட்ரேடிங் பிரைவேட் லிமிடெட்
பி. ஓ. பாக்ஸ் 965, பம்பாய்

''கிளை முறிந்து விடுமோ!'' என்று என் அச்சத்தை வெளியிட்டேன் நான்.

''முறிந்தாலும், கிராமத்துப் பையன்களுக்கு நீந்தத் தெரியும் ஸார்! பை தண்ணீரில் விழாமலிருக்க வேண்டுமே! விழுந்தால் மீண்டும் கிடைக்காது. இரண்டாயிரம் ரூபாய் சமாதிதான்!''

அவன் அந்த வளைந்த கிளையை அடைந்து விட்டான். அந்தரத்தில் வித்தையாடும்கழைக் கூத்தாடியைப் போல் அதன்மீது கவிழ்ந்து படுத்த வண்ணம் மெதுவாக நடக்கத் தொடங்கினான். என் மனம் 'திக்திக்'கென்று அடித்துக் கொண்டது.

குளத்தை நோக்கினேன். அக்கிளைக்குக் கீழே இருந்த பாகத்தில் நீரின்மேல் பச்சைப் பசேலென்று பாசி படிந்திருந்தது. ஆழம் அதிகமாக இருக்குமென்று தோன்றியது.

சிறுவன் பருந்துக்கூட்டை நெருங்கி விட்டான். அருகே ஆளரவத்தைக் கேட்டதும் பருந்து சட்டென்று உயரப் பறந்தது. நல்ல காலமாகப் பையைக் கூட்டிலேயே விட்டு விட்டது. எங்களது ஆவல் அதிகரித்தது.

''பையா, பையை மெதுவாக எடுத்து இந்தப் பக்கம் விழும்படி வீசி எறிந்துவிட்டு இறங்கு!'' என்று உரக்கக் கத்தினார் அவர்.

''கையிலேயே எடுத்துக்கொண்டு வரட்டுமே!'' என்று தர்க்கித்தான் அவன்.

''இல்லை. இல்லை; அதையும் எடுத்துக் கொண்டு இறங்குவது அவனுக்குச் சிரமமாக இருக்கும்!'' என்று 'இரக்கம்' காட்டினார் அந்த ஆத்திரக்கார மனிதர்.

தலைக்கு மேலே இருந்த ஒரு மெல்லிய கிளையை இடது கையால் பற்றிக்கொண்டு லாகவமாகச் சடக்கென்று எழுந்து நின்றான் அவன். வலது கை பருந்துக் கூட்டைத் துழாவியது. அந்த நிலையில் நானாக இருந்தால் கால்கள் வெடவெடவென்று உதறல் எடுத்திருக்கும். அவனது திடத்தைக் கண்டதும் எனது பயம் விலகியது.

''பை கிடைத்து விட்டது! எடுத்து விட்டான்!'' என்று எக்களித்தான் அவன்.

சிறுவன் பையை எடுத்து விட்டான். மரத்தின் மீதிருந்தே நாங்கள் இருந்த திசையை நோக்கி அதை வீசிக்கொண்டே குரல் கொடுத்தான்.

''பையைப் போடுகிறேனுங்க ஐயா!''

மாலைச் சூரியனின் ஒளியில் மரக்கிளைகளினிடையே ஏதோ ஒன்று 'பளிச்'சென்று மின்னிக் கொண்டே குளத்து நீரில் 'கிளுக்' கென்ற ஓசையுடன் விழுந்தது.

அடுத்த கணம் இருதயத்தை ஸ்தம்பிக்கச் செய்யும் பயங்கரமான குரலில் ''ஐயோ!'' என்று அலறினான் அந்த ஸ்திரீ! பின்னால் திரும்புவதற்குள் தண்ணீரில் 'தொப'கடீரென்ற சத்தம்! பதறிக்கொண்டே என்ன நடந்ததென்று புரியாமல், ''என்ன, என்ன?'' என்று கேட்டவண்ணம் மரத்தை அண்ணாந்து பார்த்தேன். சிறுவன் இருந்த கிளை சூன்யமாக இருந்தது. எனக்குப் பகீரென்றது!

''விழுந்து விட்டான்! விழுந்துவிட்டானே!'' என்று கதறினான் அவன்.

தண்ணீரின்மேல், பாசியோடு பாசியாகப் பசுமையான கட்டைபோல் மிதந்து கொண்டிருந்த ஏதோ ஒன்று வளையங்கள் கிளம்பிய திக்கை நோக்கி, 'சரக்'கென்று விரைந்தது.

கண் இமைக்கும் நேரத்தில் நடந்துவிட்டது. எனது கைகால்கள் வெடவெடத்தன. என்ன செய்வதென்று தோன்றவில்லை.

''ஐயோ! காப்பாற்றுங்க ஸேர்!'' என்றான் அந்த இளகிய மனமுடையவன். சரியாக நீந்தக்கூடத் தெரியாது. எனினும் ஒரு அசட்டுத் தைரியத்துடன் சட்டையைக் கழற்றத் தொடங்கினேன்.

''அதோ! அதோ!'' என்றார் அவர். சிறுவனின் தலை தண்ணீருக்குமேல் கிளம்பியது. கைகால்களை உதைத்துக்கொண்டு நீந்த முயன்றான் அவன். ஒரு கணம்தான். மறுவினாடியே தண்ணீருக்கடியிலிருந்து 'விருக்'கென்று இழுக்கப்பட்டதுபோல் குபீரென்று மூழ்கி மறைந்தான். நீர்மட்டத்துக்குமேல் பச்சை நிறமான தடித்த வாள்போன்ற சாட்டை யொன்று பளீரென்று அறைந்தது.

''முதலை! முதலை!'' என்று கத்தினான் அவன். என் உள்ளம் சில்லிட்டது. உதிரம் உறைவது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. முகத்தில் ஈ தோன்றப் பேயறைந்ததுபோல நின்றார் தனவந்தர். குளத்தையே வெறித்து நோக்கிக் கொண்டு நின்றான் அவன். காலடியில் அவனதுபை கவனிக்கப்படாமல்கிடந்தது.

''என்ன ஸார்! செய்வது?'' என்று பயமும் பரிதாபமும் தொனிக்கும் குரலில் கேட்டார்.

நான் பெருமூச்சு விட்டேன். ''காரியம் முடிந்துவிட்டது. முதலை வாயில் போன மனிதனை மீட்பது என்பது கனவிலும் கருத முடியாத விஷயம். இவ்வளவு நேரம்...!''

அவன் விம்மினான்.

'பையைக் கீழே போடுகிறேன்' என்று சொல்ல அச் சிறுவன் வாயைத் திறந்தவுடன் வாயில் அடக்கி வைத்திருந்த நாலணாக் காசு வெளியே விழுந்தது. கெஞ்சிக் கூத்தாடிச் சம்பாதித்த காசு அது. தன் சூழ்நிலையையே மறந்து இரண்டு கைகளாலும் அதைப் பிடிக்கத் தாவியிருக்கிறான் அவன். அனர்த்தம் நேர்ந்து விட்டது!

தூரத்திலே ஏதோ குரலொலி கேட்டது. ஒரு இளங்குரல் யாரையோ கூப்பிட்டது.

''செல்லப்பா!...அண்ணா!...''

திடுக்கிட்டுத் திரும்பினோம். சற்றுத் தொலைவிலிருந்த பனந்தோப்புக்குள்ளிருந்து சுமார் ஏழு வயதுச் சிறுமி யொருத்தி வந்து கொண்டிருந்தாள். ஒரு நிமிடம் நின்று நாற்புறமும் திரும்பி, ''அண்ணா! அண்ணா!'' என்று தீனமான குரலில் அவள் கூப்பிட்டது எங்கள் நெஞ்சை அறுத்தது. அவளை நோக்கி வேகமாக ஓடினோம்.

அழுக்குப் பாவாடையும் கிழிசல் சட்டையுமாகக் காட்சியளித்த அச்சிறுமியின் கள்ளங் கபடமற்ற முகத்திலே கேசச் சுருள்கள் கலைந்து தொங்கிக் கொண்டிருந்தன. விபத்துக்குள்ளான சிறுவனின் முகத்தில் கண்ட அதே ஏக்கமான பார்வை. அவனைப் போன்ற சாயல். அவள் யாரென்று புரிந்து கொள்ள வெகு நேரம் பிடிக்கவில்லை.

''யாரைத் தேடுகிறாய், குழந்தை?'' என்று பரிவாக விசாரித்தேன். எங்களைக் கண்டதும் அவள் பயந்து பின்வாங்கினாள். மெதுவாகத்

தைரியமூட்டிக் கேட்ட பிறகு விஷயத்தை மெதுவாகக் கூறினான்.

அவன் தந்தையை இழந்தவன். தாய்க்குப் பதினைந்து நாட்களாகக் காய்ச்சல். ஸ்மரணையற்றுப் படுத்திருக்கிறாள். வயிற்றுக்குக்கூட வழியற்ற நிலையில் வைத்தியத்தைப் பற்றி நினைக்க முடியவில்லை. ஒரு நாலணா காசாவது கொண்டு வந்து கொடுத்தால் மருந்துச் சாமான்கள் வாங்கிக் கஷாயம் வைத்துக் கொடுப்பதாகச் சொன்னார் நாட்டு வைத்தியர். எப்படியாவது நாலணா சம்பாதித்துக் கொண்டு வருவதாகப் போன அண்ணன் வெகு நேரமாகியும் திரும்பவில்லை.

அச்சிறுமியை அழைத்துக் கொண்டு அவர்களது குடிசைக்குச் சென்றோம். ஒரு நடுத்தர வயதுள்ள பெண்மணி உணர்வின்றி வெறும் தரையில் முடங்கிக் கிடந்தாள். கிராமத்து மக்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டனர். விஷயத்தை அறிந்ததும் வெகுண்டெழுந்தனர்.

"அநியாயமாக அந்தப் பையனைக் கொன்று விட்டீர்களே! திக்கற்ற இந்தக் குடும்பத்துக்கு என்ன வழி சொல்லுகிறீர்கள்?" என்று சீறிப் பாய்ந்தனர்.

செல்வந்தர் அவர்களை வெகுவாகச் சாந்தப்படுத்தினார். அவனுக்குத் தேவையான சிகிச்சையின் பொறுப்பையும் அந்தக் குடும்பத்தின் பராமரிப்பையும் தாம் ஏற்றுக் கொள்வதாக வாக்களித்தார்.

அவனைத் தமது காரில் தூக்கிக் கிடத்துவித்து அச்சிறுமியையும் அழைத்துக் கொண்டு கிளம்பினார் குமாரலிங்கம். ஆம், அதுதான் அவரது பெயர். போகும்போது விலாசத்தை எனக்குக் கொடுத்து என் விலாசத்தையும் பெற்றுக் கொண்டு போனார்.

சுமார் ஒரு மாதத்துக்குப் பின்னர் அவரிடமிருந்து வந்த கடிதத்தில் அந்த ஏழை ஸ்திரீ வைத்திய விடுதியில் இறந்து விட்டதாகவும், அச் சிறுமிக்குத் தகுந்த ஏற்பாடு செய்து விட்டதாகவும் எழுதியிருந்தார்.

'என்ன ஏற்பாடு செய்திருக்கப் போகிறார்? ஏதாவது அநாதை விடுதியில் சேர்த்து விட்டுத் தமது பொறுப்பை உதறிக் கொண்டிருப்பார்! ஏழைகளுக்கு அதைவிடப் பெருத்த பாக்கியத்தைப் பற்றிக் கனவு காணத்தான் உரிமை ஏது?' என்று எண்ணமிட்டது என் மனம்.

இன்று பன்னிரண்டு ஆண்டுகள் ஓடி விட்டன. ஆனால் இன்னும் என் மனத்தில் அந்தச் சம்பவம் பசுமையாக இருக்கிறது. நாலணா காசுக்காகத் தன் உயிரையே விட்ட அவ்வேழைச் சிறுவனைப்பற்றி எண்ணுந்தோறும் என் உள்ளத்தில் சொல்லொணா வேதனை நிரம்புகிறது. எப்படியாவது நாலணா சம்பாதித்து விட்டால் தன் தாயின் உயிரைக் காப்பாற்றிவிட முடியும் என்று நம்பினான் அவன். இந்த முயற்சியில் தன் உயிரையே பணயம் வைத்து விட்டான்.

என் மனம் சஞ்சலமடைந்தது. குமாரலிங்கத்தின் மீது இனமறியாத ஒருவித வெறுப்புத் தோன்றியது. அதைத் தற்செயலாக நேர்ந்த விபத்து என்று எண்ண என்மனம் இசையவில்லை. வேண்டுமென்றே தமது சுயநலத்துக்காக அந்தத் தனவந்தர்தான் அச் சிறுவனின் உயிரைப் பலி கொண்டார் என்று எண்ணி உள்ளம் கொதித்தது. இந்தக் கொலைகாரன் மகனுக்கு விவாகமென்றால் அதற்கு நாம் ஏன் போக வேண்டும்? அவனுடைய முகத்தில் விழிப்பதுகூடப் பாபம் என்று உள்ளுணர்ச்சி கூறியது.

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஓய்வுடன் உட்கார்ந்திருந்தேன். திடீரென்று வாசலில் ஒரு கார் வந்து நின்றது. எட்டிப் பார்த்தேன். என் ஆச்சரியத்துக்கு அளவில்லை. வந்தது குமாரலிங்கமும் அவரது மனைவியும்தான். அந்த அம்மாள் நாற்பது வயதைத் தாண்டியும் இன்னும் யுவதியைப் போலவே காட்சியளித்தாள். அவர்களோடு ஒரு அழகிய யுவனும், நவநாகரிக யுவதியும் இறங்கினர். மகனும், மருமகளும் போலும். வீடு தேடி வந்த மனிதரை எப்படி உதாசீனம் செய்ய முடியும்? அரை மனத்துடன் வரவேற்றேன்.

"என்ன ஸார், விவாகத்துக்கு வராமலேயே இருந்து விட்டீர்களே! நீங்கள் அவசியம் வர வேண்டும் என்பதற்காகத்தானே பிரத்தியேகமாக ஒரு கடிதமும் எழுதினேன்?" என்றார்.

"நீங்கள் வராதது எங்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது" என்றாள் குமாரலிங்கத்தின் மனைவி. நான் பதிலே பேசவில்லை.

"இதோ எங்கள் மகன் சுகுமாரன் எம். பி. பி. எஸ். இவனை நீங்கள் இதற்கு முன் பார்த்ததில்லை. நாம் முதன் முதல் சந்தித்தபோதுகூட இவன் எங்களோடு வரவில்லை. இவள்தான் எங்கள் மருமகள் லலிதா பி. ஏ!" என்று அவர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

யுவனும் யுவதியும் எனக்கு வணக்கம் செலுத்தினர். ஐச்வர்ய வாழ்க்கையின் பொலிவு நிறைந்த அத்தம்பதியைக் கவனித்தேன். பொருத்தமான ஜோடி.

நான் பின்னும் மௌனம் சாதித்தேன்.


"என்ன ஸார் பேசவே இல்லை! பல்லவராயன் குளத்து ஞாபகமா?...என்ன செய்யலாம்..எனக்குந்தான்" என்று ஏதோ சமாதானம் கூறத் தொடங்கினார் அவர். எனக்கு ஆத்திரம் குமுறிக் கொண்டு வந்தது.

"முதலைக் கண்ணீர் வடிக்காதீர், குமாரலிங்கம்! உம்மைப் போன்ற பணக்காரர்கள் அநேகரைப் பார்த்திருக்கிறேன். சொல்லுங்கள் என்ன ஏற்பாடு செய்தீர், அந்த ஏழைப் பெண்ணுக்கு? எந்த அநாதை விடுதியில் சேர்த்துக் கை கழுவிக் கொண்டீர்? அதன் பிறகு ஒரு நாளாவது அவள் என்ன ஆனாள் என்று கவலைப்பட்டதுண்டா? நெஞ்சைத் தொட்டுப் பார்த்துச் சொல்லும்!" என்று படபடவென்றுபொரிந்து தள்ளினேன்.

"நான் அத்தனை கிராதகனல்ல ஸார்! இதோ என்மருமகள் லலிதாவைப் பாருங்கள்! உங்களால் கூடவா அவளை அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை?"

லலிதா என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். நான் திடுக்கிட்டேன். கண்களை மூடிக் கொண்டேன். எதிரே பனந்தோப்பு! அழுக்குப் பாவாடையும், கிழிசல் சட்டையுமாக ஒரு சிறுமி கலங்கிய கண்களுடன் நின்றுகொண்டு "செல்லப்பா!... அண்ணா!.." என்று தீனக்குரல் கொடுப்பது போல இருந்தது.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor: T. Sadasivam.


பூவைப் போல...
உங்கள் மேனியை
மலரச் செய்வது
ரெக்ஸோனு
ரெக்ஸோனு சோப்பில் இருப்பது கேடில் — சருமத்திற்கு ஊட்டமளித்து உங்கள் இயற்கையழகை வெளிக் கொணரத் துணைபுரியும் எண்ணெய்கள் கலந்த விசேஷத் தைலமே கேடில்!
Rexona
BLENDED WITH CADYL
கேடில் கலந்துள்ள சோப் இது ஒன்றே
R.P. 148-50 TM
ரெக்ஸோனு ப்ரொப்ரைடரி லிமிடெட்டுக்காக இந்தியாவில் தயாரித்தது

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon



மீனு குமாரி

கமால் அம்ரோஹியின் ''பாகீஸா'' என்னும் படத்தில் கதாநாயகி

சினிமாவில் உக்கிர வெளிச்சத்தினடியில் நடிக்கும்போதுகூட மீனு குமாரியின் மேனி மாறாத மென்மையுடனும் வனப்புடனும் விளங்க வல்லது. அது எவ் விதமென்று அவர் கூறுவதாவது: ''நம்பிக் கையுடன் நான் உபயோகிக்கும் தூய, வெண்மையான லக்ஸ் டாய்லெட் சோப்பே அதன் காரணம்''



லக்ஸ் டாய்லெட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் தூய, வெண்ணிறமுள்ள சோப்

LTS. 512-50 TM